# விரல்களை மீட்டும் வீணை



இந்துமதி

## உள்ளே...

பக்கம்


| | |
|---|---|
| விரல்களை மீட்டும் வீணை | 5–108 |
| நிறங்கள் | 109–176 |

20211
3630503
...ந்தூர், சென்னை-99.

# விரல்களை மீட்டும் வீணை

## 1

உயர, இன்னும் உயர, மேகத்தின் சிரசைத் தொட்டுக் கொள்ளத் துடித்து, அலுமினிய ஃப்ரேமில் கனத்த கண்ணாடி மாட்டிக் கொண்டு, மேல்நோக்கிப் போய்க் கொண்டிருக்கும் அந்தக் கான்க்ரீட் கட்டடத்தின் உள்ளே மிகக் குளுமையாக இருந்தது.

நித்யாவிற்குக் கொஞ்சம் பயமாக இருந்தது. இவ்வளவு பெரிய்ய ஆபீஸிலா வேலை செய்யப் போகிறோம்...? பயத்தோடு ஒரு மூலையில் சந்தோஷமும் எட்டிப் பார்த்தது. அவளின் மிரட்சியைக் கண்டு மரத்தடுப்பிற்கு அந்தப்புறமிருந்த பெண் இவளைப் பார்த்துச் சிநேகமாக மென்னகைத்து, "ப்ளீஸ் கம்...!" என்றாள். கறுப்பு ஸ்லீவ்லெஸ்ஸில் பளபளப்பாய் சந்தனக் கை தெரிய இவள் கொடுத்த பேப்பரில், கண்களைமட்டும் ஓட்டினாள். பின் நிமிர்ந்து பார்த்து,

“வெல்கம்! இடது பக்கம் திரும்பினீங்கன்னா லிஃப்ட் தெரியும். நாலாவது மாடி. நானூற்றி ஐந்தாம் எண் அறை. கதவைத் தட்டினால் ரமணன்னு ஒருத்தர் வருவார். யு கேன் கோ ப்ளீஸ்...!”

'தாங்க்ஸ்!' சொல்லிவிட்டு லிஃப்டில் நுழைந்தால் மெலிதான பாப் சங்கீதம். டோனா சம்மர் அடிக்குரலில் 'லவ் டு லவ் யு பேபி' கதற, நாலாவது மாடியில் லிஃப்ட் சுயமாய்த் திறந்து கொள்ள 401..402..403..404..405...

வாசலில் அழைப்பு மணி ஏதும் ஒட்டியிருக்கவில்லை. தட்டலாமா..? யோசித்துத் தட்டினான். பதிலில்லை. திரும்பவும்,

டக்.. டக்.. டக்..

ஆள்காட்டி விரலின் முட்டி தயங்கினபோது கதவு படீரென்று கோபத்துடன் திறந்து கொள்ள...

"ஹூ தி ஹெல் ஈஸ்?"- சத்தம் போட்டவன், இவனைப் பார்த்துச் சட்டென்று அடங்கி,

"ஸாரி..ப்ளீஸ் கம் இன்...!"

கொஞ்சம் தயங்கி, "மிஸ் நித்யா..." என்றான்.

நித்யா அவனுடனே உள்ளே நுழைந்தாள். மீண்டும் விசாலமான அறை. அறையின் ஆரம்பத்தில் சோபா ஸெட். ஓரமாய் வீடியோ.. சின்னத் திரையில் ப்ரூஸ்லீ ஏகமாய் குதித்துக் கொண்டிருந்தார். மரத்தடுப்பு, அறையை இரண்டாகப் பிரிக்க, எங்கோ மேலிருந்து சின்ன டூம் விளக்கு மேஜைக்கு மட்டும் ஒளி பாய்ச்சியது.

"உட்காருங்க... ஸாரி, யாரோன்னு நினைச்சுக் கத்திட்டேன். எங்க ஆபீஸ்ல ஃபார்மாலிட்டீஸ் கிடையாது. வேலைக்கு இடைஞ்சல்னா யாரானாலும் பார்க்கிறதில்லை... அதனால்தான்-"

"பரவாயில்லை...நானும் அப்படித் தொண தொணன்னு தட்டியிருக்கக் கூடாது."

"இப்போ விஷயத்துக்கு வருவோம். என் பேரு ரமணன், அக்கவுண்ட்ஸ் எக்ஸிக்யுடிவ். என் டிபார்ட்மெண்ட்டுலதான் உங்களுக்கு வேலை...கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணிக்குங்க. பாஸ்கிட்டப் பேசிட்டு உங்களை அழைச்சுண்டு போறேன்...."

நற்காலியின் விளிம்பில் படாமல் உட்கார்ந்து சன்னமாய் "தாங்க்யூ சார்" என்றதும் அவன் சொன்னான்:

"சார் போட்டெல்லாம் கூப்பிடவேண்டாம். அது என்னை வயசானவனாக்கிடும். ஜஸ்ட் கால் மி ரமணன், மிஸ்டர் ரமணன்..."



"ஓகே சார்!"-சொல்லிவிட்டுத் தயங்கி தலையைக் குனிந்து கொண்டு சிரிப்பை அடக்கினாள்.

எதிரில் உட்கார்ந்திருந்த அவனை நிமிர்ந்து பார்க்கச் சங்கோஜமாக இருந்தது. ஆனால், சிறிதுகூட அந்நியத் தன்மையில்லாத அவனின் பேச்சு பிடித்திருந்தது. வெகுளியாய்ப் பழகும் குழந்தைத்தனம் பிடித்திருந்தது. கலைந்த தலையின் கீழ் விசாலமான-பேசுகிறபோது கோடுகள் விழுகிற நெற்றியும், கறுப்பு மெட்டலிக் கண்ணாடியும், நேர்த்தியான மூக்கிற்குக்கீழ் செப்பனிடப் பட்ட மீசை, ப்ரெஞ்ச் தாடியும் அவனை அழகாகவே காட்டின.

"வாங்க...! பாஸைப் பார்க்கப் போகலாம்..."

அவனுடைய வேகத்திற்குத் தொடர்ந்தாள். நான்கு அறைகள் தள்ளி ஐந்தாவது அறை வாசலில் கால் வைத்ததுமே அசரீரியாகக் குரல், "ப்ளீஸ் கம் இன்!" என்றதும் நிமிர்ந்து பார்த்தாள். சின்னப் பெட்டியில் 'ஷார்ப்' என்று ஒட்டியிருந்தது.

உள்ளே போனால் நிறைய வழுக்கையோடு இந்தி சினிமாத் தனமாகப் பெரிய மனிதர் உடம்பை நாற்காலிக்குள் திணித்துக் கொண்டு அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தார். ரமணன் அறிமுகப் படுத்தினான்...

"மிஸ்டர் எஸ்.கே. நிவாஸ். நிவாஸ் அஸோஸியேட்டின் தலைவர். எம்.டி.. ஸார், இவங்க-"

அவர் அவன் பேச்சை வெட்டினார். "தெரியும். மிஸ் நித்யா. எம்.ஏ. ஆங்கில இலக்கியம். இருபத்தாறு வயது. ஆம் ஐ ரைட்...?"

ரமணன் மௌனமாக நிற்க, அவள் ஆச்சரியத்துடன் பார்த்தாள், அவர் மேலே தொடர்ந்தார்.

"என்ன பார்க்கறே..? அசப்பில் நீ என் பெண் சரயு மாதிரியே இருக்கே.... இப்ப அவ ஹஸ்பண்ட் கூட ஸ்டேட்ஸ்"ல இருக்கா. டேக் யுவர் ஸீட்..."-கனிவாய் பார்த்துவிட்டு ரமணன் பக்கம் திரும்பினார்.

"என்னடா... பம்பாய்க்காரன் கிட்டே பணம் வாங்கினியா...? ரெண்டு வாரமா போன் பண்ணித் தகராறு பண்றான். நீ போனாவது பண்ணி பதில் சொல்லணும் இல்லே, நேர்லயாவது போகணும்."

"சரி சார்..."

"என்னம்மா நித்யா பார்க்கறே...? என் கம்பெனியே இது மாதிரித்தான். எப்போவாவா, யார் எதிர்லயாவது அவசியமானா மட்டும் மரியாதை கொடுத்துப்போம். மற்றபடி அப்பா, பிள்ளை அப்பா, பொண்ணு மாதிரித் தான். ஆனால், தொழில்னு வர்றபோது எல்லாரும் கெட்டி இல்லாட்டி போனால் 500 ரூபாய் லே-அவுட்டை 5,000 ரூபாய்க்குத் தள்ளமுடியுமா சொல்லு...!"

நித்யாவால் ஒன்றும் சொல்லமுடியவில்லை. வார்த்தைகளுக்குத் தடுமாற, அவரே மீண்டும் பேசினார்.

"நீ என்ன பண்ணனும், உன் வேலை என்ன என்பதை யெல்லாம் ரமணன் சொல்லித் தருவான். வேலையைவிட இங்கே சேர்றவங்களுக்கு ரெண்டு விஷயம் நல்லாத் தெரியணும். ஒண்ணு, அலங்காரமா இருக்கிறது; இரண்டா வது, அழகாப் பொய் சொல்றது. இன்னிக்கு நீ ஆபீஸை சுற்றிப்பாரு. இன்னிக்கு ஒரு நாள் மட்டும்-முதல் நாளானதால என் செலவுல லஞ்ச் உனக்கு வந்துடும். பிடிப்பு போக ஆரம்பச் சம்பளமாக அறுநூற்றுமுப்பது ரூபா நாற்பத்தைஞ்சு பைஸா...திருப்தியா...? ஏதாவது அதிருப்தி, சங்கடம்னா நேராக என்னை வந்துபாரு, கூட வேலை செய்யறவங்ககிட்டே சொல்லாதே. அது எனக்குப் பிடிக்காது. ஓகே! இப்போ நீ போகலாம். ஆல் தி பெஸ்ட்...! ரமணா...கூட்டிண்டு போய் ஸீட்ல உட்கார வை. போம்மா..."

"ரொம்ப தாங்-"

"ஷ்...அதெல்லாம் வேணாம். பேசாம போ..."

ஆச்சரியமாக வெளியில் வந்தாள்.

ரமணன் அந்தப் பெரிய விளம்பரக் கம்பெனியின் ஒவ்வொரு மூலைக்கும் அழைத்துச் சென்று அறிமுகப்



படுத்தி வைத்தான். பின், அவளது ஸீட்டில் உட்கார வைத்துச் சின்ன சரித்திரமாகச் சொன்னான்:

"...இருபத்தேழு பெண்கள், நூற்றி ஐம்பத்து மூணு ஆண்கள் இந்தக் கம்பெனிக்காக உழைக்கிறார்கள். ரெண்டாவது ஃப்ளோர்ல கான்டீன் இருக்கு. கொஞ்சம் காசு குறைச்சல். வீட்டு டிபன் மாதிரி இருக்கும். வயிற்றைக் கெடுக்காது. அதனால் தைரியமாகச் சாப்பிடலாம். இன்னும் ஏதாவது சந்தேகம் இருந்தால் கேட்டுடுங்க..."

அவன் அவளைப் புன்சிரிப்பில் பார்க்க, அவளுக்கும் சிரிப்பு வந்தது.

"ஒரு சந்தேகமும் இல்லை..."

"ஓகே தென்" என்றவன் ரிஸப்ஷன் பக்கமாகத் திரும்பி "மைத்ரேயி, இவங்க மிஸ் நித்யா. எனக்கு அஸிஸ்ட் பண்ண புதுசா ஜாயின் ஆயிருக்காங்க. கிவ் ஹெர் யுவர் கம்பெனி...." -சொல்லிவிட்டு லிஃப்ட்டைப் பார்க்க ஓடினான்.

நித்யாவிற்கு இந்த விசேஷமான ஆபீஸ் பிடித் திருந்தது. சூழ்நிலை பிடித்திருந்தது. மனிதர்களைப் பிடித்திருந்தது. இறுக்கமில்லாத தொழில் முறை விவகாரங்கள் பிடித்திருந்தது. இவை எல்லாவற்றையும்விட, பெங்களூரை விட்டு சென்னை வந்த இரண்டே நாட்களில் வாழ்க்கையைப் பற்றின பயம் மனத்தை விட்டுக் காணமற் போனது பிடித்திருந்தது.

"மைத்ரேயி அல்லது ரமணனிடம் சொல்லி ரியல் எஸ்டேட்காரர்கள் யாரையாவது பிடித்து வாடகைக்கு வீடு பார்க்க வேண்டும். வீட்டு வேலைகளில் ஒத்தாசை செய்ய யாராவது வேண்டும். நல்லவேளையாக மனிதர்கள் நல்லவர்களாக இருக்கிறார்கள். உதவுவதற்கு வலிய முன்வருவார்கள். ரமணன், நிவாஸ்...இதோ, இந்த மைத்ரேயி... இன்னும் பெயர் தெரியாத மற்ற சகாக்கள்...சக ஊழியர்கள்... அவர்கள் எல்லாரையும்விட ஒட்டின உறவாக,

அர்விந்த்... அர்விந்த்... அர்விந்த்...

**க**ண்ணாடி ஜன்னலுக்குக் கீழே ரத்தமாகச் சிதறியடிக்கும் பூக்களினூடே பெயர் தெரியாத அடர்த்தி மரம், அவ்வப்போது காற்றோடு சிநேகமாய்க் கைகுலுக்கி விஷமமாகச் சிரித்துக் கொண்டிருந்தது. கிளையின் மூலையில் யாரும் பார்க்க முடியாத தைரியத்தில் இரண்டு குருவிகள் படுதீவிரமாகத் தங்களின் 'கீச் கீச் 'பாஷையில் ஏதோ விவாதித்துக் கொண்டிருந்தன. கொஞ்சம் பருமனான குருவி (ஆண் குருவியாக இருக்க வேண்டும்) கழுத்தை விரித்து உயர்த்திச் சத்தம் போட்டு, மூக்கால் அந்த இன்னொரு குருவியின் (பெண் குருவியாகத்தான் இருக்கும்) கழுத்துப் பாகத்தில் கொத்தியது. குத்து சற்றுப் பலமாக விழுந்திருக்க வேண்டும். சிறகுகள் சிலிர்த்துக்கொள்ள அது வீறிட்டது. ஆனால், இடத்தை விட்டு நகரவில்லை. மறுபடியும் ஆண் குருவி'க்விக், க்விக்' என்று ஏகமாய் சத்தம் போட்டு இன்னொரு குத்து. இந்த முறையும் பெண் குருவி அடி வாங்கிக் கொண்டு நகரவில்லை. வலியின் வேதனை பொறுக்க முடியாமல் அலறியது...

அதைவிடச் சற்றே நகர்ந்து குத்திலிருந்து தப்பித்திருக்கலாம்; இல்லாவிட்டால் பறந்து வேறொரு மரத்திற்குப் போயிருக்கலாம். இந்த ஆண் குருவியின் சகவாசமே வேண்டாம் என்று விட்டிருக்கலாம். ஆனால் இவை எதையும் செய்யாமல் குத்துப்பட்டுக் கொண்டு அலறி, குத்தப்பட்ட இடத்தை அலகால் நீவிவிட்டு... பாரதப் பண்பாட்டைக் காப்பாற்றப் பாடுபடுகிற பெண் குருவி...

அந்தப் பண்பாடு இந்தப் பெண் குருவியால் காப்பாற்றப்படக் கூடாது என்று கங்கணம் கட்டிக் கொண்ட மாதிரி மீண்டும் அந்த ஆண் குருவி 'க்விக், க்விக்' என்று ஏதோ சொல்லிக்கொண்டே பெண் குருவியை விறைப்பாக ஒரு தரம் பார்த்துவிட்டுக் கழுத்தை எதிர்ப்பக்கம் திருப்பிக் கொண்டு, ஏதோ யோசிக்கிற பாவனையில் வானத்தைப் பார்த்துத் தலையை உயர்த்திக் கொண்டது. அந்தத் தலை உயரலில் விறைப்பு, கர்வம் எல்லாம் இருந்தது. பெண் குருவி விவஸ்தையே இல்லாமல், சற்றுமுன் அது குத்தினதையெல்லாம் மறந்து, விறைப்பாக உட்கார்ந்திருந்த பர்த்தாவின் அருகில் போய் பணிவாய், மென்மையாய் அதன் கழுத்தை நீவி இதப்படுத்த முயற்சிக்க...



அந்த அடிமைத்தனத்தில் திருப்திப்படாத ஆண் குருவி கோபத்தின் உச்சத்தை அடைந்து, விருட்டென்று பறந்து பெண் குருவியின் தலைக்கு மேலேயே சுற்றி 'நச் நச்' சென்று உக்கிரமாக அலகால் தலையுச்சியில் கொத்த-பெண் குருவி 'க்விக்,க்விக்' எனப் பரிதாபமாக அலற-

அதற்குமேல் சகிக்க முடியாதவளாக நித்யா, "நோ, நோ..." என்று கத்தினாள். என்ன செய்கிறோம் என்று பிடிபடாமல் மேஜை மீதிருந்த பேப்பர் வெயிட்டை எடுத்து இத்தனை நேரமாக இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த ஜன்னல் வழியாகக் கைநீட்டி ஆண் குருவியைக் குறி பார்த்து வீசினாள். குறி தவறி பேப்பர் வெயிட் எங்கோ பொத்தென்று விழும் சத்தம் கேட்டது. அதில் குருவிகள் இரண்டுமே பறந்து போயின. ஆனாலும் நித்யாவினால் அழுகையை நிறுத்த முடியவில்லை...

சற்று தூரத்தில் டைப்ரைட்டருடன் சண்டை போட்டுக் கொண்டிருந்த மைத்ரேயி, இவளின் அழுகைச் சத்தம் கேட்டு, "ஹேய் நித்யா! வாட் ஹாப்பண்ட்?" என்று டைப் அடிப்பதை நிறுத்திவிட்டு ஓடி வந்தாள். மைத்ரேயியின் குரலினால் ஆர்ட் டைரக்டர் அரஸ், போட்டோ கிராபர் ரவி, ஆர்டிஸ்டுகள் மோகன், குமார், இன்னும் ப்யூன் முனுசாமி உட்படக் கணிசமான கூட்டம் ஹாலில் கூடியது.

நித்யா அவர்கள் யாரையும் பார்க்கவில்லை. தன்னைச் சுற்றிச் சிறிதாய் கூட்டம் கூடியிருப்பதை உணரவில்லை. மேஜையில் கவிழ்ந்து முதுகு குலுங்க அழுது கொண்டிருந்தாள். சந்தர்ப்பத்தைப் புரிந்து கொண்ட மைத்ரேயி புத்திசாலித்தனமாக அத்தனை பேரையும் அப்புறப்படுத்தினாள். இண்டர்காமில் கான்டீனைக் கூப்பிட்டு காபி தருவித்தாள். நித்யாவின் தோளில் தட்டி நிமிர வைத்து, லேசாய் சமாதானப்படுத்தி காபி குடிக்க வைத்தாள்.

நித்யாவிற்கு மைத்ரேயியின் அணைப்பு தேவையாக இருந்தது. அதன் இதம் தேவையாக இருந்தது. இவ்வளவு நாட்களாக மனத்திற்குள் அடங்கிக் கிடந்த காயங்கள் எல்லாம் விஸ்வரூபம் எடுத்து வெளியேற வாய்க்கால் தேடிக்

கொண்டிருந்தன. குருவிகளின் இந்தச் சண்டை உட்புகுந்து போலியாய் சலனமற்ற மாதிரிக் கிடந்த அடிமனசைக் கலக்கி விட்டு விட்டது. அதுதான் விசித்து விசித்து அழவைத்தது. மைத்ரேயியின் சிநேகபாவம் இன்னும் அழுகைக்குத் தீனிபோல நிலைமை சற்று அதிகமாவதைக் கண்டு மைத்ரேயி லேசாக அதட்டினாள்.

"ஷ்..!நித்யா. இது ஆபீஸ். ப்ளீஸ் பிஹேவ் யுவர் செல்ஃப்..."

அதற்குப் பின்னர் நித்யா சற்றுச் சுதாரித்துக் கொண்டாள். முகத்தைத் துடைத்துக் கொண்டு எழுந்து அறைக் கோடியிலிருந்த பாத்ரூமிற்குப் போய் வாஷ் பேஸினில் முகம் கழுவிக் கொண்டாள். கைப்பையிலிருந்த பவுடரை ஒற்றி, பொட்டிட்டு முகத்தைச் செப்பனிட்டுக் கொண்டு வெளியில் வந்து, "ஸாரி மைத்ரேயி.." என்று அவளின் கைகளைப் பற்றிக் கொண்டே நித்யா குருவிகளின் சண்டையைப் பற்றிச் சொன்னாள்.

மைத்ரேயி ஆச்சரியத்தில் வியந்து கண்ணகல அவளைப் பார்த்தாள்:

"மை குட்நெஸ்! எவ்வளவு ஸென்ஸிடிவ்வாக இருக்கே! குருவிகள் சண்டை போட்டுக்கிறதையே உன்னால சகிச்சுக்க முடியலையே... ஹெவன்ஸேக்... என்னை மாதிரியான வாழ்க்கை உனக்கு அமையல. இல்லாட்டி இந்த ஹென்ஸிடிவ்நெஸ்ஸிற்கு இத்தனை நேரம் தூக்கு மாட்டிண்டு செத்துப் போயிருப்பே.. இப்படி எக்ஸைட் ஆகாமல், எமோஷனலாக ஃபீல் பண்ணாமல் இருக்க நீ கொஞ்சம் பழகிக்கணும் நித்யா. இல்லைன்னா ரொம்ப கஷ்டப்பட ஐ மீன் மனசால கஷ்டப்பட வேண்டிவரும்...."

மைத்ரேயியின் பிரதிபலிப்பில் சிரிப்பு பூசிய சோகம் இழையோடுவதை நித்யாவால் புரிந்து கொள்ள முடிந்தது. மிகவும் சமனப்பட்டு. லேசாய் புன்னகைத்து இன்னொரு முறை. "தாங்க்ஸ் மைத்ரேயி..!" என்றவுடன், மைத்ரேயி அருகில் வந்து அதிக உரிமையுடன் அவளைக் கட்டிக் கொண்டாள்.



மைத்ரேயி மறுபடி டைப்ரைட்டருடன் சண்டை போட ஆரம்பிக்க, நித்யா தன் மேஜைக்குப் போனதும் இண்டர்காம் கூப்பிட்டது:

"மிஸ் நித்யா..!"

"யெஸ்....!"

"ஓ..நீதான் பேசறியா..? குரல் ஞாபகத்தில் இருக்கா...! நான் நிவாஸ் பேசறேன்.."

"யெஸ் சார். குட்மார்னிங் சார்!"

"உடனே மாடில என் ரூமுக்கு வா..!"

நித்யாவைப் புதிதாகப் பயம் பற்றிக்கொண்டது. கொஞ்ச நேரத்திற்கு முன்னால் தான் செய்த ரகளை மேலே எம்.டி. வரை எட்டிவிட்டது போலிருக்கிறது. ஆபீஸ் நேரத்தில் இப்படி நடந்து கொண்டதற்குத் திட்டு கிடைக்கப் போகிறது. பெங்களூரிலிருந்து சென்னைக்கு வந்ததே இந்தக் கம்பெனியின் வேலையை நம்பித்தான். வேலையில் சேர்ந்து இன்னும் நாலு மாதம்கூட ஆக வில்லை... இத்தனை வருடங்களாகக் கடிவாளம் போட்டு நிலைநிறுத்திக் கொண்டிருந்தது இன்று சற்றுத் தடுமாறி வெடித்து வெளிவந்து விட்டது... இது நல்லதில்லை. எதிர் காலத்தை மிகவும் பாதிக்கும். இத்தனை நாட்கள் வேலை தேடித் தேடிக் கிடைக்காமல் நகைகளை விற்று, பொருட்களை விற்று... இனி அந்த நிலைமை வரக்கூடாது. வந்தால் விற்பதற்குப் பொருளோ, நகையோ கைவச மில்லை....

நிவாஸின் அறைக்குள் நுழைந்தபோது அவரிடம் என்ன பதில் சொல்வது என்பதை முடிவு செய்து கொண்டு,

"குட்மார்னிங் சார்...!" என்றாள்.

"உட்காரு...!"

**உட்கார்ந்தாள். நாற்காலி நுனியில் உடம்பு லேசாய் ஒட்டிக் கொண்டு நின்றது. நிவாஸ் அவளின் பதட்டத்தைக் கவனித்தும் கவனிக்காத மாதிரி கேட்டார்:**

"உன் வேலை என்ன...?"

"சார்...?"

"உன் டெஸிக்னேஷன் என்னன்னு கேட்டேன்...?"

"அக்கவுண்ட்ஸ் அஸிஸ்டெண்ட். கணக்குகளைச் சரிபார்த்து, க்ளையண்ட்ஸுக்குப் பதில் சொல்லணும்..."

"ஆனால், நேத்திக்கு நீ என்ன காரியம் பண்ணினே...?"

"ஒண்ணும் பண்ணலியே சார்..."

"பொய் சொல்றது எனக்குப் பிடிக்காது. மர்ரே கெமிக்கல்ஸ் ஓர்க்கை நீ எடுத்து டிஸைன் பண்ணல...?"

சட்டென்று அவளுக்கு ஞாபகம் வந்தது. அந்த கம்பெனி தயாரிக்கும் புதிய சோப் ஒன்றிற்கு விளம்பரப் படுத்தும் பொறுப்பு இவர்களிடம் வந்திருந்தது. இரண்டு நாட்களாக ஆர்டிஸ்ட்டுகளும், ஆர்ட் டைரக்டர் அரஸும் ஒரு நல்ல விளம்பரப் பாணிக்காக அசுரப் பிரயத்தனம் பண்ணி ராத்திரி தூக்கம் விழித்து, கப் கப்பாக டீ குடித்து, ஆஷ்ட்ரே முழுதும் சாம்பலாக நிரப்பியும் ஒரு டிஸைனும் கிடைக்கவில்லை. எதேச்சையாக இவள் அந்தப் பக்கம் போக, "நித்யாம்மா...! உங்களுக்கு ஏதாவது ஐடியா தோணுதா, பாருங்களேன்...ரெண்டு நாளா அல்லாடறோம். ஒரு ஐடியாவும் கிடைக்கமாட்டேங்குது..."

இவள், அருகில் போய் சிறிது யோசித்து, "இப்படிப் பண்ணலாமா பாருங்க அரஸ்...?" என்று காகிதத்தில் வரைந்து எழுதிக் கொடுக்க.

அத்தனை பேரும் குதித்தார்கள். "வாவ்! கிரேட்...! இது எங்களுக்குத் தோணாமல் போயிடுச்சே...!"

ஆர்டிஸ்டுகள் வரைய, அடுத்த அரைமணி நேரத்தில் லே-அவுட் தயாராகி விட்டது. அதைத்தான் இப்போது நிவாஸ் குறிப்பிடுகிறார். அவள் தயங்கித் தயங்கி, "சார்! அது வந்து..." என்று இழுப்பதற்குள், நிவாஸ் முகத்தைச் சுள்ளென்று வைத்துக் கொண்டு,

"நோ...நோ..." என்று அவளை மறுக்கிற பாவனையில் தலையாட்டினார்.

## 2

லிஃப்டில் வருகிற போது நிவாஸிடம் சொல்ல வேண்டும். என்று நினைத்துக் கொண்டு வந்ததெல்லாம் நித்யாவிற்கு மறந்து போயிற்று. கண்களில் நீர் கட்டிக் கொண்டு நின்றது. ஒரு நிமிடம் என்ன சமாதானம் சொல்லலாம் என்று யோசித்து, எதுவும் பிடிபடாத காரணத்தால் நடந்ததை அப்படியே சொல்லிவிடுகிற முடிவிற்கு வந்தாள். என்னவானாலும் சரி; வேலையை விட்டுப் போகச் சொன்னாலும் போவதற்கு முன் நிஜத்தைச் சொல்லிவிட்டுப் போய் விடுவது...

தொண்டையை ஒரு தரம் தடவி, குரலைச் சரிப் படுத்திக் கொண்டு, சன்னமாய் பேச ஆரம்பித்தாள்:

"இல்லை சார்... நேத்திக்கு எதேச்சையாய் ஆர்ட்டிஸ்ட் ரூமுக்குப் போக நேர்ந்தது. அப்போ அவங்கள்லாம் இரண்டு நாளா அந்த கம்பெனி விளம்பரத்துக்கு டிஸைன் கிடைக்காமல் திண்டாடறதைச் சொன்னாங்க. அரஸ் சார்தான் 'நித்தியாம்மா ஏதாவது ஐடியா கிடைச்சால் சொல்லுங்களேன்'னார். சட்டுனு எனக்குத் தோணினதைச் சொல்லிட்டேன். அப்போகூட என் பேர் இதுல சம்பந்தப் படக் கூடாதுன்னு கேட்டுண்டேன் சார்...'ப்ராமிஸா நீங்க ஐடியா கொடுத்ததா சொல்லமாட்டேன்'னாங்க சார். அதான் சார் மனசுக்குத் தோணினதைக் குப்பையா ஒரு ஐடியா சொன்னேன். ஸாரி சார். இனிமேல் இந்த மாதிரி தப்பு பண்ணமாட்டேன். இந்த ஒரு தடவை மன்னிச்சுடுங்க."

அவள் முகத்திலும் குரலிலும் எட்டிப் பார்த்த அழுகையைப் புரிந்து கொண்டும் அதே அழுத்தமான குரலில் சொன்னார் நிவாஸ்:

"ஐயாம் ஸாரி... மன்னிக்க முடியாது."

"சார்...ப்ளீஸ் சார்...!"

"நான் திரும்பவும் சொல்றேன், மன்னிக்க முடியாது. ஆனால், பாராட்ட முடியும். அப்ரிஷியேட் பண்ணமுடியும்

யு ஹாவ் டன் எ க்ரேட் ஜாப். இன்னிக்கு அந்தக் கம்பெனி மானேஜர் போன் பண்ணி சந்தோஷத்துல பேசமுடியாமல் தவிக்கிறான். 'என்னடா, நம்ம கம்பெனில இவ்வளவு ப்ரில்லியண்ட் ஐடியா யார் கொடுத்தது'ன்னு விசாரிச்சால் உன் பெயரைச் சொன்னாங்க. ஸோ, நாளைலேருந்து நீ அக்கவுண்ட்ஸ் செக்ஷன்லேருந்து புரொடக்ஷன் அண்ட் டிஸைனிங்குக்குப் போற. இன்னிலேருந்து உன் பேஸிக் ஸாலரி 1200 ரூபாயிலிருந்து ஆரம்பமாகும்... என்ன, சந்தோஷமா..."

"சார்..." என்று தவித்தாள் அவள்.

"தவிக்காதே. போ. நாளைக்கு எனக்குச் சர்க்கரை கலக்காத சாக்லெட் கொண்டு வந்து தா... என்ன?"

"சரி சார்..."

"என்ன சரி. சர்க்கரை கலக்காத சாக்லெட் எங்கே கிடைக்கும்..?ம்..?"

அவள் கீழ் உதட்டைக் கடித்துக் கொள்ள, அவர் நமுட்டுச் சிரிப்புடன் தொடர்ந்தார்.

"ஆமாம், கொஞ்ச நேரத்துக்கு முன்னால கீழே என்ன ரகளை பண்ணினே? எங்கேயோ குருவி சண்டை போட்டுண்டதுக்கா இத்தனை அழுகையும் அமர்க்களமும்...? இதெல்லாம் சகஜம்னு நினைக்கிற மனப்பக்குவம் உனக்கு வரணும். குருவி சண்டைக்கே கலங்கிப் போறியே... மனுஷங்களுக்குள்ள குருக்ஷேத்ர மெல்லாம் நடக்கிறது தெரியாது போல இருக்கு...? ஒரு தடவை அரஸ்க்கு முன்னால இருந்த ஆர்ட் டைரக்டர் - அவன் சிரமப்பட்டு வரைஞ்ச ஒரு லே-அவுட் 'நல்லா இல்லை, என்னை இம்ப்ரஸ் பண்ணலை'ன்னு சொன்னதுக்கு, அதைக் கிழிச்சு என் மூஞ்சியில் விசிறி எறிஞ்சு, கண்ணாடி ஜன்னலை யெல்லாம் உடைச்சுட்டுப் போயிட்டான். அதைப் பார்த்து அப்போ நான் கொஞ்சம் கூடக் கோபப்படலை. மாறாக சந்தோஷம் தான் பட்டேன். ஏன் தெரியுமா...? ஒரு நல்ல கலைஞனுக்கு எமோஷன் வேணும். நல்லவேளையாக நீ கண்ணாடியை உடைக்கலை. போம்மா...போ. உனக்குத்



தெரியக்கூடாதுன்னு பேடபிளுக்கு அடியில் விஸ்கியில் ஐஸ் துண்டு போட்டு வச்சிருந்தேன். எல்லாம் கரைஞ்சு போச்சு..சீக்கிரம் குடிச்சாகணும்..."

அவள் சிரித்துக் கொண்டே அறையை விட்டு வெளியில் வந்தாள். தரையில் கால் பாவவில்லை. மனசுக்குள் சந்தோஷம் பொங்கி வந்தது. சற்று முன் துன்பத்திற்கு அழுகையில் வடிகால் தேடினவள் இப்போது சந்தோஷத்திற்கும் வடிகால் தேடினாள். என்ன செய்வதென்று புரியாதவளாக லிஃப்டைத் தவிர்த்துப் படிகளில் இறங்கி வந்தாள். கீழே வந்ததும் மைத்ரேயியைத் தேடிப்பிடித்து விஷயத்தைச் சொன்னாள். மைத்ரேயி முகமெல்லாம் புன்னகைப் பூ விரிய அவள் கையைப் பிடித்துக் குலுக்கினாள். மைத்ரேயியின் ஆத்மார்த்தமான சந்தோஷம் இவளுக்குத் திருப்தியளித்து.

அதற்குள் இவளின் பதவி உயர்வு ஆபீஸ் முழுதும் பரவ, வெளியில் போயிருந்த ரமணன், கேட்டுக்கொண்டே வந்து இவளைப் பார்த்து, "கன்கிராட்ஸ்! ட்ரீட் எதுவும் கிடையாதா...?" என்று கேட்டான். அழகாய்த் தலைவாரி நல்ல சட்டைபோட்டு, அதைப் பாதிக்குமேல் பாண்ட்டில் செருகியிருந்தான். வழக்கத்திற்கு மாறாக சிரத்தை எடுத்துக் கொண்டு அலங்கரித்துக் கொண்டிருப்பது தெரிய, மைத்ரேயி மெதுவாகச் சிரித்துக் கொண்டே கேட்டாள்:

"என்ன ரமணன் சார், வர வர நல்லா டிரஸ் பண்ணிக்கிட்டு வரீங்க. என்ன விசேஷம்...? பார்த்தால் எப்படியிருக்கு தெரியுமா?"

"எப்படியிருக்கு...?"-ரமணன் ஆர்வமாய்க் கேட்டான்.

"கோவிச்சுக்கலேன்னா சொல்றேன்..."

"கோவிச்சுக்கலை, சொல்லு..."

"காலைல கடைகளுக்கு சாம்பிராணி போட ராவுத்தர் ஒருத்தர் வருவாரே... அவர் மாதிரியிருக்கு..."

"யூ- யூ-" என்று ரமணன் பொய்யாய் கையோங்க, அவளும் பொய்யாய் பயந்து நித்யாவின் பின்னால் ஒடுங்கிக் கொண்டு, "வேணாம் சார்..." என்றாள்.

"வாங்கற சம்பளத்துக்குக் கொஞ்ச நேரமாவது கம்பெனிக்காக உண்மையாய் உழைக்கக் கூடாதா..?"- கேட்டுக் கொண்டே சிரித்தபடி தன் அறைக்குச் சென்றான் ரமணன்.

நித்யாவைப் பார்த்துக் கொண்டே போனதில் பிரத்யேகக் கவனிப்பு தெரிந்ததாகப்பட, அந்தக் கண்களின் பளபளப்பில் அவள் மனம் லேசாகச் சிலிர்க்க, தலையைக் குனிந்து கொண்டாள். தன் இடத்தில் போய் உட்கார்ந்த போது, மீண்டும் மீண்டும் ரமணனின் பார்வை ஞாபகத் திற்கு வந்து மனதை என்னவோ செய்தது. ஒரு வார மாகவே ரமணன் ஒரு மாதிரித்தான் இருந்தான். அவனின் பார்வை யிலும் ஒரு வித்தியாசம் தெரிந்தது.

என்ன அது..? வெறும் நட்பா..? நட்பு மட்டுமாகத் தெரியவில்லை. அதையும் மீறின ஏதோ ஒன்று... என்ன அது..? தெரியவில்லை. வேண்டுமென்றே அதற்குமேல் சிந்திக்காமல் பிடிவாதமானாள். எதுவானால் என்ன என்று தோன்றிற்று. எதற்கும் இனி தன் வாழ்வில் அர்த்தமில்லை. எந்த ஆரம்பத்திற்கும் இடமில்லை. ரமணன் சாதாரண மாகத்தான் பார்த்தான். அந்தப் பார்வைக்கு எந்த அர்த்த முமில்லை. சாதாரணமாய், மிகச் சாதாரணமாய், 'நித்யா! நீ என் ஆபீஸ் தோழி...' என்கிற ஒரே பாவத்தில்...

லெட்ஜரை மூடி, டிராயரைப் பூட்டி, சாவியைக் கொடுக்க மீண்டும் ரமணனின் அறைக்குப்போக நேர்ந்தது. அவசரமாக எங்கோ கிளம்பிக் கொண்டிருந்தவன் இவளைப் பார்த்ததும் நின்றான். முகத்தில் சட்டென்று 100 வாட்ஸ் பல்ப் எரிந்தது. அதன் பிரகாசம் இவள் முகத்திலும் அடிக்க,

"வாங்க நித்யா" என்றான். இவள் சட்டென்று தன்னை சுருக்கிக் கொள்கிற முடிவில்-

"சாவியைக் கொடுத்துட்டுப் போகலாம்னு வந்தேன்..." என்றாள்.



"நாளைலேருந்து நான் மீண்டும் ஒரு நல்ல அஸிஸ்டெண்ட்டைத் தேடணும்..."

"ஒருவேளை என்னைவிட நல்ல அஸிஸ்டெண்ட் கிடைக்கும் என்கிறதால்தான் நான் வேற செக்ஷனுக்குப் போறேனோ என்னவோ..?"

"உங்களைவிட நல்ல அஸிஸ்டெண்ட்டா எனக்குத் தோணலை..."

நித்யா வெறுமனே சிரித்துப் பின், "வரட்டுமா..?" என்றாள்.

"நாளையிலிருந்து நீங்க இரண்டாவது மாடி இனிமேல் பார்க்கக்கூட முடியாது, இல்லையா...?"

"ஏன் முடியாது? ஒரே ஆபீஸ்தானே..! வரட்டுமா...?"- அவள் கிளம்பினபோது, அவன் எதையோ சொல்லத் தயங்குவது தெரிந்தும் அவள் கவனிக்காதமாதிரி வெளியில் வந்தாள்.

சிறிது தூரம் நடந்து பதினெட்டாம் நம்பர் பஸ்ஸுக் காகக் காத்திருந்து பஸ் வந்ததும் ஏறி, வீட்டின் தெருக் கோடியில் இறங்கிக் கொண்டாள். எதிரில் இருந்த பிஸ்கெட் கடையில் பெரிதான காட்பரீஸ் சாக்லேட்டுகள் இரண்டு வாங்கினபோது நிவாஸின் ஞாபகம் வந்தது.

"தவிக்காதே - போ. நாளைக்கு எனக்கு சர்க்கரை கலக்காத சாக்லெட் வாங்கிண்டு வந்து தரணும். என்ன..?"

'நல்ல மனிதர்' என்று முணுமுணுத்துச் சற்று வேகமா நடந்து வீட்டையடைந்தபோது, வாசலில் லாம்ப்ரெட்டா ஒன்று நின்று கொண்டிருந்தது. அதை எங்கோ பார்த்த ஞாபகம் வர, எங்கே என்று யோசித்து கேட்டைத் திறந்து உள்ளே போனதும் கதவருகில் புதிதாய் ஒரு ஜோடிச் செருப்பு விடப்பட்டிருந்தது. யார் வந்திருப்பார்கள் தன்னைத் தேடி..? யார் இருக்கிறார்கள் வர..? வீடு வரை வருகிறாற் போல் சிநேகம் கூட இதுவரை கிடையாதே. யோசித்துக் கொண்டே உள்ள நுழைந்தாள்...

ரமணன்!

நித்யா அவனைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. 'இவன் எப்படி இங்கு...?' என்று யோசித்தாள். வீட்டில் வந்து சந்திக்கும் அளவிற்கு என்ன பிரமேயம்..? ஒருவேளை ஆபீஸில் எதிர்பாராமல் கிடைத்த பதவி உயர்வைப் பாராட்டத் தனியாக வந்திருக்கிறானோ..! இருக்காது... பாராட்டுத்தான் ஆபீஸிலேயே சொல்லியாகி விட்டதே...

யோசித்துக் கொண்டே உள்ளே நுழைந்து,

"வாங்க ரமணன்! என்ன இப்படி சர்ப்ரைஸ் விஸிட்...?" என்றபடி எதிர் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள்.

"ஒண்ணுமில்லை... ஜஸ்ட் லைக் தட்... இந்தப் பக்கமா வந்தேன். அப்போது உங்க வீடு ஞாபகத்திற்கு வந்தது. அதான் ஜஸ்ட் எ ஃப்ளையிங் விஸிட்..." - சிரித்தான். சிரிப்பில் லேசாக அசடு வழிந்தது.

அவள் கால் விநாடி அவன் முகத்தையே பார்த்தாள்.

'நண்பனே... பொய் சொல்கிறாய்... ஆனால், சரியாகப் பொருந்தச் சொல்லச் சொல்லத் தெரியவில்லை. ஆபீஸ் முடிந்து நேராக இங்குதான் வந்திருக்கிறாய்... உனக்கு நடிப்பதில் அவ்வளவாகப் பழக்கம் இல்லை போலிருக்கிறது... முகம் காட்டிக் கொடுத்துவிடுகிறது எதையோ மென்று விழுங்குகிறாய் என்று... அது என்ன விஷயமானாலும் நீ நல்லவன் நண்பனே... இந்த நாலு மாசப் பழக்கத்தில் உன் நட்பில் விரிசல் இல்லை போலித்தனம் இல்லை. முரட்டுத்தனம் இல்லை. மென்மையாய் இருக்கும் உன் பழகு முறையில் உன்னை என்னால் இந்த அளவிற்கு மட்டுமே அனுமதிக்க முடியும். சாதாரணமாக வேறு யாராவது வீட்டிற்குத் தேடி வந்திருந்தால் கத்தரித்து அனுப்பியிருப்பேன். உன் குழந்தைத்தனத்தாலும் வெகுளித்தனத்தாலும் என்னால் அப்படி அனுப்ப இயலவில்லை. அவ்வளவுதானே தவிர வேறில்லை நண்பனே...'

"கொஞ்சம் உட்காருங்கள் மிஸ்டர் ரமணன். டிரஸ் சேஞ்ஜ் பண்ணிட்டு காபி போட்டுக் கொண்டு வரேன்..."



- சொல்லிவிட்டு நகர்ந்தாள். சமையலறைக்குள் போய் ஏதோ தோன்ற, கதவிடுக்கு வழியாக ரமணனைக் கவனித்தாள். அவன் ஏதோ தீவிர யோசனையில் இருந்தான். விரல் நகத்தைக் கடித்துக் கொண்டிருந்தான். சிகரெட் பாக்கெட்டிலிருந்து சிகரெட்டை உருவிப் புகைக்கலாமா, வேண்டாமா என யோசிப்பவன் போலிருந்து பின் பிடிக்காமலே உள்ளே போட்டான். குறுக்கும் நெடுக்குமாக இரண்டு முறை உலாத்தினான். அவனின் இந்த நிம்மதியற்ற தன்மை அவளிடம் ஏன் என்ற கேள்வியை ஏற்படுத்த, அதற்கு விடையும் கிடைக்க, அவசரமாக நினைவுக்கு வந்தான் அரவிந்த்.

## 3

ரமணன் தன் நிலையிலில்லை. படிப்பு, படிப்பு, படிப்பென்று படித்து முடித்து, வேலை தேடி உழைத்து, கம்பெனியில் மெதுவாக உயர்ந்து, நாலு காசு சேர்த்து, தங்கைகளுக்குக் கல்யாணம்செய்து வைத்து, கடன் அடைத்து, கடைசியாக ஒரே துணையாக இருந்த அம்மாவின் ஈமக் கிரியைகளை முடித்து ஒரு நீண்ட பெருமூச்சுடன் இனி தனியாகவே வாழ்ந்து முடித்துவிடுவது என்று முடிவு செய்தபோதுதான் நித்யா அறிமுகமானாள்.

அதிர்ந்து பேசாத, பணிவான, புத்திசாலித்தனமும், இன்னும் ரமணனின் அட்டவணைப்படி சர்வ லட்சணங்களும் பொருந்தியுள்ள இவளைப் பார்த்தபோதுதான் முதல் முதலாக அவனக்குள் தகராறு ஏற்பட்டது. இதுவரை பெண்களை முழுமையாகப் பாராமல், வித்தியாசம் எதுவும் பார்க்காமல் சுலபமாய், இயல்பாய் பழகிக் கொண்டிருந்தவன் முதல் தடவையாகத் தடுமாறி, சிரமப்பட ஆரம்பித்தான். இதுவரை கலைந்த தலையும், கசங்கின உடைகளுமாக இருந்தவன் மெதுவாக அலங்கரித்துக் கொள்ள ஆரம்பித்தான். நைச்சியமாகப் பெண்களிடம் பேசி வசீகரிக்கும் கலை ஆரம்பத்திலிருந்து தெரியாமற்

போனதுபற்றி வருத்தப்பட்டான். நித்யாவிடம், 'என்னைக் கல்யாணம் செய்து கொள்கிறாயா..?' கேட்க வேண்டும். கேட்டு அவள் தவறாக எடுத்துக் கொண்டுவிட்டால் கஷ்டம். சிரமப்பட்டுக் கட்டிய 'இமேஜ்' சட்டென்று உடைந்து போகும். கேட்காமல் அப்படியே விட்டு விட்டாலும் சினிமாக்களில் வருவதுபோல் சொல்லத் தயங்கி இருவருக்கும் இருக்கும் பரஸ்பர உணர்வுகள் வெளியே தெரியாமல் அமுங்கிப் போகும் வாய்ப்புகள் இருக்கிறது. என்ன செய்யலாம்? சட்டென்று எடுத்த எடுப்பில் கேட்டு விட்டால் என்ன நினைத்துக் கொள்வாள்..?

'என்ன மிஸ்டர் ரமணன்.. இப்படிக் கேட்டுட்டீங்க..? உங்ககூட நான் அப்படியா பழகினேன்? எந்த வித்தியாசமும் பார்க்காமல் ஒரு சிநேகிதி போலத்தானே பழகினேன். ஐ ம் வெரி ஸாரி மிஸ்டர் ரமணன்..'

அப்படிச் சொல்லிவிடுகிற மாதிரியா அவள் பழகினாள்.. யோசித்தான். சாதாரண சக தொழிலாளி உறவு தவிரவும் பெயரிட்டு வெளியில் சொல்ல முடியாத வேறு ஏதோ ஒன்று அவளின் பழக்கத்தில் இருப்பதாகப் பட்டது. மென்மையும் வாத்ஸல்யமும் இருந்தது. உள் மனசில் அன்பு இல்லாமல் பார்வையில் அப்படிப்பட்ட வாத்ஸல்யம் இடம் பெறாது. அப்படி அன்பு இருக்கும் என்றாலும் அதைச் சட்டென்று வெளிக்காட்டிக் கொண்டுவிட முடியாத பாஷை அது. மௌன பாஷை. அந்த மௌன பாஷையின் ஆழம் நித்யாவிடம் இருக்கிறது. அல்லது இருக்கிற மாதிரி படுகிறது.. அது கொடுத்த தைரியமும் தெம்புந்தான் அவனை அவள்பால் ஈர்த்திருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் மைத்ரேயி இவளைவிட அழகு. இவளைவிட அழகை வெளிப்படுத்தும் திறன், கவர்ச்சியாய் பேசும் சக்தி, பார்வையில் அடித்து நிறுத்துகிற திறமை எல்லாம் உடையவள். இவற்றால் மட்டும் கவரப்பட்டிருப் பானானால் மைத்ரேயியினால் கவரப்பட்டு அவளைக் காதலித்திருக்க வேண்டும். ஆனால் அப்படி நடக்க வில்லையே.. மைத்ரேயியை அந்த மாதிரி அவனால் நினைக்கக்கூட முடியவில்லையே.. அவளைக்கூட வேலை செய்கிற சகாவாக மட்டும் தானே பார்க்க முடிகிறது.



அப்படி இருக்கிறபோது நித்யாவிடம் மட்டும் ஏன் இப்படித் தோன்றுகிறது..?

அவனுக்குப் புரியவில்லை. மானேஜிங் டைரக்டர் நிவாஸின் பெண்கூட லேசாய் இவன் பக்கம் பார்வையைத் திருப்பி சங்கேதமாகப் 'புத்திசாலிப் பையா.. இவ்வளவு அழகாக நிறைய பணத்துடன் இருக்கிறேனே.. என்னைப் பாரேன்..' பாஷையில் இவனுடன் பேசி வளைய வந்திருக்கிறாள். ஆனால் இவனுக்கு லயித்ததில்லை. வேறு யாரிடமும் லயிப்பு ஏற்பட்டதில்லை. முதல் முதலாக லயிப்பு ஏற்பட்டதே இவளிடம்தான். இந்த நித்யாவிடம்தாம். இவள் வந்த நாள் முதலாக ராத்திரி தூக்கமில்லாமல் தவித்திருக்கிறான். தனக்குள் நிறைய கேள்விகள் கேட்டுக் கொண்டிருக்கிறான். நிவாஸ் நல்ல மூடில் இருக்கிறபோது அட்வான்ஸ் கேட்டு அண்ணா நகரில் சின்னதாக வீடு வாங்கியிருக்கிறான். இந்த ஆறேழு மாதங்களுக்குள் பிரஷர் குக்கரிலிருந்து ஒவ்வொரு பொருளாகப் பார்த்து வாங்கி யிருக்கிறான். கல்யாணச் செலவிற்கென்று இந்த நான்கு மாதத்தில் பணம் ஒதுக்கியிருக்கிறான். இவை அனைத் துக்கும் ஆதாரமான நித்யாவிடம் கேட்கிற வாய்ப்பு மட்டும் தள்ளிக் கொண்டே வந்தது. அதாவது இவனாகத் தள்ளிப் போட்டான். காரணம்.. பயம். தன் அன்பை, பிரியத்தை உதாசீனப்படுத்தி விட்டால் என்ன செய்வது என்கிற பயம்..

அவனுக்காகத் தூது போகவும் யாருமில்லை. அந்த அளவிற்கு நெருங்கின நண்பர்கள் இல்லை. எல்லாம் ஆபீஸ் சிநேகம்தான். ஆபீஸோடு சரி.. நிவாஸிடம் சொல்லலாம் என்றால் அதிலும் ஒரு சங்கடம் இருந்தது. அவருக்கு நாசூக்காகப் பேசத் தெரியாது. எல்லார் எதிரிலும், விஷயத்தைப் பொத்தென்று போட்டு உடைப்பார். அதில் மனம் புண்படுகிற வாய்ப்பும் உண்டு..

இதுவரை திட்டமிட்டு யோசித்து, திட்டமிட்டுப் படித்து திட்டமிட்டுச் சம்பாதித்து, செலவழித்து எல்லாவற்றிலும் திட்டமாக இருந்தவனுக்குத் திட்டமிட்டுப் பேச மட்டும் தெரியவில்லை. அதுவும் அவளிடம் பேசுவதில் இன்னமும் தயக்கம் ஏற்பட்டது. இப்போது கூட வீடு வரை வந்து விட்டானே தவிர உள்ளூரத் தயக்கமும், பயமும் இருந்தது.

அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருக்க சிகரெட் பிடிக்க நினைத்தான். வீட்டிற்குள் பிடித்தால் அவள் தப்பாக எடுத்துக் கொள்ளலாம். வாசலில் போய் பிடிக்கவும் தயக்கமாக இருந்தது. மற்ற ஃப்ளாட்காரர்கள் இவனை வேடிக்கை பார்க்கக்கூடும்... என்ன செய்யலாம்..?

யோசித்துக் கொண்டிருந்தபோதே வெள்ளைக் கைத்தறிப் புடவையில் காபி கோப்பைகளுடன் நித்யா வந்தாள். சாதாரணப் புடவையில்கூட அழகாகத் தெரிந்தாள். ரமணன் அவளைப் பார்த்துக் கொண்டே காபியை உறிஞ்சினான். எப்படி ஆரம்பிப்பது என்பது புரியவில்லை. 'ரமணன், முதலில் காப்பியைக் குடித்து முடி...' முடித்தான். 'சிகரெட் பிடிக்கலாமா கேள்...' கேட்டான்.

'என்ன இன்னிக்கு வித்தியாசமா பிஹேவ் பண்றீங்க?' நித்யா தன் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள முயன்றாள்.

"வித்தியாசமான்னா எப்படி...?"

"சொன்னா தப்பா நினைச்சுக்கக் கூடாது..."

"இல்லை, சொல்லுங்க..." "யு பிஹேவ் லைக் எ கிளவுன்..."

அவன் வெறுமனே சிரித்துப் பின் முகத்தை சீரியஸாக்கிக் கொண்டு அதையே திருப்பிச் சொன்னான்:

"அதே மாதிரி நான் சொற்றதையும் நீங்க தப்பா எடுத்துக்கக் கூடாது நித்யா..."

"நான் தப்பாவே எடுத்துக்கறேனே...?"- விளையாட்டாகப் பேச முயன்றாள்.

"ப்ளீஸ், கொஞ்சம் சீரியஸாகக் கேளுங்க..."

"சரி..."

"ம்... எப்படிச் சொல்றது...? முதல்ல சுருக்கமா என் சரித்திரம் சொல்லிடறேன். அப்பா இல்லை. அம்மா, மூணு தங்கைங்க இருந்தாங்க. பாஸ்டென்ஸ்தான். ஏன்னா தங்கைகளுக்குக் கல்யாணம் பண்ணிட்டேன்... அம்மாவோட ஈமக் காரியத்தையும் முடிச்சுட்டேன். இப்போ தனி ஆள். உறவுன்னு யாருமில்லை. ஆபீஸ்ல நம்பர் டூ. நல்லா சம்பாதிக்கிறேன். எனக்குன்னு ஒரு வாழ்க்கையை ஆரம்பிக்கலாம்னு பிரியப்படறேன்."



சிறிது தயங்கி மீண்டும் தொடர்ந்தான்:

"உன்னை - ஐயாம் ஸாரி உங்களைப் பார்த்த முதல் நாளே எனக்குப் பிடிச்சுப் போச்சு. நீங்க விரும்பினீங்கன்னா கல்யாணம் செஞ்சுக்கலாம். (வியர்த்துக் கொட்டியது) இதைப் பதவிசா, அழகா எடுத்துச் சொல்ல எனக்குத் தெரியல. காதல்னு என்னுடைய ஈடுபாட்டைச் சொல்ல முடியாதுன்னு தோணுது. ஏன்னா பரஸ்பரம் இரண்டு பேரும் நேசிச்சால்தான் காதல்னு புஸ்தகத்துல படிச்சிருக்கேன். இதைச் சொல்லணும்னு இந்த நாலுமாசமா தவிச்சுக்கிட்டிருக்கேன். சொன்னால், நீங்க எப்படி ரியாக்ட் பண்ணுவீங்களோன்ற பயத்துல தயங்கிட்டிருந்தேன். லெட்டர் எழுதறதெல்லாம் குழந்தைத்தனம். இப்ப நான் பேசறதையே குழந்தைத்தனம்னு நீங்க நினைச்சாலும் நினைக்கலாம்...

"பட் நித்யா, ஸம் ஹௌ நீங்க என்கூடச் சேர்ந்து வாழ்ந்தா... ஐ மீன், தப்பா எடுத்துக்காதீங்க... எனக்குச் சரியா பேசத் தெரியல... அதாவது நாம கல்யாணம் பண்ணிண்டா நன்னாயிருக்கும்னு தோணித்து... உங்க சம்மதம் கிடைச்சால் சந்தோஷப்படுவேன். இல்லைன்னு சாரி சொல்லிட்டீங்கன்னா வருத்தமாக இருக்கும்... மனசுக்குள்ள போட்டு அரிச்சுட்டிருந்த விஷயத்தைச் சொல்லிடணும்னே நேரில் வந்தேன்,வேறே எதுக்கும் இல்லை. டௌன்ட் ஐ'ம் ஃப்ரீ... ஸாரி. உங்களை - உங்களுடைய தனிமையைக் கலைச்சுத் தொந்தரவு பண்ணிட்டேன். மறுபடி நாளை ஆபீஸ்ல சந்திக்கலாம். சம்மதம்னா நாளைக்குச் சந்திக்கிற போதே சொல்லுங்க... இல்லைன்ற பட்சத்துல நான் இங்கே வந்தது, பேசினது எல்லாத்தையும் சுத்தமா மறந்துடுங்க... ஐ வில் மேக் ய மூவ் தென்..."

சட்டென்று எழுந்தான். நித்யாவின் முகத்திலிருந்து அவள் குழம்பிப்போயிருப்பது தெரிந்தது. மெல்ல மௌனமாகவே நகர்ந்து வராந்தாவிற்குப் போய் செருப்பைத் திணித்துக் கொண்டபோது -

யாரோ வயதான அம்மாள் ஒரு சிறுவனைக் கூட்டிக் கொண்டு இவன் வெளியேறும் சமயம் உள்ளே நுழைந்தாள். இவன் சிறுவனின் அழகால் கவரப்பட்டுக் கன்னத்தை லேசாகத் தட்டிப் படிகளில் இறங்க நினைத்த சமயம் உள்ளேயிருந்து குரல் கேட்டது.

"மிஸ்டர் ரமணன்...!"

நித்யாவின் குரல்!

மீண்டும் வேகமாக உள்ளே போனான். இப்போது நித்யாவின் முகம் சற்று தெளிந்திருப்பதைக் கவனித்துக் கேட்டான்:

"என்ன?"

"இவனை உங்களுக்குத் தெரியுமா?" - சற்று முன் பார்த்த சிறுவனின் தோளை அணைத்தவாறு கேட்டாள் அவள்.

"ம்ஹூம், தெரியாது."

"மை ஸன். பெயர் அர்விந்த்!"

## 4

ரமணன் ஒரு கணம் அதிர்ச்சியடைந்தாற் போல் நின்றான். நித்யாவையும் அச்சிறுவனையும் மாறி மாறிப் பார்த்தான். ஒரே கணம் தான். பின், வழக்கமாய்த் தன் உதடுகளில் ஓடும் புன்னகையுடன் அருகில் வந்த சிறுவனின் தோளில் ஸ்வாதீனமாகக் கைபோட்டு மென்மையான குரலில் கேட்டான்:

"ஸ்வீட் சைல்ட்... உன் பேர் என்னம்மா...?"

சிறுவன் அந்நிய முகத்தைப் பார்த்து வெட்கப்பட்டுத் தலையைக் குனிந்தபடி சன்னமாக, "அர்விந்த்..." என்றதும் ரமணன் லேசாய் முதுகில் தட்டி,



"வெரி குட்... என்ன படிக்கிறே?.."

"ஸெகண்ட் ஸ்டாண்டர்ட்..."

மீண்டும் 'குட்...' சொல்லி நிமிர்ந்து அவளைப் பார்த்தான். அவள் முகத்தில் தெரிந்த உணர்ச்சிகளைக் கிரகிக்க முயற்சி பண்ணினான். சின்ன பிரெஞ்ச் தாடியைத் தடவிக் கொண்டே, இன்னும் அருகில் நெருங்கி, குழந்தையின் காதில்விழாத குரலில், "டிவோர்ஸி..?" என்று கேட்டான்.

நித்யா தலையை உயர்த்தாமல் குனிந்தபடி இருக்க, அவன் உறுதியாய், "ஸ்டில் ஐ லவ் யு. அது எப்படி இருந்தாலும் நான் உங்களை விரும்புகிறேன். விரும்புவேன்...!" சொல்லி விட்டுச் சட்டென்று காணாமற் போனான்.

நித்யாவிற்கு நடந்ததைக் கிரகித்துக்கொள்ள நிறைய அவகாசம் தேவைப்பட்டது. விவகாரமாக எதையும் புரிந்து கொள்ள முடியவில்லை. குழப்பத்தின் உச்ச நிலையில் இருந்தாள். ரமணன் வீட்டிற்கு வந்தது பற்றி இந்தக் கோணத்தில் எதிர்ப்பார்க்கவில்லை. தன்னிடம் அசட்டுத் தனமாக ஏதும் சொல்வான் என்றுதான் நினைத்தாளே தவிர, இப்படித் தீர்மானமாகச் சொல்லிவிட்டுப் போவான் என்று நினைக்க வில்லை. சுற்றி வளைக்காமல் நேராகச் சொல்லிவிட்டான் எப்படிச் சொன்னான்!

"டிவோர்ஸி..? ஸ்டில் ஐ லவ் யு. எது எப்படி இருந்தாலும் நான் உங்களை விரும்புகிறேன், விரும்புவேன்...!"

எதிர்காலத்தையும் சேர்த்தே சொல்லிவிட்டுப் போய் விட்டான். நிச்சயமாய் இதை அவள் எதிர்பார்க்கவில்லை. அதனால்தான் அவன் பேசப் பேச எப்படிப் பிரதிபலிப்பது என்பதுகூடத் தெரியாமல் குழம்பிப்போய் மௌனமாக இருந்தாள்.

இப்போது யோசித்தால் கொஞ்சம் கொஞ்சமாகக் குழப்பத்திலிருந்து விடுபட்டு ஒரு தெளிவு கிடைக்கிறது. மனத்தின் மூலையில் ஒரு துணைக்காகவும் சுய பாதுகாப்பிற்காகவும் தான் ஏங்குவது புரிய .. அவள் திடுக்கிட்டுப்

போனாள். ஒருவேளை ரமணனைப் பார்த்ததிலிருந்து இந்த ஏக்கம் உள்ளுக்குள் அதிகமாகி யிருக்கிறதா என்று அலச ஆரம்பித்தாள்.

தனக்கே பிடிபடாமல், தன் மனசு அவனை நாடி யிருப்பது தான் நிஜம் என்று பட்டது. ஆபீஸில் வேலை செய்யும் நூற்றுக்கணக்கான ஆண்களில் இந்த ரமணனிடம் மட்டும் மனசு தன் இறுக்கங்களை யெல்லாம் தளர்த்திக் கொண்டு, சற்றுச் சுலபமாகப் பழக ஆரம்பித்தது எதனால்..? அவனின் குழந்தைத்தனமான சுபாவத்தினாலா...? அல்லது ஒளிவு மறைவற்ற பேச்சினாலா...? இல்லை, நிச்சயமாக இதனால் மட்டுமில்லை. இவற்றையெல்லாம் மீறினதாக இன்னும் ஏதோ ஒன்று... என்ன அது..?

வெளியே போனவனை மீண்டும் உள்ளே கூப்பிட்டு எதற்காக அர்விந்தைக் காண்பித்தேன்...! எனக்கு ஆறு வயதுப் பையன் இருக்கிறான் என்பதை ஏன் தெரியப் படுத்தினேன்..? இவற்றையும் மீறி அவனின் அன்பு நிற்கிறதா என்பதைச் சோதிக்கத்தானே..? தான் விவாகரத்து செய்யப்பட்ட ஒரு பெண் என்பதைத் தெரிந்து கொண்ட பின்பும் அவன் தன்னைக் கல்யாணம் செய்து கொள்ள சம்மதிப்பானா என்று அறியத்தானே..? மை காட்! என் அடி மனசில் இன்னும் என்னதான் இருக்கிறது...? எனக்கே பிடிபடாததாக எவ்வளவு இருக்கிறது..? அவன் சரி சொல்லி விட்டுப் போய் விட்டான் -? தான் என்ன பதில் சொல்லப் போகிறோம்..? எவ்வளவு நாசுக்காய் இவ்வளவு விஷயங்கள் தெரிந்தும் தன்னை நேசிப்பதை எப்படிச் சொல்லிவிட்டுப் போனான் அவன்...!

'ஸ்டில் ஐ லவ் யு...'

'ஸ்டில் ஐ லவ்-'

சட்டென்று எதிரில் நின்றிருந்த அர்விந்தை அணைத்துக் கொண்டு விசும்பினாள். அப்படி விசும்புகிறபோது ஆயாவின் ஞாபகம் வந்தது. 'அவள் பார்த்தால் என்ன நினைத்துக் கொள்வாள்..? நினைப்ப தோடு நிற்காமல் வெளியில் போய் சொல்கிற ஜாதியாக இருந்தால்?'



எழுந்து ஆயாவைத் தேடினதில், அர்விந்தை ஒப்படைத்த உடனே அவள் போய்விட்டிருப்பது தெரிந்தது. வாசல் கதவைத் தாளிட்டு வந்து அர்விந்தின் பக்கத்தில் உட்கார்ந்தபோது, துக்கம் தொண்டையை அடைத்தது. மீண்டும் அந்த 'ஸ்டில் ஐ லவ் யு' காதில் ஒலிக்க, அவள் அழத் தொடங்கினாள்.

அர்விந்த் இன்னமும் அவளை ஒட்டினாற்போல் நகர்ந்து வந்து தன் சின்னக் கைகளால் அவளின் முகத்தைத் திருப்ப முயன்று கேட்டான்:

"அம்மா..! ஏம்மா அழற..? நீ அழுதீன்னா எனக்கும் அழுகை வர்றதும்மா."

அவனும் மெல்ல விசும்ப ஆரம்பித்தபோது, அவள் சடாரென்று தலையை உயர்த்தி இடது கையால் தலைப்பைத் துழாவி, கண்களைத் துடைத்துக்கொண்டு சிரிக்க முயற்சி செய்தாள்.

"அழலைடா கண்ணு.. கண்ணுல தூசி விழுந்துடுத்து."

"எங்கே, கண்ணைக் காட்டும்மா. நான் ஊதி விடறேன்..."

"இந்தா ஊது..." - அவள் தன் முகத்தைத் தழைத்து வலது கண்ணைக் கை விரல்களால் அகற்றிக் காட்ட, அர்விந்த் தன் வாயைக் குவித்து ஊதினான்.

"இப்போ சரியாப் போச்சாம்மா..?"

"அர்விந்த் தொட்டால் சரியாகாம இருக்குமா...! உனக்காக நான் காட்பரீஸ் வாங்கிண்டு வந்திருக்கேன் பாரு. நீ சாப்பிட்டுண்டே விளையாடு. அம்மாக்குக் கொஞ்சம் வேலையிருக்கு, கவனிக்கறேன்..."

"இந்தாம்மா... நீ பாதி. நான் பாதி.." - சாக்லெட்டை சம பாகமாக உடைத்து நீட்ட, அவள் உருகிப்போனாள்.

'இந்தக் குழந்தையோடு இப்படியே இருந்துவிட்டால் என்ன..? முடியுமா அது..? இருபத்தாறு வயதில் - மனத்திலும் உடம்பிலும் ஏராளமாய் இளமை மீதமிருக்க, இயலுமா அது...?'

'இப்படியெல்லாம் தான் தவிப்பதற்குக் காரணமான சித்தார்த்மீது அவளுக்குக் கோபம் வந்தது. அவன் மட்டும் தன் வாழ்க்கையில் குறுக்கிடாமல் இருந்திருந்தால், தான் இன்னமும் பெங்களூரில் அதே மகாத்மா காந்தி ரோடில் வேலைக்குப் போய்க் கொண்டு, ஒர்க்கிங் விமன்ஸ் ஹாஸ்டலில் தங்கிக்கொண்டு நிம்மதியாக இருந்திருக்கக் கூடும். பிரச்னைகளற்று வாழ்ந்திருக்கக்கூடும். இதோ, இப்போது இந்த ரமணன் தானாக வலுவில் வந்து குறுக்கிடுகிற இதே மாதிரித்தானே அப்போது அவனும் வந்து குறுக்கிட்டான். ரமணனைப் போல் நிதானமாய், மென்மையாய்ப் பேசாமல் எப்படி அதட்டலாய், தடலடித்தனமாகப் பேசினான்.

'சித்தார்த்...! ஏன் சந்தித்தேன் உன்னை...?'

மெஜஸ்டிக் சர்க்கிளில் நூற்றுமுப்பத்தாறாம் நம்பர் பஸ் இவளை ஏமாற்றிவிட்டுப் போய்விட்டது. அடுத்த பஸ் வருவதற்கு இன்னும் அரைமணி நேரமாகும்... ஜெயநகருக்கு அதைவிட்டால் வேறு பஸ் இல்லை. ஆட்டோவிற்குக் காசு கொடுத்துக் கட்டுப்படியாகாது... பெங்களூர் சூரியன் தாமதமாகத் தகிக்க ஆரம்பிக்க, நித்யா கண்டக்டரைச் சபித்துக் கொண்டே நின்றிருந்தபோது -

அவளை உரசிக் கொண்டு அந்த வெளிநாட்டுக் கார் நின்றது. பஸ் ஸ்டாண்டில் சோம்பேறித்தனத்துடன் காத்திருந்தவர்கள் காரை வெறிக்க, உள்ளிருந்து முன்நெற்றியில் விழுந்த தலைமயிரைத் துழாவி பின்னால் தள்ளியபடி கீழே இறங்கிய இளைஞன் அவளருகில் வந்தான்.

"எக்ஸ்க்யூஸ் மி மேடம்..."

நித்யா வேண்டுமென்றே முகத்தை எதிர்ப்பக்கம் திருப்பிக்கொண்டு, அவன் கூப்பிட்டது காதில் விழாத மாதிரி நின்றாள். அவன் விடவில்லை.

"எக்ஸ்க்யூஸ் மி மேடம். உங்களைத்தான்...!" நித்யா சடாரென்று திரும்பி, எரித்து விடுகிறாற்போல் பார்த்தாள்.



கோபத்தோடு அந்த முகத்தில் தெரிந்த பயத்தைப் பார்த்துச் சிரித்தான்.

"ஏன் இப்படிப் பயப்படறீங்க... பஸ் ஸ்டாண்ட்ல உங்களைக் கற்பழிக்கவா போறேன்...?"

"முட்டாள்!, கெட் அவுட் அண்ட் கெட் லாஸ்ட்..."

அவன் அப்போதும் சிரித்தான். "நல்லா படிச்சிருக்கிற நீங்க தப்பு பண்ணலாமா...? திட்டறீங்களே... இது நியாயமா...?"

"யு- யு கெட் அவுட் ஃபர்ஸ்ட்..."

"என்ன, இப்படிக் கோவிச்சுக்கறீங்க...? எனக்கும் டீஸென்ஸி தெரியும் மேடம். லட்ச ரூபாய் கார் வச்சுண்டிருக்கேன். பார்க்கிறதுக்குச் சுமாராகவே நல்லா இருக்கேன். வீட்ல கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி தொந்தரவு பண்றாங்க... எனக்குப் பிடிச்ச பொண்ணா தேடிப் பார்த்துட்டேன். எங்கேயும் கிடைக்கல. இப்பத்தான் இதோ எதிர்ல பார்க்கறேன். உங்க ஒத்துழைப்புத் தேவை, கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு... அதுக்கு முன்னாடி ஒருத்தரை ஒருத்தர் நல்லாப் புரிஞ்சுக்கக் கொஞ்சம் லவ் பண்ணலாம்னு தோணறது. இஃப் யு ஆர் இன்ட்ரஸ்டட்..."

பஸ் ஸ்டாண்ட்காரர்கள் இப்போது இவர்களை சுவாரஸ்யமாய் வேடிக்கை பார்த்தார்கள். நித்யாவிற்குக் கோபமும் வெறுப்புமாகச் சேர்ந்து அடிவயிற்றைப் புரட்டிக் கொண்டு வந்தது. அத்தனை பேரும் தன்னை வேடிக்கை பார்த்ததில் அழுகை வந்தது. சட்டென்று இந்த மெர்ஸிடைஸ் பென்ஸ் காரை அடிக்கடி தனக்குப் பின்னால் பார்த்திருப்பது நினைவிற்கு வந்தது. பெட்ரோல் கார் மாதிரி விடாமல் ஃபாலோ பண்ணியிருக்கிறான். 'திமிர்... பணம் இருக்கிற திமிர். எல்லாரையும் அதற்கு விலைக்கு வாங்கிவிடலாம் என்கிற எண்ணம். ஸ்கௌண்ட்ரல்...'

கோபம் தலைக்கேற, எப்படி அடித்தாளென்று அவளுக்கே தெரியாத மூர்க்கத்துடன் சட்டென்று வலது கையின் நான்கு விரல்களும் அவன் கன்னத்தில் பதிந்தன

அதை அவன் எதிர்பார்க்கவில்லைதான். ஆனாலும் அடி வாங்கின கன்னத்தைத் தடவிக்கொண்டே சிரித்தான்.

"வெல்... நான் பாராட்டறேன். இந்த மாதிரி ஒரு வெளிநாட்டுக் கார்ல வந்து, வசதியாய் இருக்கிற இளைஞன் கூப்பிட்டான்னால் கூடவே போய் ஒட்டிக்கிற வர்க்கமில்லைன்றது பெருமையா இருக்கு. நான் தேடின கண்மணி கிடைச்சுட்டாங்கற சந்தோஷம் வர்றது. யு நோ, ஐயம் ஆல்வேஸ் லக்கி... காதல்ல அடி வாங்கறதும் இதமாத்தான் இருக்கு. அடுத்த கையை ஓங்காதீங்க ப்ளீஸ்... நாளைக்கு வந்து இந்தக் கன்னத்தைக் காட்டறேன். கொஞ்சம் யோசிச்சு, கன்ஸிடர் பண்ணி பதில் சொல்லுங்க. ஸ்டில் ஐ லவ் யு டியர்..."

'ஸ்டில் ஐ லவ் யு...'

அதே 'ஸ்டில் ஐ லவ் யு...'

சித்தார்த்திடம் அன்று கேட்ட

'ஸ்டில் ஐ லவ் யு' - இன்று மீண்டும் ரமணனிடமிருந்து...

## 5

ராத்திரி முழுதும் நித்யா தூங்கவில்லை. அர்விந்த்தைத் தூங்க வைத்துப் போர்த்திவிட்ட பின் அவன் பக்கத்தில் படுத்து உத்திரத்தை வெறித்துக் கொண்டிருந்தாள். ஜன்னல் வழியாக உள்ளே நுழைந்த இள நிலா வெளிச்சத்தில், விடி விளக்கின் கண் சிமிட்டலில், சுழலும் மின்விசிறி சப்தத்தில் சித்தார்த்தும் ரமணனும் மாறி மாறி 'ஸ்டில் ஐ லவ் யூ' சொல்ல, அவள் உள்ளுக்குள் அதிர்ந்து போனாள். சித்தார்த்திற்குப் பின்னர் இழுத்துப் பூட்டின மனக் கதவு மெல்லத் திறக்கும் என்றோ, ரமணனை மெதுவாக உள்ளே எட்டிப் பார்க்க விடுமென்றோ அவள் நினைக்கவில்லை.



ரமணனும் ஒரு வகையில் சித்தார்த்தை நினைவூட்டுகிறான். அதே வெளிப்படைப் பேச்சு. அதே சாயலில் சிரிப்பு. அதே வேகம். ஆனாலும், இவன் சித்தார்த் இல்லை. சித்தார்த் அசோக மரம் மாதிரி. கிளைகளே இல்லாமல், ஓங்கி வளர்ந்து நிழலுக்காகக்கூட அதனடியில் ஒதுங்க முடியாது. அந்த அழகை தூர நின்று ரசிக்க முடியுமே தவிர, வேறு எதற்கும் அது உபயோகப்படாது. அலட்சியமான, மேம்போக்கான தன்மை வாழ்க்கைக்குப் பயன்படாது. அலட்சியமென்றால் சாதாரண அலட்சியமில்லை.

"நித்யா, ஸாரி! இன்னிக்கு சினிமா கான்ஸெல்..." - காரை விட்டு வெகு அலட்சியமாக இறங்கி சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டே சொன்னான் சித்தார்த்.

"ஏன், ஏதாவது அவசர வேலை இருக்கா...?" - இவள் நிதானமாகக் கேட்டாள்.

"வேலை எதுவும் இல்லை. இன்னிக்கு கிழவர் மேலே போக டிக்கெட் வாங்கிண்டுட்டார்..."

இவள் பதறிப் போனாள்.

"வாட் டு யு மீன்...?"

"ஐ மீன் ஹி ஈஸ் டெட்..."

"ஹூ...?"

"அதான் என் தாத்தா..."

புரிந்து ஜீரணிக்கச் சில விநாடிகள் பிடித்தன. எத்தனை அலட்சியமாகச் சொல்கிறான்! இது வெறும் விளையாட்டுத் தனத்தால் ஏற்பட்டதா, அல்லது பணம் கொடுக்கிற திமிறில் ஏற்பட்டதா...? எத்தனை தங்கமான மனிதர்! அவரின் சாவுகூடவா இவனை உருக்கவில்லை...? என்ன மனிதன் இவன்...? கண்களை இறுக மூடிக் கண்ணீரை அடக்கப் பிரயத்தனப் பட்டுப் பின் திறந்தாள்.

"என்னங்க, சமய சந்தர்ப்பம் தெரியாமல் பேசறீங்க...! இத்தனை நாள் உங்களை வளர்த்து ஆளாக்கினவர் போயிட்டார்; நீங்க நிதானமா விளையாட்டாப் பேசறீங்க...

கிளம்புங்க. வீட்டுக்குப் போகலாம்… ஏன் இப்படி விவஸ்தை இல்லாமல் இருக்கீங்க…?"

அவன் நிதானமாய் சிகரெட்டைக் கீழே போட்டு மிதித்து அணைத்தான்.

"என்னடா கண்ணா! ரேடியோ டிராமா ஹீரோயின் மாதிரி டயலாக் பேசறே…? மனுஷன்னு பொறந்தால் கொஞ்ச நாள் கழிச்சு செத்துத்தானே போகணும். அதுவும் தாத்தா இவ்வளவு நாள் திடகாத்திரமா இருந்து வாழ்க்கையை நல்லா எஞ்ஜாய் பண்ணிட்டு ரொம்ப திருப்தியா செத்துப் போயிருக்கார்னு சந்தோஷப்படரேனே தவிர, வருத்தம் எதுவும் படலே… பொய்யால்லாம் என்னால அழ முடியாது. ஸாரி டார்லிங்…"

"சரி. அழ வேணாம். வீட்டுலயாவது இருக்கக் கூடாதா…? இங்கே எதுக்கு ஓடி வந்தீங்க…?"

"அதுக்கும் காரணம் இருக்கு. சமையல்கார முத்துவை விட்டு, சொந்தக்காரங்கன்னு சொல்லிவிட்டு வீட்டுக்கு வந்துட்டிருந்த பட்டாளத்துக்கெல்லாம் போன் பண்ணச் சொன்னேன். இன்னும் கொஞ்ச நேரத்துல அத்தனை பேரும் வந்துடுவாங்க. அழுது ஆகாத்தியம் பண்ணுவாங்க. அதெல்லாம் தாத்தாவுக்காகவா…? இல்லை, அவருடைய பணத்துக்காக… அதையெல்லாம் பார்க்க எனக்குப் பிடிக்கலை… போலியான அவங்க நடிப்பைச் சகிச்சுக்கிற தன்மை இல்லை. நீ வேணும்னால் போய்ப் பாரு. கூட சேர்ந்து எல்லாரையும் மாதிரி அழு. நீ பர்மிட் பண்ணினால் நான் உன் மாடி ரூமுக்குப் போய் நிம்மதியா ரெண்டு பெக் விஸ்கி அடிச்சுட்டுப் படுத்துண்டு தூங்கறேன், என்ன…?"

"வார்டன் ஒதைப்பா… பட்டுக்குத் தயாரா…?"

"என்ன சொன்னே…? ஒரு பொம்பளை என்னை ஒதைக்கிறதா? வரிசையா முப்பத்திரண்டு பல்லையும் தட்டிக் கையில் கொடுத்துடுவேன். ஜாக்கிரதையா இருக்கச் சொல்லு…"

"நீங்க மட்டும் லேடீஸ் ஹாஸ்டலுக்கு வந்து ஒரு பொண்ணோட ரூம்ல படுத்துக்கறேன்னு சொல்லலாமா…?"



"யாரோ ஒரு பொண்ணோட ரூமா இருந்தால் சொல்லியிருக்கமாட்டேன். இது என்னோட நித்யாவின் ரூம்…"

"ஸாரி… என்கூட அதை இன்னும் நாலு பெண்கள் ஷேர் பண்ணிக்கறாங்க."

"அப்படின்ற பட்சத்துல ஐ டோண்ட் மைண்ட் ஷேரிங் தெம்…"

"யு… யு… ஐ ஹேட் யு சித்தார்த்…"

"தாங்க் யு நித்யா. பட் ஐ லவ் யு லவ் யு டெரிபிளி. ஆனால் ஒண்ணு பார்த்தியா. ஹேட் யு-ன்னு சொல்ற போதே அந்தக் குரல்ல 'லவ் யு'ன்ற அர்த்தம்தான் தொனிக்கிறது…"

"நோ. ஐ ரியலி ஹேட் யு. உங்களைவிட்டு நான் ரமணனைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன். அவர் ரொம்ப நல்லவர். அன்பானவர். ஆலமரம் மாதிரி வெயிலுக்கு நிழல் தருபவர் பாதுகாப்பு கொடுக்கக்கூடியவர். ஐ லைக் ஹிம்."

"ஜஸ்ட் எ மினிட்…" என்று விஷமமாகச் சிரித்தான் அவன்.

"லைக் ஹிம்னு சொல்றியே தவிர ஏன் லவ் ஹிம்னு சொல்லமாட்டேன்ற…?"

"அதை உங்ககிட்டே சொல்லணும் என்கிற அவசியம் இல்லை. ஆனால், உங்க கண்முன்னால இதை ஒரு சவாலா எடுத்துண்டு ரமணன்கூட வாழ்ந்து காட்டப் போறேன்…"

"ப்ரொஸீட் டியர் ஆல் த பெஸ்ட்!"

"சித்தார்த்…!"

"கத்தாதே நித்யா. ஐ நோ யு. உன்னால ஏன் ரமணனை ஐ லவ் ஹிம்னு சொல்ல முடியலை…? பிகாஸ், யு டோண்ட் ரியலி லவ் ஹிம். உன் மனசை விட்டு என்னை அழிக்க முடியாது என் ப்ரிய சகி… ஆனாலும் நான் உன்னை வாழ்த்தறேன். நீ நன்றாக இருக்கணும்னு விரும்பறேன். நீ

சொன்ன மாதிரி அவன் நிஜமாகவே நல்ல பையன். உனக்கு ஏற்றவன். உன்னைத்தவிர வேறு ஒருத்தியையும் ஏறெடுத்தும் பார்க்க மாட்டான். ரொம்ப ஸிஸ்டமாடிக்கா வளர்ந்திருக்கான். வாழ்ந்துண்டிருக்கான். இனிமேலயும் வாழுவான் ஸோ. அவன்தான் உனக்குத் தகுதியானவன். திரும்பவும் சொல்கிறேன். உனக்கு என் நல்வாழ்த்துக்கள். வரட்டுமா என் ப்ரிய சகி..?"

"கெட் அவுட் ஐ ஸே.."

பெரிதாய்க் கத்தின உடனே உடம்பு முழுதும் வியர்த்துக் கொட்ட, சுதாரித்து எழுந்து உட்கார்ந்தாள். சித்தார்த் இல்லை. ரமணனும் இல்லை. எல்லாம் கனவு. அடிமனத்தில் ஓடுகிற எண்ணங்கள்..

உடம்பை ஒரு தரம் உதறி விட்டுக் கொண்டாள். புடவைத் தலைப்பால் முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டாள். மின்சாரத் தடை வந்து மின் விசிறி நின்று விடிவிளக்கு அணைந்து போயிற்று. ஒன்றும் தெரியாத இருட்டில் தலைமாட்டில் இருந்த டார்ச் விளக்கை அழுத்தி லேசாய் வெளிச்சம் பரப்பி வாசற் கதவு போடப் பட்டிருக்கிறதா என்று பார்த்தாள். இரவு நேரங்களில் இப்படி மின்சாரம் நின்று போனால் அவளுக்கு ஓர் அதீத பயம் ஏற்படுகிறது. வேண்டாத கற்பனைகளெல்லாம் தோன்றி இதயத் துடிப்பை அதிகப்படுத்துகிறது. துணையில்லாமல் வாழுகிற சிரமம் விஸ்வரூபம் எடுக்கிறது.

ஆண் துணையின்றித் தனியாக ஒரு பெண் வாழுதல் என்பது கதைகளிலும் சினிமாக்களிலும் மட்டுமே சாத்தியம் என்று பட்டது. நிஜ வாழ்க்கையில் ஏதாவதொரு வகையில் ஆண் என்பவன் இன்றியமையாதவனாகிறான். இதயத்துக்கு அதற்குள் எங்கோ இருக்கிற மனசுக்கு, உடலுக்கு, இதோ அருகில் தன்னை மட்டுமே நம்பி உயிர்த்திருக்கும் இக் குழந்தைக்கு..

இவனும் நிறைய முறை கேட்டு விட்டான்:

"ஏம்மா.. பாலுவுக்கு, ரவிக்கு, ஸ்ரீனிவாஸனுக்கெல்லாம் அப்பா இருக்காளே.. எனக்கெங்கேம்மா..?"



இவள் பதில் சொல்ல முடியாமல் நின்றிருக்கிறாள். உள்ளுக்குள் தவித்து உருகிப் போயிருக்கிறாள். சட்டென்று நாக்கு கற்று வைத்திருந்த பொய்க் கலையில் நிலைமையைச் சமாளித்திருக்கிறாள்..

"உங்கப்பா ஊருக்குப் போயிருக்கார்டா கண்ணா.."

"எப்போம்மா வருவார்?"

"சீக்கிரம் வந்துடுவார்.."

"எங்க ஸ்கூல் ஸ்போர்ட்ஸ் டேக்குள்ள வந்துடுவாராம்மா..? ஏன்னா எல்லாப் பசங்களும் அப்பா, அம்மா கூடத்தான் ஸ்போர்ட்ஸுக்கு வராம்மா.. நான் மட்டும் தனியாப் போறேன். இந்தத் தரம் நீயும் அப்பாவும் வாங்கம்மா.."

இரண்டு வருட ஸ்போர்ட்ஸ் டேக்கும் அர்விந்த் தனியாகத்தான் போனான். இனிமேலும் குழந்தையைப் பொய் சொல்லிச் சமாளிக்க முடியாது. அவனின் முகம் இப்போதே ஏக்கப்பட்டு தந்தையின் நினைவினால் ஒடுங்கிப் போகிறது. பின்னால் இதுவே ஒரு தாழ்வுமனப்பான்மையை அவன் மனத்திலுருவாக்கலாம். அதன் காரணமாக அவன் பாதிக்கப் படலாம். அவன் மனோபாவங்கள் மாறுபாடடையலாம். அதற்கு இடம் கொடுக்கக்கூடாது. அவனை அவள் ஓர் ஆரோக்கியமான மனநிலையுள்ள குழந்தையாக வளர்த்து ஆளாக்க வேண்டும். அப்படி அவன் ஆரோக்கியமுள்ளவனாக இருக்க வேண்டுமென்றால் அவனுக்குள் ஏற்பட்டிருக்கிற தந்தை ஏக்கம் நீங்க வேண்டும். தானும் மற்ற எல்லாக் குழந்தைகளையும்போல் சராசரியானவன், தாய் - தந்தை இரண்டு பேரின் ஆதரவிலும் வளருபவன் என்கிற உணர்வு வேண்டும்.

இவனுக்குப் பாதுகாப்புத் தேவை. இவனை இப்படியே வளர விடக்கூடாது. இதுபோல் இருந்தால் சமூகம் இவனை மிரளச் செய்துவிடும். 'மிரண்டு, மிரண்டு.. நிழல்களுக்கெல்லாம்கூட மிரண்டு, தானும் ஒடுங்கி சுய பலமற்றுக் கொன்றே போட்டுவிடும். இதுபோல் தனிமைக்கு, இருட்டிற்கு பயந்து வாசற்கதவைப் பார்த்து..

நோ. வேண்டாம். இனி இந்த வாழ்க்கை தொடர வேண்டாம். ரமணனிடம் சரி சொல்ல வேண்டும். விவாகரத்தாகி ஆறு வயதுக் குழந்தை இருக்கிறது என்று தெரிந்த பின்பும் தீர்மானமாக இருக்கிறான். வாழ்க்கையின் முக்கியமான முடிவுகளை இன்னொருவரைச் சாராமல் சுயமாக எடுக்கிறான். முக்கியமாக ஒரு ராத்திரி அனுபவத்திற்கில்லாமல் கல்யாணத்தில் ஆரம்பித்து வாழ்க்கை தர தவிக்கிறான். சொந்தபந்தமற்று வலிய வந்து சுமையைத் தாங்கிக் கொள்கிறேன் என்பவனை உதறித் தள்ளினால் பின்னால் இதற்காக நிச்சயம் வருத்தப்பட நேரிடும்.. ஆதலால், ரமணனுக்குச் சரி சொல்லி, அவனை ஏற்றுக் கொள்ள வேண்டும். பழைய விஷயங்களையெல்லாம் மறந்து புதிதாய் வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டும். அவனைச் சந்தோஷப்படுத்தித் தானும் சந்தோஷமாக வாழ வேண்டும்..

"நான் தயாராக இருக்கிறேன் ரமணன்..."

மனத்தின் இறுக்கங்கள் தளர்ந்து படுத்துக் கொண்ட போது, மின்சாரம் வந்து விடிவிளக்கு எரிய, மின்விசிறி வேகமாகச் சுழல ஆரம்பித்தது...



6

Ramanan Weds Nithya on Friday, the 20th August 1982 at Tirumala Devasthanam.

"இருபதாம் தேதியன்னிக்கி யாரோ பெரிய மனுஷர், தர்மவான் ஒம்போதரை மணிக்கு ஸ்ரீநிவாஸ கல்யாணம் பண்றார்.. அதனால நீங்க என்ன பண்றேள், கார்த்தாலேயே உங்க கல்யாணத்தை வெச்சுக் கோங்கோ... உஷத் காலத்துல கல்யாணத்தை முடிச்சுண்டுடலாம். அப்புறம் பெருமாளோட கல்யாணத்தையும் சேவிச்சுண்டுடலாம்..."

"எங்களை ஆசீர்வாதம் பண்ணுங்க..."

"வாழ்க்கை நல்லபடியா இருக்கும்... கற்பூர ஆரத்தி காட்டறேன்... கண்குளிர பகவானைச் சேவிச்சிக் கோங்கோ.."



"ரமணா, பெரிய ஆளுடா நீ. சத்தம் போடாம பாம்பே டெண்டரை ப்ராக்கெட் போட்டுப் பிடிச்சா மாதிரி நித்தியாவையும் தட்டிண்டுட்டே.. காட் ப்ளெஸ் யு மை சைல்ட்.. என் பொண்ணு நித்தியாவுக்கு என்ன ப்ரஸண்ட் பண்றது.. ம்.. ஒரு அஞ்சி ருபாய்க்கு செக் தரேன்.. என்ன அப்படிப் பார்க்கறே? ஐயாயிரம்டா. இந்தக் கிழவன் நிவாஸை நினைச்சுண்டே செலவழியுங்கோ.. சந்தோஷமா இருங்க. ஆல் தி பெஸ்ட்.."

"ஆயா, அர்விந்தை உன் கையில ஒப்படைச்சுட்டுப் போறன். ஜாக்கிரதையாய் பார்த்துக்க.. குழந்தை அங்கே வரவேணாம்கிறதாலதான் விட்டுட்டுப் போறேன்.. நீ புரிஞ்சுப்பேன்னு நினைக்கிறேன்.."

"கவலைப்படாமல் போயிட்டு வாங்கம்மா.. குழந்தையை நான் கவனிச்சுக்கறேன். நீங்க ரெண்டு பேரும் கடைசி வரை சந்தோஷமா இருக்கணும்னு பிரார்த்தனை பண்ணிக்கறேன்.."

"அர்விந்த் கண்ணா, வரட்டுமா..?"

"டாட்டா மம்மி..!"

ஊசியாய் காற்றின் குளுமை மயிர்க் கால்களைத் தாக்க பிரேக்கில் கால் பரவாமல் ஒவ்வொரு ஹேர்பின் வளைவுகளிலும் அசுரத்தனமாகத் திருப்பி, ஒரு நொடியில் கூட உடம்பு நித்யாவின்மீது உரசாமல், சர்வ ஜாக்கிரதையாகக் காரை ஓட்டிக்கொண்டு வந்தான் ரமணன். குளிரில் நித்யா நடுங்குவதைப் பார்த்து ஜோல்னா பையிலிருந்து ஷாலை உருவிக் கொடுத்தான்.

"இந்த ஜர்னி ஒருமாதிரி த்ரில்லா இருக்கு இல்லீங்க..?"

"இல்லீங்க இல்லை- வெறும் இல்லைதான்.."

தலையைத் திருப்பி அவளை மென்மையாய் பார்வையால் வருடிச் சிரித்தான்.

"ஓகே... த்ரில்லா இருக்கு இல்லையா நித்யா..? இப்போ சரியா..?"

"ரொம்ப சரி..."

சொன்னபோதே சட்டென்று ரமணன் மாறி சித்தார்த் தெரிந்தான்.

"ஹேய் நித்தி..! இந்த ஜர்னி ஒரு த்ரில்லிங் எக்ஸ்பீரியன்ஸ் இல்லே...? ஸ்பீடாமீட்டரைக் கொஞ்சம் பாரேன்..."

"ம்...ஹூம்..."

"ஐ- பாருன்னா..."

பார்த்தாள். எழுபதுக்கும், எண்பதுக்கும் இடையில் முள் துடித்துக் கொண்டிருந்தது. அதுவும் திருப்பதி மலையின் வளைவுப் பாதையில்... ஒரு மயிரிழை தப்பினால் கூட எலும்புத் துண்டுகளை எண்ண கம்ப்யூட்டர் வேண்டும். இந்த இடத்திலா விளையாட்டு...! பயந்து போனாள்.

"என்ன சித்தார்த் இது...?"

"கட் இட்...சித்தார்த்தனு கூப்பிட்டு எனர்ஜியை வேஸ்ட் பண்ணிக்காதே...'சித்து'ன்னு கூப்பிடு..."

"ஓகே...முதல்ல காரோட வேகத்தைக் குறைங்க. எனக்குப் பயம்மா இருக்கு...ப்ளீஸ்! கொஞ்சம் மெதுவா போங்க..."

"நித்யா கண்ணா... வாழ்க்கையில் த்ரில் வேணும்டா... ஒவ்வொரு நிமிஷமும் அந்த த்ரில்லோட நகரணும். அது இல்லாத வாழ்க்கை என்ன வாழ்க்கை...? ஒருவேளை ஆக்ஸிடெண்ட் ஆனால்கூட ரெண்டு பேரும் ஒண்ணாத் தான் போவோம்...நம்ப காதல் அம்பிகாபதி-அமராவதி மாதிரி அமர காதலாயிடும். ஸ்கூல் பசங்கள்ளாம் பிற்காலத்தில் நம்மைப்பற்றி மாஞ்சு மாஞ்சு படிப்பாங்க..."

"ஏடு கொண்டலவாடா வெங்கட் ரமணா... கோவிந்தா... கோாா...விந்தா....!" மஞ்சள் உடையும் மொட்டைத் தலையுமாகச் சின்னச் சின்ன பட்டாலியன்கள் பெரியவர்களின் ஒருமித்த அவசரமான மார்ச் பாஸ்ட்.



"நித்யா குளிர்றது... வெந்நீர் கிடைக்க நேரமாகும் போல இருக்கு பச்சைத் தண்ணியிலேயே குளிச்சுடலாமா?"

"சரி..."

"அதுக்கு முன்னால ஒரு சின்ன தப்பு பண்றதுக்கு பர்மிஷன் தர்றிங்க நோ, நோ தர்றியா...?"

"என்ன...?!"-சற்றே கலவரத்துடன் பார்க்க ரமணனின் உதட்டில் அதே கபடமற்ற குழந்தைச் சிரிப்பு.

"ஒண்ணுமில்ல... நேற்றுச் சாயந்திரம் ஆபீஸை விட்டுக் கிளம்பினதிலிருந்து 'தம்' அடிக்கலே...பர்மிஷன் கிடைச்சுதுன்னா..."

"என்ன இது புதுசா இருக்கு பர்மிஷனெல்லாம்...?"

"முந்தின்னா நான் தனி மனுசன். விருப்பு, வெருப்பெல்லாம் என் ஒருத்தனை மட்டுமே சார்ந்தது. ஆனா, இப்போ அப்படியில்லையே...?"

சிரித்துக் கொண்டே "பர்மிஷன் கிராண்டட்..." சொல்ல சட்டென்று ஏதோ நினைவில் ஸ்விட்சை அணைத்த மாதிரி சிரிப்பு நிற்க...

"நித்யாகண்ணா, தூங்கறதா உத்தேசம் இல்லையாடா? ராத்திரி முழுசும் இப்படியே முழிச்சுண்டிருக்கப் போறியா? கல்யாணத்துக்கு இன்னும் இருநூற்றிநாற்பது நிமிஷம் பாக்கியிருக்கு..."

"எதுக்கு...தூங்கறபோது தொந்தரவு பண்றதுக்கா...?"

"நோ, நோ...கல்யாணம் முடியறவரை உன்மீது இந்த சித்தார்த்தின் விரல் நகம்கூடப் படாதுங்கறதை ஞாபகம் வச்சுக்கோடா..."

"பின்னே ஏன் தூங்கு தூங்குன்னு தொண தொணக் கறீங்க...?"

"வேற எதுக்குமில்லே...நீ தூங்கினால்தான் என்னால ஒரு சின்ன தப்பு பண்ண முடியும்..."

"என்ன...!"

"கற்பனையைக் கண்டபடி ஓடவிடாதடா கண்ணா... இவ்வளவு தூரம் கார் ஓட்டிண்டு வந்தது ரொம்ப டயர்டா இருக்கு... கிளம்பறபோது, வீட்டு வேலையாள் தெரியாமல கார் டிக்கிக்குள்ள ஒரு பாட்டில் ஸ்காட்ச் விஸ்கி எடுத்து வச்சுட்டான். அது 'என்னை வீணாக்காதே'ன்னு அடம் பிடிக்கிறது எனக்காக இல்லை... அதுக்காகத்தான்."

மெலிசாய்-இயற்கையாய் சிரித்தாள்.

"கோவிலுக்கு வந்து தண்ணியெல்லாம் போடலாமா? கல்யாணம் முடிஞ்சு திரும்பிப் போனப்புறம் வச்சுக்குங்க..."

"திரும்பிப் போறவரை தாக்குப்பிடிக்கமுடியாது. அதான் சொன்னேன். நீ தூங்குன்னு... தூங்கினால் உனக்குத் தெரியாமல் குடிச்சிருப்பேன் இல்லை...?"

மிகவும் ஸ்நேகமாய்ப் பார்த்தாள். அருகில் போய் தலையைக் கலைத்துச் செல்லமாய் கன்னத்தில் தட்டினாள்.

"சரியான அழூமூஞ்சிக் குழந்தை... கோ அஹெட்... பர்மிஷன் க்ராண்டட்."

"தாங்ஸ்டா கண்ணா..."-அவன் கார் டிக்கியைத் திறக்க ஓடினான்...

சுத்தமாய் குளித்த ஈரத்தலையைத் தளரப்பின்னி, கால் சுடுக்க ரமணன் அலைந்து தேடியெடுத்த ஆயிரத்திநானூறு ரூபாய் பட்டுப் புடவையில் அவள் வந்து நின்றதும் ரமணன் அசந்து போனான். அவளுடன் இணைந்து நடப்பதே பெருமையாய்ப்பட கோயில்வரை மௌனமாகவே நடந்தான்.

முன்கூட்டியே கோவிலுக்குப் பணம் கட்டியிருந்ததால் அவர்கள் செய்ய வேண்டிய ஏற்பாடு எதுவுமில்லை. அதுவுமின்றி மற்ற கல்யாணங்களைப்போல் இது இல்லை. இதில் கலாட்டா இல்லை. நண்பர்கள் இல்லை, உற்றார், உறவினர்கள் இல்லை, சாட்சிகள் இல்லை. மிஸ்டர் அண்ட் மிஸஸ் பத்மாவதி மட்டும்தான் சாட்சி. அவர்கள் தான் உறவினர்கள்.



படியில் கால் வைத்துத் தாண்டும்போது வாசல் யாளி கிண்டல் கலந்த சிநேகத்துடன் பார்த்து, 'நித்யா, யூ ஆர் ஸெக்யூர்ட் நௌ'-சொன்னதாகப் பட அவள் புன்னகைத்தாள்.

தகதகவென எரியும் ஹோம குண்டத்தின் ஜ்வாலைக்கெதிரில், வெங்கடாசலபதி சாட்சி நிற்க, அவளின் கையை அழுந்தப் பற்றி, திருமால் சிவனுக்குச் செய்த மாதிரி, சொல்லிக் கொடுத்த மாதிரி...

'பஞ்சபூதங்களின் சாட்சியாக இவளைக் கைப்பிடிக்கிறேன்... மனம், வாக்கு, காயம் இவற்றால் இவளையன்றிப் பிறிதொரு பெண்ணைச் சுவீகரிக்கமாட்டேன்.'

'இதுவரை விஸ்வாமித்திரரின் வம்சா வழி வந்த நான், கௌடில்யரின் வழிவழி வந்த நித்யா எனப்படுகிற இப்பெண்ணை என் பஞ்சேந்திரியங்களும் ஒப்ப முழுமையாய் ஏற்றுக் கொண்டு எங்களைச் சார்ந்த பித்ருக்களின் தாகம் திரும்படி என்னும் தண்ணீரும் வாசனையும் அளித்து அவர்கள் உடல் ஏக சந்துஷ்டி அளிக்கும் விதத்தில் பாரம்பரியம் வளர்த்து, சிருஷ்டிக்கு ஆவன செய்கிறேன்...'

மஞ்சள் கயிற்றை மூன்று முடிச்சுப் போட்டு, சகல ஐஸ்வர்யங்களையும் மந்திரத்தில் வாங்கிக் கொண்டு பிரகாரத்தை வலம் வந்தபோது, ரமணன் நிஜமான ஒரு பயத்தில் தயக்கமாகக் கேட்டான்:

"எனக்காகப் பரிதாபப்பட்டுக் கழுத்தை நீட்டாமல் நிஜமா நீயும்விருப்பித்தானே கல்யாணம் பண்ணின்டே...? கோவிச்சுக்காதே... மனசுக்குள்ளே உறுத்தித்து. நிராதரவா இருக்கிற பெண்ணை, ஆள் பலம், உத்தியோக பலம், வசீகர பலம் காட்டித் தப்பா இன்ஃப்ளுயன்ஸ் பண்ணிட்டோமோன்னு மனசு அடிச்சுக்கறது. அதுவுமில்லாமல் இன்னிக்கு கார்த்தாலேருந்தே உன் மூஞ்சி சரியாயில்லை, அதனாலே மனசில் பட்டதை மறைக்காமல் கேட்டுட்டேன்."

நித்யா நிதானமாக அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

'மைகாட்! மூணு முடிச்சுப் போட்டவுடனே இந்த ஆம்பிளைகளுக்கு பொஸஸிவ்னெஸ் வந்துடறது இவள் முழுக்க முழுக்கத் தனக்கே சொந்தம். இல்லே - இவ மனசுல யாரையாவது நினைச்சுண்டிருக்காளோன்னு உடனடி சந்தேகம்.'

லேசாய் சிரித்தாள்.

"ஏன் கேட்கறீங்க..? மனப்பூர்வமா சம்மதிச்சுத்தான் பண்ணிண்டேன். 'பண்ணிண்டேன்'னு சொல்ற இந்த வார்த்தையிலே லேசா ஒரு ஈகோ தெரியும் ஆனாலும் நிஜம் அதுதான். நான் நானாக இருந்ததுனாலதான் நீங்க என்னை விரும்பினீங்கன்றதுதானே..? நீங்க கேட்ட இதே கேள்வியை நானும் மடக்கிப் போட்டுத் திருப்பிக் கேட்கட்டுமா..?

அவளின் சிரிப்பில் லேசாய் செயற்கை இழையோடிய மாதிரித் தெரிய, ஆனாலும் ரமணனுக்கு அவளின் சமாளிக்கும் திறமை பிடித்தது.

"நீங்க மனப்பூர்வமா சம்மதிச்சுத்தானே என்னைக் கல்யாணம் பண்ணிண்டீங்க...? இல்லே, இந்தப் பொண்ணைப் பார்த்தா அழகாயிருக்கு. பாவம், கையோட பிள்ளையை வேற ஒண்ணு வச்சுண்டிருக்கு... எப்படித் தனியா இந்த வக்கிரமான உலகத்துல காலம் தள்ளி அந்தப் பிள்ளையை வளர்க்கப் போறதோன்னு பரிதாபப் பட்டுக்கூட நீங்க என்னைப் பண்ணிண்டிருக்கலாம் இல்லையா?"

அவன் கலகலவென்று வாய்விட்டுச் சிரித்தான்.

"தேவி, நீங்கள் இந்த உலகத்தின் மிகச் சிறந்த அறிவாளி என்பதை ஒப்புக்கொள்கிறேன். என்னை மேலும் கலாட்டா பண்ணாதீர்கள். நாம் வேறு விஷயம் பேசுவோம் தேவி..!"

"அப்படியே ஆகட்டும் பக்தா...! உன் பக்தியை மெச்சினோம்...என்ன வரம் வேண்டுமோ கேள், தருகிறேன்."

"வரம் எதுவும் வேண்டாம் தேவி. வரத்தைத் தங்களிடமே வைத்துக் கொள்ளுங்கள். வேறு ஒன்றை



இன்றிரவு யாரும் அறியாமல் ரகசியமாகத் திருடிக் கொள்கிறேன்... என்ன, சரி சொல்லுங்கள்..."

நித்யா உடனே புரிந்து கொள்ள முடியாமல் விழித்து பின் சட்டென்று அந்த இடத்தைவிட்டு விலகிப் போனாள்.

"நித்யா கண்ணா, கோவிச்சிக்க மாட்டியே..? ஒரு விஷயம் கேக்கறேன்...ம்...எப்படிக் கேக்கறது...? உனக்குத் தெரியும். ஐயாம் ஆல்வேஸ் ஓபன். மனசுக்குள்ள ஒண்ணு வச்சுண்டு உதட்டுல ஒண்ணு என்னால பேசமுடியாது. ஹய்! சிரிக்காதம்மா...ஐ'யம் டெட் ஸீரியஸ். தாலி கட்றதுக்கு இன்னும் ஒரு மணி நேரம், சரியா மூவாயிரத்து அறு நூறு விநாடிகள் இருக்கு... இன்னொரு தரம் யோசிச்சுடு. எனக் கென்னவோ உன்னை கம்பெல் பண்ணி கல்யாணத்துக்குச் சம்மதிக்க வச்சுட்டேனோன்னு பயம்மா இருக்கு. பெண் பாவம் பொல்லாததுன்னு சொல்லுவாங்க. உனக்குச் சமமா எனக்கு எந்த க்வாலிஃபிகேஷனும் இல்லை. சிகரெட் பிடிக்கறேன் நான் - வெஜ் சாப்பிடறேன். தண்ணி அடிக்கறேன். இதுக்கு மேல் 'கழிசடையா ஒருத்தன் இருப்பான்னு எனக்குப் படலை. ஐ ஃபீல் கில்டி என்னோட சகல அஸ்திரங்களையும் ப்ரயோகப்படுத்தி உன்னைப் பணிய வச்சுட்டேங்கிற மாதிரி ஃபீல் பண்றேன். என்ன? இப்பவும் ஒண்ணும் கெட்டுப்போயிடலே. உன் மனசை மாத்திக்கிறதுன்னா மாத்திக்கலாம். தெளிவா சொல்லலாம். நான் தாங்கிக்கறேன். நாம நல்ல நண்பர்களாகவே இருக்கலாம். பழையபடி உன் இடத்துல உன்னை விட்டுடறேன். எப்படிடா இவன் மனசைப் புண்படுத் தறதுன்னு கவலைப்படாதே... டோண்ட் ஃபீல் ஸாரி..!"

"என்னை யாரும் கம்பெல் பண்ணி யார் வழிக்கும் கொண்டு போக முடியாது. ஒங்களை எனக்குப் பிடிச்சது. எனக்கு ஓரளவு உலகம் தெரியும் மனசுல பட்டதைச் சொல்றீங்க... ஆம்பிளையா, அழகா நெஞ்சை நிமிர்த்தி உங்களைக் காட்டிக்கறீங்க. அதுதான் எனக்குப் பிடிக்கறது. வெளிப்படையா இருக்கிறது பிடிக்கிறது. கல்மிஷமில்லாத குழந்தைத்தனம் பிடிக்கிறது. உங்க மேன்லினெஸ் பிடிக்கிறது. அதனால நிஜமாக உங்களோட உங்க குணத்தையும் சேர்த்தே நேசிக்கிறேன். நீங்க கார், பங்களா

இல்லாமல் வெறும் சித்தார்த்தா இருந்தால்கூட என்னை அட்ராக்ட் பண்றது உங்க மனசுலதானே தவிர வேற எதுவுமில்லை."

"ஐயோ..! பனிச்சிறு இழுத்து சினிமா மாதிரி கிஸ் பண்ற சந்தர்ப்பம் இது. ஆனா, இருக்கிற இடம் கோவில். கடவுளே..! கொஞ்சம் கண்ணை மூடிக்கோயேன். சின்ன தப்பு ஒண்ணு பண்ணிடறேன். ரொம்ப சின்னதா ஒரே ஒரு தப்பு..ப்ளீஸ்..ப்ளீஸ்..!"

பிரகாரத்தை மூன்று முறை வலம் வந்து கல்யாண மண்டபத்துக்கு வந்தபோது-

"சார்..கொஞ்சம் தள்ளிக்குங்க. ஸேவை பண்றவருக்கு இடம் விடுங்க."

தள்ளி நின்றார்கள்.

"இந்த தம்பதிதான் இன்னிக்கு இங்கே கல்யாணம் பண்ணிண்டவா..நான்தான், 'ஸ்ரீநிவாச கல்யாணமும் நடக்கிறது. கலந்துக்கோங்க'ன்னேன். உங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லையே..?"

"இதோ பாருங்கோ, இன்னிக்கு ஸேவை பண்றவர் இவர்தான். பெங்களூர்லேருந்து வந்திருக்கார். ஸ்ரீமான் சித்தார்த்த கௌதம்னு பேரு.."

நித்யா அசையாமல் நின்றாள்.

---

## 7

---

"**கங்கிராஜுலேஷன்ஸ் மிஸ்டர்..?**"

"ரமணன்.."

"**மிஸ்டர் அண்ட் மிஸஸ் ரமணன்.. பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ வாழ்த்துக்கள்! பை தி பை. என் பேர் சித்தார்த்த கௌதம். அதைத்தான் சாஸ்திரிகளே சொல்லிவிட்டார். இன்டஸ்ட்ரியலிஸ்ட். உட்காருங்கள்..**"



ரமணன் கேழ்ப்படிய, நித்யா பார்வையை எங்கோ அலையவிட்டாள்.

"நீங்களும் உட்கார்ந்துக்கலாம் மிஸஸ் ரமணன். நான் போய் கோவிலைப் பத்து ரவுண்டு சுத்திட்டு வரேன்.."

சித்தார்த்.. லேசாய் மாறிப் போயிருந்தான். சின்னதாய் தொப்பை, காதோர நரைமுடி, கண்களுக்கடியில் கரு வளையங்கள்.. அதைத் தவிர பழைய சித்தார்த்தான். அதே மாதிரி நெற்றியில் வழியும் தலைமுடியை லாகவமாய் பின்னுக்குத் தள்ளி, சட்டையின் முன் பொத்தான்கள் போடப்படாமல் மார்பைக் காட்டி' முழுக்கைச் சட்டையை மடித்து விட்டு.. வேகமாய், இயல்பாய் பேசி.. எதையும் விளையாட்டாய் சாதாரணமாக எடுத்துக் கொண்டு..

பட்டு வேஷ்டி கோவில் தரையைப் பெருக்குவதைத் தவிர்க்க லேசாகத் தூக்கிப் பிடித்து நடந்த வேகமான நடையில்-

'சித்தார்த்..சலனமில்லாமல் தன்பாட்டுக்கு ஆறாகப் போய்க்கொண்டிருந்த என் வாழ்க்கையை உன் பக்கம் திருப்பி உன் போக்கிற்கெல்லாம் பாய்கிற தண்ணீரில்லை என்று தெரிந்தவுடன் எதுவுமே நிகழாத மாதிரி சரேலென்று வெட்டி விலகிப் போய்..மீண்டும் இப்போது ஏன் என் வாழ்க்கையில் குறுக்கிடுகிறாய்..? இன்றுதானா நீ ஸ்ரீநிவாஸ கல்யாணம் பண்ணி வைக்க வேண்டும்..? நான் கல்யாணம் பண்ணிக் கொள்கிற அன்றுதானா..? கடவுளே..! உனக்கு இதெல்லாம் விளையாட்டா..?'

-நித்யா யோசித்தாள். ரமணனை சித்தார்த்துடன் பழக விடக்கூடாது என்று முடிவு செய்தாள்.

'ஐந்து நிமிஷம் பேசினால் போதும்; ஆளை அசத்தி அப்படியே அமுத்தி பாக்கெட்டில் போட்டுக்கொண்டு விடுவான். அவனோடு பழகுகிறவர்கள் மேலோட்டமாகப் பார்த்து சித்தார்த்தை ஏற்றுக்கொண்டு விடுவார்கள். பேசுவது அவ்வளவு கச்சிதமாக இருக்கும். அதனால் நம்புவார்கள்.. 'ஏன் இவனை விவாகரத்து செய்தாய்..?' என்று சித்துவோடு பழகிய பிறகு ரமணன் கேட்டால்..? எப்படிச் சொல்வது..? எதைச் சொல்வது..?'

'கடவுளே!ப்ளீஸ் கெட் ரிட் ஆஃப் ஹிம்.ப்ளீஸ்..!'

'நித்யாவைச் சந்திப்போம். அதுவும் இந்த மாதிரி நிலையில் சந்திப்போம் என்று கனவில்கூட நினைக்க வில்லை சித்தார்த். கட்டுப்பெட்டியான இவளால் எப்படி இரண்டாவது கல்யாணம் செய்து கொள்ள முன்வர முடிந்தது என்பது ஆச்சரியமாக இருந்தது. ஆச்சரியத்தை விட அதிர்ச்சியே மேலோங்கி நின்றது. எல்லாருமே சூழ்நிலைக்கு அடிமையாகி சுயத் தன்மை அற்றுப்போய் விடுவதாக நினைத்தான். 'சுயத் தன்மை மட்டுமில்லை. வாழ்க்கையைப் பார்த்து மிரண்டு போய்விடுகிறார்கள். அந்த மிரளலைச் சமாளிக்கத் துணை தேடுகிறார்கள். பயம். தனியாக வாழ்வதற்குப் பயம். சிந்திப்பதற்குப் பயம். உருவாவதற்குப் பயம். உருவாக்குவதற்குப் பயம். எல்லாவற்றிற்கும் பயம்.பயம். இந்த பயம், நிம்மதி யில்லாமையைத் தேடித் தருகிறது. சாந்தி வேண்டும் என்று அலைய வைக்கிறது. அலைகிறார்கள் சாந்தி எங்கிருக்கிறது? அவரவர்களிடத்தில் இருக்கிறது. இது புரியாமல் அல்லது புரிந்து கொள்ள முடியாமல் வெளியில் தேடி, நண்பர்களிடம் தேடி, இட மாறுதலில் தேடி.. கடவுளிடம் தேடி.. தேடிக் கொண்டே இருக்கிறார்கள்.

'நித்யாவின் இந்தக் கல்யாணத்திற்கும் இதுதான் காரணமாக இருக்க முடியும் என்னை எதிர்ப்பார்க்காத விதமாகச் சந்தித்தவுடன் ஏன் அப்படிக் கலங்கிப் போய் விட்டாள். நான் இவளின் வாழ்க்கைக்குக் குறுக்கே வில்லனாக வந்துவிடுவேன் என்றா..? மீண்டும் பயமா.. எதற்கு இந்தப் பயம்..? தான் கஷ்டப்பட்டுச் சம்பாதித்திருக்கும் இந்த இரண்டாவது கணவனை, இன்னும் சொல்லப் போனால் செக்யூரிட்டி பீரோவை உடைத்து விடுவேன் என்று கலங்க ஆரம்பித்திருக்கிறாளோ...? குழந்தை, பாவம்! யாரையும் கட்டுப்படுத்துவது எனக்குப் பிடிக்காது என்பது அவளுக்கே தெரியும். ஆனாலும் அவளிடம் இப்போது இதைச் சொல்லியாக வேண்டும். ஞாபகப்படுத்த வேண்டும். கவலைப் படாதே. வாழ்க்கையைத் தைரியமாக, சுகமாக, கஷ்டங்களை இழுத்துப் போட்டுக் கொள்ளாமல் வாழ ஆரம்பி என்று சொல்ல வேண்டும்..'



பிரகாரத்தைச் சுற்றி முடித்து வந்தபோது, ரமணனைக் காணவில்லை. நித்யா மட்டும் தனியாகச் சந்நிதியில் நின்று கொண்டிருந்தாள். முகம் கவலையிலும் வருத்தத்திலும் களையிழந்து கிடந்ததைக் கவனித்தபோது, சித்தார்த்துக்கு வருத்தமாக இருந்தது. பக்தர்களின் இரைச்சலுக்கு நடுவே அவளருகில் போய் குனிந்து மெதுவாகப் பேசினான்:

"குட் நித்யா. எங்கே வாழ்க்கையை வீணாக்கிக்கப் போறாயோன்னு வருத்தப்பட்டேன். நல்ல வேளையாக புதுமைப் பெண்ணாக நடந்துக்கிட்டிருக்கே. மனசுக்குள் உனக்கு விழா எடுக்கறேன். ஆனால், ஒரு சின்ன ரிக்வெஸ்ட் இந்த மாதிரி கவலையும் பயமும் படாதே. என்னை யார்னு நான் உன் ஹஸ்பண்ட் கிட்டே காட்டிக்க மாட்டேன். காட் ப்ளெஸ் யூ! ஹாவ் எ நைஸ் லைஃப்.."-சொல்லிவிட்டுப் பதிலை எதிர்ப்பார்க்காமல் திரும்பிப் போய் சாஸ்திரிகளின் அருகில் உட்கார்ந்து கொண்டான்.

ரமணன் மிகவும் சந்தோஷத்தில் இருந்தான் வாக்கையின் ஆரம்பம் நன்றாக ஆரம்பித்ததில் திருப்தியாக இருந்தான். ஒவ்வொரு விஷயத்தையும் யோசித்துத் திட்டமிட்டுச் செய்ததில் எதிலும் தோல்வியில்லை. விருப்பப்படி இதுவரை நடந்து வந்திருக்கிறது. மூன்று தங்கைகளுக்கும் முன் நின்று கல்யாணம் பண்ணிக் கொடுத்தாகி விட்டது. அதற்கான கடனை அடைத்தாயிற்று அப்புறம் சேர்த்த பணத்தில் சின்னதாய் ஃபிளாட் கொஞ்சம் ஃபர்னிச்சர்கள். ஒரு ரெஃப்ரிஜெரேட்டர்.. எல்லாம் வாங்கி வீடு தயாரித்து. பஸ்ஸில், ரயிலில், வெளியில் போகும்போது, பார்க்கிற பெண்களில் தனக்குப் பிடித்தமான பெண்ணைத் தேர்ந்தெடுத்து, அவளுடன் மானசீகமாகக் கற்பனையில் குடும்பம் நடத்தி..

அதன் பின் மனப்பூர்வமாக, பணப்பூர்வமாக, உடல் பூர்வமாக நிஜமாக வாழ்க்கையைத் துவக்கலாம் என்று முடிவெடுத்து நிமிர்ந்தால்-

இத்தனை நாள் மனசுக்குள் இருந்த அத்தனை மனைவிகளின் கற்பனைகளும் ஒருங்கே சேர்ந்து நித்யா.

அவளைப் பார்த்த பின்பு நினைவெல்லாம் நித்யா, நெஞ்செல்லாம் நித்யா; உயிரெல்லாம் நித்யா என்று உள்ளுக்குள் உருகி. தன் உருகலின் சாற்றில் ஒரு பங்கை அவளிடம் வெளிப்படுத்தி. இதோ, இப்போது கல்யாணம் வரை சுபமாக நடந்து வந்தாயிற்று. கடைசிவரை இதே நடையில் காலம் தள்ளி விட்டால் போதும். இதில் இன்னொரு பெரிய நிறைவும் இருக்கிறது. என் சுகம் தவிர அவள் மனசுக்கும் இந்தக் கல்யாணம் இதமளிக்கும். தனியாய் ஆறு வயதுச் சிறுவனை ஆளாக்குவது என்பது லேசான காரியமில்லை. அவளால் அப்படியே இருந்துவிட முடியுமென்றாலும் அந்தக் குழந்தைக்கு கார்டியன் தேவை. அவளின் மனத்திற்கும் அன்பு செலுத்த, செலுத்தின அன்பைத் திரும்பப் பெற்றுக் கொள்ள ஒரு துணை தேவை! அப்படிப்பட்ட துணையாக, தோழனாக அமைய நேர்ந்ததில் சொல்லத் தெரியாத ஒரு திருப்தி—

வெறும் இந்தத் திருப்தியுடன் நின்று விடாமல் நித்யாவிற்கு நிஜமான ஒரு தோழனாக நடந்து கொள்ள வேண்டும்... அவளது கடந்த கால வாழ்க்கை பற்றிய எந்தக் கேள்வியும் கேட்கக் கூடாது... கேள்வி கேட்காதது மட்டுமில்லை; நினைத்துக்கூடப் பார்க்கக்கூடாது. அவள் மனத்தை வருடிக் கொடுத்து இதப்படுத்த வேண்டுமே தவிர, கீறிவிட்டு வேடிக்கை பார்க்கிற ஸாடிஸம் கூடாது...

'நித்யா கவலைப்படாதே. நான் இருக்கிறேன். எந்த சந்தர்ப்பத்திலும் உன்னுடன் இருப்பேன். எப்பொழுதும் உன்னைத் தவிக்க விடமாட்டேன். அக்கினி வளர்த்துச் சத்தியம் செய்ததை ஒருபோதும் மறக்கமாட்டேன். கடவுள் என்னிடம் கருணை உள்ளவராக இருக்கிறார். எல்லாவற்றையும் சுலபமாக்கித் தருகிறார். நினைத்ததை நடத்தித் தருகிறார். யத்தனம், பிரயத்தனம், தெய்வாதீனம் மூன்றும் என்னிடம் இருக்கிறது. இதுவரை யார் மனசையும் புண்படுத்தியதில்லை. யார் குடும்பத்தையும் நோகச் செய்ததில்லை. எனக்கென்று சின்ன வட்டமாக ஒன்றைப் போட்டுக் கொண்டு அதற்குள் பழகி வருகிறேன். அந்த வட்டத்திற்கு யாரும் குந்தகம் நினைக்கமாட்டார்கள். சகுனமும் சரியாக இருக்கிறது. கல்யாணம் நடந்த கையோடு



பெருமாளுக்கும் கல்யாணம் நடந்திருக்கிறது. யாரோ புண்ணியவான் நடத்தி வைக்கிறானாம். பெரிய கோடீஸ்வரன் என்று சொல்கிறார்கள். கொஞ்சம்கூட தற்பெருமை இல்லாமல் பழகுகிறான். ஆனாலும் அவன் முகத்தில் ஒரு சோகம் தெரிகிறது. ஏன் தனியாக வந்திருக்கிறான்..? ஒரு வேளை என்னைப்போல் சொந்தம் என்று யாரும் கிடையாதோ? ஆனால், என்னமாய்ப் பேசுகிறான்..? 'உங்களை சகோதரன்னு மனசால நினைச்சுக்கறேன். அந்த உரிமையோட இந்த உற்சவத்துல கலந்துக்குங்க..!'

இவன் ஒரு விளம்பர கம்பெனியில் வேலை செய்தால் பேச்சாலேயே ஆர்டர் வாங்கிடுவான். நைஸ் பர்ஸன்...

ஸ்ரீநிவாஸ கல்யாணத்திற்கு மாங்கல்யதாரணத்தின் போது இவர்களின் கோத்திரம், நட்சத்திரம் கேட்டு சித்தார்த் அர்ச்சகரிடம் சொன்னது சித்தார்த்தின் மீது இவனுக்கு ஏற்பட்ட மதிப்பை இன்னும் உயர்த்தியது.

"தாங்க்யு ஸோ மச். கூட இருந்ததற்கு ரொம்ப சந்தோஷம்... உங்களால் எனக்கும் கொஞ்ச நேரம் ஃபாமிலி அட்மாஸ்ஃபியர் கிடைச்சுது. மனசுக்குத் திருப்தியாக இருந்தது. தாங்க் யு..."

-சித்தார்த் சென்னதைக் கேட்கக் கேட்க ரமணனுக்கு சித்தார்த் மீது இனம் தெரியாத பற்றுதல் ஏற்பட்டது. அவன் கைகளைப் பற்றிக் கொண்டு,

"மெட்ராஸ் வந்தா அவசியம் எங்க வீட்டுக்கு வரணும். என் ஆஃபீஸ் நம்பருக்கு போன் பண்ணுங்க. இவில் டேக் கேர் ஆஃப் யு..."

"தாங்க்யு, இந்தமாதிரி சொல்றதுக்கு இந்த உலகத்துல எனக்கு யார் இருக்காங்க..? ஹேவ் எ நைஸ் டைம்"-சொல்லிவிட்டு வேகமாக நகர்ந்து சித்தார்த் காணாமற் போனான்.

ரமணன் திரும்பி காட்டேஜுக்கு வருகிற வழியெல்லாம் நித்யாவிடம் அவனைப்பற்றிப் புகழ்ந்து கொண்டே வந்தான். நித்யா ஒரு வார்த்தை பேசவில்லை. அன்றிரவு தனிமையிலும் அவனது புகழ் நிற்காமல் போகவே, அவள் திரும்பிப் படுத்துக் கொண்டாள். அந்தச்

செய்கையின் நிஜமான அர்த்தத்தைப்புரிந்து கொள்ள இயலாமல் தவித்துப் போனான் ரமணன். 'இது முதல் ராத்திரி. இவள் ஏன் இப்படித் திரும்பிப் படுத்துக் கொள்கிறாள்...? ஒருவேளை இஷ்டமில்லையோ...? அல்லது முதல் திருமண இரவு ஞாபகத்திற்கு வந்திருக்குமோ...? அப்படியானால் இவளைத் தொந்தரவு செய்யக்கூடாது. இது இரண்டு பேர் மனப் பூர்வமாகச் சம்மதிக்க வேண்டிய விஷயம். பரிபூரணமான காதலின் உந்து சக்திதான் சங்கமமே தவிர வேறில்லை. இவளுக்கு இஷ்டமில்லாத பட்சத்தில் வற்புறுத்தக் கூடாது. அவளுக்கு என்ன மனநிலையோ, பாவம்!'

எழுந்து வராந்தாவில் உலாத்தி, சிகரெட் பிடித்து, தண்ணீர் குடித்து, படுப்பதற்கு முன் குனிந்து மிக மெதுவாக அவளின் முன் நெற்றியில் முத்தமிட்டுத் தலையணையை அணைத்துக் கொண்ட ரமணன், சிறிது நேரத்தில் உறங்கிப்போனான்.



## 8

"எந்த மாசம் எத்தனாம் தேதி பொறந்த...?"

"மே மாசம், பதினைந்தாம் தேதி..."

"...ஹை...! அடுத்தமாசம் கனஜோரா கொண்டாடலாம்... அது சரி, இதுவரைக்கும் உனக்கு எத்தனை பொறந்த நாள் வந்திருக்குன்னு சரியாச் சொல்லு, பார்ப்போம்...?"

"பெரிய்ய ஸ்டாட்ஸ்மெஷியன். சுற்றிவளைச்சுக் கண்டு பிடிக்கிறாரு... ம்...? சரி, பத்தொன்பது வாட்டி..."

"அதான் இல்லே...ஒவ்வொருத்தருக்கும் பொறந்த நாள்னு ஒண்ணுதான் இருக்கு. மறுவருஷம் வர்றதெல்லாம் அந்த நாளின் நினைவுதான். அது சரி, நான் பொறந்த நாள் டிரஸ் போட்டுண்டிருக்கேன்... லைட் போடறேன், எப்படியிருக்குன்னு பார்க்கறியா...?"



"ம்..."

போட்டான்.

"ச்சே...! என்னங்க, கொஞ்சம்கூட வெட்கமே இல்லாம...? லைட்டை ஆஃப் பண்ணுங்க..."

"லைட் இருந்தாத்தான் நமக்குப் பொறக்கப்போற பையன் வெள்ளை வெளேர்னு பொறப்பான். நான் கறுப்பா இருக்கறதுக்குக் காரணம் எங்கப்பா சங்கோஜப் பேர் வழியாக இருந்திருப்பார்னு நினைக்கிறேன்..."

சித்தார்த்தின் பிடிக்குள் திணறினாள். மௌனமாய்ப் போன சில விநாடிகளில் வெளியே காஸ்ஃப் ஸ்ட்ரைக்கரிலிருந்து பந்து விடுபட்டு புல் தரையின் விளிம்புகளை, பள்ளங்களைத் தாண்டி ஒரே நேர்கோட்டில் செங்குத்தாகப் பயணித்து ஸாக்கில் விழுந்தபோது மைதானத்தில் சந்தோஷ ஆரவாரம் கேட்டது. ஒரு விநாடி அதில் லயித்து பின் எழுந்து உட்கார்ந்த நித்யா கேட்டாள்:

"ஆமாங்க... பாட்டிகிட்ட என்ன சொல்லப் போறீங்க...?"

கேட்டபோதே அவள் தயங்கினாள். பயம் நெஞ்சுக்குள் எட்டிப் பார்த்தது. சிறுபிள்ளைத்தனமாகக் காரியம் செய்து விட்டாற்போல் தோன்றியது. நிகழ்ச்சிகளை ஒன்று சேர்த்து, கோர்த்து, யாரோ தொகுத்து வெளியிட்ட மாதிரி 'சித்து' வைச் சந்தித்ததும், அவன் தன்னைச் சுற்றிச் சுற்றி வந்ததும்; காதலிப்பதாகச் சொன்னதும், முதலில் கன்னத்தில் அறைந்து, பின்னர் மெதுமெதுவாகத் தன்னை ஆட்கொள்ள விட்டதும்... அவன் முன்னால் தான் அட்ரஸ் இல்லாமற்போய் இன்று கல்யாணம் முடிந்து விட்டது. வெங்கடாசலபதியையும் பத்மாவதியையும் தவிர, இது தெரிந்தவர்கள் யாருமில்லை. அவர்கள் சாட்சி சொல்லக் கீழே இறங்கி வரப் போவதில்லை. தாலி கட்டி லைசென்ஸ் வாங்கிக் கொண்ட சந்தோஷத்தில் பெண்ணின் மகோன்னதமான தன்மையையும் விட்டுக் கொடுத்தாயிற்று. இந்தச் சந்தர்ப்பத்தில் எப்படிப் பாட்டியைச் சமாளிக்கப் போகிறார்...? கவலையாக

இருந்தது பெரிய ஆஸ்திக்கு ஒரே வாரிசு! அப்பா, அம்மா இல்லை. தாத்தாவும் இறந்து போன பிறகு இப்போது பாட்டி மட்டும்தான் என்றாலும், முன்பின் தெரியாத ஏழைப் பெண்ணை இழுத்துப்போகும் காரியமெல்லாம், என்னதான் கல்யாணம் என்று பேர் பண்ணிக் கொண்டால் கூட சரிப்படுமா..? ஒப்புக் கொள்வார்களா..? கடவுளே..! இவர் இன்னும் குழந்தை யாகவே இருக்கிறாரே... வாழ்க்கையின் ஒவ்வொரு தருணத்திலும் த்ரில்லை எதிர்பார்க்கிறாரே... பாட்டி தன் கல்யாணத்தை ஒப்புக் கொள்ளாமல் இருப்பது கூட த்ரில்லாகத்தான் படும். ஒருவேளை அதுகூட நல்லதற்குத் தானோ..?

"ஓ..கமான் பேபி..! இன்னும் என்ன தூக்கம்..? மணி ஏழரை. இப்ப கிளம்பினாத்தான் சீக்கிரம் காளஹஸ்தி போய்ச் சேர முடியும் கமான்..கமான்..நிஜமாகவே நீ-தமிழ்ப் பெண்தான் முன் தூங்கிப் பின் எழுகிறாய் பேதையே..!"

மறுபடி அதே வேகம். பேச்சில், நடையில், ஓட்டத்தில், செயலில்..கனகச்சிதமான காரின் வேகத்தைச் சட்டென்று இன்ஜினை அணைத்து அத்வானப் பொட்டலின் ஓரத்தில் இருந்த பெட்டிக் கடைக்கு எதிரில் நிறுத்துகிறான்.

"ஜஸ்ட் ஃப்யூ செகண்ட்ஸ். கார்லயே இரு. இதோ ஒரு சோடா குடிச்சுட்டு, சிகரெட் பாக்கெட் ஒண்ணு வாங்கிண்டு வந்துடறேன். தனியா இருக்கமேன்னு பயந்துக்காதே..எதாவது நடந்தா நான் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்துவந்து காப்பாத்தறேன்..ஓகே.."

அவன் சொன்ன மாதிரியே நடந்தது. பின்பக்கமாக நான்கு முரடர்கள் காரைச் சூழ்ந்துகொண்டு, இவளின் வாயைக் கத்தவிடாமல் பொத்தி நகை கேட்டார்கள். அவள் தன்னை விடுவித்துக்கொள்ளப் போராட தூரத்தி லிருந்து சோடா குடிப்பதை நிறுத்தி எதேச்சையாகத் திரும்பிய அவனின் பார்வையில் இது பட, அவன் கடையிலிருந்து சோடாபாட்டில் கையோடு ஓடிவர-அவனைக் கத்தியைக் காட்டி நிறுத்தினார்கள். அப்போதும் சிரித்தான் அவன்.



"டேக் இட் ஈஸி நித்யா. இதுவும் ஒரு த்ரில். ட்ரை டு என்ஜாய் இட்..."

அந்தப் பேச்சு முதலில் அவளைக் கோபப்படுத்திற்று. அடுத்த கணம் சந்தோஷம் வந்தது. கத்தியைக் காட்டியவனின் கையில் சின்னக்குத்து! கத்தி எகிறி எங்கோ போய் விழ.சோடா பாட்டிலுடன் அவன் மின்னலாய்ச் சுழன்றான். இரண்டுபேர் தடுமாறிக் கீழே விழுந்து ஓட்டம் பிடிக்க, மற்ற இருவரும் அவர்களைத் தொடர்ந்து ஓடினார்கள். நித்யாவுக்கு நிஜமாய் கண்ணெதிரில் அந்தச் சண்டையைப் பார்க்க த்ரில்லாகத்தான் இருந்தது! அதுவும் தன் கணவன், தன்னைச் சில மணி நேரங்களுக்கு முன்பு தாலி கட்டிச் சொந்தமாக்கிக் கொண்டவன் நாலைந்து ரவுடிகளைத் தவிடு பொடியாக்கினபோது ஏற்படும் 'என் கணவன்' சந்தோஷம் இன்னும் அதிகமான த்ரில்லைக் கொடுத்தது! சந்தடி சாக்கில் அவன் கத்தையாய் நூறு ரூபாய் நோட்டுகளை ரவுடிகளின் கையில் திணித்தது இவளுக்குத் தெரியவில்லை. எல்லாம் இவளை த்ரில் படுத்த, தன் ஹீரோதனத்தை வெளிக்காட்டிக் கொள்ள முன்கூட்டியே செய்த ஏற்பாடு என்பது இவளுக்கு இன்னமும் புரிய வில்லை. பெட்டிக் கடைவரை போய் சிகரெட் கொளுத்திக்கொண்டு திரும்பியவனிடம் சொன்னாள்:

"யு ஆர் எ ரியல் மேன் ஐ ஸே..."

"ம்ஹூம். நீ எல்லாத்தையுமே கொஞ்சம் லேட்டா சொல்ற..இந்த வார்த்தையை நேத்திக்கு ராத்திரி சொல்லி யிருக்கணும். பரவாயில்லே, விடு..."

நித்யா இவனின் குணாதிசயங்களைப் புரிந்து கொள்ள முடியாமல் கதிகலங்கிப் போனாள். ஆனால், ஒன்று மட்டும் அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தது. வாழ்க்கை என்பது அவனைப் பொறுத்த மட்டில் முழுக்க முழுக்க அனுபவிப்பதற்கான ஒன்று. த்ரில் அண்ட் எக்ஸைட்மெண்ட் அதற்குக் காரணம், அடித்தளமான அன்பு, பாசம் இவனுக்குக் கிட்டவில்லை. அஸ்திவார சாராம்சம் புரியவில்லை. அப்பா, அம்மா இல்லை. கூடப்பிறந்தவர்கள் இல்லை. நெருங்கி நல்லது நினைத்துச்

சொல்லக்கூடிய நண்பர்கள் இல்லை. கை நிறையக் காசு இருந்தது. அதற்காகக் கூடிய கூட்டம் இருந்தது. சந்தோஷம் என்பது இவைதான்; அவற்றைச் சுலபமாகப் பணம் கொடுத்து வாங்கி விடலாம் என்கிற நினைப்பு இருந்தது. ஒருவேளை அவனின் நிலையில் வேறு யார் இருந்தாலும் இப்படித்தான் இருப்பார்களோ...?

"நித்யா! எனக்காக சின்ன ஹெல்ப் ஒண்ணு பண்றியா...? இது எங்க அப்பா, அம்மா போட்டோ. கொஞ்சம் நமஸ்காரம் பண்றியா...? இஃப் யு டோண்ட் ஃபீல் லைக், பண்ணவேண்டாம்...விட்டுடு..."-ரமணன் ரொம்பவும் இதமாகச் சொன்னான். எதிராளியின் மனசை நோகடிக்காமல் பேசினான். விட்டுக் கொடுக்கும் மனப் பான்மையை உணர்த்தினான். அந்த வார்த்தைகளில் சங்கடப்பட்டுப் போன நித்யா சொன்னாள்:

"சே...! என்ன இப்படிப் பேசறீங்க...? என்னை ஏன் தள்ளி நிறுத்தப் பார்க்கறீங்க...? நீங்க எனக்கு வாழ்வு கொடுத்திருக்கீங்க... சமூகம் டிவோர்ஸிங்கற பட்டத்தைக் கழுத்துல கட்டித் தொங்கவிட்டு வேடிக்கை பார்த்தபோது, தைரியமா மனைவிங்கற அந்தஸ்தைக் கொடுத்து என்னை உயர்த்தியிருக்கீங்க. அதை நீங்க அதிகாரப் பூர்வமா எடுத்துக்கணும். மனைவிங்கற உரிமையோட பார்க்கணும். இப்படி வீட்டுக்கு வந்திருக்கிற விருந்தாளி உணர்வோட நடத்தக் கூடாது. என்ன...? வாங்க, ரெண்டு பேரும் சேர்ந்து நமஸ்காரம் பண்ணலாம்...!"

அவனோடு ஒன்றாக நமஸ்கரித்தாள்.

"இதுதான் என் பாட்டி நித்யா. ஆனா, நான் 'மம்மி' தான் கூப்பிடுவேன். மம்மி...! யார் வந்திருக்கிறது பார்த்தீங்களா...? என் மனைவி! உங்க மருமகள். என்ன அப்படி மலைச்சுப் போயிட்டீங்க...? ரீட்டா, சவீதா, சங்கீதா மாதிரின்னு பார்த்தீங்களா...? இல்லை மம்மி. சொக்கத் தங்கம்! நிறுத்தி, உரசிப் பார்த்துட்டேன். அசல் 24 காரட்! முதல் தடவை கன்னத்துல அடி வாங்கினது இப்பக்கூட வலிக்கிறது. யாருக்கும் தெரியாமல் மட்டன் பரோட்டா



வாங்கித் தினமும் சாப்பிடறானு நினைக்கிறேன். அதான் இந்த பலம்..."

பாட்டி வார்த்தை வராமல் அதிர்ந்து மெதுவாகக் கேட்டார்:

"என்ன சித்தார்த் இதெல்லாம்...?"

"நீங்க சொன்ன மாதிரி சகல அம்சங்களோடயும் பொண்ணு தேடிக் காதலிச்சு, அவளும் என்னை விரும்பறானு தெரிஞ்சுண்டப்புறம் நேத்திக்குத் திருப்பதியில் கல்யாணத்தை முடிச்சுண்டோம். அங்கேயே ஃபர்ஸ்ட் நைட் ஸெலிபரேட் பண்ணிட்டு, இன்னிக்கு இதோ உங்க முன்னாடி நிக்கறோம். நமஸ்காரம் பண்ணப் போறோம் ஆசிர்வதம் பண்ணுங்க..."

நமஸ்கரித்தார்கள்.

"தீர்க்காயுசா, தீர்க்க சுமங்கலியா சந்தோஷமா இருக்கணும்...பேரு என்னம்மா...?"

"நித்யா..."

"திருப்தியா மம்மி...?"

"என்கிட்ட சொல்லியிருந்தியானா நான் கல்யாணம் பண்ணி வச்சிருக்க மாட்டேனா...? ஏம்பா இப்படிப் பண்ணிட்ட...? உன்னைக் கல்யாண கோலத்துல பார்க்கணும்கிற இந்தக் கிழவியோட ஆசையை ஏமாத்திட்டியே...!"

"நோ, நோ... அந்தத் தப்பு பண்ண மாட்டேன். இந்தாங்க விடியோ காஸெட். எங்க கல்யாணம் இதுல ரொக்கார்ட் ஆகியிருக்கு. எப்பப்ப தோணுதோ போட்டுப் பாருங்க-ஆமா, சொத்தையெல்லாம், இனிமேலயாவது என் பேருக்கு எழுதி வப்பீங்க இல்ல...?"

"ம்...ஹூம். உன்னை நம்ப முடியாதுப்பா. பேரனைப் பெத்துக் குடு. அப்புறம் பார்க்கலாம்..."

"நோ மம்மி. உங்க சொத்து எனக்கு வேணாம். நீங்களே வச்சுக்குங்க. ஒரு வேளை நான் இம்ப்பொடெண்ட்டா இருக்கலாம்...இல்லே, நித்யாவுக்குக் குழந்தை

பாக்யம் கிடைக்காமற் போகலாம். அப்படி ஏதாவது ஆச்சுன்னா குழந்தைக்காக இன்னொரு கல்யாணம்னு முணுமுணுப்பீங்க .. அதெல்லாம் நாட் பாஸிபிள். இந்த ஜென்மத்துல நித்யா தான் என் முதலும் கடைசியுமான மனைவி. அதனால சொத்து உங்ககிட்டயே இருக்கட்டும். நாங்க வரோம். நித்யா அப்படியே கட்டின புடவையோட கிளம்பு. மம்மி! நானும் இந்த ஒரு பாண்ட் ஷர்ட்டோடயே போறேன்.."

"டேய் டேய்..! என்னடா பேச்சு இதெல்லாம்? வாய்ல நல்ல வார்த்தையே வராதாடா..? மடையா! எல்லாம் உனக்குத் தான்டா. நாளைக்கே வக்கீலை வரச்சொல்றேன். வயசான காலத்துல என்னை இப்படி வேற தவிக்க விடாத-உள்ளபோடா..நித்யா. அழைச்சுண்டு போம்மா அவனை.."

ரமணன் தான் வாங்கியிருந்த அபார்ட்மெண்டைத் திறந்து காட்டினான். அவசியமான சாமான்கள் அதனதன் இடத்தில் அழகாய் நின்றிருந்தன. பார்த்துப் பார்த்து வாங்கின ஜாக்கிரதை தெரிந்தது. சிக்கனம் தெரிந்தது...

நுழைந்தவுடன் சின்ன ஹால். அதை இரண்டாக வெட்டின ஷோ கேஸ். பின்னால் நான்கு பேர் உட்கார்ந்து சாப்பிடக்கூடிய டைனிங் டேபிள். பீங்கான் சதுரங்கள் பதிக்கப்பட்டு உயரப்படுத்தப்பட்டிருந்த மேடையுடன் கூடிய சமையற்கட்டு. காஸ் அடுப்பு. சுவரில் செருகின மின்சார பற்ற வைப்பு. அலமாரியில் சமைக்கச் சாமான்கள் எவர்சில்வர் பாத்திரங்கள். பின் சின்னதாய் ஒரு பூஜை அறை உள்ளே காளிகாம்பாள் படமும், ராகவேந்திர ஸ்வாமி படமும்..

நித்யா ஆச்சரியமாகத் திரும்பினாள்.

"என்ன ரமணன் இது..?"

"என்ன..? நான் காளி பக்தன் ராகவேந்திர ஸ்வாமி பக்தன். உனக்கு என்ன படம் வேணுமோ உள்ளே மாட்டிக்க.."



"நான் அதைக் கேக்கலை இவ்வளவு அழகா ஒரு அபார்ட்மெண்ட் வச்சுண்டு ஏன் அந்த வசதியில்லாத லாட்ஜ் ரூமுல அவஸ்தைப் பட்டீங்க..?"

"கல்யாணம் பண்ணிண்டு மனைவியோட சந்தோஷமா குடும்பம் நடத்தணும்னுதான் இதை வாங்கினேன். சம்பளத்துல ஃப்ளாட்டுக்காக நானூற் றைம்பது ரூபா பிடிச்சுடுவாங்க. புது வாழ்க்கையை, புது வீட்டுல ஆரம்பிக்கணும்கிறதுக்காகத்தான் இங்க தங்கலை. உனக்குப் பிடிச்சிருக்கா..?"

"ஓயெஸ்..ரொம்பப் பிடிச்சிருக்கு. சின்னதாய் அழகாய் இருக்கு..ஆமாம் ரமணன், எல்லாத்தையும் கணக்குப் போட்டுத் திட்டவட்டமாகச் செயல்படறதைப் பார்த்தால் இவ்வளவு குழந்தைதான் பெத்துக்கணும்னு கூடக் கணக்குப் போட்டு வச்சிருப்பீங்க போல இருக்கே?"

"ம்..ரெண்டுன்னு வச்சுண்டிருந்தேன். ஏற்கனவே ஒரு பையன் இருக்கிறதால் இனிமேல் ஒரே ஒரு பொண்ணுதான். அர்விந்த்தையும் அந்தப் பொண்ணையும் நல்லபடியா வளர்த்துப் படிக்க வச்சு ஆளாக்கணும்னா மாசா மாசம் சம்பளத்துல தனியா ஒரு இநூறு இப்போலேர்ந்தே ஒதுக்கிண்டு வரணும். என்ன...? சரி, அதெல்லாம் கிடக்கட்டும். இன்னி ஈவினிங் சினிமா போறோம்..நான் போய் புக் பண்ணிண்டு வரேன் ஓகே.."

---

## 9

---

வேசாகக் கவிழத் தொடங்கின இருட்டை, கார் ஜன்னல் வழியாக வேடிக்கை பார்த்துக்கொண்டு வந்தான் சித்தார்த்த கௌதம். அந்த வெள்ளை பென்ஸ் வண்டி பெங்களூர் ஹைரோடில் ஸ்பீடாமீட்டர் நூறைத் தொட்ட போதும் அலுங்காமல்தான் போயிற்று. ஆனாலும் அவனுக்கு லேசாக நெஞ்சை வலிக்கிறாற்போல் இருந்தது. மெதுவாக ஆரம்பித்த வலி கொஞ்சம் கொஞ்சமாக ஊசிக் குத்தலாக மாற, அவன் டிரைவரிடம் டாஷ் போர்டிலிருந்து ஸ்காட்ச் பாட்டிலை எடுத்துத் தரச் சொன்னான். மூடியைத்

திறந்து அப்படியே வாயில் ஊற்றிக் கொண்டபோது, தகதகவென நெருப்பு தொண்டையில் வழுக்கி வயிற்றில் கலந்த பின்னரும் லேசாக இடது நெஞ்சில் வலி. இன்னொரு விழுங்கு சற்று இதமாக இருக்கிறாற்போல் தோன்ற, தலையணையை எடுத்துப்போட்டு பின்ஸீட்டில் சரிந்து படுத்தான்.

அப்படிப்படுத்துக்கொண்ட உடனே பாட்டி ஞாபகம் வந்தது. கடைசித் தரமாக இதே வண்டியில் இப்படிப் படுத்துக்கொண்டுதான் அவர் ஆஸ்பத்திரிக்குப் போனார். அப்போதும் இவன் கூடப் போகவில்லை. நித்யாதான் போனாள். கார் போர்டிகோவை விட்டுக் கிளம்பு முன்பாகக் கூடப் பாட்டி கூப்பிட்டார்.

"சித்து. நீயும் கூட வாயேன். இந்தத் தரம் நான் உயிரோட திரும்ப மாட்டேன்னு தோணறது..."

"அதெல்லாம் ஒண்ணும் ஆகாது. தைரியமாப் போங்க. டாக்டருக்கு போன் பண்ணிச் சொல்லியிருக்கேன். நல்லா கவனிச்சுப்பார். நான் வந்து என்ன பண்ணப் போறேன்..?"

மறுநாள் காலையில் பாட்டியைப் பிணமாகத்தான் கொண்டு வந்து போட்டார்கள். அப்போதும் அவன் கவலைப்படவில்லை. பாட்டியின் கால்மாட்டில் உட்கார்ந்து கண்ணீர் விட்ட நித்யாவின் தோளில் தட்டிச் சொன்னான்:

"டேக் இட் ஈஸி நித்யா. பாட்டி என்ன பதினாறு வயசிலா போயிட்டா? நல்லா வாழ்ந்து அனுபவிச்சு, இந்த மாதிரி ஒரு பேரனையும் பார்த்தப்புறம் தானே போயிருக்கா. அதுக்குப் போய் என்ன ஒப்பாரி...நான் மேல போய் கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணிக்கறேன். எல்லா காரியத்தையும் முடிச்சிட்டு கடைசியில என்னைக் கூப்பிடு. மானேஜர் ...யு அஸிஸ்ட் ஹெர். ஓகே..?"

அப்போதுகூட தன் இயற்கைச் சுபாவப்படி அலட்டிக் கொள்ளாதவன், கொஞ்ச நாட்களாக- வெளி நாட்டிலிருந்து திரும்பி வந்த இந்தச் சில மாதங்களாக-



அலண்டு போயிருந்தான். இப்படிப்பட்ட உடல்நிலையில் ஒரு நிஜமான துணைக்காக ஏங்கினான். தன் பணத்திற்காக இல்லாமல் தனக்காகத் தன்னை யாராவது கவனித்துக் கொள்ள மாட்டார்களா என்று ஆசைப்பட்டான். வாய்க்கு ருசியாகச் சமைத்துப் போட, வீட்டில் நுழைந்தவுடன் வரவேற்க...

"ஏங்க இன்னிக்குச் சரியா சாப்பிடலை? உடம்பு சரியில்லையா...?"

நெற்றியில் பதிகிற தாமரை இதழ் கை...

"இல்லே நித்யா. வர்றபோது க்ளப்ல ஒரு ரவுண்ட் ரம்மி முடிச்சு. ரெண்டு பெக் அடிச்சு, ரோஸ்டட் சிக்கன் ஒரு பிளேட்...அப்படியே எங்கே போனேன்னு கேக்கலையே நீ...!"

அவள் பார்வை முகத்தில் பதிய அவன் மறைவோ, சலனமோ இன்றி-

"மேனகா வீட்டுக்குப் போயிருந்தேன், வாவ்..!"

இப்போது அதெல்லாம்கூட சலித்துப் போய் விட்டது. பெண்கள் விஷயத்தில் அவ்வளவு ஈடுபாட்டோடு இருக்க முடியவில்லை. உடல் ஆடி ஓய்ந்து போய் விட்டிருந்தது. முன்பிருந்த சக்தியில்லை. சந்தோஷம் இல்லை. விளையாட்டு, வேடிக்கை எதுவும் இல்லை. வாழ்க்கை சலிக்க ஆரம்பித்து விட்டிருந்தது. இந்தச் சலிப்பு அந்த அமெரிக்க மண்ணிலேயே வேர்விட ஆரம்பித்து தற்போது பூதாகாரமாக, பெரிய விருட்சமாக உள்ளுக்குள்ளேயே வளர்ந்துவிட்டிருந்தது. குடிப்பதுகூட வெறுப்பாகத் தான் இருந்தது. ஆனால், அதை விட்டால் வேறு வழியில்லை; துணையுமில்லை...

ஆஹா...இப்போது நினைவிற்கு வருகிறது. பாட்டிக்கு நெருப்புச் சட்டியைத் தூக்கிக் கொண்டு போய் திரும்பி வந்த கையோடு என்ன அமர்க்களம் பண்ணினான்..! பாட்டி இருக்கிற வரை மாடியில் அவனது படுக்கையறை ஓரமாகப் பதுக்கி பீரோவில் வைக்கப்பட்டிருந்த பாட்டில்கள் மடமடவென்று கீழ் ஹாலுக்கு இறங்கி வந்து பாதி ஹாலை மறைக்கிற மாதிரி ஒரு பெரிய பார்.

கேட்பதைக் கலந்து தர வெள்ளை யூனிபாரம் உடுத்திய இரண்டு ஆங்கிலோ இந்தியப் பையன்கள், சமையற்கட்டிலிருந்து எட்டிப்பார்க்கும் மட்டன், சிக்கன் வாசனை...

வயிறு புரட்ட நித்யா ஓடிவந்து கேட்டாள்.

"கண்ணா, நீ இதையெல்லாம் கண்டுக்காதே. மாடிக்குப் போயிடு. கீழேயே எட்டிப்பார்க்காதே..."

"இந்த நாத்தம் வீடு முழுக்க வருதுங்க. தாங்க முடியலை."

"அப்படின்னா ஒண்ணு செய். காரை எடுத்துண்டு நேரா ஃப்ரெண்ட்ஸ் வீடுங்களுக்குப் போ. அவங்களையும் கூட்டிக்கிட்டு ஏதாவது சினிமா பாரு. அது பிடிக்காட்டிப் போனா. ப்யூட்டி பார்லர் போய் மஸாஜ், மண்ணாங் கட்டின்னு எதையாவது பண்ணிக்கிட்டு வா..."

"சீ...! பாட்டி போய் நாலு நாளாகலே. அதுக்குள்ள இப்படி ஒரு அமர்க்களம் பண்ண உங்களுக்கு வெட்கமாயில்லை...?"

"இதுல என்ன வெட்கம் இருக்கு...? எல்லாரும் பாட்டி மாதிரி ஒரு நாள் போகப் போறவங்கதான். அதுக்குள்ள லைஃப்பை என்ஜாய் பண்ணத் தெரியணும். இல்லாட்டிப் போனா அது முட்டாள் தனம்..."

"அது முட்டாள்தனம்னா நான் முட்டாளாகவே இருக்கத்தான் ஆசைப்படறேன். எல்லா அமர்க்களமும் ஓய்ஞ்சப்புறம் எனக்கு போன் பண்ணுங்க. அதுவரைக்கும் நான் ராகவேந்திர ஸ்வாமி மடத்துல இருக்கேன்..."

நூற்றெட்டு தரம் சுற்றி ஒவ்வொரு மூலைக்கும் நமஸ்காரம் பண்ணி, அதே நூற்றெட்டு தரம் 'பூஜ்யாய ராகவேந்த்ராய' சொல்லி, 'குருராஜோ...சித்தார்த்திக்குக் கொஞ்சம் நல்ல புத்தி கொடேன்...அவருடைய குணத்தைத் திருத்தேன்...' வேண்டி...

மடத்தின் கதவை மூடப் போகிற சமயத்தில்கூட அவனிடமிருந்து டெலிபோன் வராமல் கிளம்பிப் போனால்-



ஹால் ஒரு சின்ன சினிமா தியேட்டராக மாறி, இரண்டிரண்டு பேராக ஆண் பெண் ஜோடிகளாக-கலர் டெலிவிஷனில் ப்ளோ அப் செய்யப்பட்ட பெரிய திரையைப் பார்த்துக் கொண்டிருந்தனர். விடியோவில் ஓடின அந்த வெளிநாட்டு நீலத் திரைப்படம் மறைக்கப்பட வேண்டிய விஷயங்களை வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொண்டிருந்தது. சித்தார்த் யாரோ ஒரு பெண்ணை இறுகத் தழுவின கோலத்தில்-

இவளுக்கு மீண்டும் வயிற்றைப் புரட்டிக்கொண்டு வந்தது. அத்தனை பேர் முகத்திலும் காரி உமிழ்ந்து, அந்த விடியோ, கலர் டெலிவிஷன் எல்லாவற்றையும் போட்டு உடைத்து, மினி பார் முழுவதையும் நாசமாக்கி...

முடியாது. இவற்றில் ஒன்றைக்கூட அவளால் செய்ய முடியாது. அதற்குமேல் ஒரு விநாடியும் அங்கு நிற்கப் பிடிக்காதவளாக மாடிக்கு ஓடி கட்டிலில் படுத்துக் குமுறி அழுது அழுது...

ஒரு மணி நேரத்திற்குப் பின்னால் சித்தார்த் தள்ளாடிக் கொண்டே மாடிக்கு வந்து கட்டிலில் விழுந்து அவளை எழுப்பினான்.

"ஏய், நீ எப்போ வந்தே?"

அதற்குமேல் தாங்க முடியாதவளாகச் சடாரென்று எழுந்து சொன்னாள்:

"கீழே ஷோ நடந்துதே. அப்பவே வந்துட்டேன்..."

"அப்பவே வந்துட்டியா...பின்ன ஏன் பார்க்கலை?"

"தூ...! இதை என்ன வீடுன்னு நினைச்சீங்களா? இல்லை நைட் க்ளப்னு நினைச்சீங்களா...?"

"நீ சரின்னு சொல்லு. நாளைக்கே நைட் க்ளப்பா மாத்திடலாம்..."

"சீ...! நீங்க ஒரு மனுஷனா...?"

"கோபத்துல கூட நீ அழகாகத்தான் இருக்கேடா கண்ணா...ஆமா, என்ன கேட்டே...? நான் மனுஷனான்னா...?

மனுஷன்தான்டா கண்ணா. ரிஷியில்லை. ரிஷிங்களே தப்பு பண்ணியிருக்கிற கதையெல்லாம் உனக்குத் தெரியும். நான் தப்பு எதுவும் பண்ணலே. லைஃப்பை என்ஜாய் பண்றேன். அவ்வளவுதான். நீயே சொல்லு நித்யா. நான் யார் குடும்பத்தையாவது கெடுத்தேனா..? பொய் சொல்றேனா..? யாரையாவது வலுக்கட்டாயமா என் விருப்பத்துக்கு இணங்க வைக்கிறேனா..? எதுவுமில்லை. பின்ன எப்படி இதையெல்லாம் நீ தப்புன்னு சொல்ல..."

"வில் யு ப்ளீஸ் ஸ்டாப் இட்" என்று கத்தினாள் நித்யா.

"இது வீடு. குடும்பம் நடத்தற இடம். இந்த இடத்துல இன்னொரு தரம் இந்த மாதிரி அசிங்கமெல்லாம் நடக்க நான் அனுமதிக்க மாட்டேன்..."

"இது அசிங்கமில்லை நித்யா. இதெல்லாம் அசிங்கம்னா நீயோ, நானோ பொறந்திருக்க முடியாது..."

"நோ. இன்னொரு தரம் நடு ஹால்ல இதெல்லாம் நடந்தால் விடியோ, டிவி. எல்லாத்தையும் அத்தனை பேர் எதிர்லயும் தூக்கிப் போட்டு உடைச்சு, நாக்கைப் பிடுங்கிட்டுச் சாகிற மாதிரி எல்லாரையும் கேள்வி கேட்பேன்..."

"முடியாதுடா கண்ணா. என் உரிமைகள்ல அவ்வளவு தூரம் உன்னைத் தலையிட விடமாட்டேண்டா. உனக்குப் பிடிக்கலைன்னா அந்த நேரத்துல நீ வீட்டுல இருக்காதே... கண்டுக்காம போயிடு..."

"ஸோ, நீங்க இந்த அசிங்கத்தையெல்லாம் விடமாட்டீங்க..?"

"மாட்டேண்டா கண்ணா. முடிஞ்சா தினமும் ராத்திரி நடக்கும்..."

"அப்படின்னா என்னால இனிமே இந்த வீட்டுல இருக்க முடியாது. உங்ககூட வாழ்க்கை நடத்த முடியாது..."

"அதுதான் உன் முடிவுன்னா நீ தாராளமா டிவோர்ஸுக்கு அப்ளை பண்ணலாம். நானே உனக்கு ரூல் சொல்லித்தரேன். The Hindu marriage act - படி. இது acts of depravity-ல வரும். செக்ஷன் 13 (1) (i-a)ல மென்ட்டல் க்ருயல்டின்னு சொல்லி தாராளமா நீ விவாகரத்து வாங்கிக்கலாம். நீ சிரமப் படாதே. நானே நாளைக்கு நம்ம லாயரை வரச்சொல்றேன். ஓகே..? குட் நைட் அண்ட் குட் பைடா கண்ணா..."



சொன்ன மாதிரி ஏற்பாடு பண்ணித் தந்தான். மாஜிஸ்ட்ரேட் அவனுக்கு வேண்டியவர் என்பதால் வெகு சுலபமாக சீக்கிரமாக கை சொடுக்கும் நேரத்தில் விஷயம் முடிந்து போயிற்று. காட்சி மாறி அவனது பணத்தில் சல்லிக்காசு கூடத் தொடாதவளாகத் தான் கொண்டு வந்த ஒரே சூட்கேஸுடன் நித்யா வெளியேற-அவன் அமெரிக்கா புறப்பட்டான். பிடித்த மாதிரி, பிடித்த விதத்தில் வாழ்க்கையை அனுபவித்து, மனமும் உடம்பும் ஓய்ந்து, எல்லாம் சலித்துத் திரும்பி வந்து வீடு, வாசல் வெறிச்சோடி, கடைசிப் புகலிடமாக ஆன்மிகம் கைகொடுக்க திருப்பதி வந்தால்-

அங்கே ஒரு திருப்பமாக நித்யா... 'பட் நித்யா! நீ எப்படி இன்னொரு கல்யாணம் பண்ணின்ட...? பட்டையாய் விபூதி பூசி, குங்குமம் இட்டு, கோவில் கோவிலாக நான் அலைகிற இந்த அலைச்சலைவிட மிகப் பெரிய அதிசயம் இதுதான்... நீ பண்ணிக் கொண்ட கல்யாணம் தான்...'

பெங்களூரிலிருந்து சற்றுக் கிழக்காய் ஒதுங்கிப் பிரிந்து சைனா டவுன், எஸ்டேட் பங்களா வாசலில் கூர்க்கா விரைப்பாய் சல்யூட் அடிக்க, வரிசையாய் நின்றிருந்த பாக்கு மரங்களையும், சரளைக்கல் பாதையையும் விழுங்கிக் கொண்டு கார் போர்டிகோவில் நின்றது. மறுபடி ஊசிக் குத்தலாக மார்பு வலி தலை தூக்க, கையோடு கொண்டு வந்திருந்த ஸ்காட்சை ஐஸ் போட்டுச் சாப்பிட்டுக் கொண்டே டெலிபோனுக்கு ஓடினான்.

"நான் சித்தார்த் பேசறேன். உடனே டாக்டர் விநாயக ராவை வீட்டுக்கு வரச்சொன்னேன்னு சொல்லணும். நெஞ்சுவலி தாங்க முடியலை. சீக்கிரம் வரணும்..."

போனை வைத்து விட்டு மாடிப் படியிலேயே சாய்ந்து கொண்டான்.

அவன் சட்டென்று ஒரு முடிவிற்கு வந்தவனாக, ரமணனின் விஸிட்டிங் கார்டை சட்டை பாக்கெட்டிலிருந்து எடுத்துப் பார்த்து, 'நிவாஸ் அஸோஸியேட்ஸ்.' இவனுக்கு அந்த நிவாஸைத் தெரியும்.

உடனடியாக நிவாஸை எஸ்.டி.டியில் கூப்பிட்டுச் சொன்னான்:

"நிவாஸ், நான் சித்தார்த் பேசறேன் யா, பெங்களூர்லேருந்துதான். ஃபைன். ஹௌ ஆர் யு..? ஓகே. நீங்க ரொம்ப நாளா கூப்பிட்டுக்கிட்டிருந்திங்களே, மெட்ராஸ் வரச் சொல்லி..நாளைக்கே வரப்போறேன். உங்க வீட்ல ஒரு வாரம் கெஸ்டா தங்கப் போறேன். ஓகே?"

## 10

"அம்மா அங்கிள் இனிமே எப்பவும் நம்ம கூடத்தான் இருப்பாராம்மா..?"

வீட்டைக் காலி பண்ணி, ரமணனின் ஃப்ளாட்டிற்குக் குடி வந்து சமையற்கட்டை அழகுபடுத்திக் கொண்டிருந்த நித்யா திரும்பி அர்விந்த்தைப் பார்த்தாள். கையிலிருந்த அலுமினிய டீ கப் ஸ்டாண்டை மேடைமீது வைத்துவிட்டு அவனருகில் வந்து, முட்டி போட்டுக் குனிந்து குழந்தையின் தோள்மீது கைகளை வளைத்து மென்மையாகச் சொன்னாள்:

"அமான்டா கண்ணா... நம்ம கூடத்தான் இருப்பார். ஆனா, அவர் அங்கிள் இல்லேடா கண்ணா. நீ அடிக்கடி கேப்பியே..'பாலுவுக்கு, ஸ்ரீநிவாஸனுக்கெல்லாம் அப்பா இருக்காளே, எனக்கெங்கேம்மா'ன்னு..அந்த அப்பா இவர் தான். ஊர்லேருந்து வந்துட்டார். இந்த வருஷம் ஸ்போர்ட்ஸ்டேக்கு உன்கூட நான், அப்பா ரெண்டுபேருமே வருவோம்.. உன் கூடவே இருப்போம். இனிமே உனக்கு ஆயா வேணாம், ட்யூஷன் மிஸ் வேணாம். அம்மா



வேலைக்குப் போகப்போறதில்லை. வீட்டுல இருந்து உன்னையும் அப்பாவையும் கவனிக்கப் போறேன். உனக்குப் பிடிச்ச டிபனா விதம் விதமா பண்ணித் தரப்போறேன். அப்பா தினமும் உனக்கு ஹோம் ஒர்க் சொல்லித் தருவார் லீவு நாள்ல சினிமாவுக்குப் போகலாம். பீச்சுக்குப் போகலாம்..குதிரை மேல மூணு நாலு ரவுண்ட், மெர்ரி கோ ரவுண்ட் எல்லாம் உண்டு. என்ன கண்ணா.. சந்தோஷமா?"

குழந்தை என்ன சொல்வதென்று புரியாமல் பெரிதாய் தலையாட்டிற்று.

"போ கண்ணா..போய் அப்பாவைச் சாப்பிடக் கூட்டிண்டுவா...எல்லாரும் ஒண்ணா சாப்பிடலாம்.."

அர்விந்த் முன் ஹாலுக்கு ஓடினான். வரும்போது ரமணன் அவனை முதுகில் உப்பு மூட்டையாய்த் தூக்கிக் கொண்டு வந்து சாப்பாட்டு மேஜைமீது அமர்த்திக்கொண்டான். தானே குழந்தைக்குப் பருப்பு சாதமும், ரஸம் சாதமும் பிசைந்து வைத்தான். சாப்பிட்டு முடித்த பின்னர் விளையாட்டுக் காட்டினான். குழந்தைக்குச் சமமாய் விளையாடினான். ஓய்ந்து போனதும் படுக்கையில் படுக்க வைத்துக் கொண்டு கேட்டான்:

"அர்விந்த் கண்ணா! கதை சொல்லட்டுமாடா..?"

"சொல்லுங்க அங்கிள்.."

பக்கத்தில் படுத்துக்கொண்டிருந்த நித்யா திரும்பி அதட்டினாள்.

"அர்விந்த், அங்கிள்னு கூப்பிடக் கூடாதுன்னு சொல்லலே...அப்பான்னு கூப்பிடு.."

"ஷ்... என்ன நித்யா இது..? ஒரே நாள்ல குழந்தையை மாத்திட முடியுமா...? கொஞ்சம் கொஞ்சமாத் தான் மாத்தணும். அதுக்குள்ள கோபப்பட்டால் எப்படி? அர்விந்த் கண்ணா! என்ன கதைடா வேணும்?"

"குத்தே கதை.."

"குத்தே கதையா...?"

"ஆமாம் அங்கிள்...குத்தே இல்லே, குதிரை—அந்தக் கதை..."

"ஓகே...ஒரே ஒரு ஊர்ல ஒரு ராஜாவாம் அவன் ஒரு வெள்ளைக் குதிரை வளர்த்தானாம்..."

பாதிக் கதையில் குழந்தை தூங்கிவிட, போர்த்தியபின் மெதுவாய் நித்யாவின் பக்கத்தில் வந்து படுத்து அவளை அணைத்தான்...

"ஜெனரல் செக்அப் பண்ணினீங்களே, எங்கே சார் ரிஸல்ட்? அதைக் கொஞ்சம் காட்டுங்க...இப்பத்தான் ரிஷப்ஸனிஸ்ட், நீங்க போன் பண்ணினதாகச் சொன்னாள். கடைசி பேஷண்ட்டைப் பார்த்து அனுப்பிவிட்டு உடனே வந்தேன். கார்டியோகிராம் ரிப்போர்ட்டைக் கொஞ்சம் காட்டுங்க மிஸ்டர் சித்தார்த்..."- டாக்டர் விநாயகராவ் சித்தார்த்த கௌதமைப் பரிசோதித்துக்கொண்டே கேட்டார். எல்லா ரிப்போர்ட்டையும் பார்த்து முடித்து எதிர் நாற்காலியில் உட்கார்ந்து பின் நிதானமாகச் சொன்னார்:

"மிஸ்டர் சித்தார்த், உங்களுக்கு உடம்புக்கு ஒண்ணுமில்லே. நார்மலாத்தான் இருக்கு. கொஞ்சம் இடமாற்றம் இருந்தா நல்லதுன்னு எனக்குப் படறது..."

"ஏன் சார், இடமாற்றத்தைவிட வாழ்க்கைல மாற்றத்தை ஏற்படுத்திக்கலாம்னு தோணறது. என்ன சொல்றீங்க...?"

"அப்படின்னா நீங்க என்ன சொல்றீங்க...!"

"நானும் ஒரு கல்யாணம் பண்ணிக்கலாம்னு நினைக்கறேன்."

"தட்ஸ் குட், ஆனா, இத்தனை வருஷம் சும்மா இருந்துட்டு இப்ப ஏன் இந்த எண்ணம் வருது...?"

"அதுக்குக் காரணமிருக்கு டாக்டர். நித்யா இல்ல நித்யா, அவ மறுபடியும் கல்யாணம் பண்ணிக்கிட்டிருக்கா



டாக்டர். அதை நினைச்சா எனக்கு ஆச்சரியமா இருக்கு. அவளே பண்ணிக்கிட்டிருக்கிறப்ப நான் ஏன் பண்ணிக்கக் கூடாதுன்னு தோணுது...?"

"அது யார் நித்யா...?"

"என் ஒய்ஃப் சார்...ஸாரி, ஷி ஏஸ் நோ லாங்கர் மை ஒய்ஃப். இப்ப எப்படி அவளை நான் மனைவின்னு சொல்லிக்க முடியும். டிவோர்ஸ் பண்ணினப்புறம்..."

"நீங்க டிவோர்ஸ் பண்ணினீங்களா...?"

"நோ...ம்யூச்சுவல். ரெண்டு பேரும் தான் பண்ணினோம்..."

"காரணம் என்ன...?"

"காரணம்...அவளுக்கு என் செய்கை பிடிக்கலை நடத்தை பிடிக்கலை. பிடிக்கலைன்னா விடுன்னு நானும் விட்டுட்டேன். அப்போ அந்த மனநிலைலே அப்படித் தோணிச்சு. யாரையும் எதற்கும் வற்புறுத்தக்கூடாது; என்னையும் யாரும் வற்புறுத்தக் கூடாதுங்கற பிடிவாதம். இப்போதான் அதற்கெல்லாம் அர்த்தம் புரியுது டாக்டர். அந்த மாதிரி வற்புறுத்தறதுல இருக்கிற சந்தோஷம் தெரியுது. குடும்பம், மனைவி, குழந்தை இதெல்லாம் தான் ஆதாரம்னு விளங்குவது. இத்தனை வருஷமா தனி மனுஷனா ஆடி ஆடி அலுத்துப் போச்சு சுதந்திரப் பறவையா திரிஞ்சு சலிச்சுப் போச்சு... இப்போ கூட்டு வாழ்க்கை வேணும்னு தோணுது... இத்தனை சொத்துக்கும் வாரிசு வேணும்; என் பெயர் சொல்ல ஒரு குழந்தை வேணும்; வம்சாவளி விளங்கணும். அதுக்காகவாவது நான் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கத்தான் போறேன் டாக்டர்..."

டாக்டர் விநாயகராவ் அவனை அனுதாபத்துடன் பார்த்தார். ஒரு விநாடிக்குப் பின் அவனை நெருங்கித் தோளில் கை போட்டு ஆழமான பெருமூச்சிற்குப் பின் சொன்னார்:

"ஐயாம் ஸாரி மிஸ்டர் சித்தார்த். ஒரு குழந்தைக்காக வம்ச விருத்திக்காகக் கல்யாணம் பண்ணிக்கணும்னு நீங்க நினைச்சா, அந்த நினைப்பைத் தயவு செய்து விட்டுடுங்க..."

"என் டாக்டர்?" அவன் கண்கள் இடுங்க டாக்டரைப் பார்த்தான்.

"என்னா, அந்த எண்ணம் நிறைவேறாது. இதற்கு மேல நீங்க ஒரு குழந்தைக்குத் தகப்பனாகிறதுங்கறது நடக்காது. இவ்வளவு நாள் இஷ்டப்படி நடந்துக்கிட்டதும், அளவுக்கு அதிகமா குடிச்சதும், உங்க பொடன்ஸியைப் பலி வாங்கிடுச்சு..."

"என்ன...?"

"எஸ்...மிஸ்டர் சித்தார்த். ஓவர் குடி விரைத்தான் கெடுக்கும். ஆனா, உங்க விஷயத்துல வேற ஏதெல்லாமோ பாதிக்கப்பட்டிருக்கு. இதற்குக் காரணம் வெறும் குடி மட்டுமில்லை. நீங்க தாராளமா உபயோகப்படுத்தின போதைப் பொருட்களும், பெண்கள் விஷயத்துல நீங்க காட்டின தாராளமும் காரணம். இதை உங்ககிட்ட சொல்லவேண்டிய அவசியமில்லைன்னு நினைச்சேன். ஆனா, நீங்க இன்னொரு கல்யாணம் குழந்தைக்காகவாவது பண்ணிக்கப் போறேன்னு சொன்னப்புறம் இதற்கு மேலேயும் மறைக்கக் கூடாதுன்னு சொல்லிட்டேன்."

அவன் தலை குனிந்த சில விநாடிகள் மௌனமாய் உட்கார்ந்திருக்க, டாக்டரும் மௌனமாய் இருந்து மீண்டும் பேசினார்:

"மிஸ்டர் சித்தார்த், இதற்காக நீங்க மனசு தளர்ந்து போயிடக்கூடாது. ஐ நோ. நீங்க அப்படியெல்லாம் தளர்ந்து போகிற ஆசாமியில்லை..."

"யு ஆர் ரைட் டாக்டர். ஆனா அ... இப்போ இருக்கிற இந்த சித்தார்த் ... போயிருக்கான். ஆடி ஆடி ஓய்ஞ்சு போய் ..."

"ப்ளீஸ்... இந்த மாதிரி ஒரு ஸைக்கிக் ஸிண்ட்ரமை வளர்த்துக்காதீங்க. கூடுமானவரை தனிமையில் இருப்பதைத் தவிருங்க. உங்களுக்கு ரொம்ப நெருக்கமா நண்பர்கள் யாராவது இருக்காங்களா..."

"ஓ...இருக்காங்களே...விக்கர் பாட்டில்ஸ், ஸ்காட்ச்



விஸ்கியைவிட நெருங்கின நண்பன் யார் இருக்க முடியும் டாக்டர்...?"

"யு ஆர் டிப்ரெஸ்ட். இந்த சந்தர்ப்பத்துல நீங்க தனியா இருக்கக் கூடாது. முக்கியமா ஒரு விஷயம், அதிகம் குடிக்கவும் கூடாது. யாராவது தெரிஞ்சவங்க வீடு இருந்தா அங்க போய்த் தங்குங்களேன். முடியும்னா வெளியூர் எங்காவது போய் ஹோட்டல்ல தங்கறதுக்குப் பதிலா குடும்பச் சூழ்நிலையில தங்குங்களேன். அந்த மாதிரி ஒரு சூழ்நிலை உங்களுக்கு ரொம்ப உதவி செய்யும்."

"டாக்டர், உங்க காதுல இட்சிணி ஏதாவது வந்து பேசுதா...? நீங்க வர்றதுக்குக் கொஞ்ச முன்னாடிதான் நான் மெட்ராசுக்கு எஸ். டி.டி. போட்டு நிவாஸ்ங்கற ஒரு ஃப்ரெண்ட் கூடப் பேசினேன். 'உங்க வீட்ல வந்து ஒரு வாரம் தங்கப் போறேன்'னு அவர்கிட்டே சொன்னேன்."

"தட்ஸ் குட். ஒரு வாரங்கறதை ஒரு மாசம்னு மாத்திட்டீங்கன்னா எல்லாம் சரியாப் போயிடும். இன்னும் ரெண்டு நாள்ல நீங்க கிளம்பலாம்."

"ரெண்டு நாளா...? நோ, நோ. அப்படிக் காத்துக்கிட்டிருக்கிறதெல்லாம் நம்ம சரித்திரத்திலேயே கிடையாது. நாளைக் காலைல முதல் ப்ளைட்டைப் பிடிச்சு அடுத்த ஒரு மணி நேரத்துக்கெல்லாம் நிவாஸ் வீட்ல நிக்கணும்..."

"க்ரேஸி மேன்! வாழ்க்கைல முதல் தடவையா உங்களை மாதிரி ஒரு விநோதமான காரெக்டரைச் சந்திக்கறேன். ஐ லைக் யு மிஸ்டர் சித்தார்த்..."

"நல்ல வேளையா ஐ லவ் யூ சொல்லலை... என்பாடு திண்டாட்டமாப் போயிருக்கும்..."

சிரித்தார்கள்...

"நீத்தி...இன்னிக்கு எம்.டி.வீட்டுல ஏதோ சின்னப் பார்ட்டியாம். அவர் வீட்டுக்கு யாரோ முக்கிய கெஸ்ட் வந்திருக்காராம். அவருக்காகத்தான் பார்ட்டின்னு சொன்னார். 'வேற யாரையும் இன்வைட் பண்ணலைப்பா. நீயும் நித்யாவும் மட்டும் வந்துடுங்க. குழந்தையையும்

அழைச்சுக் கிட்டு வாங்க'ன்னு சொன்னார். வரியா போயிட்டு வரலாம்..?''

ரிப்பன் பகோடா பிழிந்து கொண்டிருந்த நித்யா முகத்தில் விழுந்த முடிக்கற்றையை முழங்கையால் ஒதுக்கிக் கொண்டே ரமணனைப் பார்த்துச் சொன்னாள். "நீங்க குழந்தையை அழைச்சிக்கிட்டுப் போயிட்டு வாங்களேன். காலையிலேயே பார்ட்டி விஷயம் தெரிஞ்சிருந்தால் பகோடாவுக்கு மாவு பிசைஞ்சிருக்கமாட்டேன். இன்னும் இவ்வளவு மாவு இருக்கு பிழிய..''

"நீ இல்லாமல் நாங்க மட்டும் போகணுமா நித்யா..?''

"சீ, சீ.. போயிட்டு வாங்க. வேற யாராவது கூப்பிட்டிருந்தால் போகவேணாம். நிவாஸ் கூப்பிட்டிருக்கார். போகாமல் இருந்தால் நல்லா இருக்காது..''

"அப்படின்னா வந்து அர்விந்த்தை டிரஸ் பண்ணி ரெடி பண்ணு. எனக்கும் நல்லதா டிரஸ் எடுத்து வை. நான் குளிச்சுட்டு வந்துடறேன்....''

அடுப்பை அணைத்து, வாசல் வரை வந்த அர்விந்த்தை முன்னால் நிற்க வைத்துக்கொண்டு ரமணன் ஸ்கூட்டரை உதைத்ததும் அழகாய் கையசைத்துக் கொண்டே கேட்டான்:

"எப்ப வருவீங்க..''

"சீக்கிரம் வந்துடுவோம்...''

"அர்விந்த் கண்ணா! டாட்டா ...!''

குழந்தை கம்பீரமாய் தலையசைக்க ஸ்கூட்டர் கிளம்பிற்று...

## 11

நிவாஸ் வீட்டுத்தோட்டம் வெறிச்சென்று கிடந்தது. அந்தப் பெரிய புல்தரையின் நடுவில் இருந்த ஒரே ஒரு டோம் விளக்கு மட்டும் மங்கலாய் வெளிச்சம் பரப்ப, வேறு விளக்குகள் இன்றி அமைதியாய்த் தோற்றம் அளித்தது. இந்த அமைதி ரமணனுக்கு என்னவோபோலிருக்க, அவன் ஸ்கூட்டரைப் புல்வெளிக்குச் சற்றுத் தள்ளி நிறுத்திப் பூட்டி விட்டு, அர்விந்த்தைக் கீழே இறக்கி கையைப் பற்றியபடி யோசித்தான். வழக்கமாய் பார்ட்டி என்றால் இந்த இடம் எத்தனை அமர்க்களப்படும்..? வரிசையாய் வெள்ளைக் குழல் விளக்குகளும் சரசரமாய் வர்ண விளக்குகளும், சிரிப்பும், பேச்சும், அமர்க்களமும்....

ஃபுல் சூட்டும், ஸபாரி சூட்டும், ஷிபான் புடவைகளும், லிப்ஸ்டிக் உதடுகளும், நுனி நாக்கு ஆங்கிலமும் இல்லாமல் இது என்ன பார்ட்டி...? நிவாஸ் இப்படி நிசப்தமாய் பார்ட்டி தரமாட்டாரே...?

"என்ன அங்கிள் யோசிக்கறீங்க..?''-அர்விந்த் கையைப் பற்றி உலுக்கினதும் சட்டென்று உணர்வு பெற்றான்.

"ஒண்ணுமில்லே...வா, உள்ள போகலாம்..''

லானைக் கடந்து, போர்டிகோவின் படிகளில் ஏறின உடனே ஹாலில் சிரிப்புச் சத்தம் கேட்டது. நிவாஸின் பேரக் குழந்தைகள், யாரோ ஒருவரின் கண்ணைக் கட்டி நடுவில் நகர்த்திப் போடப்பட்டு, ஏதோ சின்னக் குழந்தையின் பிறந்த நாள் விழா மாதிரி காட்சியளித்தது.

"அங்கிள்..! என்னைப் பிடிங்க..''

"காட்ச் மீ அங்கிள்...''

ஒவ்வொரு குழந்தையாக நடுவில் நின்று கொண்டிருந்த அவனின் பாண்ட்டையும் சட்டையையும் பிடித்திழுக்க-

அவன் வேண்டுமென்றே யாரையும் பிடிக்க இயலாத பாவனையில் தடுமாறி நடந்து, அதில் அந்தக் குழந்தைகளைச் சந்தோஷப்படுத்திச் சிரிக்க வைத்துக் கைகளை அகற்றி நடந்து வந்து,

"ஹேய் நிஷா! வேர் ஆர் யு..?''

"[illegible]"

என்று கேட்டுக்கொண்டே வாசல் கதவோரம் [illegible]

"[illegible]"

[illegible] சிரித்தான்.

"[illegible]"

"என்ன சார் இது..? உங்களை எப்படி மறக்க முடியும்..? ஆமாம், பெங்களூரிலிருந்து எப்ப வந்தீங்க..?"

[illegible] நின்றிருந்தான்.

"[illegible] பையன் யாரு..?"

"என் பையன் தான் சார்..!"

"என்னது..? உங்க பையனா..? என்ன சார் சொல்றீங்க..? இப்பத்தானே ஒரு வாரத்துக்கு முன்னால திருப்பதியில கல்யாணம் செஞ்சுக்கிட்டீங்க. அதுக்குள்ள இவ்வளவு பெரிய பையனா..! என்ன மிஸ்டர் ரமணன்? கல்யாணத்துக்கு முன்னாலேயே எல்லாத்தையும் முடிச்சுக் கிட்டீங்களா..?"

"சே சே ! அதெல்லாம் ஒன்றுமில்லை.." என்று தயங்கி, பின் அவனிடம் சொல்வதில் தவறில்லை என்ற உணர்வில் சொன்னான் ரமணன்.

"கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு முன்னாலேயே என் மனைவி கல்யாணம் ஆனவள். She is a divorcy. இது அவளுடைய பையன். இப்போ எங்களுடைய பையன்."



[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

'அப்போ நித்யாவின் வயிற்றில் இரண்டு மாசக் குழந்தையாய் இருந்தவன் இவன்..! அன்று மட்டும் அந்த மாஜிஸ்ட்ரேட்டின் குரலுக்குச் சற்று செவி சாய்த்திருந்தால்..இவன் தொட்டிலில் கிடந்ததை, தவழ்ந்து தளிர் நடை போட்டதையெல்லாம் பார்த்திருக்கலாம்..

'போகட்டும், போனதெல்லாம் போகட்டும். இனி எதையும் கைநழுவ விடக்கூடாது. இவன் என் மகன்.. என் மகன்..!'

அவனின் அணைப்பு இறுகுவதைக் கவனித்த ரமணன் அந்தச் செய்கைகளின் காரணம் புரியாதவனாகக் கலவரப்பட்டுக் கொட்டான்.

"என்ன மிஸ்டர் சித்தார்த்த கௌதம் என்ன ஆயிற்று..?"

"நோ ஒன்றுமில்லை. யு ஆர் ரியலி க்ரேட் மிஸ்டர் ரமணன்! இவ்வளவு பெரிய பையன் இருக்கிறது தெரிஞ்சும் ஒரு பெண்ணுக்கு வாழ்வு கொடுத்திருக்கீங்களே..எவ்வளவு பெரிய மனசு வேணும் அதுக்கு..?"-சட்டென்று சமாளித்துக் கொண்டு பேசினான் சித்தார்த்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லை. நித்யா ஈஸ் எ வெரி நைஸ் பர்ஸன். ஆமாம் மிஸ்டர் நிவாஸ் இல்லையா..?"-ரமணன் வேண்டுமென்றே பேச்சின் திசையைத் திருப்புவதைப் புரிந்து கொண்டு சொன்னான் சித்தார்த்:

"இருக்கார். மாடில இருக்கார்.."

"மாடிலயா...? யாரோ கெஸ்ட் வந்திருக்காங்க... பார்ட்டின்னு சொன்னார்..."

"அந்த கெஸ்ட் நான் தான்! பார்ட்டின்னா பெரிய பார்ட்டின்னு நினைச்சீங்களா...? எனக்கு அதெல்லாம் வெறுத்துப் போச்சு. சும்மா ஹோம்லி அட்மாஸ்பியர் இருந்தாப் போதும்னு நான்தான் எல்லாத்தையும் தடுத்துட்டேன். ஆனா, உங்களை மட்டும் புதுசா கல்யாணம் பண்ணிண்டவாங்கறதால கூப்பிடச் சொன்னேன்.."



"ஓ..தாங்க்யு..தாங்க் யு ஸோமச்.. என்னை இவ்வளவு தூரம் நினைவு வச்சுப்பீங்கன்னு நினைக்கலே.."

"எப்படி மறக்க முடியும்..? அதுவும் இனிமேல மறக்கவே முடியாது..உங்களை மட்டுமல்ல, இந்தப் பையனையும் கூடத்தான்.."

"ஜஸ்ட் எக்ஸ்க்யூஸ் மி. நான் மேல போய் நிவாஸ் கிட்டப் பேசிட்டு வந்துடறேன்..அதுவரைக்கும்.."

"யு டோண்ட் பாதர். அதுவரை நான் பையன்கூட விளையாடிக்கறேன். நீங்க பேசிட்டு நிதானமா வாங்க.."

ரமணனின் உருவம் மாடிப் படிகளில் ஏறி மறைந்ததும் இவன் குழந்தையை அருகில் இழுத்து மீண்டும் நெஞ்சோடு அணைத்து, தன்னைப் போலவே முன் நெற்றியில் விழுந்த கேசத்தை ஒதுக்கி, உச்சி முகர்ந்து, கன்னத்தில் முத்தமிட்டு, குரல் தழையக் கேட்டான்:

"உன் பேரு என்னடா ராஜா..?"

"அர்விந்த்.."

"அர்விந்த்..."-மீண்டும் குழந்தையை அணைக்க, அர்விந்த் தயக்கமோ, பயமோ அற்று இயல்பாய் ஏற்பட்ட உந்துதலில் அவனுடன் ஒட்டிக்கொண்டான்.

"அங்கிள், உங்க பேர் என்ன..?"

'அங்கிள்..! ஐயாம் நாட் யுவர் அங்கிள்..நான் உனக்கு அப்பாடா கண்ணா..நான்தான் உன் அப்பா..! என் ரத்தம் தான் உன் உடம்புல ஓடறது. இதோ; இந்த நெற்றி, அதுல வந்து விழற கற்றை முடி, இந்தத் தீர்க்கமான மூக்கு, கூரான பார்வை..அப்படியே என்னைக் கொண்டு, என் சாயலில் பிறந்து என்னைப் போய் அங்கிள்னு கூப்பிடறியேடா பாவி..இல்லே, நான்தான் பாவி..நீ இப்படிக் கூப்பிடும்படி நடந்துக்கிட்ட நான்தான் பாவி..மகா பாவி..!'

குழந்தை அவன் தோளை உலுக்கிற்று.

"என்ன அங்கிள் பேசாம இருக்கீங்க. நான் கேட்டது காதுல விழலை..?"

"என்னடா ராஜா கேட்ட..?"

"உங்க பேர் என்னன்னு கேட்டேன்.."

"சித்தார்த்த கௌதம். என் புத்தரையும் சேர்த்து வச்சுக்கலை தெரியுமா..? நான் புத்தரா இல்லை.."

குழந்தை அர்த்தம் புரியாமல் அவனோடு சேர்ந்து சிரித்தது. அவன் ஏதோ நினைவிற்கு வர,

"வரியா கொஞ்சம் வெளியில போயிட்டு வரலாம்..?"

என்று கேட்டான்.

"ம்ஹூம், அங்கிள் திட்டுவாங்க.."

"எந்த அங்கிள்..?"

"இப்போ மேல போனாரே அவர்.."

"அவரும் அங்கிள்தானா...? கடவுளே! அவரை நீ அப்பான்னு கூப்பிட மாட்டியா?"

"ம்ஹூம்.."

"ஏம்மா..?"

"ஏன்னா அவர் எனக்கு அப்பா இல்லை.."

சித்தார்த் குரலில் ஓர் எதிர்பார்ப்பு தெரிய மெதுவாகக் கேட்டான்:

"அப்படின்னா என்னை அப்பான்னு கூப்பிடறியா..?"

"அப்டி கூப்டா நீங்க கோவிச்சுக்க மாட்டேள்..?"

"மாட்டேன். சத்தியமா கோவிச்சுக்க மாட்டேன்."

"அப்டின்னா கூப்பிடறேன்."

"கூப்பிடு.."

"அப்பா...!"

இவனுக்குள் மின்சாரம் பாய்ந்து முகத்தில் நூறு வாட் பல்பு எரிந்தது.



"இன்னொரு தரம் கூப்பிடு.."

"அப்பா...!"

"எப்பவும் இப்படியே கூப்பிடு.."

"சரி..."

"வா, வெளியில போகலாம்."

"அங்கிள்..?"

"நான் சொல்லிக்கறேன், வா..."

வெளியில் வந்து இவன் கார்க் கதவைத் திறந்ததும், குழந்தை அந்தப் பெரிய காரை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டு நின்றதும் இவன் திரும்பிப் பார்த்துக் கேட்டான்:

"என்ன கண்ணா..?"

"என்ன அங்கிள்,கார்லியா போகப் போறோம்..?"

"ஷ்.. திரும்ப அங்கிளா..? கொஞ்ச முன்னால என்ன சொன்ன..?"

"ஸாரி.. ஸாரிப்பா...!"

"ஆமா, கார்ல போக உனக்குப் பிடிக்காதா..?"

"ஓ... ரொம்பப் பிடிக்கும். ஆனா, நான் இதுவரைக்கும் கார்ல போனதே இல்லை..."

'கார்ல போனதில்லையா...? பாவிப்பயலே...! உங்கப்பன் வருஷத்துக்கு ஒரு இம்ப்போர்ட்டட் கார் மாத்தறேனே... நீ கார்ல போனதில்லைன்னு சொல்றயேடா...?'

அவனைத் தூக்கி ஆவேசமாய் முத்தமிட்டு நிமிர்ந்து பார்த்தபோது, மாடி பால்கனியில் ரமணன் தெரிந்தான்.

"ஹாய் ரமணன்! நான் குழந்தையைக் கூட்டிண்டு கார்ல ஒரு ரவுண்டு போயிட்டு வரேன். அதுவரை நீங்க இருப்பீங்க இல்லே.."

"ஓயெஸ் இன்னும் குறைந்தபட்சம் இரண்டு மணி நேரம் நான் இங்க இருப்பேன். நீங்க போயிட்டு வாங்க..."

"தாங்க் யு..தாங்க் யு..."-'விதி..விதி...என் பையனை வெளியில கூட்டிண்டு போறதுக்கு இவன்கிட்ட பர்மிஷன் வாங்க வேண்டியிருக்கு..'

குழந்தையோடு காரில் பாய்ந்து காரைக் கிளப்பினதும் 'இப்படியே நேராக பெங்களூர் போய் விட்டால் என்ன...?' என்று ஓர் எண்ணம் தோன்ற, குழந்தையைத் திரும்பிப் பார்த்தான்...

## 12

அர்விந்தின் அந்தப் பெரிய கண்களும், துறு துறுக்கும் பார்வையும், கள்ளமற்ற சிரிப்பும் ஒரு விநாடி சித்தார்த்தின் எண்ணத்தைத் திடப்படுத்திற்று. ஆக்ஸிலேட்டரை அழுத்தி, பூந்தமல்லி நெடுஞ்சாலையைப் பிடித்து பெங்களூர் ஹைரோடில் திரும்பி...

"அர்விந்த் கண்ணா, தூக்கம் வந்தால் அப்படியே அப்பா மேல சாஞ்சுக்கடா..."

"பசிச்சால் சொல்லு, நிறுத்தறேன்..."

"ம்ஹூம், பசிக்கலை, நாம எங்கப்பா போறோம்...?"

"அப்பா வீட்டுக்கு...இத்தனை வருஷமா மம்மி கூடத்தானே இருந்த...? இனிமே அப்பாகூட இருக்கலாம், என்ன...?"

"சரிப்பா..."

"சந்தோஷமாத்தானே வரே...?"

"ஆமாம்ப்பா..."

"அப்புறம் அம்மா வேணும்னு அழமாட்டியே...?"

"அழமாட்டேன்..."



"அப்பா வீடு எங்க இருக்குன்னு கேட்கலியே...?"

"எங்க...?"

"பெங்களூர்ல..."

"அப்படின்னா...?"

"அது ஒரு ஊரு..."

"மெட்ராஸ் மாதிரியா...?"

"மெட்ராஸைவிட நல்லா இருக்கும். சும்மா, குளு குளுன்னு இருக்கும். இந்த மாசமெல்லாம் ரொம்பக் குளிரும்..."

"ஐயையோ! அப்படின்னா எனக்கு ஸ்வெட்டர் இல்லியேப்பா..."

"எல்லாம் அப்பா வாங்கித் தரண்டா கண்ணா... ஸ்வெட்டர், ஷர்ட், நிஜார், ஷூஸ், சாக்ஸ்..."

"ஐயையோ...ஸ்கூல்பா... ஸ்கூலுக்கு எப்படிப் போறது...?"

"அங்க நல்ல ஸ்கூல் நெறைய இருக்கு. ஒரு பெரிய கான்வென்ட்டா பார்த்துச் சேர்த்துடறேன்..."

"அப்டின்னா புக்ஸ்...?"

"புக்ஸூம் வாங்கித் தரேன்..."

அவன் குழந்தையை வீட்டு வேலைக்காரர்களுக்கு, தொழிற்சாலை ஊழியர்களுக்கு, நண்பர்களுக்கு, முக்கியமாக டாக்டர் வினாயகராவிற்கு அறிமுகப்படுத்தி...

'என்ன சொன்னீங்க டாக்டர்...? இனிமே எனக்குக் குழநதை பிறக்காது. என் பொடன்ஸி போயிடுச்சு...அப்படித் தானே...? போனாப் போகட்டுமே...இது யார் தெரியுமா...? என் ஸன்... என் ரத்தம், என் சதை... ஒரு காலத்துல நான் நல்லா இருந்ததுக்கு ஒரே ஒரு ஆதாரம், மை ஸன் ... இவன் போறும் டாக்டர் எனக்கு...வேற ஒண்ணும் வேணாம்...'

"மணி என்ன ஆச்சி..பத்தரையா..? இன்னும் மிஸ்டர் சித்தார்த்த கௌதமைக் காணமே சார். இதோ ஒரு ரவுண்ட் போயிட்டு வரேன்னாரே...குழந்தை ஒண்ணும் சாப்பிடலே... தூங்கவும் தூங்கிடுவானே..?"

"ஏன் கவலைப்படறே ரமணா...! குழந்தைமேல அவ்வளவு ஆசையா இருக்கிறவர் சாப்பட ஏதாவது வாங்கித் தந்திருக்க மாட்டாரா..?"

"அதுக்கில்ல சார்...நேரமாறது...நித்யா வேற தனியா கவலைப் பட்டிட்டிருப்பா..."

"வேணும்னா போன் பண்ணிச் சொல்லேன், இந்த மாதிரி சித்தார்த்த கௌதம் குழந்தையைக் கூட்டிட்டுப் போயிருக்கார். இன்னும் வரலை வந்ததும் அழைச்சுட்டு வந்திடறேன்னு சொல்லு..."

"ஐயையோ...! வேணாம் சார். குழந்தையைத் தனியா அனுப்பினது தெரிஞ்சால் கோவிச்சுப்பாள். அவர் வந்ததும் சத்தம் போடாமல் குழந்தையைக் கூட கூட்டிண்டே போயிடறேன்..."

நித்யா அடுப்படி வேலைகளை முடித்து, சமையற் கட்டை கழுவித் தள்ளி, வழக்கம்போல் சின்னக் குளியலாகக் குளித்து உடம்பிற்கு பவுடர்தூவி, நைட்கவுனிற்கு மாறி, ரமணனுக்கு பிடிக்கும் என்பதற்காக காதோரங்களில் மெலிசாய் மிக மெலிசாய் இன்டிமேட் ஸ்ப்ரே செய்து, மேஜை மீது கலந்து வைத்திருந்த மோர் சாதத்தைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது,

"குழந்தை சாப்பிட்டானோ இல்லையோ...?"

அதற்குமேல் சாப்பிடப் பிடிக்காமல் மூடி வைத்தாள். கை கழுவிக் கொண்டு வந்து மணி பார்த்தாள். ஒன்பதரை. பார்ட்டிக்குப் போனவர்கள் இவ்வளவு சீக்கிரம் வரமாட்டார்கள் என்பதால் வெளி விளக்கை எரியவிட்டு, ஹால் விளக்கை அணைத்து, படுக்கை அறை விளக்கைப் போட்டு, கட்டிலில் சரிந்து அந்த வாரப்பத்திரிகைகளைப் புரட்டினாள். கடைசியாகப் பழைய ஈவ்ஸ்வீக்லியும்,



ஃபெமினாவும் மேய்ந்து லேசாய்த் தூக்கம் கண்ணைத் தழுவ, எழுந்து மணி பார்த்தாள்.

பதினொன்று...

'இன்னும் ஏன் ரமணன் வரவில்லை...? குழந்தை தூங்கிப் போய் விடுவானே..? கொஞ்சமாவது பொறுப்பு வேண்டாம் இந்த மனிதருக்கு..? குழந்தையைக் கூட அழைத்துக் கொண்டு போகிறபோது, அதற்குத் தகுந்த மாதிரி நடந்து கொள்ளத் தெரிய வேண்டாம்? பதினோரு மணிக்கும், பன்னிரண்டு மணிக்கும் பார்ட்டி என்ன வேண்டிக் கிடக்கிறது..? அனுப்புகிறபோதே எனக்கு மனசில்லை...குழந்தையை அனுப்பியிருக்கக் கூடாது... இப்போ என்ன செய்வது...?'

'டெலிபோன் பண்ண வேண்டுமானால் எதிர் ஃபிளாட்டிற்கோ, பக்கத்து ஃபிளாட்டிற்கோ போய்த்தான் பண்ண வேண்டும். அது இந்த ராத்திரியில் சாத்தியமில்லை. தூங்குகிறவர்களை எழுப்ப முடியாது...'

'இப்போது என்ன செய்வது...?'

ஹால் விளக்கைப் போட்டு ஜன்னலடியில் நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள். தெருவில் கார் போகிற சத்தம் கேட்டது. அப்புறம் ஒரு மோட்டார் சைக்கிள் கடைசியாக ஸ்கூட்டர்...

'ரமணனாக இருக்குமோ...?'

ஸ்கூட்டர் சத்தம் வீடுவரை வந்து கடந்து பின்னர் தேய்ந்து மறைய, அவளின் பதட்டம் அதிகமாயிற்று.

'ஒருவேளை வர்றபோது ஆக்ஸிடெண்ட் ஆகியிருக்- ராகவேந்த்ரா...! அவரையும் குழந்தையையும் காப்பாத்து... காளிகாம்பா உதவி பண்ணும்மா...'

மணி பன்னிரண்டடிப்பது கேட்டதும் அதற்குமேல் தாங்க முடியாதவளாகப் பரபரவென்று கதவைத் திறந்து வெளி விளக்கைப் போட்டு எதிர் ஃபிளாட்டை நோக்கிப் போனாள்...

கிட்டத்தட்ட ராணிப்பேட்டையை நெருங்குகிற போது தூக்கம் கலைந்து எழுந்தான் அரவிந்த். கண்களைக் கசக்கிக் கொண்டே காருக்குள்ளும், வெளியிலும் தெரிந்த இருட்டைப் பார்த்துப் பயந்து போனான். ஒரு விநாடி ஒன்றும் புரியவில்லை. பக்கத்தில் உட்கார்ந்து டிரைவ் பண்ணிக்கொண்டிருந்த சித்தார்த்த கௌதமை அந்நியத்தனத்துடன் பார்த்து இன்னமும் பயந்து மெலிசாய் அழ ஆரம்பிக்க-

திரும்பிப் பார்த்துக் கேட்டான் சித்தார்த்த கௌதம்:

"என்னடா கண்ணா..ஏன் அழறே..?"

"அம்மா...அம்மாகிட்ட போகணும்..."

"அம்மாகிட்ட போகணுமா...? நீதானே 'இனிமே அம்மா வேணாம்; என்கூட சந்தோஷமா வரேன்'னு சொன்னே?"

"ம்.. ஊ.. ஊ.. அம்மா..."

"பசிக்கிறதா..? ஏதாவது வாங்கித் தரட்டுமா..?"

வேண்டாமென்று குழந்தையின் தலை ஆடிற்று.

"பாதித் தூக்கத்துல எழுந்துட்டியா? திரும்ப படுத்துத் தூங்கு.."

"ம்ஹூம்..வேணாம்..!"

"பின்ன என்ன வேணும்..?"

"அம்மா...அம்மா...அம்மா..."

அவன் பெரிதாய் அழத் தொடங்க, இதைச் சற்றும் எதிர்பார்க்காத இவன் தடுமாறிப் போனான். மனசுக்குள் லேசாய்க் கோபமும், எரிச்சலும் எட்டிப் பார்த்தன. ஆனாலும் குழந்தையிடம் அன்பாகவே நடந்து கொண்டான். மெதுவாய் சமாதானப்படுத்தப் பார்த்து இயலாமற் தோற்றுப் போய், அரவிந்தின் அழுகை நின்றால்போதும் என்கிற உணர்வில் வண்டியைத் திருப்பி அசுரத் தனமான வேகத்தில் சென்னையை நோக்கி ஓட்டினான்.



"இதோ இன்னும் ஒருமணி நேரத்துல உங்கம்மா கிட்ட கொண்டுபோய் விட்றேன். அழாதே.."

எதிர் வீட்டு காலிங் பெல்லை இரண்டு மூன்று தரம் அழுத்தின பின்னே தூக்கம் கலந்த ஆண் குரல், "கோன்..?" என்றது.

"நான் நித்யா. இந்த நேரத்தில் தொந்தரவு பண்றதுக்கு மன்னிக்கணும். கொஞ்சம் அவசரமா போன் பண்ணணும்."

கதவு திறந்து ஹால் விளக்குப் பளிச்சிட்டது. முகத்தில் அத்தனை ஸ்நேக பாவமற்று அவர் கை டெலிபோனைக் காட்ட, அவள் ரிஸீவரை எடுத்தாள்.

"சார், நான் என்ன சார் பண்ணுவேன்..மணி பன்னிரண்டாகியும் அவர் இன்னும் வரலையே சார். எனக்குப் பயமா இருக்கு சார். நித்யாவுக்கு என்ன பதிலை சார் சொல்றது..? ஒரு வேளை காருக்கு ஏதாவது ஆகியிருக்-"

ஹால் டெலிபோன் அலற ரமணன், சித்தார்த்தாக இருக்குமோ என்ற எதிர் பார்ப்பில் ஓடிப்போய் ரிஸீவரை எடுத்தான்..

"நித்யா..? வந்து.."

சடாரென்று எழுந்து வந்த நிவாஸ், ரிஸீவரைப் பிடுங்கிப் பேசினார். இயல்பாய்ப் பேசினார்:

"என்னம்மா நித்யா..மணி ஆயிடுத்தேன்னு பயந்து போயிட்டியா..? ஒண்ணுமில்லேம்மா, அரவிந்த் இங்கேயே படுத்துத் தூங்கிட்டான். அதனால நான் தான் ரமணனைக் காலைல போகலாம்னு தங்கச் சொல்லி விட்டேன். தூங்கற குழந்தையை எதுக்கு எழுப்பணும் சொல்லு..?"

"..."

"சரிம்மா.. காலைல சரியா டான்னு ஆறு மணிக்கு கார் குடுத்து அனுப்பி வைக்கறேன். என்ன, போய்ப் படுத்து நிம்மதியா தூங்கு. குட் நைட்..!"

அவர் ரிஸீவரை வைத்ததும் ரமணன் சொல்ல இயலாத நன்றி உணர்வுடன் அவரின் கைகளைப் பற்றிக் கொண்டான்.

“பின்ன என்னப்பா, அத்தனையும் சொல்லி அவளை வேற கலவரப்படுத்தணுமா...? தனியா இருக்கிற பொண்ணு பயந்து செத்துப் போயிடும். வா, நாம வேணா காரை எடுத்துக்கிட்டுப் போய் மவுண்ட் ரோட், பாரீஸ் கார்னார்னு ஒரு ரவுண்ட் பார்த்துட்டு வரலாம்...”

பார்த்துப் பலனில்லாமல் கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்திற்குமேல் சுற்றி, அந்த நேரத்தில் ஒருவேளை சித்தார்த் வீட்டிற்கு வந்திருப்பானோ என்ற நினைப்பில் மீண்டும் வீட்டிற்கு வந்து காலி போர்டிகோவில் காரை நிறுத்தினார்கள்.

“ஒருவேளை குழந்தையை அழைச்சுக்கிட்டு நைட் ஷோ போயிட்டாரோ என்னவோ... எதுக்கும் ஒன்றரை மணி வரைக்கும் பார்க்கலாம். அப்புறமும் வராட்டிப் போனா போலீஸ்ல கம்ப்ளெயின்ட் கொடுக்கலாம். என்ன சொல்ற...?”

“எனக்கு என்ன சொல்றதுண்ணே புரியலை சார்... ரொம்பக் குழப்பமா இருக்கேன்.”

“ரெண்டு மணி வரைக்கும் கொஞ்சம் அமைதியா இரு. அப்புறம் எதையும் யோசிக்கலாம். எனக்கென்னவோ சித்தார்த்த கௌதம் சினிமாவுக்குப் போயிருப்பார்னுதான் தோணுது...

கிட்டத்தட்ட மணி இரண்டானபோது, போர்டிகோவில் நுழைந்த அந்த பென்ஸ் வண்டியைப் பார்த்து ரமணன் சந்தோஷத்தில் பதறிக் கொண்டு வராந்தாவிற்கு ஓடினான். பின்னால் வந்த நிவாஸ், தூங்குகிற குழந்தையைத் தோளில் சாத்திக் கொண்டு வந்த சித்தார்த்தைப் பார்த்து அமைதியாய்ச் சிரித்துக் கொண்டே கேட்டார்:

“எங்க சார் போயிட்டீங்க, சினிமாவுக்கா...?”

“ஆ... ஆமாம். குழந்தை பார்க்கணும்னான். கூட்டிட்டுப் போனேன். தூங்கிப் போயிட்டான். திடீர்னு



முழிச்சுக்கிட்டு தியேட்டர் இருட்டைப் பார்த்துப் பயந்து அம்மான்னு அழ ஆரம்பிச்சான். தூக்கிட்டு வந்துட்டேன். வர்றவழில ஒரு டம்ளர் பால் வாங்கித் தந்தேன். குடிச்சுட்டு திரும்பத் தூங்கிப் போயிட்டான்...”

சித்தார்த், ரமணனைப் பார்த்து புன்சிரிப்பாகச் சிரித்து, குழந்தையை மெதுவாய் சோபாவில் படுக்க வைத்துத் தானும் கீழே கார்பெட்டில் படுத்து மறுவினாடி அசதியில் தூங்கிப் போனான்.

## 13

மறுநாள் காலையில் சித்தார்த் எழுந்து பார்த்த போது, ரமணனும் அர்விந்தும் இல்லை. நிவாஸைத் தேடிப் போய் கேட்டபோது, அவர் சிரித்தார்.

“என்ன மிஸ்டர் சித்தார்த்! திடீர்னு உங்களுக்குக் குழந்தைப் பைத்தியம் பிடிச்சிருக்கு...?”

அவன் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு பதில் சொன்னான்:

“ஹி ஈஸ் சச் எ க்யூட் சைல்ட். ரொம்ப புத்திசாலிக் குழந்தை...!”

“குழந்தை மட்டுமில்லே; அம்மாவும் ரொம்ப க்யூட். நல்ல புத்திசாலி. கல்யாணம் ஆகிறவரைக்கும் எங்கிட்ட தான் வேலை பார்த்தாள்...”

“ஐ... ஸி... இப்போ அந்தக் குழந்தை எங்கே இருப்பான்...?”

“சரியாப் போச்சு. இப்ப அவனைத் தேடிக்கிட்டுப் போகப் போறீங்களா...? மணி ஒன்பதாயிடுத்து. அவன் ஸ்கூலுக்குப் போயிருப்பான்...”

“எந்த ஸ்கூல்ல படிக்கிறான் தெரியுமா...?”

நிவாஸ் அவனை விசித்திரமாகப் பார்த்தார்.

"ஆர் யு க்ரேஸி..? ஸ்கூலுக்குப் போய் அவனைப் பார்க்கப் போறீங்களா..?"

"உங்களுக்கு அவன் படிக்கிற ஸ்கூல் தெரியுமா தெரியாதா..?"

"நோ ஐடியா...ரமணனைத்தான் கேட்கணும்..."

"ரமணன் ஆபீசுக்கு வந்திருப்பாரா..?"

"இன்னும் அரைமணி கழித்து போன் பண்ணுங்கள் வந்திருப்பான்.. இன்னிக்கு உங்க புரோக்கிராம் என்ன?"

"டோண்ட் பாதர்.. நான் பாத்துக்கறேன்... நீங்க உங்க வேலையைக் கவனியுங்க..."

"அப்ப நான் ஆபீசுக்குப் போகட்டுமா...? சாயந்திரம் பார்க்கறேன். போனதும் ரமணனை போன் பண்ணச் சொல்லட்டுமா...?"

"ம்..."

"மத்தியானம் நல்லா சாப்பிடுங்க. எது வேணும்னாலும் எடுத்துக்குங்க. உங்க வீடு மாதிரி நினைச்சு சகஜமா இருக்கணும். என்ன...!"

"சரி..."

நிவாஸ் போனதும் இவன் யோசித்தான். குழந்தைக்குத் தன்னைப் பிடித்திருக்கிறது. அப்பா என்று கூப்பிடச் சொன்னதும் தயங்காமல் கூப்பிடுகிறது. இன்னும் கொஞ்சம் பழகி, அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமாகி விட்டால் நிச்சயம் தன்னுடன் வரத் தடை ஏதும் சொல்லமாட்டான். நேற்று அப்படி அவசரப்பட்டிருக்கக் கூடாது. பார்த்த சிறிது நேரத்திற்கெல்லாம் அழைத்துக் கொண்டு போக நினைத்திருக்கக் கூடாது...குழந்தை தன்னை வேற்று மனிதனாகத்தான் நினைத்திருக்கும். அதற்கு எப்படித் தெரியும் தான் பெற்ற தந்தை என்பது...? இன்று குழந்தையின் மனத்தை இன்னும் நெருங்க வேண்டும். கேட்பதையெல்லாம் வாங்கித் தரவேண்டும். கேட்கா விட்டாலும் வாங்கித் தரவேண்டும். எல்லா இடங்களுக்கும்



காரில் அழைத்துப்போய் ('நான் கார்ல போனதே இல்லை...!') ஐஸ்க்ரீம் வாங்கித் தந்து, சந்தோஷப் படுத்தி, கடைசியில் எப்படியாவது அவனை அழைத்துக்கொண்டு பெங்களூர் போய்விட வேண்டும்.

குளித்து, டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, ரமணன் டெலிபோனில் கூப்பிட்டான்:

"குட் மார்னிங் மிஸ்டர் சித்தார்த். போன் பண்ணச் சொன்னீங்களாமே...?"

"ஆமாம். ஐயாம் சாரி. நேற்று ராத்திரி என்னால் உங்களுக்கு நேரமாகிவிட்டது. குழந்தை ஏதாவது சொன்னானா...?"

"நத்திங்... எழுந்ததும், 'அங்கிள் எங்கே'ன்னு கேட்டான். நித்யா, நிவாஸைத்தான் கேட்கிறான்னு நினைச்சுண்டா... நான் அவகிட்டே ஒண்ணும் சொல்லலை..."

இவன் அந்தப் பதிலில் நிம்மதியடைந்தான். நல்ல வேளையாக அர்விந்த் தான் அவனை பெங்களூர் அழைத்துக் கொண்டு போக முயன்றதைச் சொல்ல வில்லை...!

"யு ஸீ மிஸ்டர் ரமணன், உங்க குழந்தையை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. வெரி இன்டெலிஜென்ட் சைல்ட்! கொஞ்ச நேரம் அவன்கூட இருந்தால் மனசு நிம்மதியாக இருக்கும்னு தோணறது. இஃப் யு டோண்ட் மைண்ட், இன்னிக்கு நான் கொஞ்சம் அவனை வெளியில அழைச்சுட்டுப் போகலாமா...?"

ரமணன் தயங்கினான்.

"ஸ்கூல் போயிருக்கானே..." என்று இழுத்தான்.

"நான் ஸ்கூலுக்குப் போய் கூட்டிட்டுப் போறேனே.. சாயந்திரம் சரியா நாலு மணிக்கு உங்க ஆபீசுக்கு வந்து குழந்தையை உங்ககிட்ட ஒப்படைச்சுடறேன். ஓகே...?"

அப்போதும் ரமணன் தயங்கத்தான் செய்தான்.

"இல்லே...நித்யா என்ன சொல்லு-"

"நோ..நோ...அவங்களுக்குத் தெரியவேணாம். ஸ்கூல் முடிஞ்சு கூட்டிக்கிட்டுப் போற மாதிரி கூட்டிட்டுப் போயிடுங்க... என்ன...?"

அவன் பேசாமல் யோசிக்க, சித்தார்த் கெஞ்சலாக, 'ப்ளீஸ்..' போட, ரமணன் நெகிழ்ந்து 'சரி' சொன்னான்.

"சரியா நாலு மணிக்கு இங்க கொண்டு வந்து விட்டுடுங்க. ஸ்கூல்ல நீங்க போய்க் கூப்பிட்டால் அனுப்ப மாட்டாங்க. இங்க வாங்க. நிவாஸ் கிட்ட பெர்மிஷன் வாங்கிட்டு நானும் கூட வரேன். ஓகே...?"

"ஓகே..!"-ரிஸீவரை வைத்துவிட்டு, சித்தார்த் தலையில் அடித்துக் கொண்டான். 'என் பையன்டா பாவி.. அவனை வெளியில் கூட்டிட்டுப் போக உன்னை இப்படிக் கெஞ்சணும்னு என் தலைல எழுதியிருக்கு...'

தான் தங்கியிருந்த அறைக்குப் போய் வாலெட் நிறைய பணத்தைத் திணித்துக் கொண்டு காரில் பாய்ந்தான்.

"அர்விந்த் கண்ணுக்கு முதல்ல எங்க போகணும்?"

"ஜூ போகலாம் அங்கிள்..."

"அங்கிள் இல்லே..நேத்திக்கு எப்படிக் கூப்பிட ணும்னு சொன்னேன்..?"

"ஸாரி...அப்பா..."

"வெரிகுட்! முதல்ல ஜூ பார்க்கலாமா...?"

"ம்..."

ஜூ முடிந்து தாஜ் கோரமாண்டலுக்கு அழைத்துப் போய் சாப்பாடு, ஐஸ்க்ரீம் வாங்கி, தானே ஊட்டி விட்டு, மவுண்ட் ரோடில் உள்ள ஒரு கடை விடாமல் ஏறி இறங்கி, மனத்திற்குப் பிடித்த, குழந்தைக்குப் பொருத்தமான அத்தனை உடைகளையும் வாங்கி காரின் பின் ஸீட் முழுதும் அட்டைப் பெட்டிகளாக நிரப்பி, கடைசியில் பனகல் பார்க் நகைக்கடையில் நுழைந்து, தங்கச் சங்கிலி-திருப்பதி வெங்கடாசலபதி டாலருடன் வாங்கிக் கழுத்தில் போட்டான். சின்னதாய் மோதிரம் வாங்கி விரலில் போட்டு அழகு பார்த்தான்.



"அர்விந்த்! இப்போ உன்னைப் பார்த்தா எப்படி இருக்கு தெரியுமா..?"

"எப்படி...?"

"ராஜா மாதிரி இருக்கு.."

"ராஜான்னா குத்தே வேணுமே..?"

"குதிரைதானே..? நாளைக்கே வாங்கிட்டாப் போறது.."

"நிஜம்மாவா...!" -குழந்தையின் கண் அகலறது.

"டாடி பொய் சொல்வேனா...? அதுவும் அர்விந்த் கண்ணுகிட்டச் சொல்வேனா...?"

"ம்ஹூம்... மாட்டீங்க..."

"நாளைக்கு உனக்குக் குதிரை வருதா இல்லையா பாரேன்.."

"நாளைக்கும் இந்த மாதிரி கூட்டிண்டு போவீங் களா..?"

"நீ வருவியா..?"

"ஓ...வருவேனே..."

"டாடி எங்கே கூப்பிட்டாலும் வருவியா..?"

"வருவேன்!.."

"என் கூட ஊருக்குக் கூப்பிட்டால்...?"

குழந்தை யோசித்தது. "மம்மிகூட வராளா...?"

"ம்ஹூம். உங்க மம்மி வரமாட்டாங்க. நீயும் நானும் தான் போகணும்..."

"அப்டின்னா நான் வரலே...நீங்களும் போக வேணாம். இங்கேயே இருந்துடுங்க..."

இப்போது சித்தார்த் யோசிக்க ஆரம்பித்தான் 'என்ன செய்வது...? எவ்வளவு கூப்பிட்டாலும் குழந்தை வர மாட்டான் போல் இருக்கிறதே..?'

"நீங்க இங்க இருக்கீங்களா...? எங்க கூடவே இருக்கீங்களா...?

"பார்க்கலாம்டா கண்ணா. கொஞ்சம் டயம் கொடு. யோசிக்கச் சொல்றேன் வா, இப்ப உங்க அங்கிள் ஆபீசுக்குப் போகலாம். மணி நாலரை ஆயிடுச்சு. அங்க அவர் காத்துக்கிட்டு இருப்பார்."

இவன் குழந்தையைக் கொண்டு விட்ட போது மணி ஐந்தாகி விட்டது. ரமணன் பொறுமையிழந்து ஆபீஸ் வாசலில் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து, சித்தார்த்தின் காரைப் பார்த்ததும் நிம்மதியடைந்தான்.

"நித்யாவிற்குக் கவலையாக இருந்தது. மணி ஐந்தேகால் ஆகியும் அர்விந்த் இன்னமும் பள்ளியிலிருந்து திரும்ப வில்லை. தினமும் நாலேகாலுக்கெல்லாம் வந்துவிடுகிற குழந்தை... என்ன வேலையானாலும் அப்படியே விட்டுவிட்டு, குழந்தையைப் பள்ளிக் கூடத்திலிருந்து அழைத்துக் கொண்டு வந்து விட்ட பின்பு திரும்பிப் போகிற ரமணனுக்கு இன்று என்ன வந்து விட்டது? திரும்பவும் பக்கத்து ஃப்ளாட்டிற்குப் போய் போன் செய்ய விருப்பப்படாமல் அமைதியை இழந்து பயந்து போனாள். வாசலுக்கும் உள்ளுக்கும் அலைந்தாள். பின் குக்கரில் சாதம் வைக்கலாமென்று உள்ளே போய் அரிசி களைந்து வைத்தபோது வாசலில் ஸ்கூட்டர் சத்தம் கேட்டது..! அர்விந்த்தான் முதலில் ஓடி வந்தான். புதுச்சட்டை, புது டிராயர், கையில் பாட்டரியால் இயங்கும் ஒரு பெரிய ஏரோப்ளேன் பொம்மை. பின்னால் ரமணன் சுமக்க முடியாத அளவு அடுக்கின அட்டைப் பெட்டிகளுடன்...

நித்யா பெட்டிகளை வாங்கி டீபாய்மீது வைத்துக் கொண்டே கேட்டாள்:

"என்ன, இவ்வளவு சாமான் வாங்கிண்டு வந்திருக்கீங்க..?"

"இன்னும் இருக்கு. இரு, கொண்டுவரேன்..." மறுபடி படிகளில் இறங்கி, இருபது அட்டைப் பெட்டிகளை அடுக்கிக் கொண்டுவந்து, சோபாமீது போட்டுவிட்டு ஆயாசத்துடன் சரிந்து கொண்டான்.



நித்யா ஒரு விநாடி மௌனமாக அட்டைப் பெட்டிகளைப் பார்த்தாள். 'நிச்சயமாய் இவர் இவ்வளவு செலவழித்து இவற்றை ஒரே மூச்சில் வாங்கியிருக்க மாட்டார். அவ்வளவு பணமும் கையில் கிடையாது. நிவாஸ்ம் காரண மற்று இப்படி வாங்கித் தருபவரல்ல. பின் யார் வாங்கிக் கொடுத்திருப்பார்கள்?' மனத்திற்குள் ஏதோ உறுத்தலாய் நிற்க, அவள் அர்விந்த்தை அருகில் அழைத்து அணைத்துக் கொண்ட போது, கழுத்துச் சங்கிலியும் விரலின் மோதிரமும் கண்ணில் பட மெதுவாய் படபடக்கிற மனத்தை அடக்கி விசாரித்தாள்:

"யார்ரா கண்ணா உனக்கு இதெல்லாம் வாங்கித் தந்தா..!"

"அப்பாம்மா. பெரிய்ய கார்ல அழைச்சுண்டு போய் எல்லாம் வாங்கித் தந்தார்..."

"அப்பாவா..., யாரு, இவரா..? இவருக்கு ஏதுடா கார்? ஸ்கூட்டர் தானே இருக்கு..?"

"போம்மா.. இது அங்கிள். நான் அப்பாவைச் சொல்றேன்..."

"யாருடா அப்பா, புதுசா உறவு சொல்றே..?"

"அவர் பேரு என்னமோ சொன்னாரே..ம்.. சித்தார்த்..! என்னை பெங்களூருக்குக்கூட அழைச்சுண்டு போறேன்னு சொல்லியிருக்கார்ம்மா..."

கேட்ட மாத்திரத்தில் அவளுக்குக் கண்கள் இருட்டிக் கொண்டு வந்தன; பார்வை பஞ்சடைந்தது. 'கடவுளே..! தெரிந்து விட்டது.. சித்துவிற்கு அர்விந்த் தன் பையன் என்பது தெரிந்து விட்டது. இனி அர்விந்த்தைக் கவர்ந்து கொள்ள முயற்சிப்பான். அந்த முயற்சியின் முதல் படிதான் இத்தனை சாமான்களும். குழந்தையிடம்கூட பெங்களூர் அழைத்துப் போவதாகச் சொன்னானாமே.. இன்று ஒரு நாள் மட்டும் கிட்டத்தட்ட ஐயாயிரம் செலவழித்திருப்பானா..? இருக்கும். பணம் இருக்கிறது. ஏராளமாய் இருக்கிறது. அதன் மூலம் எதையும் யாரையும் அவனால் வாங்கிவிட முடியும். அர்விந்த்தை அப்படி வாங்கத்தான் முயற்சிக்கிறானா..? தாயே..! காளிகாம்பா, காமாட்சி..என்

பையனை என்னை விட்டுப் பிரித்து விடாதே... ராகவேந்த்ரா! தயவு செய்து எனக்குக் கருணை காட்டு... அவனில்லாமல் என்னால் ஒரு விநாடிகூட இருக்க முடியாது. தெய்வங்களே...! உதவி செய்யுங்கள்... அர்விந்த்தை என்னை விட்டுப் பிரித்து விடாதீர்கள்... 'பயக்ருத் பயநாசினி' என்பார்களே... பயத்தைக் கொடுத்துப் பயத்தைப் போக்குபவள் என்பது நிஜமானால் இப்போது கொடுத்த இந்தப் பயத்தை நீயே போக்கு தேவி...'

அதற்குமேல் எந்த தெய்வத்தை வேண்டுவது என்பது தெரியாதவளாக யோசிக்கிற சக்தியற்று, கண்கள் மேலும் இருள மயங்கிக் கீழே சாய்ந்தாள் நித்யா...

## 14

காலையிலிருந்து ஆபீஸ் அலைச்சலில் ரமணன் மிகவும் களைத்துப் போயிருந்தான். அன்று பார்த்து சித்தார்த் வேறு குழந்தைக்காக ஸ்கூலுக்குக் கூட்டிப் போய் திரும்பிக் கொண்டு விட்டதிலிருந்து மாலை நான்கு மணி வரை சாப்பிடக்கூட நேரம் கிடைக்காமல் வேலை இருந்தது. ஒவ்வொரு நிறுவனமாக ஏறி இறங்கி, ஆடிட்டரைப் பார்த்து, இரண்டு மணியளவில் மீட்டிங் ஒன்றுக்கு ஏற்பாடு பண்ணி, கடைசியில் ஐந்து மணிக்கு மேலும் சித்தார்த் குழந்தையைக் கொண்டு விடாததால் மனத்தால் அலைந்து, பின்னர் அத்தனை அட்டைப் பெட்டிகளையும் ஸ்கூட்டரின் பின்னால் வைத்துக் கட்டி, முன்னால் குழந்தையை நிற்க வைத்துச் சமாளித்து ஓட்டிக் கொண்டு வந்ததில் அசதியில் சோபாவில் சரிந்தவன் அப்படியே சில நிமிடங்களில் தூங்கியும் போய்விட்டான். திடீரென்று கேட்ட சத்தத்திலும், அர்விந்த் கத்தின கத்தலிலும் திடுக்கிட்டுக் கண்விழித்து உள்ளே ஓடினவன், நித்யா தரையில் தாறுமாறாக விழுந்து கிடப்பதைப் பார்த்துப் பயந்து போனான். நித்யாவைத் தூக்கிக் கட்டிலில் கிடத்தி, சில்லென்று தண்ணீரை முகத்தில் அடித்து அவள் மெல்ல கண் திறப்பதைப் பார்த்தபடி குழந்தையிடம் கேட்டான்:

"என்னாடா கண்ணா ஆச்சு?"



"அம்மா கீழே விழுந்துட்டா அங்கிள்..."

"ஏன், எதற்காகத் திடீரென்று இப்படி ஆயிற்று...?"

-யோசிக்கக்கூடச் சக்தியற்றவனாக நித்யாவின் பக்கத்தில் உட்கார்ந்து தலையை வருடிக் கொடுத்து மெதுவாகக் கேட்டான்:

"என்ன ஆச்சு நித்யா?... ஏதாவது சாப்பிடறியா? சூடாக ஹார்லிக்ஸ் கரைச்சுத் தரட்டுமா...?"

அவள் வேண்டாமென்று தலையாட்டி, "அரவிந்த் எங்கே...?" என்றாள்.

"இதோ இருக்கானே... அர்விந்த், அம்மா கூப்பிடறா பாரு...!"

அருகில் வந்த அரவிந்த்தை இறுக அணைத்துக் கொண்டு மெதுவாக முணுமுணுத்தாள்:

"குழந்தையைப் பக்கத்திலேயே இருக்கச் சொல்லுங்க. நீங்களும் என் பக்கத்திலேயே இருங்க... எனக்குப் பயமாயிருக்கு."

"என்ன பயம் நித்யா...? நான் பக்கத்திலேயே இருக்கேன் தூங்கு.... அரவிந்த், அம்மா பக்கத்துல படுத்துக்கோ..."

இரண்டு பேரும் தூங்கின பின் வாசற் கதவு தாழிட்டிருக்கிறதா என்று பார்த்து, எரிந்து கொண்டிருந்த காஸ் அடுப்பை நிறுத்திவிட்டு வந்து படுத்தவன் மெதுவாய் யோசிக்கலானான்...

'திடீரென்று ஏன் நித்யா மயக்கமடைய வேண்டும். இதற்கும், சித்தார்த் குழந்தைக்கு வாங்கிக் கொடுத்த பொருட்களுக்கும் ஏதாவது சம்பந்தமிருக்கிறதா? எதற்காக சித்தார்த் இவ்வளவும் வாங்கித் தரவேண்டும்? பிரியம் என்றால் ஏதோ ஒரு சட்டை, பிஸ்கட், சாக்லெட் என்று வாங்கித் தருவார்கள்தான். இத்தனையா? எதற்காக? இதற்கு ஏதாவது காரணம் இருக்குமோ...? என்ன காரணமாக இருக்கும்...?'

-யோசித்து ஒன்றும் பிடிபடாமல் போகவே, காலையில் நேராக சித்தார்த்தைச் சந்தித்து கேட்டுவிடலாம் என்கிற முடிவில் படுத்துக்கொண்டான்.

மறுநாள் நித்யா அர்விந்த்தை ஸ்கூலுக்கு அனுப்ப மறுத்தாள். இவன் கேட்டதற்கு,

"கோவிலுக்குக் குழந்தையைக்கூட அழைத்துக் கொண்டு போகப் போகிறேன்..." என்றாள்.

"எந்தக் கோவிலுக்கு..?" என்றான் இவனும் விடாமல்.

"மடிப்பாக்கத்தில் ஒரு ஐயப்பன் கோவில் இருக்காம்... பக்கத்து ஃப்ளாட் அம்மா போறாங்க. என்னையும் கூப்பிட்டாங்க நான் குழந்தையையும் கூட அழைச்சுண்டு போறேன்..."

ரமணன் ஒன்றும் சொல்லவில்லை. மௌனமாகப் படியிறங்கினான். ஆனாலும் அவனுக்குள் நித்யாவின் பதில் உறுத்திற்று. 'அப்படியெல்லாம் குழந்தையைப் பள்ளிக் கூடத்துக்கு லீவு போட வைத்துக் கோவிலுக்கு அழைத்துப் போகிறவள் இல்லை அவள். இன்று ஏன் இப்படிச் செய்கிறாள்..? பக்கத்தில் இருக்கிற கோவில்களையெல்லாம் விட்டு எங்கோ இருக்கிற மடிப்பாக்கம் கோவிலுக்கு எதற்காகப் போக வேண்டும்?' - கேள்விகள் நெருடினாலும், வாய் திறந்து அவளை ஒன்றும் கேட்காமல் ஸ்கூட்டரை உதைத்துக் கிளப்பி ஆபீஸ் போனபோது-

இவனுக்காக ரிஸப்ஷனிலேயே சித்தார்த்த கௌதம் காத்துக் கொண்டிருப்பதைப் பார்த்து இன்னமும் குழப்பமடைந்தான். 'எதற்காகத் தனக்காக இவ்வளவு காலையில் இவன் காத்துக் கொண்டு நிற்க வேண்டும்? இவனிடம் கேட்டு விடலாமா.. அர்விந்த்திற்கு என்ன காரணத்திற்காக அவ்வளவு செலவழித்தாய் என்று...?' - கேட்டு விடுகிற முடிவில் அருகில் போய் "ஹலோ!" சொல்லி -

"என்ன சார் இவ்வளவு சீக்கிரம் இங்கே வந்திருக்கீங்க? நிவாஸைத் தேடி வந்தீங்களா...?"



"நோ. உங்களைத் தேடித்தான் வந்தேன். உங்ககிட்ட தனியா கொஞ்சம் பேசணும். வரீங்களா, வெளியே போய்ப் பேசலாம்..?"

"வாங்க, மேல என் ரூமுக்குப் போய் பேசலாம். யாரும் டிஸ்டர்ப் பண்ண மாட்டாங்க..."

அறைக்குப் போய் உட்கார்ந்து ரமணன் காபிக்குச் சொல்வதற்குள் சித்தார்த் மடமடவென்று பேச ஆரம்பித்தான்:

"உங்ககிட்ட எல்லாத்தையும் சொல்லிடறதுன்னுதான் இப்போ வந்திருக்கேன். உங்ககிட்ட சொல்லாம வேற யார் கிட்ட சொல்லப் போறேன்... விதி என் விஷயத்துல ரொம்ப சதி பண்ணிடுத்து மிஸ்டர் ரமணன். நித்யாவோட முதல் கணவன் நான்தான்றதை இத்தனை நாள் உங்ககிட்ட சொல்லாமல் இருந்ததுக்கு மன்னிக்கணும். நித்யா என் மனைவி- ஐ மீன் என் மனைவியாக இருந்தவள். அர்விந்த், அர்விந்த் என் பையன் சார். எனக்கு இப்படி ஒரு பையன் இருக்கிற விஷயம் அன்னிக்கு நிவாஸ்வீட்டு பார்ட்டியில் நீங்க சொல்றவரை எனக்கே தெரியாது. நாங்க டைவர்ஸ் பண்றபோது நித்யா ரெண்டு மாச கர்ப்பவதின்னு மாஜிஸ்டிரேட் சொன்னதுகூட அன்னிக்குத்தான் எனக்கு நினைவுக்கு வந்தது. யு நோ மிஸ்டர் ரமணன், நித்யாமேல ஒரு தப்பும் இல்லை. தப்பு பண்ணினதெல்லாம் நான்தான். சின்ன வயசு, நிறையப் பணம், வாழ்க்கையை அனுபவிக்கணும் என்கிற வெறி - எல்லாவிதமான தப்பையும் பண்ணிட்டேன். அதைச் சகிச்சுக்க முடியாமல் தான் நித்யா டிவோர்ஸ் கேட்டா. வீடு, கோவில் மாதிரின்னு சொன்னா... நான் வீட்டை நைட் கிளப் ஆக்கிப் பார்க்கிற ஆசையில் அப்போ அதை பெரிசா நினைக்காமல் உடனே டிவோர்ஸுக்கு ஏற்பாடு பண்ணிட்டு அமெரிக்கா போயிட்டேன். அங்கேயும் கெட்டலைஞ்சு திரும்பி வர்ற போது ஒரு இம்பொடெண்ட்டா, ஹார்ட் பேஷண்ட்டா வந்தேன். வாழ்க்கை வெறுத்து, கோவில் கோவிலா அலைஞ்சேன். பட்டை பட்டையா விபூதி பூசினேன். ருத்திராக்ஷம் போட்டுண்டேன். அதுக்கெல்லாம் பலனில்லாமல் போகலை... ஆண்டவன் என் வேண்டுகோளுக்கும்

செவி சாய்ச்சிருக்கான், பார்த்துக்கோங்களேன் அவன் பாரபட்சமில்லாதவன்தான். 'இதோடா, உனக்கு ஒரு வாரிசு. உன் ஆஸ்தியெல்லாம் ஆள ஒருத்தன்'னு அர்விந்தைச் சரியான சமயத்துல காட்டியிருக்கான் பாருங்களேன்.. நான் இப்போ மெட்ராஸ்ல தங்கியிருக்கிறதுக்குக் காரணமே அர்விந்த்தான். ப்ளீஸ், நீங்க என்னைப் புரிஞ்சுக்கணும் ரமணன். என் நிலைமையைத் தெரிஞ்சுக்கணும். உங்க வாழ்க்கையிலோ, நித்யாவோட வழ்க்கையிலோ குறுக்கிட நான் வரலை. எனக்கு இனி கல்யாணமோ, குழந்தை பிறக்கிற பாக்கியமோ இல்லை. ஆனா, நீங்க அப்படி இல்லை. நித்யாவுக்கும் உங்களுக்கும் இனி குழந்தை பிறக்கும்; பிறக்கணும். அதனால என் குழந்தையை எனக்குக் கொடுத்திடுங்க மிஸ்டர் ரமணன். எனக்கிருக்கிற ஒரே ஆதரவு.ஆறுதல் எல்லாம் அவன்தான். என் வம்சத்தை விருத்தி பண்ணப் போறவன். அவ்வளவு பெரிய சொத்தைக் கட்டி ஆளப் போறவன் அவன்தான்! அதனால 'மாட்டேன்'னு சொல்லாமல், அவனை எனக்கு விட்டுக் கொடுங்க. ப்ளீஸ்..! உங்க மனைவிகிட்டேயும் சொல்லுங்க... நாளைக்கு இதே நேரத்துக்கு நான் இங்க வரேன். நல்ல முடிவோட நீங்களும் வாங்க. லெட் மீ கோ நௌ ப்ளீஸ்... அலவ் மீ டு கோ."

புயல் வந்துவிட்டுப் போான மாதிரி போய் விட்டான். புயலின் அத்தனை சேதத்தையும் விளைவித்துப் போய் விட்டதாகவும் ரமணன் உணர்ந்தான். மெதுவாக அவனுக்குச் சூழ்நிலையின் இறுக்கம் புரிந்தது. நித்ய மயங்கி விழுந்ததன் காரணம் புரிந்தது. இன்று அர்விந்த்தைப் பள்ளிக் கூடத்திற்கு அனுப்ப மறுத்தது புரிந்தது. சித்தார்த்தை நினைத்ததும் மனது கஷ்டப்பட்டது. சிறு வயதில் வாலிபத்தில் நினைத்த மாதிரியெல்லாம் நடப்பவர்கள் சற்றுவயதானதும் அதற்காக இப்படித்தான் வருத்தப்பட நேரிடும் என்பதை உணர்ந்து கொள்ள முடிந்தது. அதுபோல் நித்யாவின் நிலைமையையும் அவனால் புரிந்து கொள்ள முடிந்தது. சிக்கலான விவகாரம் தான். இதற்கு முடிவுதான் என்ன? எப்படித் தீர்வு காண்பது? சித்தார்த் குழந்தைக்காக ஆசைப்படுவது எவ்வளவு நிஜமோ, அதே மாதிரி நித்யா குழந்தையைத் தரப்



போவதில்லை என்பதும் நிஜம். அர்விந்த் இல்லாமல் அவளால் ஒரு விநாடி கூட இருக்க முடியப்போவதில்லை. இனி அர்விந்த் இன்றி சித்தார்த்தின் வாழ்க்கையும் இல்லை.. இதற்கு என்ன செய்வது..?

எதுவானாலும் அதில் தான் பிரவேசிக்கக்கூடாது என்று நினைத்தான். இது அவர்களின் தனிப்பட்ட விஷயம். குழந்தையை உரிமை கொண்டாட இரண்டு பேருக்கும் தேவையான தகுதிகள் இருக்கின்றன. மேலும், அர்விந்த் இன்னமும் தன்னை அப்பா என்று கூப்பிடப் பிரியப்படவில்லை. தன்னைத் தந்தையாக ஏற்றுக் கொள்ள அந்தப் பிஞ்சு உள்ளம் இடம் தரவில்லை. அங்கிள் என்று கூப்பிட்டுத் தள்ளியே நிறுத்துகிறான். போகப் போக இந்த இடைவெளி அதிகமானாலும் ஆகும். இது அவனைப் பற்றிய பிரச்னை. அதனால் இதிலிருந்து தான் தள்ளி நிற்பதுதான் சரியாக இருக்கும்.

அதற்குமேல் அலுவலகத்தில் இருக்க முடியாமல் நிவாஸைப் பார்த்துச் சொல்லிவிட்டு வீட்டுக்கு வந்தபோது நித்யா வீட்டில்தான் இருந்தாள். அர்விந்த் தூங்கிக் கொண்டிருந்தான்.

"என்ன இன்னிக்கு இவ்வளவு சீக்கிரம் வீட்டுக்கு வந்துட்டீங்க? உடம்பு சரியில்லையா..?" என்று நித்யா நெற்றியில் கை வைத்தபோது, அவன் சிரிக்க முயற்சி பண்ணிக்கொண்டே சொன்னான்:

"உடம்புக்கு ஒண்ணுமில்லை. மனசுதான் சரியில்லை. ஆமாம், நீ கோவிலுக்குப் போகப் போறதாகச் சொன்னியே, போகலையா..?"

அவள் "இல்லை" என்று தலையாட்ட, அவனே மீண்டும் கேட்டான்:

"ஏன் நித்யா போகலை?"

"எனக்கும் மனசு சரியில்லை.."

"என்ன ஆச்சு.."

"முதல்ல உங்களுக்கு ஏன் மனசு சரியில்லேன்றதைச் சொல்லுங்க, அப்புறம் நான் சொல்றேன்.."

"உன் மனசு சரியில்லாத காரணத்தை நானே சொல்லட்டுமா...?"

அவள் அதிர்ச்சியடைந்தவளாக அவனைப் பார்க்க, அவன் மெதுவான குரலில் பேசினான்:

"சித்தார்த்த கௌதம் அப்பான்ற சொந்தம் கொண்டாடி, அர்விந்தைக் கூட அழைச்சுண்டு போயிடு வாரோன்னு நீ பயப்படறே இல்லை...?"

நித்யா சட்டென்று சோபாவின் கைப்பிடியைப் பற்றிக் கொண்டு அவனைக் கெஞ்சலாகப் பார்த்தாள்:

"இது உங்களுக்கு எப்படித் தெரியும்...?"

"எனக்கு எல்லாம் தெரியும் நித்யா..." என்று ஆரம்பித்து, காலையில் சித்தார்த் வந்தது, பேசினது, எல்லாவற்றையும் சொன்னது கடைசியில் குழந்தை வேண்டுமென்று கேட்டது- என்று ஒவ்வொன்றாகச் சொல்லிக் கொண்டே போனான்.

"பாவம் நித்யா, அவரைப் பார்த்தாலும் பரிதாபமாகத்தான் இருக்கிறது. என்ன பணமிருந்து என்ன பிரயோஜனம்? வாழ்க்கையில் ஒரு பிடிப்பு இல்லை, பந்தபாசமில்லை."

"அதற்காக...?" சடாரென்று எழுந்து நின்று கோபமும், அழுகையுமாகக் கத்தினாள் அவள்.

"என் குழந்தையைச் தரச் சொல்றீங்களா...? மாட்டேன். உயிரே போனாலும் அர்விந்தைக் கொடுக்கச் சம்மதிக்கமாட்டேன். நாளைக்கு நீங்க ஆபீசுக்குப் போக வேணாம். அவரைப் பார்க்க வேணாம்... என்னைவிட்டு என் குழந்தையைப் பிரிச்சுடாதீங்க. உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன்..."

- சரிந்து காலடியில் விழுந்து கதறினாள். அப்படியே தன் நினைவற்றுப் போனாள்.

பதறிப்போய் ரமணன் அவளைத் தூக்கக் கீழே குனிந்தான்.

2021

# 15

நித்யா ராத்திரி தூக்கத்தில் அடிக்கடி திடுக்கிட்ட மாதிரி எழுந்து உட்கார்ந்து, பக்கத்தில் படுத்திருக்கும் அர்விந்த்தைத் தடவிப் பார்த்துக் கொண்டாள். அவன் நெற்றியில் குனிந்து முத்தமிட்டு, "அர்விந்த் கண்ணா, என்னை விட்டுப் போயிடாதேடா அம்மாவை விட்டுப் போயிடாதேடா" என்று அரற்றினாள். பின் ரமணனை உலுக்கி எழுப்பி, அவன் மார்பில் சாய்ந்து அழுதாள். ஒரு குழந்தையைச் சமாதானப்படுத்துகிற மாதிரி ரமணன் அவளைச் சமாதானப்படுத்தித் தூங்க வைக்க வேண்டியதாயிற்று.

அவளுக்காகவே மறுநாள், அதற்கும் அடுத்த நாள் என்று இரண்டு நாட்கள் ரமணன் ஆபீசுக்குப் போகாமல் இருந்தான். அர்விந்த்தையும் ஸ்கூலுக்கு அனுப்பவில்லை. நிருவாகியை போனில் கூப்பிட்டு, அவசரமாக வெளியூர் போவதால் ஆபீசுக்கு இரண்டு நாட்கள் லீவு வேண்டுமென்று கேட்டுக் கொண்டான். இரண்டு நாட்களும் ஓட்டலிலிருந்து டிபன், சாப்பாடு தருவித்தான். நித்யாவிற்கு காம்போஸ் கொடுத்துத் தூங்கவைத்தான் மூன்றாம் நாளும் லீவுபோட முடியாததால் நித்யாவிடம் சொல்லிவிட்டு ஆபீசுக்குக் கிளம்பினான். போகும்போது அவளைத் தைரியமாக இருக்கச் சொன்னான்.

"பாரம் முழுவதையும் கடவுள்மீது போட்டுவிட்டு, சற்று நிம்மதியாக இருக்கப் பழகு நித்யா. பிரார்த்தனை நிஜமாக இருக்குமானால் தெய்வம் நிச்சயம் வழிகாட்டும். ஒருவேளை இன்று நான் வர நேரமானாலும் ஆகும். இரண்டு நாள் வேலையைச் சேர்த்துக் கவனிக்க வேண்டியிருக்கும். பயப்படாமல் இரு-" என்றும் சொல்லியிருந்தான்.

அன்று எழுந்து நித்யா வீட்டு வேலைகளைக் கவனித்தாள். குளித்துப் பூஜை பண்ணினாள். துக்க நிவாரணி படித்தாள். பகல் முழுதும் அர்விந்த்துடன் விளையாடினாள். ராத்திரி குழந்தைக்குச் சாப்பாடு போட்டுப்

படுக்க வைத்து, ரமணனுக்காகக் காத்திருந்தபோது, காலிங்பெல் ஓசை கேட்டது. 'ஸ்கூட்டர் சத்தம் கேட்கவில்லையே... ஒருவேளை ஸ்கூட்டரில் வரவில்லையா?' என்று நினைத்துக் கதவைத் திறந்தாள்.

சித்தார்த்த கௌதம்!

வேண்டுமென்றே இயல்பாய்ச் சிரிக்க முயற்சி பண்ணி உள்ளே நுழைந்து, "மிஸ்டர் ரமணன் இல்லையா?" என்று கேட்டுக் கொண்டே சோபாவில் உட்கார்ந்தான்.

நித்யா பதில் சொல்கிற சக்தியற்று சுவரோடு ஒட்டி நின்றாள். மனசு படபடவென்று அடித்துக்கொண்டது. 'கடவுளே... கடவுளே' என்று அரற்றினாள்.

சித்தார்த் அவளின் உணர்ச்சிகளைச் சிறிதும் லட்சியம் பண்ணாதவனாகக் கேட்டான்:

"குழந்தையில்லையா...? ரமணனுடன் வெளியில் போயிருக்கானா...?"

குழந்தையைப் பற்றிக் கேட்டதும், நித்யா சுய உணர்வு பெற்றுச் சொல்ல முடியாத கோபத்துடன் பேச ஆரம்பித்தாள்:

"கல்யாணமே இப்பதான் ஆச்சு. அதுக்குள்ளே குழந்தை எப்படி இருக்கும்?"

அதைக் கேட்டு அவன் புன்னகை செய்தான்.

"நான் ரமணின் குழந்தையைக் கேக்கல. என் பையனைக் கேட்டேன்..."

ஒரு கணம் அந்தப் பதிலில் ஆடிப்போனாள். அவனின் சுபாவப்படி சுற்றிவளைக்காமல் நேரிடையாக விஷயத்திற்கு வந்துவிட்டான். அதேபோல் தானும் நேரிடையாகப் பேச முடிவு செய்தாள்.

"மிஸ்டர் சித்தார்த்த கௌதம், ஒருதரம் என்னைக் கல்யாணம் பண்ணிண்டு அலைக்கழிச்சது போதும். இப்போதுதான் நான் நிம்மதியா இருக்கேன். தயவுசெய்து அதைக் கலைக்க முயற்சி பண்ணாதீங்க... தயவு செய்து இங்கிருந்து மட்டுமில்லை, இந்த ஊரைவிட்டே போயிடுங்க, உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன்..."

கையைக் கூப்பி அவள் கெஞ்சினதைப் பார்த்து சித்தார்த்



சில விநாடிகள் பேசாமல் இருந்து பின் தொண்டையைக் கனைத்துக் கொண்டு நிதானமான குரலில் பேச ஆரம்பித்தான்.

"உனக்கே தெரியும் நான் யாரையும் இம்சிக்க மாட்டேன்; யாரையும் எதற்கும் வற்புறுத்த மாட்டேன்னு. இப்போகூட உன் வாழ்க்கையைக் கெடுக்கணும்னு நான் இங்கே வரலை. நீ இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிட்ட பொறாமையால் வரலை. இன்னும் சொல்லப்போனால் நீ கல்யாணம் பண்ணிக்கிட்டது எனக்கு ரொம்ப சந்தோஷம். வாழ்க்கையில் ஒரு பெண் தனிச்சு வாழறதுங்கறது ரொம்ப கஷ்டமான விஷயம்னு எனக்குத் தெரியும். ரமணனைப் போல் ஒரு நல்ல மனிதனின் பாதுகாப்பையும் துணையையும் நீ தேடிக்கிட்டதுல நான் பெருமைப் படறேன். நான் இப்போ இங்கே வந்தது வேற ஒரு காரணத்துக்காக. அது என்னன்னு உனக்குத் தெரியும். ரமணன் கிட்டே எல்லாம் விவரமாகச் சொல்லி அனுப்பினேன். உன்கிட்டச் சொல்லியிருப்பார்னு நினைக்கிறேன்."

மூச்சுவிடாமல் பேசினவன் ஒரு விநாடி நிறுத்தி, நித்யாவின் முகத்தை ஆழமாகப் பார்த்தான். அவள் இன்னமும் கோபம் தணியாதவளாக இருப்பதைப் புரிந்துகொண்டு, அதற்கு எதிர்மாறாகச் சாந்தமாகத் தன் பேச்சைத் தொடர்ந்தான்:

"இனிமேல் எனக்கு இன்னொரு குழந்தை பிறக்க வழியில்லை நித்யா. நான் ஆடின ஆட்டங்களும், அளவுக்கு அதிகமாகக் குடிச்சதும் சேர்ந்து என்னை எதுக்கும் லாயக்கத்தவனா ஆக்கிடுச்சு. அதனால் இப்போ உன்னை மாதிரி நானும் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிறதுல அர்த்தமில்லை. நான் மனைவிக்கு ஆசைப்படலே. ஒரு குழந்தைக்குத்தான் ஏங்கறேன். என் வம்சம் இதோடு நசிச்சுப் போயிடக்கூடாதுன்னு நினைக்கிறேன். எனக்கிருக்கிற சொத்துக்களை அநாதை ஆசிரமத்துக்கு எழுதி வச்சுடும்படி ஆயிடுமோன்னு பயந்தேன். நல்லவேளையாக கடவுள் எனக்கும் கொஞ்சம் கிருபை புரிந்து, 'இதோ உன் வம்ச விருத்தி, உன் சொத்துக்கு அதிபதியான நீ பெற்றெடுத்த பையனைப் பாருடா'ன்னு காட்டிட்டார். குருடனுக்குக் கண் கிடைச்ச மாதிரி அர்விந்த்தைப் பார்த்து நான் பூரிச்சுப்

போயிருக்கேன். அவனை நல்லா படிக்க வச்சுப் பெரிய ஆளாக்கணும்னு ஆசைப்படறேன். என் ஆசையை நீ புரிஞ்சுப்பேன்னு நினைக்கிறேன். உனக்கும் ரமணனுக்கும் இனிமேல் நிறைய குழந்தைகள் பிறக்கலாம். பிறக்கலாம் என்ன, பிறக்கும். ஆனா... நான் எனக்கு... அர்விந்த்தை விட்டால் வேறு யாருமே இல்லை நித்யா... பட்டுப்போய், பாலைவனமாகிவிட்ட என் வாழ்க்கைல அந்தக் குழந்தையால் கொஞ்சம் பசுமை படரும்னா அதுக்கு நீ உதவி செய்யக்கூடாதா நித்யா..? ப்ளீஸ்!"

அவன் பேச்சு நித்யாவின் மனத்தைத் தொட்டது. அவனது நிலைமையும் கெஞ்சலும் அவளுக்குப் புரிந்தது. ஆனாலும் இந்த விஷயத்தில் அவளால் அவனுக்கு உதவி செய்ய முடியாது. அர்விந்த்தைப் பிரிந்து ஒரு விநாடி நேரம் கூட இருக்க முடியாது. இதை அவன் புரிந்து கொள்ள வேண்டும். புரிய வைப்பது தன் கடமை.

கோபமும் ஆத்திரமும் அடங்கி, நிதானமும் தெளிவும் ஏற்பட்டு அவனை அமைதியாக ஏறிட்டுப் பார்த்தாள். தாழ்வான குரலில், ஆனால், உறுதியான தொனியில் பேசினாள்:

"நீங்க கெஞ்சின அதே மாதிரி திரும்ப நானும் உங்ககிட்ட கெஞ்சறேன். அர்விந்த் இல்லாமல் என்னால் ஒரு நிமிடம்கூட உயிர் வாழ முடியாதுங்கறதைப் புரிஞ்சுண்டு நீங்க என் எனக்காக விட்டுக் கொடுக்கக் கூடாது? ப்ளீஸ்!"

"ஸோ, கடைசியாக நீ என்னதான் சொல்றே..?"

"ஸாரின்னு சொல்றேன். இந்த விஷயத்துல உங்களுக்கு உதவ முடியாத நிலைமைல இருக்கேன்..."

அதைக் கேட்டு அவன் சிறிது நேரம் அமைதியாக இருந்து, பின்னர் அழுத்தமாகச் சொன்னான்:

"இதுதான் உன் முடிவுன்னா என் குழந்தையை எப்படி மீட்டுக்கறதுங்கறது எனக்கும் தெரியும். நிலைமையைப் புரிஞ்சுண்டு எனக்கு ஆதரவாக இருக்க நீ தயாரில்லாத போது, நான் மட்டும் ஏன் உனக்கு விட்டுக் கொடுக்கணும்...? கோர்ட்டுக்குப் போறதைத் தவிர எனக்கு



வேற வழியில்லை. ஸோ - அடுத்த தரம் நாம் மீண்டும் கோர்ட்டுல சந்திக்கலாம். வரேன். மிஸ்டர் ரமணன்கிட்ட சொல்லு..."

இரண்டாவது முறையாக நித்யா கோர்ட்டின் படிகளை மிதிக்க நேரிட்டது. இந்த முறையும் அவளைக் கூண்டில் நிற்க வைத்திருப்பவன் சித்தார்த்த கௌதம். ரமணன் தன்னால் இயன்ற உதவியாக ஒரு நல்ல வக்கீலை அமர்த்திக் கொடுத்தான். நிவாஸிடமிருந்து பணம் கடன் வாங்கிக் கொடுத்துவிட்டுச் சொன்னான்:

"நித்யா, ப்ளீஸ்... இதுக்கு மேல இந்த விஷயத்துல நான் செய்யக் கூடியது ஒண்ணுமில்லே. வேண்டுமானால் நீ போகிற போது உன்கூட கோர்ட்டுக்குத் துணைக்கு வரேன். அதைத் தவிர நான் என்ன செய்ய முடியும், சொல்லு..? உனக்காகக் கடவுள் கிட்ட வேண்டிக்கறேன். அர்விந்த் உன்னை விட்டுப் போகாமல் இருந்தால் மந்த்ராலயம் போய் 108 பிரதட்சிண நமஸ்காரம் பண்றேன். காளிகாம்பாளுக்கு அபிஷேகம் பண்றேன். இனி உனக்கு அம்பாள் அனுக்கிரகிக்கணுமே தவிர, மனுஷர்களால் ஒரு பயனும் இல்லை..."

அதை நித்யா உணர்ந்தே இருந்தாள். சித்தார்த்தின் செல்வாக்கிற்கும் பண பலத்திற்கும், முக்கியமாக அவனின் நிலைமை மீது ஏற்பட்டிருந்த அனுதாபமும் சேர்ந்து வழக்கு அவனுக்குச் சாதகமாகத்தான் முடியும் என்கிற விதத்தில் நடவடிக்கைகள் போவதை உணர்ந்திருந்தாள். ஆனாலும் தான் வைத்திருந்த தெய்வ நம்பிக்கை ஏதாவதோர் அற்புதத்தை நிகழ்த்தி, தன் பக்கம் வெற்றியைக் கொடுக்கும் என்று நினைத்தாள். தான் வழிபடுகிற துர்க்கை தன்னைக் கைவிட மாட்டாள் என்றும் நினைத்தாள்.

ஆனால், அவளின் அந்த நம்பிக்கையையும் எண்ணத்தையும் சிதற அடிக்கிற விதமாகக் கடைசியில் அர்விந்த், சித்தார்த்துடன் இருக்கவேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்ட போது, அதை ஜீரணிக்கிற சக்தியற்று அங்கேயே மயங்கி... கீழே சரிந்தாள்...

சித்தார்த்த கௌதம் தன் வழக்கறிஞரின் கையைப் பற்றி குலுக்கி நன்றி சொன்னபோது, உள்ளுக்குள் சங்கடப்பட்டுக் கொண்டிருந்தான். பார்வையாளர் பகுதியின் முதல்

வரிசையில் உட்கார்ந்திருந்த நித்யா மயங்கி விழுந்த காட்சியே திரும்பத் திரும்ப மனத்திற்குள் சுற்றி வந்தது. அது மட்டுமின்றி, இன்னமும் குழந்தையை விடாமல் அணைத்து, தூரத்தில் அவள் அழுது கொண்டிருப்பது நெஞ்சை என்னவோ செய்தது.

"அர்விந்த்! போகாதடா... அம்மாவை விட்டுட்டுப் போகாதடா..."

அதைவிடக் குழந்தை அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டு கதறினது கண்றாவியாக இருந்தது.

"மாட்டேன் மம்மி... நான் போக மாட்டேன் மம்மி... நீங்க அழாதீங்க மம்மி... நீங்க அழுதா எனக்கும் அழுகை வர்றது மம்மி..."

சித்தார்த் கீழ் உதட்டைக் கடித்துத் தன்னை அடக்கிக் கொண்டு அருகில்போனபோது, அர்விந்த் யாரோ அரக்கனை பார்த்த மாதிரி இன்னமும் நித்யாவிடம் ஒட்டிக் கொண்டான்.

"மாட்டேன் போ... நான் உன் கூட வர மாட்டேன்... எங்க மம்மிகிட்டதான் இருப்பேன்..."

ரமணன் அந்தக் காட்சியின் நெகிழ்ச்சியைக் காணச் சகிக்காதவனாகக் கண்ணோரங்களைக் கைக்குட்டையால் துடைத்துக்கொண்டு, நகர்ந்து ஸ்கூட்டர் அருகில் சென்று நின்று கொண்டான். அர்விந்த் அழுவதும், சித்தார்த் அவனின் கையைப் பற்றித் தன் அருகில் இழுத்துக் கொள்வதும், வேறு வழியின்றி நித்யா புடவைத் தலைப்பால் வாயைப் பொத்திக்கொண்டு தன் அருகில் ஓடி வருவதும்...

"நித்யா, ப்ளீஸ் ட்ரை டு கண்ட்ரோல் யுவர்ஸெல்ஃப்... எல்லோரும் பாக்கறா பாரு..."

நித்யா அதைப் பொருட்படுத்தாமல் வாய்விட்டுக் கதறினாள்...

"நீங்க சொன்னீங்களே... தெய்வம் உதவும்னு... தெய்வம் எப்படிங்க உதவும்? அது வெறும் கல்லுதானே... கல்லுக்கு எங்க மனசு இருக்கும்? இனி நான் எப்படி இருப்பேன்... ஐயோ...! இங்கேயே என் உயிர் போயிடக் கூடாதா? அர்விந்த் பின்னாலேயே போயிடக் கூடாதா...?"



அவளைத் தாண்டி, அர்விந்த்தைத் தூக்கிக் கொண்டு காரை அடைந்த சித்தார்த்தின் காதுகளில் அந்தப் பேச்சு விழ ஒரு விநாடி சலனப்பட்டான் அவன். குழந்தையைத் தன் பக்கத்தில் முன் சீட்டில் உட்கார வைத்து டிரைவிங் ஸீட்டில் உட்கார்ந்தவன், அவர்களின் ஸ்கூட்டர் கிளம்பும் வரை காத்திருந்தான். பின் காரைக் கிளப்பினபோது, அர்விந்திடமிருந்து ஓர் ஆழமான கேவல் எழுந்தது. அவன் மெல்லத் திரும்பிக் குழந்தையைச் சமாதானப் படுத்துகிற குரலில் கேட்டான்:

"அர்விந்த் கண்ணா, என்னடா வேணும்...?"

"மம்மி... மம்மீ..."

"அப்போ அப்பா வேணாமா...?"

"ம்ஹூம்... வேணாம்... போ..."

"கார், பொம்மை, புதுச் சட்டை..."

"எதுவும் வேணாம் போ..."

"அன்னிக்கு என்கூட எங்க வேணும்னா வரேன்னு சொன்னியேடா..."

"வரமாட்டேன் போ..."

"இப்ப என்கூட பெங்களூர் வரமாட்டியா...?"

"மாட்டேன் போ..."

வீட்டை அடைந்த நித்யா, சின்னதாய் இருந்த பூஜை அறையை நோக்கி ஓடினள். சுவாமிப் படங்களைக் கழற்றி வீசி எறிந்தாள்... கண்ணாடி உடைந்து சிதற, காலிங் பெல் ஓசை கேட்டது.

ரமணன் கதவைத் திறக்க - சித்தார்த் குழந்தையோடு நின்றிருந்தான். அமைதியாய், தரையில் சிதறிக் கிடந்த கண்ணாடித் துண்டுகளைத் தாண்டி பூஜை அறை வாசலுக்குப் போய் நித்யாவைக் கூப்பிட்டான்.

"இந்தா உன் குழந்தை... அர்விந்த் கண்ணா, இதோ உங்கம்மாகிட்டப் போடா..."

குழந்தையைக் கீழே இறக்கிவிட, தாவி நித்யா அவனை அணைத்துக் கொள்வதைப் பார்த்தபடி ஒரு விநாடி நின்றான். பின் மௌனமாகத் திரும்பி நடந்தவனைக் குழந்தையே கூப்பிட்டான்:

"அப்பா...! திரும்பி எப்ப வருவீங்க?"

சித்தார்த் நின்று திரும்பிப் பார்த்துப் புன்னகை செய்தான்: "எப்பவும் வர மாட்டேன்டா கண்ணா.. உன் பெயருக்கு ஒரு ரிஜிஸ்டர் கவர் அனுப்பறேன். உங்க அப்பா அம்மாவைக் கையெழுத்துப் போட்டு வாங்கிக்கச் சொல்லு. நீ மேஜராகிறவரை உன் சொத்துக்களுக்கு அவர்களே கார்டியனாக இருக்கட்டும். நன்னா படிச்சு பெரிய ஆளா வரணும். எங்கே, என்கிட்டே வந்து கடைசி தரமா அப்பாவுக்கு ஒரு முத்தம் தா பார்க்கலாம்."

நித்யா தயங்க, குழந்தை தயக்கமின்றி ஓடி வந்து அவனது கழுத்தைக் கட்டிக் கொண்டு இரண்டு கன்னங்களிலும் முத்தமிட, சித்தார்த் அவனை அள்ளி நெஞ்சோடு அணைத்து ஆசை தீர முகம்,முதுகு, மார்பு, கைகள், உள்ளங்கால் எல்லாவற்றிலும் முத்தமிட்டுக் கீழே இறக்கிவிட்டான்.

"எங்கே எனக்கு 'குட்பை' சொல்லு..."

குழந்தை அர்த்தம் புரியாமல் 'குட்பை' சொல்ல, அவன் நித்யாவையும் ரமணனையும் பார்த்து, "ஆல் தி பெஸ்ட் மிஸஸ் அண்ட் மிஸ்டர் ரமணன். போறதுக்கு முன்னால கடைசியா ஒண்ணு கேட்டுக்கறேன். தருவீங்களா...?"

இரண்டு பேரும் பதில் சொல்லாமல் நிற்க, சித்தார்த் சிரித்தான். "பயப்படாதீங்க. வேற ஒண்ணும் கேட்டுட மாட்டேன். நீங்க விசிறிப் போட்ட இந்த சுவாமி படங்களை நான் எடுத்துண்டு போகலாமா...? மனசு நிம்மதிக்கு எனக்கும் ஏதாவது வேணுமே...?" ரமணன் பதில் சொல்ல இயலாதவனாக அவன் கைகளை பற்றித் தடுமாற, அவன் தன் கைகளை விடுவித்துக் கொண்டு படங்களை எடுத்து மீதமுள்ள கண்ணாடித் துண்டுகளை அகற்றி...

"நான் போனதும் முதல்ல இந்தக் கண்ணாடித் துண்டுகளைப் பெருக்கி, வாரி குப்பைத் தொட்டியில் போட்டுடுங்க. உறுத்தலோ, குத்தலோ இனி இருக்காது. கண்ணா வரேண்டா.. வரேன் நித்யா.. வரேன் மிஸ்டர் ரமணன்..."

குழந்தையின் தோளில் கைகளை வளைத்தபடி நித்யா மௌனமாய் நிற்க, கீழே கார் கிளம்பும் ஓசை பெரிதாகக் கேட்டது.

# நிறங்கள்

## 1

ரயிலின் முதல் வகுப்புப் பெட்டியின் ஜன்னல் வழியாக வெளியில் பார்த்தாள் சரயு. பச்சைப் பசேலென்ற அந்த மலைப்பிரதேசத்தின் பசுமை கண்களை மட்டுமின்றி மனதையும் குளிர வைத்தது. சிலுசிலுவென்று வீசின காற்று நெஞ்சை வருடிக் கொண்டு போயிற்று. வானத்தின் தெளிவான நல்ல நீலமும்,பஞ்சு மூட்டைகளாக நகர்ந்த வெள்ளை மேகமும், மலைகளை ஒரே போர்வையாகப் போர்த்தி தங்களுக்குள் அடக்கம் செய்து கொண்டு விட்ட வெளிர் பச்சையும்...

அப்பாவுடன் போன லலித கலா அகாடமியின் அந்த ஓவியக் கண்காட்சியின் ஞாபகம் வந்தது சரயுவிற்கு.

அதில் பார்த்த ஒரு இயற்கைக் காட்சியும், கைதேர்ந்த ஓவியரின் தூரிகை எண்ணெய் வர்ணங்களைத் தொட்டு விளையாடியிருந்த ஜாலமும்.. அப்போது அந்த ஓவியத்தை விட்டுநகர மனமில்லாதவளாக அப்பாவின் கையை இறுகப் பற்றிக் கொண்டு நின்றுவிட்டாள் அவள்.

அவளது முகத்தின் பிரகாசத்தையும், கண்களின் ஜொலிப்பையும் கவனித்த தாஸ் உதட்டில் புன்முறுவல் ஒன்று ஓட தன் வழக்கமான நிதானக் குரலில் கேட்டார்:

"என்னம்மா சரயு...?"

"மை குட்நெஸ்! ஏம்ப்பா, இது வெறும் ஓவியமா, இல்லை நிஜமாகவே நாம் ஏதாவது ஒரு மலைப் பிரதேசத்திற்கு வந்துவிட்டோமா...?"

தாஸ் வாய் விட்டுச் சிரித்தார்.

மகளின் ரசனையில், புத்திசாலித்தனத்தில், அழகில், சாதுரியமான பேச்சில் எப்போதும் ரகசியமாக உச்சி குளிர்ந்து போய் விடுபவர் அவர்.

முக்கியமாக இந்தக் காலத்துப் பெண்களைப் போல் கண்மூடித்தனமான நாகரீகத்தில் மூழ்கிவிடாமல், தன்னிடமிருந்த அபரிமிதமான பணமோ செல்வாக்கோ தலைகனத்தை ஏற்படுத்தாமல், எம்.ஏ ஆங்கில இலக்கியம் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றும் நுனி நாக்கு ஆங்கிலத்தில் பேசாமல்...

தன் நண்பர்களின் வீடுகளில் உதாரணம் காட்டுகிற மாதிரி... 'இருந்தால் தாஸோட பெண் சரயு மாதிரி இருக்கணும்...'

என்ன பணிவு, நிதானம் அந்தப் பெண்கிட்டே!

கோடீஸ்வரனின் ஒரே பெண். அழகு, படிப்பு அத்தனையும் இருக்கு!

ஆனாலும் கொஞ்சம் கர்வம், திமிர் ஏதாவது உண்டா?

அந்தப் பணமும் அந்தஸ்தும் இருந்தால் இந்தக் காலத்துப் பசங்கள் என்ன ஆட்டம் ஆடறதுகள்! பாண்ட்டும் பனியனும், வெட்டின தலைமுடியும்...

'ஹாய் ஆன்ட்டி' என்று தோள் மீது தட்டி சிரிக்கிற சிரிப்பும்...!

சில சமயங்களில் இதுகளையெல்லாம் இழுத்துக் கொண்டு போய் சரயு கால்ல விழ வைக்கணும்னு தோணும்...!

ஒரு கல்யாணத்துக் கூட்டத்தில் காற்றோடு கலந்து தாஸின் காதுகளில் வந்து விழுந்த சொற்கள் இவை. அவர் அங்கே இருப்பது தெரியாமல் பேசப்பட்ட சொற்கள்.

கேட்டதும் சிலிர்த்துப் போனார் தாஸ்.



மெல்லத் திரும்பி தூர நின்று யாருக்கோ கைகூப்பி நமஸ்கரித்துக் கொண்டிருந்த சரயுவைப் பார்த்தார்.

அந்த உயரமும், அதற்கேற்ற பருமனும், தீர்மையான மூக்கும், தீட்சண்யமான பார்வையும், தெளிவான சிரிப்பும், அளந்து பேசும் பேச்சும்...

புடவையைத் தவிர வேறு எதுவும் அவள் அணிந்து அவர் பார்த்ததில்லை.

நீளப் பின்னின கூந்தலைத் தவிர வேறு வித பின்னல்களில் கண்டதில்லை.

காதில் சின்ன முத்துத்தோடும்; கழுத்தில் அதே சிறிய முத்துச் சரமும், கைகளில் ஒரே ஒரு முத்து வளையலும், கைக் கடிகாரமுமின்றி வேறு மாற்றிப் போட்டுக் கொண்டது கூடக் கிடையாது.

அத்தனை எளிமையான அலங்காரத்திலும் அவள் பளிச்சென்று கண்ணில் பட்டது அவருக்குப் பெருமையாகவே இருந்தது.

சரயுவிடம் குறை என்று சொல்வதானால் சற்று நிறம் குறைவு என்பதைத் தவிர வேறு எதையும் சொல்ல முடியாது என்றுநினைத்துக் கொண்டார்.

அதிலும் அவள் தன்னைக் கொண்டு வந்திருந்தால் நல்ல நிறமாக இருந்திருப்பாள்.

உருவம், உயரம், குணம் எல்லாவற்றிலும் அவரைக் கொண்டு பிறந்தவள் நிறத்திற்கு மட்டும் அம்மாவைக் கொண்டிருந்தாள்.

தன் மனைவியை அந்த ஒரு விஷயத்தில் மட்டும் அவள் நினைவு படுத்தினது அவருக்கு நிம்மதியைத் தந்தது.

மற்ற எதிலும் தன் அம்மாவை அவள் கொண்டு வராதது ஆறுதலை ஏற்படுத்திற்று.

சகுந்தலா மாதிரி இவளும் இருந்திருந்தால் தன் நிலைமை என்னவாகியிருக்கும் என்று யோசித்த போதே அவர் மனசுக்குள் நடுங்கிப் போனார்.

உயிருடன் இருந்தவரை சகுந்தலா அவரை ஒரு வினாடி நேரம் கூட நிம்மதியாக இருக்க விட்டதில்லை.

இத்தனைக்கும் தாஸை அவள் காதலித்து அப்பா, அம்மாவுடன் போராடி உண்ணாவிரதமிருந்து கல்யாணம் பண்ணிக் கொண்டவள்.

தாஸ் அவர்களது பத்திரிகை ஆபீஸில் எடுபிடி பையனாகச் சேர்ந்தவர்தான்.

பின் தன் திறமையாலும், சாதுரியமான பேச்சாலும், புத்திசாலித்தனத்தாலும் மெல்ல உயர்ந்து உதவி ஆசிரியர் பொறுப்பில் உட்கார்ந்த போது தான் ஒருநாள் எதேச்சையாக ஆபீசுக்கு வந்த சகுந்தலா அவரைப் பார்க்க நேர்ந்தது.

அவரது உயரமும், நிறமும், கவர்ச்சிகரமான முகமும் முதல் பார்வையிலேயே அவளை அடித்து நிறுத்த - அவரது நினைவிலேயே நின்று போனாள் அவள்.

பின்னர் அடிக்கடி அப்பாவைத் தேடி ஆபீஸிற்கு வரலானாள்.

தினமும் கல்லூரி முடிந்ததும் வீட்டிற்குப் போகாமல் நேராக பத்திரிகை ஆபீசுக்கு வந்தாள்.

அப்பாவின் அறையில் உட்கார்ந்து டிபன், காப்பி சாப்பிட்ட பின் தாஸைத் தேடி அவனது காபினுக்குள் நுழைவாள்.

அவன் மேஜையில் கிடக்கும் காகிதங்களை ஆராய்வாள். என்ன எழுதியிருக்கிறான் என்பதை படித்துப் பார்ப்பாள்.

அதெல்லாம் ஒன்றும் புரியாமற் போனாலும் அவனிடம் பேச அவளுக்கு அது ஒரு காரணமாயிற்று.

தாஸ் புத்திசாலி. வாழ்க்கையின் நெளிவு சுளிவுகள் தெரிந்தவர். நிறைய அடிபட்டவர்.

அதன் காரணமாகவே அவர் அவளுக்கு இடம் கொடுத்தார்.



அவள் மூலமாக ஏணிப் படிகளில் ஏறி மேலே போக முடியும் என்பதைப் புரிந்து கொண்டிருந்தார்.

மேலே போவது என்பது லட்சியமானதால் அவளின் நிறமும், தெற்றுப்பற்களும், சற்றே விரிந்த மூக்கும், அவருக்குப் பெரிதாகத் தோன்றவில்லை.

கல்யாணமாகி, அந்தஸ்தால் உயர்த்தப்பட்ட பின்பு அவளுடன் வெளியில் போக நேர்ந்த சந்தர்ப்பங்களில் தான் முதல் முறையாக சகுந்தலாவின் அவலட்சணம் கண்களில் பட்டு மனதை உறுத்தத் தொடங்கிற்று. மறைமுகமான மற்றவர்களின் பேச்சுகளால் அடிபடத் தொடங்கிற்று.

'தாஸ் இவ்வளவு லட்சணமாக இருக்காரே. இவர் போய் எப்படி இந்தம்மாவைக் கல்யாணம் பண்ணிக்கிட்டார்?'

'எல்லாம் பணம் பண்ற வேலைப்பா. இல்லாட்டி போனால் எப்போ அவர் இந்த நிலைமைக்கு வர்றது? எம்.டி. நாற்காலியில் உட்கார்றது- பிழைக்கத் தெரிஞ்ச மனுஷன்பா அவர்.'

அதேபோல் அடுத்து அவர் எம்.டி. நாற்காலியை ஆக்கிரமித்துக் கொண்டார்.

வெறும் வாரப்பத்திரிகையோடு இருந்ததை மாதப் பத்திரிகை ஒன்றும், தினசரி ஒன்றுமாக வெளியிடும்படி செய்தார்.

அவர் வேலையில் சேர்ந்த போது ஒரு லட்சம் பிரதிகள் விற்பனையான பத்திரிகை, அவர் எம்.டியாக பொறுப்பேற்ற பின்னர் படிப்படியாக ஏறி, ஐந்து லட்சம் பிரதிகள் விற்பனையாகத் தொடங்கின.

தமிழ் நாட்டின் மிகச் சிறந்த, அதிகம் விற்பனையாகும் பத்திரிகை என்ற பெயரைப் பெற்றது.

தொழிலில் ஓஹோ என்று பெயரெடுக்க ஆரம்பித்த பின் அவரால் குடும்ப விஷயங்களில் அக்கறை செலுத்த இயலாமற் போயிற்று.

வாரத்தில் இரண்டு நாட்கள் வீட்டிற்கு வருவது கூட சாத்தியமற்ற காரியமாயிற்று.

அப்படியே வீட்டிற்கு வந்தாலும் அவரால் சகுந்தலாவிடம் பழக இயலாமல் அவருக்கும், அவளுக்கு மிடையில் ஒரு பள்ளம் விழுந்து போயிற்று.

அதைத் தெரிந்துகொண்ட சகுந்தலா அவரிடம் சண்டை போட ஆரம்பித்தாள்.

அவருக்கு வேறு பெண்களின் தொடர்பு இருப்பதாக நினைத்து சந்தேகப்படத் தொடங்கினாள்.

அந்த சந்தேகமும், சண்டைகளும், அவளின் இயலாமையால் ஏற்பட்ட கத்தலும் அவரை இன்னமும் அவளை விட்டு விலகச் செய்தது. வாரத்திற்கு இரண்டு நாட்கள் வீட்டிற்கு வந்தவர் அதையும் நிறுத்தி மாதக் கணக்கில் வராமல் இருக்கப் பழகிக் கொண்டார்.

## 2

ஒரு நீண்ட இடைவெளிக்குப் பின்பு அவர் மீண்டும் வீட்டிற்கு வர ஆரம்பித்தது சரயு பிறந்த அன்றுதான்.

குழந்தை பிறந்த பத்தாவது நிமிடத்தில் வலிப்பும், அதன் காரணமாக ஏற்பட்ட ஜுரத்திலும், ஜன்னியிலும் சகுந்தலா நிரந்தரமாகக் கண்களை மூட-

தாஸின் வாழ்க்கையில் ஒரு பிடிப்பு ஏற்படத் தொடங்கிற்று. குழந்தைக்காக தாயற்ற குழந்தையாக உணராத வகையில் அவளை வளர்க்க வேண்டும் என்பதற்காகத் தன்னை வெகுவாக மாற்றிக் கொண்டார் அவர். கூடுமான வரை வீட்டிலேயே இருப்பது என்று முடிவு செய்துகொண்டார்.

நாளின் ஒருமணி நேரம் மட்டுமே ஆபீஸிற்குப் போகிற வழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்.

மற்ற நேரங்களில் சரயு, சரயு, சரயுதான்-

அதே போல் அவளுக்கும் அப்பா, அப்பா, அப்பா தான்.



நண்பனாய், நல்லாசிரியனாய்,சேவகனாய், ஊழியனாய், தாயாய், உடன் பிறந்தவர்களாய்-

அவரிடம் பகிர்ந்து கொள்ளாத எந்த சந்தோஷமும் அவளிடம் இல்லை. ஒரு நல்ல சங்கீதம் என்றால் ரசிக்கக்கூட அப்பா வேண்டும்.

ஒரு நல்ல ஓவியமானால் அப்பாவோடு சேர்ந்து பார்க்க வேண்டும்.

ஒரு நல்ல கதையை அப்பாவும் படிக்க வேண்டும்.

படித்து விட்டு இரண்டு பேரும் அதை அலச வேண்டும்.

அப்படி அலசாமல் இருக்க அவராலோ, அல்லது அவளாலோ முடியாது. எந்த ஒரு விஷயமானாலும் இரண்டு பேரும் ஒன்றாகவே அனுபவித்துப் பழக்கப்பட்ட காரணத்தினால்-

அப்போது ரயிலின் ஜன்னல் வழியாகத் தெரிந்த அந்த அற்புதமான இயற்கைக் காட்சியைக் காண அப்பா இல்லையே என்று ஆதங்கம் ஏற்பட்டது.

அவரும் கூட வந்திருந்தால் பிரயாணம் எவ்வளவு ரசிக்கத் தகுந்ததாக இருந்திருக்கும் என்பதை நினைத்துப் பார்த்தாள்.

அப்பாவுடன் பயணப்பட நேர்வதே ஒரு அனுபவம் தான்.

சந்தோஷமான அனுபவம்.

அதுவரை அவள் அவரை விட்டு தனியாகப் பயணப் பட்டதில்லை.

எம்.ஏ. பரீட்சை எழுதி முடித்த பின் அப்பாவோடு அலுவலகத்திற்குப் போய் பத்திரிகைத்துறையைப் பற்றியும், எழுதுவதைப் பற்றியும் விரிவாகக் கற்றுக் கொள்ளத் தொடங்கிய இந்த இரண்டு வருடங்களில் நிறைய இடங்களுக்குப் பயணப் பட்டிருக்கிறாள்.

நிறைய விழாக்களில் கலந்து கொண்டிருக்கிறாள்.

நிறையக் கூட்டங்களில் பேசியிருக்கிறாள்.

கட்டுரை எழுதுவதற்காக எத்தனையோ ஊர்களுக்குப் போயிருக்கிறாள்.

அத்தனை ஊர்களுக்கும் அப்பாவின் துணை அவளுக்குக்கூட வந்திருக்கிறது.

அவரில்லாமல் அவள் எங்கும் போனதில்லை.

ஆனால் இந்தப் பயணத்திற்கு மட்டும் அப்பாவால் வர முடியவில்லை. அவருக்கு டெல்லியில் ஒரு முக்கியமான வேலை இருந்தது.

சில மந்திரிகளை சந்திக்கிற தேவை ஏற்பட்டிருந்தது.

அதுவுமில்லாமல் ஒரு பெரிய அச்சுத்துறை சம்பந்தமான கண்காட்சி ஒன்றும் நடக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததால் அதைப் பார்க்க அவர் ஆசைப்பட்டார்.

புதிதாக ஏதாவது இயந்திரங்கள் வந்திருக்குமானால் வாங்கிப் போட முடிவு செய்திருந்தார்.

அதே சந்தர்ப்பத்தில்தான் பத்திரிகை மலருக்காக இந்த மலைப் பிரதேசத்தைப் பற்றியும் முழுதான கட்டுரை ஒன்றும் தயாரிக்க வேண்டி இருந்தது.

அந்த இதழ் மாவட்ட மலராக வெளி வருவதால் மாவட்டம் முழுதையும் சுற்றிப் பார்த்து, புகைப் படங்கள் எடுத்து, ஜனங்களுடன் பழகி, அவர்களின் பழக்க வழக்கங்களைத் தெரிந்து கொண்டு எழுதுவதற்காக அந்தந்த ஊர்களில் பயணப்பட நேர்ந்தது.

அந்த இதழைத் தான் தயாரிக்க வேண்டும் என்று முன்பாகவே முடிவு செய்திருந்த சரயு வழக்கம் போல் அப்பாவும் தன்னுடன் பயணப்படுவார் என்பதை எதிர்பார்த்தே இரண்டு முதல் வகுப்பு டிக்கெட்டுகளை ரிசர்வ் பண்ணியிருந்தாள்.

ஆனால் கடைசி நிமிடத்தில் தாஸினால் கிளம்ப முடியாமற் போயிற்று.



டெல்லிக்குப் பயணப்பட நேர்ந்தது.

மந்திரிகளைச் சந்திக்க வேண்டிய நேரமும், தேதியும் திடீரென்று மாற்றப்பட்டதால் அவரால் சரயுவுடன் கிளம்புவதென்பது சாத்தியப்படாததாக ஆயிற்று.

அப்பாவால் தன்னுடன் வர இயலாது என்பதைத் தெரிந்து கொண்ட சரயு தானும் போகாமல் நின்று மாவட்ட வேலைகளை கவனிக்க யாரையாவது அனுப்ப யோசித்தாள்.

துணை ஆசிரியரில் ஒருவரையும், புகைப்படக்காரரையும் அனுப்பி வைக்க முடிவு செய்து அப்பாவிடம் தெரிவித்த போது தாஸ் அதற்கு ஒப்புக் கொள்ள வில்லை.

"என்னம்மா சரயு இது. இப்படிச் சொல்கிறாய்..? இந்த மலர் வேலை முழுவதையும் நீ கவனிக்க வேண்டும் என்று நினைத்து விளம்பரப்படுத்தியாகி விட்டது. உன்னுடைய குறுநாவல் ஒன்றும், மனோகரின் தொடர் நாவல் ஒன்றும் வெளிவரப் போவதாக அறிவித் தாகி விட்டது. நீ இந்த இதழை எப்படித் தயாரிக்கிறாய் - ஒரு பத்திரிகாசிரியனுக்குத் தேவையான தகுதி, புத்திசாலித்தனம் எல்லாம் உனக்கு இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும் என்பதற்காக நான் வேறு காத்துக் கொண்டிருக்கிறேன். இப்போது போய் நான் போக மாட்டேன் என்று சொன்னால் எப்படியம்மா..?" என்று வருத்தத்துடனும், லேசான கோபத்துடனும் அவர் பேசியும் சரயு சமாதானப் படவில்லை.

"இல்லைப்பா. குறுநாவலை மட்டும் நான் இங்கிருந்தே எழுதித் தந்து விடுகிறேன். மற்ற வேலைகளை உதவி ஆசிரியர்கள் கவனித்துக் கொள்ளட்டும். நீங்கள் இல்லாமல் நான் மட்டும் தனியாக எந்த ஊருக்கும் போக விருப்பப்பட வில்லை அப்பா.."

அதைக் கேட்டதும் அத்தனை நேரமாக மிக லேசாக அவர் முகத்தைத் தொட்டுக் கொண்டு நின்ற கோபம் சற்று அழுத்தமாக உள்ளே இறங்கிற்று.

"நல்ல பெண்ணம்மா நீ. அந்த மாவட்டத்தை ஒட்டின
குறு நாவல் எழுதச் சொன்னால் அதை மிகச் சுலபமாக
சென்னையிலிருந்து அதுவும் உன் வீட்டு படுக்கை அறை
யின் ஜன்னல் ஓரமாக மேஜை அடியில் உட்கார்ந்தே எழுதி
விடலாம் என்றா நினைக்கிறாய்..? அதற்கு நான்
சம்மதிப்பேன் என்ற எண்ணம் உனக்குள் எப்படி
ஏற்பட்டது..? பாதிப்பும் அனுபவமும் அற்ற எழுத்து எப்படி
நிஜமான எழுத்தாக முடியும்..? இது வரை ஒரு தரமாவது நீ
அந்த ஊருக்குப் போயிருந்தால் கூடத் தேவலை. அதுவும்
போனதில்லை. அந்த ஊர் ஜனங்களின் பழக்க வழக்கங்கள்
தெரியாது. வட்டாரத் தமிழ் தெரியாது. மலைப்
பள்ளத்தாக்குகளில் மலைஜாதி மக்கள் இருக்கிறார்கள்.
அவர்களோடு பழகி எழுதியாக வேண்டும். இத்தனையை
யும் இங்கிருந்தே செய்வதாகச் சொல்கிறாயே... அதற்கு
உனக்கு எப்படி மனசு வந்தது. எழுத்தை மதிக்கிற நீயா
இப்படிச் சொல்வது..? என்னுடைய பெண்ணா இந்த மாதிப்
பேசுவது..? நீயா தனியாகப் போகப் பயப்படுவது..? இது
தான் நீ பாரதியை விழுந்து விழுந்து படிக்கிற லட்சணமா
அம்மா..? இப்படித்தான் அவர் பயப்படச் சொல்லியிருக்
கிறாரா..? உன்னைப் புதுமைப் பெண்ணாக நினைத்துக்
கொண்டிருக்கிற என்னை இப்படிப்பட்ட வார்த்தைகளைச்
சொல்லி ஏமாற்றலாமா அம்மா..?"

அப்பாவின் பேச்சு அவளை சங்கடப்படுத்தினாலும்
தனியாக முன்பின் தெரியாத ஒருமலைப் பிரதேசத்தில்
போய் இறங்க அவளுக்குத் தயக்கமாக இருந்தது.

தான் ஒரு பத்திரிகையாளி, கதாசிரியை என்பதைவிட
அந்த நேரத்தில் பெண் என்ற உணர்வே பெரியதாகத் தலை
தூக்கி நிற்க, பார்வையைத் தவழ கால் கட்டை விரலால்
தரையில் கோலம் போட்டபடி மெதுவான குரலில்
சொன்னாள்:

"என்கூட துணைக்கு யாரையாவது அனுப்புங்கப்பா
போறேன்."

"துணையா...? ஏம்மா ஒரு மேட்டர் தயாரிக்க
ஒருத்தரை அனுப்பினால் கூடவே துணைக்கு இன்னொருத்
தரையும் அனுப்பிக் கொண்டிருந்தால் பத்திரிகை என்ன



ஆவது? செலவுகளை யார் தாங்குவது? அப்படிப் பத்திரிகை
நடத்துவதானால் எத்தனை நாளைக்கு நடத்த முடியும்?
இத்தனை வருடங்கள், இவ்வளவு திறமையாக ஒரு
பத்திரிகையை மூன்றாக்கி ஒரு லட்சம் பிரதி விற்பனையை
இன்று ஐந்து லட்சமாக்கியிருக்க முடியுமா..? இத்தனை
பேர்களுக்கு வேலை கிடைக்கச் செய்திருக்குமா..? இன்று
முதலாளியின் மகள் என்கிற காரணத்தால் ஏற்பட்ட
சலுகையில் உனக்குத் துணையாக ஒருவரை அனுப்பி விட்டு
நாளைக்கு அதே சலுகையை மற்றவர்களுக்கு மறுக்க
முடியுமா..? அப்படி மறுத்தால் அது நியாயமாக இருக்க
முடியுமா...? இல்லாவிட்டால் ஒவ்வொருவருக்கும்
துணைக்கு இருக்கட்டுமென்று இன்னொரு நபரை அனுப்பு
வதுதான் சாத்தியப்படுமா..? நீயே சொல்லும்மா..? இதில்
எது உனக்கு சரி என்று படுகிறதோ அதைச் சொல். செய்ய
நான் காத்துக் கொண்டிருக்கிறேன்."

"என்னப்பா இது..?" என்று வருத்தம் படர்ந்த
முகத்துடன் அவரை நிமிர்ந்து பார்த்தாள் அவள்.

அந்தப் பார்வையில் சங்கடப்பட்டவராகக் குரல்
குழையச் சொன்னார் அவர்:

"பின் என்னம்மா... எல்லாருக்கும் முன் மாதிரியாக
இருக்க வேண்டும் என்று நினைக்கிற நீயே இப்படிப்
பேசினால் எப்படியம்மா..? அவ்வளவு கோழையாகவா
நான் உன்னை வளர்த்திருக்கிறேன். தனியாக ஓரிடத்திற்குப்
போக தைரியமற்றவளாகவா?"

சடாரென்று குரல் மாறப் பேசினாள் அவள்.

"இல்லைப்பா, நான் போறேன்..."

அதைக் கேட்டு அவரின் முகம் பிரகாசமாயிற்று.

"நிஜமாகவாம்மா சொல்றே..?"

"ஆமாம்ப்பா..."

"துணைக்கு யாரையும் அழைத்துக் கொள்ளாமலா
போகிறேன் என்கிறாயா..?"

"ஆமாம்."

"குட் தட்ஸ் ரியலி குட். நீ போம்மா நான் மனோகரை டெலிபோனில் கூப்பிட்டுச் சொல்கிறேன். உன்னை வந்து ஸ்டேஷனில் சந்தித்து அழைத்துப் போய்த் தங்க ஏற்பாடு செய்து தருகிறேன். கிட்டத்தட்ட ஒரு வாரத்திற்கு மேல் நீ தங்க நேரிடும் என்பதால் சாப்பாட்டிற்கும் எதாவது வழி செய்யச் சொல்கிறேன். அவர் அங்கே குடும்பத்துடன் தங்கியிருக்கிற பட்சத்தில் நீயும் அவர்களுடனேயே தங்க."

"இல்லைப்பா. நான் தனியாகவே தங்கிக்கறேன்."

"இப்பத்தான் உனக்கு மிஸ் தாஸ் என்கிற பட்டம் பொருந்தும். ஆமாம், என்னைக்குக் கிளம்பப் போகிறாய்..?"

"நாளன்னைக்குப்பா..."

"எந்த ரயில்..?"

"ராத்திரி மெயிலில்..."

"அது எப்போ ஊர்போய் சேர்றது தெரியுமா..?"

"மறுநாள் காலை மதுரை போறது. அங்கிருந்து பஸ்ஸோ, பிரைவேட் டாக்ஸியோ பிடித்து இந்த மலையடி வாரச் சிற்றூருக்குப் போகவேண்டும்..."

"தட்ஸ் ரைட். ஆமாம், இதற்கு முன்னால் நேரில் நீ அவரைப் பார்த்திருக்கியா..?"

"இல்லைப்பா..."

"என்னம்மா நீ..? இரண்டு மூன்று தரம் நம்ம ஆபீஸுக்கே வந்திருக்கார்..."

"அப்போதெல்லாம் நான் வெளியில் போயிருந்தேன்..."

"அப்படின்னா எப்படி அடையாளம் கண்டு பிடிக்கப் போறே..?"

"எம்ப்பா அவர் யூனிஃபார்மில்தானே இருப்பார்..?"

"யூனிஃபார்மா, என்னம்மா சொல்றே..?"



"ஆமாம்ப்பா. எழுத்தாளர்களுக்கே உரிய வேஷ்டி ஜிப்பா..."

"அது அந்தக் காலத்து எழுத்தாளர்களோட சரி. யூனிஃபார்ம் போடறதையெல்லாம் மாற்றி ஒரு எழுத்தாளனை சினிமா நடிகன் மாதிரி டிரஸ் பண்ணிக்கலாம் பண்ணிக்க முடியும்னு காமிச்சது முதல்ல ஜெயகாந்தன் தான்னு நினைக்கிறேன்."

"அப்படின்னா நான் எப்படிப்பா கண்டு பிடிக்கறது?"

"அதான் யோசிக்கிறேன். நம்ம ஆபீஸ்ல நாளைக்குக் காலையில மனோகரது போட்டோ எதாவது இருக்கான்னு பார்க்கச் சொல்றேன். அப்படி இல்லாமல் போனாலும் அந்தச் சின்ன மலையடிவார ஸ்டேஷனில் எத்தனை பேர் இருக்கப் போகிறார்கள்? அதிகபட்சம் பத்துப் பேர் இருந்தால் அதிகம். அதில் மனோகரைக் கண்டுபிடிக்கிறது உனக்குக் கஷ்டமாக இருக்காதுன்னு நினைக்கிறேன். ஆனாலும் அவருக்கு நீ முதல் வகுப்பில் தனியாக வரப் போவதைப் பற்றியும், ஸ்டேஷனுக்கு வந்து அழைத்துப் போக வேண்டுமென்றும் ஒரு தந்தி கொடுக்கிறேன். அவர் உன்னை மிகச் சுலபமாக அடையாளம் கண்டு பிடித்து விடுவார்..."

"சரிப்பா. நீங்கள் எப்போது டெல்லி கிளம்புகிறீர்கள், என்றைக்குத் திரும்பி வருவீர்கள்..?"

"நீ போன மறுநாள் கிளம்பி ஒருவாரத்தில் திரும்பி விடுவேன், திரும்பினதும் உனக்குத் தெரியப்படுத்துகிறேன். அதன் பின்பு வேலையெல்லாம் முடிந்திருந்தால் நீ கிளம்பி வா. என்ன?"

"சரிப்பா..!"

---

## 3

---

மறுநாள் அவரே ரயில்வே ஸ்டேஷன் வரை வந்து வழியனுப்பினார். "ஜாக்கிரதையாகப் போய் விட்டு வாம்மா!" என்றார்.

ரயிலின் கடைசிப் பெட்டி கண்ணைவிட்டு மறைகிற வரை பேசாமல் நின்றார்.

அப்பா வழியனுப்பிய அந்தக் காட்சி நினைவிற்கு வர அவரின் ஞாபகத்தில் அவர் உட்கார்ந்திருந்த போதே ரயில் ஸ்டேஷனில் நின்றது.

அவள் அவசரமாகத் தன் பெட்டியையும் படுக்கையையும், தூக்கிக் கொண்டு கீழே இறங்கினாள்.

கீழே இறங்கினதும் குளிர்க் காற்று பலமாக உடம்பைத் தாக்க அவளுக்கு லேசாக நடுங்கத் தொடங்கிற்று.

நடு முதுகு சில்லிட்டு பற்கள் கிட்ட ஆரம்பிக்க -

அதற்கு மேல் ஸ்வெட்டரோ, சால்வையோ இல்லாமல் நிற்க இயலாது என்ற நிலைமையில் புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்துக் கொண்டு பெட்டியைத் திறந்து ஸ்வெட்டரை எடுக்கலாம் என்று கையில் இருந்த கைப்பையைத் திறந்து சாவியை எடுத்தபோது-

வெள்ளை வெளேரென்று கிட்டத்தட்ட ஆறடி உயரமும், அதற்கேற்ற பருமனுமாக முன் நெற்றியில் விழுந்த முடிக்கற்றையை மிக அலட்சியமாக ஒதுக்கிவிட்டுக் கொண்டு வந்த அவன் அவளிடம் எதுவும் கேட்காமல், அந்த முகத்தை நிமிர்ந்து கூடப் பார்க்காமல் குனிந்து சூட்கேஸ் ஒருகையிலும், ஹோல்டாலை மற்றொரு கையிலும் தூக்கிக் கொண்டு பிளாட்பாரத்தை விட்டு சற்றே வேகமாக நடக்கத் தொடங்கினதும், அதுவரை ஆச்சரியத்தாலும் அதிர்ச்சியினாலும் தாக்கப்பட்டவளாக நின்று கொண்டிருந்த சரயுவிற்கு சுய உணர்வு வந்தது. 'யார் இந்த மரியாதை தெரியாத மடையன்' என்று நினைத்துக் கொண்டாள்.

ஒரு அறிமுகமோ, அல்லது கேள்வியோ இல்லாமற் விறுவிறுவென்று வந்து அனுமதி கூடக் கேட்காமல் சூட்கேஸையும் ஹோல்டாலையும் தூக்கிக் கொண்டு நடந்தால் கூடவே நானும் நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறானா..?



இது என்ன காட்டுமிராண்டித்தனம்..? அப்பா வரச் சொல்லியிருந்த மனோகர் எங்கே..? அவரால் வர இயலாத காரணத்தினால் தான் இவனை அனுப்பியிருக்கிறாரோ..? யார் இவன்..? யாராக இருந்தாலும் கொஞ்சமாவது மனிதத் தன்மை, இங்கிதம் தெரிய வேண்டாமோ..?

ஸ்வெட்டரை எடுக்க கைப்பையைத் திறந்து சாவியை எடுத்தவள் திரும்ப அதைப் பைக்குள் போட்டு, குளிரில் உடம்பு அதிகம் நடுங்க, உள்ளுக்குள் கோபமும் வெறுப்பும் எழ அவசரமாக வெகு தூரம் போய்விட்ட அவனைப் பிடிக்க சற்றே வேகமா நடை என்ற பெயரில் ஓட ஆரம்பித்தாள்.

அதற்குள் அவன் ஸ்டேஷனை விட்டு வெளியில் போய் சற்று தள்ளி மரத்தடியில் நிறுத்தியிருந்த மெட்டடார் வான் ஒன்றைத் திறந்து பின் பக்கம் அவளது சூட்கேஸையும் ஹோல்டாலையும் போட்டுப் பூட்டிவிட்டு அவள் ஏறுகிற வசதிக்காக பக்கவாட்டுக் கதவைத் திறந்து விட்டு அந்த வேனின் மீதே சரிந்து நின்று அவள் வருகிற திசைக்கு எதிர்த் திசையில் பார்த்தபடி நின்று காத்திருக்க ஆரம்பித்தான்.

அடுத்த சில விநாடிகளில் மூச்சிரைக்க ஓடி வந்து வாகனத்தின் பக்கத்தில் நின்ற சரயு அவனை மிகவும் வெறுப்பாக ஒருபார்வை பார்த்தாள்.

முகம் இறுகிற்று. மார்பு ஏறி இறங்கிற்று.

அத்தனை குளிரிலும் நெற்றியில் வியர்வை பொடித்திருந்தது.

ஆனால் குரல் மட்டும் தடுமாற்றமின்றி கணீரென்று வந்தது.

"எம்ப்பா, நீ யாரு? என்ன என்கிற எந்தவிதமான அறிமுகமுமில்லாமல் இப்படித்தான் பெட்டியையும், படுக்கையும் சொல்லாமல் கூட எடுத்து வர்றதா..? கொஞ்சம் கூட மரியாதை தெரியாதா உனக்கு..?"

அப்போதும் அவன் அவளைத் திரும்பிப் பார்க்காமல், அந்தப் பேச்சுக்கள் காதில் கூட விழாத பாவனையில் சலனமற்று நின்றிருந்தான்.

அந்த அலட்சியம் அவளுக்குள் நெருப்பை வாரி இறைத்தது

உள்ளுக்குள் தகதகத்தது வெளியில் வார்த்தைகளாகக் கொட்டத் தொடங்கின:

"நீ டிரைவரா, இல்லை அட்டெண்டரா..? நான் பேசற பாஷை புரியலே..? பாஷை புரியலேன்னா அதையாவது சொல்லித் தொலையேன்..."

அதற்கும் அவன் மௌனமாக இருக்க அவள் கோபம் அதிகமாகி அலட்சிய பாவத்தில் வெளிப்பட்டது.

"ஓஹோ நீ ஊமைன்றது இப்பத்தான் எனக்குப் புரியறது. பதில் சொல்ல முடியாமற் போனால் தலையையாவது ஆட்டித் தொலையேன். யார் உன்னை அனுப்பினது..? மனோகரா..? இது காதில் விழுறதா இல்லை காதும் செவிடா...?"

அதற்கு மட்டும் சடாரென்று திரும்பி 'ஆமாம். மனோகர்தான் அனுப்பினது' என்று தலையை மட்டும் ஆட்டினான். அப்போதுதான் அவன் முகத்தை சரியாகப் பார்த்தாள் சரயு.

அவனை எங்கோ பார்த்த ஞாபகம் வந்தது. எங்கே..?

அது மட்டும் ஞாபகத்திற்கு வராமல் அலைக்கழிக்க அவள் அந்த ஊரில் வந்திறங்கின முதல் அனுபவமே இவ்வளவு கசப்பானதாக இருக்கிறதே.. என்ற வெறுப்பும், கோபமும் சேர வண்டியில் ஏறி உட்கார்ந்து கதவை அறைந்து மூடினாள்

அதனால் சிறிதும் பாதிக்கப்படாதவனாக அவன் ஏறி டிரைவரின் ஆசனத்தில் அமர்ந்து வண்டியைக் கிளப்பின போது எதேச்சையாக ரிவர்ஸ் மிரரில் பார்த்தான். கோபத்தில் அவள் முகம் குங்குமமாகச் சிவந்திருப்பதை உணர்ந்து வண்டியைக் கிளப்பி அதே வேகத்தில் ஓட்டலானான்.

## 4

வளைந்து வளைந்து நிறைய ஹேர்பின் பெண்ட்ஸ்களாகக் கிடந்த அந்த மலைப்பாதையின் சாலையில் வேகத்தைச் சிறிதும் குறைக்காமல் ஒரு அசுரத்தனத்துடனும் அதே சமயம் சாமர்த்தியமாகவும் வண்டியை ஓட்டினான் அவன்.

மலைப்பாதையில் அவ்வளவு வேகமாகப் போய் பழக்கமற்ற காரணத்தினாலும், வண்டி இடப்பக்கம் திரும்பும்போது இடது பக்கமும், உடனே வலது பக்கம் வளைக்கிறபோது வலப் பக்கமும் சரிந்து சரிந்து தலையும், தோள்களும் வாகனத்தின் இருபக்கச் சுவர்களில் மோதுவதாலும் அவளுக்குத் தாங்கமுடியாத வலியும் களைப்பும் ஏற்பட்டது.

வயிற்றைப் புரட்டிக் கொண்டு வந்தது. தலை சுற்றுகிற உணர்வில் மெல்ல எழுந்து அவனைக் கூப்பிட்டாள் அவள்.

"டிரைவர் கொஞ்சம் வண்டியை நிறுத்துப்பா. என்னால் முடியலை. தலையைச் சுற்றுகிற மாதிரி இருக்கு..."

அதை அவன் காதில் போட்டுக் கொண்டதாகத் தெரியவுமில்லை. வண்டி நிற்கவுமில்லை.

'கடவுளே..!' என்று மனதிற்குள் முனகிக் கொண்டாள் சரயு. நல்ல முரடனிடம் மாட்டிக் கொண்டோம்..! யார் இவன்...? பார்வைக்குக் கண்ணியமானவனாகத்தானே தெரிகிறான்.

எதற்காக இப்படி நடந்து கொள்கிறான். நாம் இவனுக்கு என்ன தப்பு பண்ணினோம்..?

ஒரு வேளை அந்த மனோகரின் மீது ஏற்பட்ட கோபத்தை அவனின் விருந்தாளியாக வந்திருக்கிற என் மீது காட்டுகிறானோ..?

எதற்காக என் மீது காட்டவேண்டும்..?

தனியாக வந்திருக்கிற ஒரு பெண்ணிடம் இப்படியா நடந்து கொள்வது..?

வீட்டிற்குப் போனதும் முதலில் அந்த மனோகரிடம் இவன் நடத்தையைப் பற்றிச் சொல்லி இவனை வேலையை விட்டு அனுப்பச் செய்ய வேண்டும்.

என்ன அலட்சியம்! எத்தனை அகம்பாவம்! எத்தனை திமிர்! அது அவ்வளவையும் தன் மீதா காட்ட வேண்டும்..? காரணமற்று ஏன் இவ்வளவு கடுமையாக நடந்து கொள்ள வேண்டும்?

தனியாக வராமல், கூட யாரையாவது அழைத்துக் கொண்டு வந்திருக்கக் கூடாதா..?

அந்த எண்ணம் வந்ததும் அவளின் கோபம் முழுதும் அப்பாவின் மீது திரும்பிற்று.

அவர்தான் அவளைத் தனியாக அனுப்பினார்.

துணைக்கு யாரையாவது அனுப்பச் சொல்லிக் கேட்ட போது சிரித்தவர்.

முக்கியமாக அந்த மனோகரின் மீது அபரிமிதமான நம்பிக்கையும், மதிப்பும், மரியாதையும் வைத்திருப்பவர்.

அவை அத்தனையும் அவனின் எழுத்தின் மீது ஏற்பட்ட காதலால் விளைந்தவை.

வரிக்கு வரி வார்த்தைக்கு வார்த்தை அனுபவித்துப் படிக்க முடிந்த எழுத்து அது.

மனதைத் தொடுவதோடு மட்டுமின்றி சிந்திக்கவும் வைக்கிற எழுத்து.

இதுவரை அவர்களின் பத்திரிகையிலேயே அவன் கிட்டத் தட்ட பத்து நாவல்கள் எழுதி இருக்கிறான்.

பத்தும் பேசப்பட்ட நாவல்கள். பரபரப்பை ஏற்படுத்திய நாவல்கள். பைபையாகக் கடிதங்களைக் குவிக்க உதவின நாவல்கள்.



வியாபார ரீதியாகவும் அவன் எழுத்து முதலில் நின்றது.

அவனின் தொடர்கதை ஆரம்பித்தால் கிட்டத்தட்ட முப்பது, நாற்பதாயிரம் பிரதிகள் அதிகம் விற்பனை யாவதும், தொடர்கதை முடிந்த மறுவாரமே சடாரென்று குறைந்து போவதும் அனுபவ ரீதியில் தாஸ் அறிந்த ஒன்று.

அதனால் மூன்று மாத இடைவெளிக்குப் பின்னர் உடனடியாக அவனை நாவல் எழுதச் சொல்லி கட்டளையிட்டு விடுவார் தாஸ். அவனும் அவரை மறுக்க இயலாதவனாக ஒப்புக் கொள்வான்.

காரணம் - ஆரம்பக் காலத்தில் அவனது பேனாவின் வலிமையையும் எண்ண ஓட்டங்களையும் புரிந்து கொண்டு அவனுக்கு ஆதரவளித்து, மறுக்காமல் ஒவ்வொரு சிறு கதையையும் பிரசுரித்து உற்சாகப் படுத்தி ஊக்கமளித்தவர் தாஸ்தான்.

முதல் முதலாக அவனை தொடர்கதை எழுதச் செய்தவரும் அவர்தான்.

இன்று அவன் தமிழ் வாசகர்களிடையே இவ்வளவு பிரபலமாக இருக்கிறான் என்றால் அதற்குக் காரணமும் அவர்தான்.

அதனால் தாஸ் எப்போது எதை எழுதித் தரச் சொன்னாலும் அவன் மறுத்தது கிடையாது.

எத்தனை வேலைகள் இருந்தாலும், எவ்வளவு பிரச்சனைகளுக்கிடையிலும் அவன் அவருக்கு எழுதிக் கொடுத்திருக்கிறான்.

"அப்பா... இத்தனை சின்ன வயசிலே அபாரமான ஒரு திறமைம்மா இந்த மனோகருக்கு. உடம்பெல்லாம் மூளையாக இருக்கும் போல இருக்கு..! எப்படி எழுதறார் பாரு! வார்த்தைகள் இவரைத் தேடி ஓடி வரும்போல இருக்கு!"

அடிக்கடி அப்பா அவளிடம் சொல்லி சந்தோஷப் பட்டுப்போவார். அவளும் அந்த சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்வாள்.

"எம்ப்பா, இத்தனை பேர், புகழ் திறமை எல்லாம் இருந்தும் அவர் பத்திரிகையில் தன் புகைப்படம் பிரசுரமாகக் கூடாதுன்னு பிடிவாதமாக இருக்கார். பார்க்க சகிக்காதா, இல்லாவிட்டால் ஏதாவது வியாதியாப்பா...?"

அதைக் கேட்டு தாஸ் லேசான புன்னகையோடு சொல்வார்:

"ச்சீசீ! நீ அவரைப் பார்க்கனும். கண்ணியமும், கம்பீரமும் பொருந்தின முகம். முகம் மட்டுமில்லை. மனுஷரும் அப்படித்தான். அதனால்தான் உன்னை இப்போ தைரியமாக அவரை நம்பி அனுப்பி வைக்கிறேன். உனக்கு என்ன உதவி தேவையோ தைரியமாக அவரைக் கேட்கலாம். தாராளமாகச் செய்வாரம்மா..."

ஸ்டேஷனுக்கு வந்த பின் அப்பா சொன்ன வார்த்தைகள் அவை.

அது நினைவிற்கு வந்ததும் அவளுக்கு உடனே அப்பாவிடம் பேச வேண்டும் போல் இருந்தது.

வரவேற்கத்தான் ஸ்டேஷனுக்கு வராததுடன், இப்படிப்பட்ட ஒரு முரட்டு இளைஞனிடம் வண்டியைக் கொடுத்தனுப்பியிருக்கிற மனோகரின் கண்ணியத்தைச் சொல்ல வேண்டும்.

அதைக் கேட்டு அப்பாவின் முகம் போகிற போக்கைப் பார்க்க வேண்டும்...

உடனே அவளுக்கு 'அவர் என்ன செய்வார்...?' என்று தோன்றியது. இவன் இப்படி முரட்டுத்தனமாக நடந்து கொள்ளக்கூடும் என்பது மனோகருக்குத் தெரியாமல் இருந்திருக்கலாம்.

தன்னை வரவேற்க வர இயலாமல் அவசர வேலை ஏதாவது அவருக்கு வந்திருக்கலாம்.

அல்லது அவர் ஊரிலேயே இல்லாமற் கூடப்போக நேர்ந்திருக்கலாம்.

இப்படியெல்லாம் நிகழ்வது சகஜம் தானே. இதற்குப் போய் கோபமோ, ஆத்திரமோ படுவதில் அர்த்தமில்லை



இந்த ஊரில் தன் முதல் நாள் அனுபவம் இப்படித் தான் இருக்கவேண்டும் என்று விதித்திருக்கிற பட்சத்தில் அதை யார் தடுக்கமுடியும்...?

அதனால் யாரையும் குறை சொல்லி ஒரு பயனுமில்லை.

இப்போது செய்ய வேண்டியதெல்லாம் இந்த முரடனைச் சமாளித்து வண்டியை மெதுவாக ஓட்டச் செய்ய வேண்டியது தான்.

ஆமாம், யார் இவன்...? இவனை எங்கோ பார்த்திருக் கிறோமே எங்கே...?

அந்த யோசனையில் ஸீட்டில் சற்று நிமிர்ந்து உட் கார்ந்தவள் உரத்த குரலில் அவனிடம் பேச ஆரம்பித்தாள்.

"அப்பா, உனக்குப் புண்ணியமாகப் போறது. வண்டியைக் கொஞ்சம் மெதுவாக ஓட்டுப்பா..."

அதிலும் வண்டி தன் வேகத்தை குறைத்துக் கொள்ளா ததோடு சரேலென்று ஊசி வளைவாக இருந்த ஒரு திருப்பத்தில் திரும்பினபோது....

அதற்கு மேல் தாங்க இயலாதவளாக சரயு எழுந்து ஜன்னல் கம்பிகளுக்கிடையில் முகத்தைப் பதித்து வயிற்றைப் புரட்டி தொண்டையில் அடைத்ததை வெளியில் கொட்ட ஆரம்பித்தாள்.

அந்த சத்தத்தைக் கேட்டதும் தான் அவன் வண்டியை சட்டென்று நிறுத்தினான். மெதுவாகத் திரும்பி அவளைப் பார்த்தான். அவள் வயிற்றைக் காலி செய்து முடிக்கிறவரை காத்திருந்து பின் சொன்னான்:

"சுகமாக டொயட்டோவிலும், பென்ஸிலும் பிரயாணம் பண்ணினவங்களுக்கு எங்கே பசி, பட்டினியில் வாடறவங்களுடைய சிரமம் தெரியப் போறது...?"

கிண்டலும், குத்தலுமாகச் சொல்லி விட்டு தன் காலடியில் கிடந்த தண்ணீர் பாட்டிலை எடுத்து அவளிடம் நீட்டினான்.

ஆனால் அவள் அதை வாங்கிக்கொள்ள வில்லை. கண்களில் கண்ணீர் முட்டிக் கொண்டு நிற்க அவனை அப்படியே ஏறிட்டுப் பார்த்துக் கேட்டாள்.

"நான் உனக்கு என்ன தப்பு பண்ணினேன். எதற்காக என்னை இப்படிக் கஷ்டப்படுத்துகிறாய்..? உனக்கு என்னை அழைத்துக் கொண்டு போவது சிரமமாக இருந்தால் இப்படியே கீழே இறக்கிவிட்டு விடு. நான் நடந்து வருகிறேன்..."

அதற்கு அவன் பதில் எதுவும் சொல்லவில்லை.

ஒரு வினாடி அவள் முகத்தையே பார்த்தான்.

பின்னர் என்ன தோன்றியதோ என்னவோ, தண்ணீர் பாட்டிலைத் திறந்து மீண்டும் அவளுக்கு எதிராக நீட்டி,

"கொஞ்சம் தண்ணீர் குடியுங்கள். சரியாகப் போய்விடும்." என்று முதல் முறையாகச் சற்று மென்மையான குரலில் சொன்னதும் அவள் வேண்டாம் என்று தலையசைத்தாள்.

"எனக்கு எதுவும் வேண்டாம். கொஞ்சம் சீக்கிரமாக நான் எங்கே தங்கணுமோ அந்த இடத்திற்கு அழைத்துச் கொண்டுபோனால் போதும்."

சொல்லி விட்டு அவள் ஸீட்டில் படுத்து கண்களை மூடிக் கொள்ள அவன் வண்டியைக் கிளப்பி வேகத்தைக் குறைத்தான்.

அரைமணி நேரம் பயணப்பட்ட பின் டீக்கடை மாதிரி தெரிந்த ஒரு இடத்தில் வண்டியை நிறுத்தி "செல்லப்பா..." என்று குரல் கொடுத்தபடி கீழே இறங்கினான்.

பாதித் தூக்கமும் விழிப்புமாக இருந்த சரயு அவனது குரல் கேட்டு, கண் விழித்து எழுந்து ஸீட்டில் உட்கார்ந்து பார்த்த போது டீக்கடையிலிருந்து அவன் அவளுக்காகக் கண்ணாடி டம்ளரில் ஆவி பறக்க 'டீ' வாங்கிக் கொண்டு வந்தான்.



"இந்தாருங்கள், டீ சூடாக இருக்கிறது. குடியுங்கள். சற்று தெம்பாக இருக்கும்."

இந்த முறை அவள் மறுக்கவில்லை. அந்த டீ அப்போதைய நிலைமைக்குத் தேவையாக இருக்கவே சட்டென்று வாங்கிக் குடித்து முடித்தாள்.

காலி டம்ளரை வாங்கிக்கொண்டு டீக் கடைக்குள் போன அவன் அங்கிருந்த ஒருவனிடம் ஏதோ சொல்லி விட்டு நகர அந்தப் புதிய மனிதன் மிக பவ்யமாக வந்து வண்டியில் ஏறி டிரைவர் ஸீட்டில் உட்கார்ந்து அவளைப் பணிவாகத் திரும்பி பார்த்து-

"அம்மா போகலாமாம்மா..?" என்று கேட்டான்.

அவள் உடனே பதில் சொல்லாமல் ஒரு வினாடி தயங்கி பின் கேட்டாள்.

"ஏம்ப்பா, அவர் வரலே..?"

"இல்லேம்மா. மனோகர் சார் ராத்திரி முழுதும் தூங்காமல் எழுதிக்கிட்டிருந்தார். காலையிலிருந்து ஆபீஸ் வேலை விடலை. அப்படியே உங்களை அழைச்சுக்கிட்டு வர வந்துட்டார். இப்போ முடியலை.

'நான் கொஞ்ச நேரம் தூங்கறேன் செல்லப்பா. அம்மாவைக் கொண்டு போய் என் வீட்டுல இறக்கி விட்டுட்டு. அவங்க தேவைகளைக் கொஞ்சம் கவனி. நான் இதோ வந்துடறேன்'னு சொல்லி என்னை அனுப்பினார்... கிளம்பலாமுங்களா, இல்லை கொஞ்சம் போகட்டுமா..?"

அவன்தான் மனோகரா! அதிர்ந்து போய் உட்கார்ந்திருந்த சரயு அந்த அதிர்ச்சி நீங்காமலே மெதுவாகச் சொன்னாள்.

"இல்லேப்பா... கிளம்பலாம்..."

# 5

வண்டி வந்து மனோகரின் வீட்டு வாசலில் நின்ற பின்பும் கூட அவளுக்கு அதிர்ச்சி அடங்கவில்லை.

அவனை ஒரு டிரைவராகவோ அல்லது ஆபீஸ் அட்டெண்டராகவோதான் நினைத்தாளே தவிர அவன் மனோகராக, சக்தி வாய்ந்த ஒரு எழுத்தாளனாக இருக்கக் கூடும் என்று நினைத்துக் கூடப் பார்க்கவில்லை.

தன்னை அறிமுகப் படுத்திக் கொள்ளாமல் பெட்டியையும், ஹோல்டாலையும் தூக்கின வேகம் வண்டியை ஓட்டின முரட்டுத்தனம், இவள் கெஞ்சக் கெஞ்ச வேகத்தைச் சிறிதும் குறைக்காத அலட்சியம், பேச்சில் தெரிந்த திமிர்...

இதுவா மனோகர்! அப்பாவை அவ்வளவு தூரம் கவர்ந்த எழுத்தாளன்! இருக்காது. இருக்க முடியாது என்று தோன்றியது.

ஒரு வேளை இந்த செல்லப்பா வாய் தவறி எதையாவது சொல்லி விட்டானோ...?

அல்லது இரண்டு பேரும் சேர்ந்து தன்னை முட்டாளாக்கப் பார்க்கிறார்களோ...?

மலைச்சரிவின் ஒரு ஓரத்தில் மிகத் தனியாகச் சின்னதாய், அழகாய் நின்ற அந்த ஓட்டு வீட்டின் வாசலில் இறங்கிக் கொண்ட சரயு, மீண்டும் தன் சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ளும் பொருட்டுக் கேட்டாள்:

"ஏன் செல்லப்பா, உனக்கு முன்னால் வண்டி ஓட்டிக்கிட்டு வந்தாரே, அவர் பெயர் என்ன சொன்னாய்...?"

"மனோகர் சாரும்மா. எங்க பெரிய இன்ஜினீயரு..."

"அப்படியா...? இன்ஜினீயர் என்கிறாய், ராத்திரியெல்லாம் கண் முழிச்சு கதை எழுதினார் என்கிறாய்... எனக்கு ஒன்றுமே புரியலையேப்பா..."



"அதுவாம்மா காலை முழுதும் அவரு டாம் கட்டுகிற இன்ஜினியரு. சாயந்திரமானால் கதை எழுதற எழுத்தாளரு. அவரு ரொம்பப் பெரிய எழுத்தாளரும்மா. எல்லாப் பத்திரிகைகளிலேயும் கதை எழுதியிருக்காராம். நம்ம 'சுடர்'ல இப்பக் கூட அவருடைய கதை வரப் போவுதாம்மா..."

"அப்படியா..." என்று ஒரு வினாடி யோசித்தபடி நின்ற சரயு பின் உதட்டில் குறும்புச் சிரிப்பு ஒன்று ஓட ஒன்றும் தெரியாத மாதிரி கேட்டாள்,

"ஆமாம், அது என்னப்பா நம்ம சுடர்னு சொன்னே...? அப்படின்னு ஒரு பத்திரிகையா...?"

"என்னம்மா நீங்க, இப்படிக் கேட்கறீங்க...? உங்களைப் பாத்தால் தமிழ் ஜனம் மாதிரித் தெரியுது. சுடர் தெரியாதுன்னு சொல்றீங்களே... தமிழ்நாட்டுல பெரிய பத்திரிகை அதாம்மா... நல்ல பத்திரிகை. வீட்டுக்கு தைரியமாக வாங்கிட்டுப் போகலாம். கன்னாபின்னான்னு படங்களோ கதைங்களோ வராதும்மா..."

சட்டைக்கு காலர் இருந்தால் அவன் உயர்த்திவிட்டுக் கொண்டிருப்பான். ஹாட்ஸ் ஆஃப் டு அப்பா என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டே வீட்டுப் படிகளில் ஏறின போது, பின்னாலிருந்து அவசரமாக ஓடி வந்த செல்லப்பா பூட்டைத் திறந்து, வாசல் கதவைத் திறந்து மிக பவ்யமாக உள்ள வாங்கம்மா என்று சொல்லி மீண்டும் வண்டிக்கு ஓடி அவளுடைய சூட்கேசையும் ஹோல்டாலையும் கொண்டு வந்து வைத்தான்.

அதற்குள் அந்த முன் அறையின் அலங்கோலத்தைக் கவனித்தாள் அவள்.

பெருக்கி நாள் கணக்கில் ஆகியிருக்கும் என்று தோன்றியது.

துணிகளும், புத்தகங்களும் கட்டிலின் மீதும், தரையிலும், மேஜையிலும் இறைந்து கிடந்தன. எப்போதோ சாப்பிட்டு வைத்திருந்த டீ டம்ளர்கள் காய்ந்து கழுவப் படாமல் அப்படியே இருந்தன.

தலையணையிலும் பெட்சீட்டிலும் சொல்ல முடியாத அழுக்குப் படிந்து கிடந்தது.

அவள் அறையை கவனிப்பதை உணர்ந்து செல்லப்பா அவசரமாகத் தன்னால் முடிந்தவரை சுத்தப்படுத்த முயன்றான்.

அவளும் அவனுக்கு உதவி செய்தவளாகக் கேட்டாள்,

"ஏன் செல்லப்பா, உங்க இன்ஜினியரின் வீடு இப்படிக்கிடக்கு. அவருடைய சம்சாரம் ஊர்ல இல்லையா..?"

"சம்சாரமா...? அவருக்கு இன்னும் கல்யாணமே ஆகலீங்களே..."

"அப்படியா..! பார்க்க ஐம்பது வயசான மாதிரித் தெரியறாரேன்னு கேட்டேன்..." வேண்டுமென்றே செல்லப்பாவின் வாயைக் கிளறினாள் அவள்.

"ஐய்யோ.. சின்னப் பிள்ளைம்மா அவரு. இன்னிக் கெல்லாம் இருந்தால் முப்பது வயசுதான் இருக்கும். அவரைப் போய் அம்பது வயசுன்னு சொல்றீங்களே...?" என்று பதறினான் அவன். அவனுடைய பதட்டத்தைப் பார்க்க அவளுக்கு வேடிக்கையாக இருந்தது.

"ஏன் செல்லப்பா. அவருக்கு அம்மா, அப்பா யாரும் கூடக் கிடையாதா..?"

"கிடையாதுங்கம்மா. இரண்டு பேரும் அவருக்குப் பத்து வயசாக இருந்த போதே செத்துப்போய் விட்டதாகச் சொல்லுவாரு.. தூரத்து அத்தை ஒருத்தங்கதான் இவரை எடுத்து வளர்த்தாங்களாம். அந்தம்மா போயும் இரண்டு வருஷமாகப் போவுதுங்க..."

"அப்படின்னா அவர் இங்கே தனியாகத்தான் இருக்கிறாரா...?"

"துணைக்குத்தான் இப்போ அம்மா வந்திருக்கீங்களே..."

அவன் அதை மிகச் சாதாரணமாகத்தான் சொன்னான். ஆனாலும் அவளுக்குள் சிலிர்ப்பாக ஒன்று ஓடிற்று.



மனோகரின் உருவம் மனதிற்குள் வந்து போயிற்று. ஆஜானுபாகுவாய் ஆறடி உயரத்தில், நல்ல நிறமும், தீர்க்கமான கண்களும், கூர்மையான மூக்கும், அவனது குணத்தைப் போலவே முரட்டுத்தனமாக முன் நெற்றியில் வந்து விழுகிற கற்றை முடியும்..

ஓ! அவனையா...? அந்த நாகரிகமற்ற காட்டு மிராண்டியையா...? வண்டியை மெதுவாக ஓட்டச் சொன்ன போது என்ன கேட்டான்..

'சுகமாக பென்ஸிலும், டொயட்டோவிலும் பிரயாணம் பண்றவங்களுக்கு எங்கிருந்து ஏழையின் பசியும், பட்டினியும் புரியப்போகிறது...?'

யார் இந்த மனோகர்...? காரணமே இல்லாமல் தன்னை ஏன் அவன் வெறுக்க வேண்டும்...?

எதற்காகத் தன்னிடம் இவ்வளவு முரட்டுத்தனமாக நடந்து கொள்ள வேண்டும்...?

தான் யார் என்பது தெரியுமா அவனுக்கு...?

தெரிந்துதான் இப்படிச் செய்கிறானா. அல்லது தெரியாமலா? எப்படித் தெரியாமற் போகும்...?

அப்பாதான் தந்தி கொடுத்திருக்கிறாரே.. அதனால் தான் யாருடைய பெண் என்பது தெரிந்துதான் இப்படி நடந்து கொண்டிருக்கிறான்.

ஆனால் அதற்கான காரணம் என்ன என்பதுதான் தெரியவில்லை....

அவன் ஒரு கம்யூனிஸ்டா...? தீவிரவாதியா...?

பணக்கார வர்க்கத்தை வெறுப்பவனா...?

அப்படியெல்லாம் இருந்தால் அப்பாவையும் அவன் வெறுத்திருக்க வேண்டுமே... அவனைப் பற்றி அப்பா சொன்னதைக் கேட்டால் அந்த மாதிரித் தெரியவில்லையே..

இவை எல்லாவற்றையும் விட மிக முக்கியமான விஷயம் இவனை நாம் எங்கோ இதற்கு முன்பே பார்த்திருக்கிறோம்.. அது எங்கே...?

அவள் தன்னால் இயன்ற வரை ஞாபகத்தில் அவன் நினைவிற்காகத் துழாவினாள். ஆனால் பிடிபடவில்லை எங்கே எப்போது யாருடன் பார்த்தோம் என்பது நினைவிற்கு வரவே இல்லை. சலித்துக் களைத்துப் போய் அவள் நாற்காலியில் சரிந்ததும் செல்லப்பா சொன்னான்.

"நீங்க கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்குங்கம்மா. நான் போய் உங்களுக்கு சாப்பிட ஏதாவது வாங்கிட்டு வரேன்..."

"பக்கத்தில் ஓட்டல் எதுவும் இருக்கிறதாகத் தெரியலையே செல்லப்பா...?" என்று அவள் தன் சந்தேகத்தை வெளியிட்டதும்,

"இந்த மலைக் காட்டுல ஏதும்மா ஓட்டல்.. நாலைந்து மைல் கீழே இறங்கிப் போனால் டீக்கடை மாதிரி ஒன்னு இருக்கு. அங்கே தான் நாங்கள்ளாம் சாப்பிடறது.

இட்லி, தோசைன்னு பலகாரம் மட்டும் கிடைக்கும்.

அங்கிருந்துதான் இவருக்கு ரெண்டு வேளையும் ஏதாவது வாங்கிட்டு வருவேன்..

இப்போ உங்களுக்கும் ஏதாவது வாங்கிட்டு வரட்டுமா...?"

அவள் அதற்கு உடனே பதில் சொல்லவில்லை. ஒரு வினாடி பேசாமல் இருந்து பின் கேட்டாள்.

"ஏன் செல்லப்பா, அந்தக் கடையில் வெறும் பலகாரம் மட்டும் தான் கிடைக்கும்னு சொன்னே. ரெண்டு வேளையும் அவருக்கு அப்படின்னால் பலகாரம் தான் வாங்கிட்டு வருவியா, சாப்பாடு கிடையாதா...?"

"சாப்பாடெல்லாம் அவருக்கு வேணாம்மா. வெறும் டீத்தண்ணியைக் குடிச்சுட்டு ஜீவிக்கிற ஜென்மம்மா. சில நாள் வாங்கிட்டு வந்து வைக்கிற பலகாரப் பொட்டலம் மறுநாள் காலையில் நான் வந்து பார்க்கிற போது அப்படியே மேஜை மீது கிடக்கும்.. அதையே அவரு சாப்பிட மாட்டாரு.. அவரை எதிர் பார்த்து நீங்க இருந்தீங்கன்னா முழுப்பட்டினி கிடக்க வேண்டியது தான். இப்போ என்ன வேணும்னு சொல்லுங்க. வாங்கிட்டு வாரேன்..."



"வெறும் காப்பி போதும்.."

"என்னம்மா நீங்க, நானு இட்லியும் சேர்த்து வாங்கிட்டு வரேன். சாப்பிட்டுட்டுப் படுங்கம்மா.."

அவன் பையையும் பிளாஸ்க்கையும் தூக்கிக் கொண்டு போனதும் அவள் எழுந்து பாத் ரூமிற்குப் போனாள்.

ஒரு வாளியில் தண்ணீர் பிடித்து வைத்திருந்தது.

தொட்டுப் பார்த்த போது ஐஸ் கட்டியாகச் சில்லிட்டது.

குழாயிலிருந்து வருகிற நீர் சற்று இதமாக இருக்கலாம் என்று திறந்தால் காற்று மட்டுமே சீறிக் கொண்டு வந்தது.

சரயு குளிக்கிற ஆசையைக் கைவிட்டு முகத்தை மட்டும் கழுவி வாய் கொப்பளித்துவிட்டு வந்து சமையலறை போலிருந்த பக்கத்து அறையில் நுழைந்தாள்.

அறை என்னவோ சமைப்பதற்கு வசதியாகத்தான் இருந்தது. ஒரு கெரஸின் ஸ்டவ், சில அலுமினியப் பாத்திரங்கள், டீ டப்பா, பால் பவுடர் டின், ஒரு ஹார்லிக்ஸ் பாட்டில் நிறைய சர்க்கரை எல்லாம் கிடந்தன. அதைத் தவிர சமைப்பதற்கான மளிகைச் சாமான்கள் எதுவுமில்லை இருந்திருந்தால் மனோகருக்கு சமைத்துப் போட்டிருக்கலாம் என்று தோன்றின எண்ணத்தைக் கீழ் உதட்டைக் கடித்து அடக்கிக் கொண்டாள்.

அவனைப் பற்றி தான் ஏன் இவ்வாறு நினைக்க வேண்டும்...? முரடன், மூர்க்கத்தனமானவன். சிறிது கூட இரக்கமற்று நடந்து கொண்டவன்.

சில மணி நேரங்களுக்கு முன்பே அறிமுகமானவன். அப்படிப் பட்டவனுக்குச் சமைத்துப் போடலாம் என்று எண்ணுகிற அளவிற்குத் தன் புத்தி ஏன் தாழ்ந்து போகிறது...?

இனி அவனைப் பற்றி எதுவும் நினைக்கக் கூடாது என்கிற உறுதியுடன் செல்லப்பா கொண்டு வந்த உணவை

சாப்பிட்டு முடித்து அறை மூலையில் தன் ஜோல்டாலை விரித்து படுத்துக் கொண்ட போது செல்லப்பா சொன்னான்.

"நீங்க நிம்மதியாகப் பயமில்லாமல் தூங்குங்கம்மா. நான் இப்படி வாசல் வராந்தாவில் தான் படுத்துக் கிட்டிருக்கேன். சார் வந்தால் நான் கதவைத் திறந்து விடறேன்."

அவனுக்கு பதில் சொல்லக்கூட இயலாத களைப்பில் கண்ணை மூடின சரயு சிறிது நேரத்திற்கெல்லாம் அயர்ந்து தூங்கிப்போனாள்.

## 6

மனோகர் வீட்டிற்குத் திரும்பி வந்தபோது மணி கிட்டத்தட்ட பதினொன்றாகிவிட்டது. வெளிவராந்தாவில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த செல்லப்பாவை எழுப்பின சத்தத்தில் சரயுவே எழுந்து கொண்டாள்.

கம்பளிப் போர்வையை விலக்கி கதவைத் திறக்க வந்த போது குளிர் தாங்க முடியாமல் ஒடுக்கிற்று.

சிலு சிலுவென்று பனி சாரல் மாதிரி அடித்தது. இந்தப் பனியில் இத்தனை நேரம் எங்கே அலைந்து விட்டு வருகிறான் இவன்? என்ற கேள்வியுடன் விளக்கைப் போட்டுக் கதவைத் திறந்தபோது ஸ்வெட்டர்கூட இல்லாமல் நின்று கொண்டிருந்த அவன் உள்ளே வந்தான்.

செருப்பை ஓரமாக விசிறி நேராகக் கட்டிலருகில் போய் அதன் மீது விரித்திருந்த மெத்தையைச் சுருட்டி எடுத்துக்கொண்டு போய் வெளிவராந்தாவில் விரித்து தலையணையையும், போர்வையையும் எடுக்க உள்ளே வந்த போது ஒரு வினாடி தயங்கி அவள் முகத்தைப் பார்க்காமலே பேசினான்.

"புதிதாக வர்றவங்களுக்கு இந்தக்குளிர் ஒத்துக்காது. அதனால் தரையில் படுக்காமல் கட்டிலிலேயே படுத்துக் கொள்ளலாம்."



அதற்கு அவளிடமிருந்து பதில் எதுவும் வராமல் போகவே சற்றுத் தயங்கி மீண்டும் சொன்னான்.

"செல்லப்பாவை சாப்பிட ஏதாவது வாங்கிண்டு வந்து தரச் சொன்னேன். தந்தானான்னு தெரியணும்."

இப்போது அவளை வம்பிற்கு இழுக்க அவன் முடிவு செய்தது.

"எதுவும் வேணாம்னு சொல்லிட்டேன். சாயந்திரம் அந்த வேனில் வந்த வேகம் இன்னமும் உடம்பு சரியாகலை. தலை சுற்றலும் வயிற்றுப் புரட்டலும் நிற்கலை."

அதைக் கேட்டு ஒரு வினாடி சங்கடப்பட்டவனாக நின்றான். பின்னர் "ஐயம் சாரி" என்றான். "ஏதோ வெறுப்பில் அப்படி நடந்து கொண்டு விட்டேன். யார் மீது ஏற்பட்ட கோபத்தையோ உங்களிடம் காட்டிவிட்டேன். அதற்காக வருத்தப்படுகிறேன். இனியொருதரம் அது போல் நடக்காது என்றும் சொல்லிக் கொள்கிறேன். தயவு செய்து அதனால் அந்த நிகழ்ச்சியை நீங்கள் மறந்துடணும்."

மாலையில் பார்த்த முரடனுக்கும் தற்போது தன் எதிரில் குழந்தை மாதிரி நின்று மன்னிப்புக் கேட்கிற இவனுக்கும் எத்தனை வித்தியாசம் என்று நினைத்துக் கொண்டாள்.

நிச்சயம் அந்த முரட்டுத்தனம் இவனது பிறவிக் குணமில்லை என்று தோன்றியது. இவன் இப்படி இருப்பதற்குக் காரணம் எந்த விஷயத்திலோ மிக ஆழமாகப் பாதிக்கப்பட்டிருக்க வேண்டும். என்ன அது?

அவள் யோசித்துக் கொண்டு நிற்க அவனே மீண்டும் பேச்சைத் தொடர்ந்தான்.

"அப்பா உங்களுக்குத் தேவையான அத்தனை உதவிகளையும் செய்யச் சொல்லிக் கேட்டிருக்கிறார். உங்களுக்குத் தேவையான எந்த உதவியையும் நீங்கள் தாராளமாகக் கேட்கலாம். செய்ய நான் தயாராக இருக்கிறேன். நான்கு நாட்கள் லீவு போட்டுவிட்டு உங்களுடன் ஊர் சுற்றிப் பார்க்க வருவதாக இருக்கிறேன்.

அதற்குமுன்னால் உங்களுக்கென்று தனி பங்களாவோ தனி அறையோ ஒதுக்க முடியவில்லை. அதற்காகவும் நீங்கள் மன்னிக்கணும். இங்கே அப்படி காலி வீடுகள் எதுவும் இல்லை. எத்தனைக் குடும்பங்கள் அணைகட்டுவதற்காக வந்திருக்கிறதோ அத்தனை தற்காலிகமான வீடுகள் மட்டுமே கட்டிக் கொண்டிருக்கிறோம். அதனால் உங்களுக்கென்று தனியாய் ஒரு வீடு ஒதுக்கமுடியவில்லை. நீங்கள் உங்கள் வேலை முடிகிற வரை இங்கேயே தங்கிக்கொள்ளலாம். இங்கு சற்று வசதி குறைச்சல்தான். அதுவும் உங்களைப் போன்றவர்களுக்கு இன்னும் கஷ்டமாகவே இருக்கும். ஆனாலும் வேறு வழி இல்லை. நீங்கள் இருக்கிற வரை நான் என் படுக்கையை வெளியில் வைத்துக் கொள்கிறேன். குளியல் எல்லாம் கூட டாம் ஸைட் பக்கத்தில் முடித்துக் கொண்டுவிட முடியும். உங்களுக்குத் துணையாக எப்போதும் செல்லப்பா இங்கே இருப்பான். இங்கே சாப்பிட சாப்பாடு என்று ஒன்றும் கிடைக்காது. இரண்டு மைல் கீழே இறங்கிப் போனால் ஒரு சின்ன டீக்கடை மட்டுமே உண்டு. அங்கே வெறும் இட்லி தோசை கிடைக்கும். அதனால் உங்களுக்குச் சமைக்கத் தெரிந்திருக்குமானால் நீங்களே உங்களுக்குத் தேவையானதை செய்து கொள்ளலாம். இல்லாவிட்டால் அப்பாவிடம் சொல்லி ஒரு சமையற் காரரையாவது அனுப்பச் சொல்லலாம்..."

மடமடவென்று நிறுத்தாமல் அவன் பேசினதை ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டு நின்றாள் அவள்.

அவள் பார்ப்பதை உணர்ந்த அவன்,

"என்ன அப்படி பார்க்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"சாப்பாடே கிடைக்காது என்கிறீர்களே. நீங்கள் எப்படிச் சாப்பிடுகிறீர்கள் என்று யோசித்தேன்..."

அதைக்கேட்டு அவன் ஒரு ஆழமான பெருமூச்சோடு சொன்னான்.

"சாப்பாடு வேண்டும், காப்பி வேண்டும் என்கிற எந்தத் தேவைகளும் எனக்கு இல்லை. எது இல்லாமலும் வாழ என்னைப் பழக்கிக் கொண்டு விட்டேன். அப்படி



இருந்துவிட்டால், எதிர்பார்ப்புகளும், ஏமாற்றங்களும் இல்லை பாருங்கள்."

அவன் சாதாரணமாகச் சிரித்துக் கொண்டே சொல்வதாக வெளிப்பார்வைக்குத் தெரிந்தாலும் உள்ளுக்குள் மிக ஆழமான ஒரு சோகம் புரை ஓடின புண்ணாக அரித்துக் கொண்டிருப்பதைப் புரிந்து கொண்டாள் அவள்.

எங்கோ மிகப் பலமான அடியாக வாங்கியிருக்கிறான். எங்கே...?

யோசித்துக் கொண்டு நின்றவளை மீண்டும் அவன் குரல் கலைத்தது.

"ஏற்கனவே நேரமாகி விட்டது. நான் வேறு பாதித் தூக்கத்தில் உங்களை எழுப்பித் தொந்தரவு கொடுத்து விட்டேன். சாப்பாட்டுப் பிரச்சினையை காலையில் பார்த்துக் கொள்ளலாம். இப்போது நீங்கள் படுத்துக் கொள்ளுங்கள். குட்நைட்..."

வாசலுக்குப் போகத் திரும்பியவனை "ஒரு நிமிடம்" என்ற அவள் குரல் தடுத்து நிறுத்தியது.

நின்ற இடத்திலிருந்தே திரும்பிப் பார்த்துக் கேட்டான் அவன் "என்ன...?"

"எனக்காக நீங்கள் இந்தக் குளிரில் வெளியில் போய் படுக்க வேண்டாம். உள்ளேயே படுத்துக் கொள்ளுங்கள்..."

"குளிர், மழை, வெய்யில் எல்லாமே எனக்கு சகஜமான விஷயங்கள் தான்..."

"இருக்கலாம். ஆனால் இப்படி வெளி வராந்தாவில் படுப்பது சகஜமில்லையே..."

அவன் சற்றுத் தயங்கி இல்லை என்று தலையாட்ட,

"அப்படியானால் சகஜமாக தினமும் படுக்கிற இடத்திலேயே படுத்துக்கொள்ளுங்கள். என் வரவிற்காக தங்களின் இயல்பான தன்மைகள் எதையும் மாற்றிக்

கொள்ளாமல் இருப்பதானால் நான் இங்கே தங்குகிறேன். இல்லா விட்டால் வெளியில் போய் விடுகிறேன்."

"வெளியில் போய் எங்கே தங்குவீர்கள்...?"

"அந்த பயம் வேண்டாம். காலேஜில் என்.சி.சி. காம்ப் போய் பழக்கம் உண்டு. ஒரு சின்ன டெண்ட் அடிக்க எத்தனை நேரம் பிடிக்கும்...?"

"ஓ.கே. டெண்ட் அடிக்கிற சிரமத்தை உங்களுக்குக் கொடுக்க வேண்டாம் என்பதற்காக நான் உள்ளேயே படுத்துக் கொள்கிறேன்."

அவன் போய் திரும்ப மெத்தையைக் கொண்டு வந்து கட்டிலின் மீது போட்டு விட்டுச் சொன்னான்.

"ஆனால் ஒரு நிபந்தனை..."

"என்ன..."

"நீங்கள் கட்டிலில் படுத்துக் கொள்ளவேண்டும்."

"சரி."

"நான் உங்கள் ஹால்டாலில் படுத்துக் கொள்கிறேன்..."

"சரி."

ஒரு குழந்தைச் சிரிப்போடு நன்றி சொல்லி விட்டு அவன் படுத்துக்கொண்ட பின் இரவு விளக்கைப் போட்டு பெரிய விளக்கை நிறுத்தி கட்டிலில் வந்து படுத்துக் கொண்ட சரயுவின் மனதில் காரணம் சொல்ல இயலாத ஒரு சந்தோஷம் நிரம்பியிருந்தது.

## 7

மறுநாள் காலையில் அவள் எழுந்த போது மனோகர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். அவன் தூக்கத்தைக் கலைக்காத வகையில் சத்தப் படுத்தாமல் வாசல் கதவைத் திறந்து கொண்டு வெளியில் போன போது எழுந்து



உட்கார்ந்து சுவரோரம் ஒடுங்கி பீடி ஒன்றைப் பிடித்துக் கொண்டிருந்த செல்லப்பா அவளைப் பார்த்ததும் அவசரமாகப் பீடியைத் தூக்கிப் போட்டுவிட்டு எழுந்து நின்றான்.

"என்னம்மா இவ்வளவு சீக்கிரம் எழுந்துட்டீங்க..?"

"ஆறு மணிக்கு மேல தூங்கற வழக்கம் என் கிட்டே இல்லை செல்லப்பா..."

"ராத்திரி சார் வந்தாருங்களா, இல்லை டாம்ஸைட் பக்கமே தங்கிட்டாரா ?"

"அப்படித் தங்கற பழக்கம் கூட உண்டா..?"

"அதை ஏம்மா கேட்கறீங்க. எங்கே வேணும்னாலும் படுத்துத் தூங்கிடுவாரும்மா அவரு. ஒரு பலகை, பாய் ஏதாவது கிடைச்சால் மரத்தடி கூட அவருக்குப் போதும்..."

அவள் சற்று யோசித்துப் பின் கேட்டாள்.

"அவர் ஏன் இப்படி விரக்தியாக இருக்கிறார் செல்லப்பா..?" மெல்லக் கேட்டாள்.

"அதான் யாருக்கும் தெரியலீங்க. அவரு இங்கே வந்து பெரிய இன்ஜினீயராகச் சேர்ந்து கிட்டத்தட்ட நாலு வருஷம் இருக்கும். இந்த நாலு வருஷமும் இப்படித்தான் இருக்கார். வேலை வேலைன்னு பேய் மாதிரி அலைவார். கிடைத்ததை சாப்பிடுவார், அடித்துப் போட்ட மாதிரி தூங்கிப் போய்விடுவார். இந்த மூணைத் தவிர ஒரு பேச்சு, சிரிப்பு, விளையாட்டு.. ஒரு சினேகிதக்காரங்க.. ம்ஹூம்... எதுவும் கிடையாது. இதை விட்டால் எழுத்து. அவ்வளவு தாங்க அவருடைய உலகம். ஆனால் குழந்தை மனசுங்க. கோபம் வர்றபோது பெரிதாகக் கத்துவாருங்க. அது அடங்கின பின் தோள் மீது கைபோட்டுத் தட்டிக் கொடுப்பாருங்க.. இந்த நாலு வருஷமும் அவர் ஒரு நாள் லீவு எடுத்ததில்லை.சொந்த மனுஷாளைப் பார்க்கணும்னு போனதில்லை. அவரைத் தேடியும் யாரும் வந்ததில்லை. ஒரு வேளை இப்படி யாருமில்லாமல் அனாதை மாதிரி வாழறது தான் அவரை இப்படி ஆக்கிடுச்சோன்னு தோணுது..."

"அதுதான் காரணம்னால் ஏன் அனாதை மாதிரி வாழணும். ஒரு கல்யாணத்தைப் பண்ணிக்கிறது..." என்றான்.

"அதுக்கும் பிடி கொடுக்க மாட்டேன்றாரே. நம்ம ஏ.இ., ஜெ. இ எல்லாம் முயற்சி பண்ணிப் பார்த்துட்டாங்க. ஏம்மா, இவ்வளவு படிச்சவரு, கைநிறைய சம்பாதிக்கிறாரு, பார்க்கறதுக்கும் நல்ல லட்சணமா, கம்பீரமா இருக்காரு. பொண்ணைப் பெத்தவங்க ஆசைப்படறது நியாயம்தானே... ஆனால் இவரா...? விஸ்வாமித்ர முனிவர் மாதிரி எதற்காவது இடம் கொடுத்தால்தானே...?"

"அப்படிப்பட்ட விஸ்வாமித்திரருக்கும் ஒரு மேனகை இருந்தாளே செல்லப்பா..." என்று சரயு புன்சிரிப்பாகச் சிரிக்க-

"காலையில் எழுந்ததும் எங்கேயிருந்து வந்தார்கள் விஸ்வாமித்திரரும், மேனகையும்..." என்ற குரல் வாசற் படியிலிருந்து கேட்க-

சடாரென்று திரும்பிப் பார்த்தாள் சரயு. மனோகர் நின்று கொண்டிருந்தான். இன்னமும் தூக்கம் முழுதும் கலையாத நிலையில், முன்நெற்றி மயிரை ஒதுக்கிவிட்டு, உதட்டில் சிரிப்பு படர வாசல் முழுவதையும் நிறைக்கிற மாதிரி அவன் நின்று கொண்டிருந்தான்.

அந்த உயரத்திற்கும், கண்ணியமான உருவத்திற்கும் சிறிதும் பொருந்தாத குழந்தைத்தனம் ஒன்று முகத்தில் தெரிவதைக் கவனித்துக் கொண்டே சரயு சொன்னாள்.

"ஐயம் ஸாரி. எங்களின் பேச்சு உங்கள் தூக்கத்தைக் கெடுத்து விட்டதோ...?"

"நோ. நோ. அதெல்லாம் ஒன்றுமில்லை. தூக்கம் கலைந்து எழுந்த பின்புதான் நீங்கள் சொன்ன விஸ்வாமித்திரரும், மேனகையும் காதில் விழுந்தார்கள். ஆமாம் பல் தேய்த்துக் கொண்டாகிவிட்டதா..."

இன்னும் இல்லை என்று தலையாட்டினாள் அவள்.

"தண்ணீரில் கை வைக்கவே பயமாக இருக்கிறது. ஐஸ் கட்டி மாதிரி உறைந்து போயிருக்கிறது..."



அவன் உடனே செல்லப்பாவின் பக்கம் திரும்பினான்.

"என்ன செல்லப்பா கேட்டுக்கிட்டு பேசாமல் நிக்கறே. அம்மாவுக்கு ஸ்டவ்வில் கொஞ்சம் வெந்நீர் போட்டுத் தந்து விட்டு பிளாஸ்க்கை எடுத்துக்கொண்டு போய் ரூமுக்கு டீ வாங்கிட்டு வாயேன்."

அவன் எழுந்து உள்ளே போன ஐந்து நிமிடங்களில் பிளாஸ்க்குடன் வெளியில் வந்தான்.

"அம்மா நீங்க தண்ணி சுட்டதும் பல்தேய்ங்க நான் இதோ டீ வாங்கிட்டு வந்துடறேன்..."

"எப்படிப் போவாய் செல்லப்பா..."

"சார் புதுசா சைக்கிள் வாங்கிக் கொடுத்திருக்காருங்க..." என்று வீட்டின் பின்பக்கம் சுற்றிக் கொண்டு போய் பளபளப்பாக இருந்த சைக்கிளைத் தள்ளிக் கொண்டு மலைப்பாதையில் கீழே இறங்கினான்.

அவன் போனதும் மனோகர் கேட்டான்.

"இன்று உங்களின் ப்ரோக்கிராம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளலாமா...?"

"புரோக்கிராமைச் சொல்வதற்கு முன் உங்களிடம் ஒன்று கேட்கலாமா...?"

"கேளுங்களேன்...!"

"என் பெயர் என்ன என்பதாவது உங்களுக்குத் தெரியுமா...?"

அதைக் கேட்டு புன்சிரிப்பாகச் சிரித்தான் அவன்.

"உங்களைப் பற்றி எனக்குத் தெரிந்த விவரமெல்லாம் சொல்கிறேன் கேட்கிறீர்களா...?"

"சொல்லுங்களேன்..."

"பெயர்-சரயு...

வயது-இருபத்து மூன்று.

படிப்பு-எம். ஏ. லிட்ரேச்சர்.

பொ. போக்கு-எழுதுவது.

அப்பா சொந்தப் பத்திரிகை நடத்தாவிட்டால் வேறு யாரும் அந்த எழுத்தைப் பிரசுரித்திருக்க மாட்டார்கள் என்பது வேறு விஷயம்.."

"என்ன..?" என்று அவள் முறைக்க அவன் தொடர்ந்து சொன்னான்.

"தற்போது இங்கே வந்திருப்பது இந்த மலைப்பிரதேச மாவட்ட மலர் தயாரிக்க - குறுநாவல் எழுத - மனோகர் என்கிற மடையனுக்குத் தொந்தரவு கொடுக்க..."

"அட! உங்கள் வாயிலிருந்து கூட உண்மை வருகிறதே...!"

"என்ன உண்மை..?"

"மடையன் என்கிற உண்மை. ஆமாம், அப்படி இருக்கிற போது எதற்காக இட்லிக்கும், தோசைக்கும் செல்லப்பாவை இரண்டு மைல் கீழே விரட்டுகிறீர்கள். நீங்களே பண்ணி சாப்பிட வேண்டியது தானே..."

"நானே பண்ணி நானே சாப்பிடுவது என்பது கஷ்டமாக இருக்கிறது..."

"சரி. நீங்கள் பண்ணுங்கள். நான் சாப்பிடுகிறேன்..."

"அப்படியே தேவி..." என்று அந்தக் கால சேவகர்களைப் போல் தலையை குனிந்ததும் அவள் மனம் விட்டுச் சிரித்தாள்.

கூடவே அவனின் சிரிப்பும் கலந்து கொண்டது. ஒரு நிமிடத்திற்குப் பின் சிரிப்பு அடங்கச் சொன்னான்.

"அப்பா... நான் இப்படிச் சிரித்து எத்தனை நாளாகிறது..?"

அவனின் பெருமூச்சும், ஏக்கமும் நெஞ்சைத் தொடவே அவள் கேட்டாள்,



"நான் உங்களிடம் ஒன்று கேட்கலாமா மனோகர்..? சொந்த விஷயத்தில் தலையிடுவதாக நினைக்காமல் இருந்தால் கேட்கிறேன்."

"கேளுங்களேன்."

"நீங்கள் எழுந்து வருவதற்கு முன் உங்களைப் பற்றித்தான் செல்லப்பாவிடம் பேசிக் கொண்டிருந்தேன். நீங்கள் ஏன் இப்படி ஒரு சந்யாசி மாதிரி அலைகிறீர்கள் என்று கேட்டேன். செல்லப்பாவினால் காரணத்தைச் சொல்ல முடியவில்லை. அதனால் உங்களையே கேட்கிறேன். எது உங்களை இப்படி அலைக்கழிக்கிறது. ஏன் இப்படி இருக்கிறீர்கள் என்று நான் தெரிந்து கொள்ளலாமா மனோகரன்..?"

அதைக் கேட்டதும் அவன் முகம் சடாரென்று மாறிற்று. முகத்தில் விறுவிறு வென்று சிவப்பு ஏறிற்று.

கண் லேசாகக் கலங்கித் தெரிய கீழ் உதட்டை இறுக்கிக் கடித்துக் கொண்டு பேசினான்.

குரல் கூட வித்தியாசமாக, வெறுப்பும், கோபமுமாக அவளை ஸ்டேஷனிலிருந்து அழைத்துக் கொண்டு வந்த போது இருந்த மாதிரி மாறிப்போய் தொனித்தது.

"இதைப்பற்றி மட்டும் இன்னொருதரம் என்னிடம் கேட்காதீர்கள் மிஸ் சரயு. கேட்டு என் மனதை மேலும் புண்படுத்தாதீர்கள். ஒரு தரம் பட்ட புண்ணே என்னுள் ஆழமாகப் புரையோடி கண்ணுக்குத் தெரியாமல் ரத்தமும் சீழுமாக வடிந்து கொண்டிருக்கிறது. அந்த வலி தாங்காமல் ஏற்கனவே நான் ரகசியமாகக் கதறிக்கொண்டிருக்கிறேன். எதையாவது கேட்டு என்னை வாய்விட்டுக் கதறும்படி செய்துவிடாதீர்கள். ஆண்கள் அழுவது எனக்குக் கொஞ்சமும் பிடிக்காத விஷயம். அதனால் என்னை அழவிடாதீர்கள் ப்ளீஸ்..."

சொல்லி விட்டு அதற்கு மேல் அங்கு நிற்க இயலாதவனாக சரசரவென்று உள்ளே போய் செருப்பைப் போட்டுக் கொண்டு வெளியில் வந்தான். அவளருகில் வந்ததும் சற்றுத் தயங்கி நின்றான்.

"செல்லப்பா வந்ததும் நீங்கள் டீ குடித்து குளித்து உடைமாற்றிக் கொள்ளுங்கள் நான் இதோ வந்து விடுகிறேன்..."

அவனின் பதிலுக்குக் காத்துக் கொண்டிருக்காமல் பரபரவென்று கீழே இறங்கி நிமிடமாக மறைந்து போனதும் அவன் அப்படியே பிரமை பிடித்தவனாக செல்லப்பா திரும்ப வருகிற வரை நின்று கொண்டே இருந்தான்.

## 8

குளித்து முடித்ததும் கறுகறுப்பானான் சரயு புடவையை இழுத்து செருகிக் கொண்டு அந்த வீட்டை சுத்தப்படுத்துவதில் முனைந்தான். அதற்கு முன்பாக செல்லப்பாவிடம் பணம் கொடுத்து மளிகை சாமான்களும், மற்ற சில பொருட்களையும் வாங்கிக் கொண்டுவரச் சொன்னான்.

"நீ கொஞ்சம் உதவி செய்தால் நாமே நாளைய விருந்து சமைக்கலாம் என்றிருக்கேன் செல்லப்பா..." என்றதும் சந்தோஷப்பட்டுப் போனான் அவன்.

"வீட்டு சாப்பாடு கிடைக்கும்னா எது செய்யவும் தயாராக இருக்கேன் என்ன செய்யனும் சொல்லுங்க."

"முதல்ல நீ போய் நான் எழுதித்தர்ற சாமானெல்லாம் வாங்கிட்டு வா. அதுக்குள்ள நான் வீட்டை சுத்தப் படுத்திடறேன். அப்புறம் சமைக்க ஆரம்பிக்கலாம்" என்றான்.

அவன் சைக்கிளை எடுத்துக் கொண்டு போனதும் அவன் மூலை மூலையாக சிதறிக்கிடந்த துணிகளை மடித்து, பத்திரிகைகளை அடுக்கி, ஒட்டடை தட்டி, கட்டிலையும் மேஜையையும் நகர்த்திப் போட்டு...

எந்த வேலை செய்தாலும் மனம் மட்டும் மனோகரை விட்டு அசையாமல் ஒட்டிக்கொண்டு நின்றது.



வெளியில் பகிர்ந்து கொள்ள முடியாதபடி அப்படி என்ன கஷ்டம் இருக்கும் என்று யோசித்தான்.

அப்படி ஒரு கேள்வியைக் கேட்டு அவன் மனதை இந்த அளவிற்கு வருத்தப்படுத்தியிருக்க வேண்டாம் என்று தோன்றியது. தான் அவசரப்பட்டு அப்படி ஒரு கேள்வியைக் கேட்டு விட்டதாய் குற்ற உணர்வு ஒன்று ஏற்பட்டது.

ஒரே நாள் பழக்கத்தில் - பழக்கம் என்று கூட அதைச் சொல்ல முடியாது பார்க்கப் போனால் அறிமுகம்கூட இல்லை அது.

அந்த நிலைமையில் அவ்வளவு அந்தரங்கத்தைத் தொடக்கூடிய கேள்வியைக் கேட்டிருக்கக் கூடாதுதான். கேட்டது தன் தவறுதான்.

அவன் நிலையில் தான் இருந்திருந்தால் கோபப் பட்டிருக்கக் கூடும். ஆனால் அவன் கோபப்படவில்லை.

நிதானமும், வருத்தமுமாகத்தான் சொன்னான். எத்தனை வருத்தம், வேதனை அந்த முகத்தில் அவ்வளவு வேதனை தரக்கூடிய விஷயம் என்னவாக இருக்கும்..?

அவனால் ஊகிக்க முடியாததாக, ஆனால் நெஞ்சை விட்டு அகலாமல் உறுத்தலும், நெருடலுமாகவே அந்த விஷயம் நின்று கொண்டிருந்தது.

காரணத்தைத் தெரிந்து கொண்டு அவனை இதமான வார்த்தைகளால் சமாதானப் படுத்த வேண்டும் போலிருந்தது. ஆனால் எப்படித் தெரிந்து கொள்ள முடியும்? யார் சொல்வார்கள்? அவனைத் தவிர வேறு யாரால் சொல்ல முடியும்..?

அவன் ஒரு சின்னப் பெருமூச்சுடன் எல்லா இடங்களையும் சுத்தப் படுத்திவிட்டு கடைசியாகத் திறந்து அலங்கோலமாகப் போடப்பட்டிருந்த அவனின் பெரிய சூட்கேஸிடம் போனான்.

அதை சுத்தப்படுத்தலாமா வேண்டாமா என்று யோசித்தான். அதில் அவன் என்னவெல்லாம் வைத்திருக்

கிறானோ..? தொட்டால் தவறாக நினைத்துக் கொள்வானோ என்னவோ..?

ஒரு வினாடிதான் அவனுக்குள் அந்தத் தயக்கம் இருந்தது. பின்னர் ஏதோ ஒரு உந்துதலில், துணிகளால் அடைக்கப்பட்டிருந்த அந்த சூட்கேஸின் அலங்கோலத்தை சகித்துக் கொள்ள முடியாமல் அத்தனை பாண்ட், ஷர்ட்டுகளையும் எடுத்துப் போட்டு அழகாக மடித்து அடுக்கிவிட்டு நிமிர்ந்தபோது எதேச்சையாக சூட்கேஸின் மேலிருந்த அந்த ரகசியப் பை கண்ணில் பட்டது. அதையும் சுத்தப்படுத்தி விடலாமென்று திறந்தபோது உள்ளுக்குள் ஒரு டைரி கிடந்தது. அதைத் தவிர வேறு எதுவும் இல்லை.

அந்த டைரியை எடுத்து கைகளில் வைத்துக் கொண்டவனின் இதயம் சற்று வேகமாகத் துடிக்க ஆரம்பித்தது.

பிரித்துப் படித்தால் ஒரு வேளை அவனின் பிரச்சினை என்ன என்பது புரியலாம் என்று நினைத்தாலும், கூடவே நாகரிகம் தடுத்தது.

கட்டுப்பாடாக வளர்ந்த வளர்ப்பு குறுக்கே நின்றது.

இன்னொருவரின் டைரியை அவருக்குத் தெரியாமல் பிரித்துப் படிக்கிற கேவலத்தைச் செய்ய மனது அத்தனை சுலபமாக அனுமதி கொடுக்கவில்லை.

இந்த இருபத்துமூன்று வருடங்களில் இப்படியெல்லாம் அவன் ஒரு போதும் நடந்து கொண்டதில்லை. எந்த ஆணிடமும் இப்படிப் பேசினதில்லை.

மனதில் நினைத்ததில்லை. உள்ளுக்குள் ரகசியமாக உருகினதில்லை.

ஆனால் இந்த மனோகரின் நினைவு மட்டும் ஏன் நெஞ்சை விட்டு நகர மறுக்கிறது என்பதுதான் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

பார்த்த சில மணி நேரங்களுக்குள் இப்படிக் கூட ஒரு ஈடுபாடு ஏற்பட முடியுமா என்கிற சந்தேகம் வந்தது. அவன் யார்..? அது கூட எங்கே பார்த்தோம் என்கிற நினைவில்லை



நூ 211
36305

யாருடன் என்பதும் [illegible]லை. அப்படி இருக்கிறபோது -

அவன் சாப்பிடவில்லை என்று தன் மனம் ஏன் தவிக்க வேண்டும்..? அவன் வருத்தப்படுகிறானே என்று தானும் ஏன் வருத்தப் படவேண்டும்..?

அவனுக்குப் புரிந்தது. புரிந்த விஷயம் அதிர்ச்சியைத் தரக்கூடியதாகவும் இருந்தது. நானா.. மனோகரிடமா..?

எப்படி இது சாத்தியமாயிற்று என்று கேள்வி எழ, அவனுக்குப் பதில் கிடைக்கவில்லையே தவிர இதுதான் என்பதை மட்டும் மனது உறுதிப்படுத்திக் கொண்டு விட்டது.

அந்த உயரம், உருவம், பேச்சு, ஏன் நேற்று மாலை தன்னிடம் காட்டின முரட்டுத்தனம் கூட அவனுக்குப் பிடித்தமானதாகவே இருந்தது.

அவன் மிகப் பிடித்தமானவனாகத் தன்னையறியாமல் தனக்குள் ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டு விட்டதை உணர்ந்து -

அந்த நிலையில் அவனது கஷ்டத்திலும் பங்கு கொள்ள வேண்டியது தன் கடமை என்ற உணர்வில் அந்த டைரியைத் திறந்து பார்ப்பதில் தவறில்லை என்ற முடிவுடன் முதல் பக்கத்தைத் திறந்த போது அதனுள்ளிருந்து ஒரு புகைப்படம் சரிந்து அவன் மடியில் கவிழ்ந்து விழுந்தது.

உடனே அவன் அதை எடுத்துப் பார்க்கவில்லை. உள்ளுணர்வு ஏதோ சொல்ல சற்றுத் தயங்கினான்.

அதை எடுத்துப் பார்த்தால் நிச்சயம் தன் மனது கஷ்டப்படக்கூடிய ஒரு விஷயம்தான் அதில் இருக்கும் என்று தோன்றியது.

எடுத்து யாருடைய புகைப்படம் என்பதைப் பார்க்காமல் அப்படியே உள்ளே வைத்து விடலாமா என்று கூட நினைத்தான்.

ஆனாலும் அதைச் செயலாக்க முடியவில்லை. மனக் குரங்கு விடவில்லை.

மடியில் கிடந்த போட்டோவை மனது படபடக்க திருப்பிப் பார்த்தவனுக்கு சட சடவென்று மனதிற்குள் எதுவோ முறிவது போலிருந்தது.

அவனை எங்கோ பார்த்திருக்கிறோம். எங்கே, எங்கே என்று தேடின தேடலுக்குச் சட்டென்று விடை கிடைத்தது.

தீபாவுடன் சென்னையில் அந்தப் பொருட்காட்சி மைதானத்தில் அவனைப் பார்த்தது.

தீபு, தீபு என்று அவன் அவளின் தோளோடு தன் தோள் இடிக்க நடந்தது.

இரண்டு பேரும் ஒரே இளநீரில் இரண்டு ஸ்ட்ரா போட்டு சிரித்துக் கொண்டே குடித்தது ஞாபகத்துக்கு வந்தது.

வெளிச்சம் அதிகமற்ற பகுதியில் ஒரு ஓரமாக அவளோடு அவள் கைகளைப் பற்றி அழுத்திக் கொண்டே,

"தீபா ஐ வாண்ட் யு. எனக்கு இப்பவே நீ வேணும். எழுந்து வா. உங்கப்பா கிட்டே போய் சொல்லி கல்யாணத்தைக் கூடிய சீக்கிரம் முடிச்சுக்கலாம்."

அவனது தவிப்பிற்கும், துடிப்பிற்கும் நேர்மாறாக தீபா மிக அலட்சியமாகச் சிரித்தாள்.

தன் கையை அவனது கைகளிலிருந்து விடுவித்துக் கொள்ள முயன்றபடி வேண்டுமென்றே செல்லமாகச் சிணுங்கினாள்.

"நீங்க ரொம்ப மோசம் மனோகர். இப்படியா கையைப் பிடிச்சு அழுத்தறது... எப்படி வலிக்கிறது தெரியுமா..." அவள் குரலில் ஒரு விளையாட்டுத்தனம் இருந்தது.

"உனக்குக் கைதானே வலிக்கிறது. எனக்கு மனசெல்லாம் வலிக்கிறதே. அது ஏன் தெரியமாட்டேன் என்கிறது தீபா. என் இதயம் தீபா தீபான்னே அடிச்சுக் கிறதே அது ஏன், உன் காதுகளில் கேட்கலை தீபா...?"



"எங்கே இதயத்தின் கிட்டே காதை வச்சுப் பார்க்கிறேன்?"

அவள் அதையும் விளையாட்டாக எடுத்துக் கொள்ள முயன்றது அவனைக் கோபப்படுத்திற்று.

"விளையாடாதே தீபு. நான் ரொம்ப சீரியஸாகப் பேசிண்டிருக்கேன்." அவன் முகம் இறுகியது.

"சீரியஸா பேசணும்னால் சீரியஸாகத்தான் முகத்தை வச்சுக்கணுமா மனோகர் சிரிச்சுண்டே பேச முடியாதா...?"

"என்னால் முடியாது தீபு."

"என்னால் முடியும் மனோ..."

"உனக்கு எதுவும் முடியும் எல்லாமே சாத்தியம். அதனால்தான் சொல்றேன் அப்பாகிட்டே சொல்லி கல்யாணத்தை முடிச்சுக்கோன்னு. என் தவிப்பு புரியாமல் நீ என்னடான்னா குழந்தை மாதிரி விளையாட்டுத் தனமாகவே இருக்கே."

"நான் விளையாட்டுத் தனமாக இல்லை மனோ. நீங்கதான் விளையாட்டுத் தனமாகப் பேசறீங்க. அன்னிக்கு ஒரு நாள் - என் பிறந்த நாள் விழா அன்னிக்குன்னு நினைக்கிறேன். அன்னைக்கு அப்பாகிட்டே நானே கல்யாணப் பேச்சை எடுத்தேன். அதற்கு அவர் என்ன சொல்லிட்டார் தெரியுமா...? 'தீபு, நீயே ஒரு குழந்தை. உனக்கு இப்போ எதுக்கும்மா கல்யாணம். இன்னும் நாலைஞ்சு வருஷம் போகட்டும்'னு சொல்லிவிட்டார்."

"நாலைஞ்சு வருஷமா... மை குட்னெஸ்! என்னால் அதுவரை தாங்க முடியாது தீபு."

அவள் சிரித்தாள்.

"என்ன தீபு சிரிக்கறே...? எனக்கு நீ வேண்டும்..."

அவன் அது பொது இடம் என்பதை மறந்து இரண்டு கைகளையும் நீட்டி,

"எடுத்துக்கோங்க..!" சிரித்துக் கொண்டே சொன்னாள்.

"ச்சீ!" என்று அதட்டினான் அவன். அவனின் முகத்தில் லேசான அருவெறுப்பு படர்ந்து கிடந்தது.

"எனக்கு இப்படியெல்லாம் வேண்டாம். இந்த மாதிரி அடையணும்னால் எப்போதோ அடைந்திருப்பேனே..? அப்படி அடைய நான் நினைக்கவில்லை. வெறும் உடம்பு எனக்குத் தேவையே இல்லை. எனக்கு வேண்டியதெல்லாம் உரிமையோடு கூடிய உறவு. உறவுடன் கூடிய மனசு. மனசோடு சேர்ந்த உடம்பு..."

கலீரென்று கை தட்டினாள் அவள். பளிச்சென்று சிரித்தாள்.

எழுத்தாளன் அத்தனைக்கும் மனம் மாறாமல் ஒரே பிடியாக நின்றான்.

"சிரிக்காதே தீபா, எழுந்து என்னுடன் வா..." அவன் ஒரு தீர்மானத்துடன் பேசினான்.

"எங்கே..?"

"உங்க வீட்டுக்கு..."

"அங்கே போய்..."

"உங்கப்பாவைக் கேட்கப் போகிறேன்."

"என்ன கேட்பீங்க..?"

"உன்னைக் கல்யாணம் பண்ணித்தரச் சொல்லி..."

"அப்பா மறுத்தால்..."

"நாமே பண்ணிக்கலாம். வேறு வழி இல்லை. நீ மேஜர்தானே தீபா. நீயில்லாமல் நான் அந்த மலைப் பிரதேசத்திற்குப் போவதாக இல்லை. அங்கு அதிகம் குளிரும். அந்தக் குளிருக்கு நீ வேண்டும் தீபா. கதகதப்பாய், போர்வையாய், எல்லாமாக நீ வேண்டும்..."

அதைக் கேட்டு அவள் முகம் லேசாக இருண்ட மாதிரி மாறிற்று.



கண்களில் ஒரு பயம் தெரிந்தது. என்ன நினைத்தாளோ என்னவோ சட்டென்று உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்து விட்டாள்.

"சரி வாங்க. போகலாம்..." என்றாள்.

அவன் நிஜமான சந்தோஷத்துடன் அவள் பின்னால் ஒரு பிரியமான நாய்க்குட்டி மாதிரி பின் தொடர்ந்த போதுதான் -

சரயுவிற்கு அவனின் அறிமுகம் கிடைத்தது. அத்தனை நேரம் அவன் அவர்களைப் பார்த்தானே தவிர, ஒரு பேச்சு விடாமற் கேட்டானே தவிர அவர்கள் இவனைப் பார்க்கவில்லை. எழுந்து நடந்ததில் இவனைத் தாண்டிக்கொண்டு போக நேர்ந்ததில் தீபாவின் கண்களில் பட்டான்.

"ஹாய் சரயு, எங்கே இந்தப் பக்கம்..?"

விடுதலை பெற்ற மாதிரி தீபா ஓடி வந்து அவன் கைகளைப் பற்றிக்கொண்டு நின்றாள்.

"சும்மாத்தான் வந்தேன். ஆமாம், நீ இன்னிக்குக் 'காலேஜு'க்கே வரலையே, என்ன விஷயம்..."

இது தான் விஷயம் என்கிறாற் போல் தீபா மனோகரைக் கூப்பிட்டு அறிமுகப்படுத்தினாள்.

"மீட் மிஸ்டர் மனோகர், என்னுடைய கஸின். பெங்களூரில் இருந்து வந்திருக்கிறார். மனோகர், இது என் கிளாஸ்மெட் சரயு..."

மனோகர் அவனைத் திரும்பிக் கூடப் பார்க்காமல், 'அம்மாடி, எங்களை விடு...' என்று தெரியப்படுத்துகிற பாவனையில் பெரியதாய் கும்பிடு போட்டான். பின், நிற்கிற பொறுமையற்றவனாக தீபாவின் பக்கம் திரும்பி,

"போகலாமா..?" என்றான்.

இரண்டு பேரும் அந்தப் பெரிய புல் தரையைக் கடந்து போவதைப் பார்த்துக் கொண்டே நின்றான் சரயு.

நான்கு வருடங்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சி இப்போது தான் அதுவும் அந்த புகைப்படத்தைப் பார்த்த பின்புதான் ஞாபகத்திற்கு வருகிறது.

தீபாவின் பக்கத்திலே நின்றதாலேயே அவனை அடையாளம் கண்டுபிடிக்க முடிந்தது.

இல்லாவிட்டால் இன்னமும் அவனைத் தன் நினைவில் தேடிக் கொண்டு தான் இருந்திருப்பாள்.

அன்று தீபாவிடம் அவன் கெஞ்சின கெஞ்சல், உருகின உருகல், குழைந்த குழைவு, பார்த்த பார்வை, அவளுக்காகத் தவித்த தவிப்பு!

என்னவாயிற்று அதன் பின்? ஏன் அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளவில்லை? எதனால் அவளை விட்டுப் பிரிந்து வந்து விட்டான்? அவள் ஞாபகத்தில்தான் இப்படி வாழ்க்கை மீது பிடிப்பற்று சுற்றிக் கொண்டிருக்கிறானோ?

ஒரு வேளை டைரியில் ஏதாவது எழுதியிருக்கலாமோ?

டைரியைப் புரட்டினதில் நான்குவரிக் கவிதைத் தவிர அதில் வேறு எதுவும் இல்லை.

"என் இதயத் தோட்டத்தில்
ரோஜாக்களைப் பயிரிட்டேன்
அறுவடை செய்ய
உன்னை அழைத்தேன்
அரிவாளோடு
நீ வந்த பிறகுதான்
என் தவறு
எனக்குப் புரிந்தது."

- மு. மேத்தா

அவளுக்குக் கவிதை புரிந்தது. அதை எழுதின அவனது மனநிலை புரிந்தது.

ஆனால் இடையில் நடந்த காரணங்களும், காரியங்களும் மட்டும்தான் புரியவில்லை.



அவன் மீது ஏற்பட்ட அனுதாபப் பெருமூச்சுடன் அந்த டைரியில் புகைப்படத்தை வைத்து அது இருந்த இடத்தில் வைத்து ஜிப்பை இழுத்து சூட்கேஸை மூடிவிட்டு எழுந்தபோது செல்லப்பா சாமான்களுடன் சைக்கிளில் வந்து இறங்கினான்.

வீட்டைப் பார்த்து ஒரு வினாடி அசந்து போனான்.

"ஏம்மா, நம்ம வீடுதானா இது. இல்லே நான் தவறாக ஏதாவது வீட்டுல நுழைஞ்சுட்டேனா?" என்று கேட்டு தானே சிரித்துக் கொண்டான் செல்லப்பா.

"இதுக்குத்தாம்மா ஒரு பொம்பளை வீட்டுல இருக்கணும்னு சொல்றது. இப்போ எவ்வளவு களையாக வீடே சிரிச்சுகிட்டு இருக்கு பாருங்க."

அவள் பதில் சொல்லாமல் சிரித்துக் கொண்டே சமைக்கப் போனாள்.

## 9

சாருவிற்கு சமைக்கத் தெரியாது. அதுவரை அதிகம் சமையலறையினுள் நுழைந்தவளில்லை. நுழைய வேண்டிய அவசியம் ஏற்படவும் இல்லை. வீட்டில் இரண்டு சமையற்காரர்கள் உண்டு.

முதல் நாள் ஒருவர் சமைத்தால் மறுநாள் இன்னொருவர் சமைக்க வேண்டும்.

அப்போதுதான் வித்தியாசமான சாப்பாடு கிடைக்கும் என்பது அப்பாவின் அபிப்பிராயம்.

அப்பா ஓட்டலில் சாப்பிடுபவர் இல்லை. இன்னொரு வீட்டில் கை நனைப்பவர் இல்லை. யார் எவ்வளவு வற்புறுத்தினாலும் தண்ணீரைத்தவிர வேறு எதுவும் எங்கும் சாப்பிடாதவர்.

அதனால் வீட்டுச் சமையல் வாய்க்கு ருசியாக, விதம் விதமாக இருக்க வேண்டும், மாறுதல் தெரிய வேண்டும்.

என்பதற்காகவே இரண்டு சமையற்காரர்களை ஏற்பாடு செய்திருந்தார்.

அப்படியே பழகின காரணத்தால் அன்று சமைப்பது சரயுவிற்குச் சற்று சிரமமான காரியமாகத்தான் இருந்தது.

அதுவும் குக்கர் இல்லாமல் காஸ் அடுப்பு இல்லாமல் வேறு எந்தவித வசதிகளுமற்று சமைக்க முடியத்தான் இல்லை.

ஆனாலும் அவள் விடவில்லை. மீண்டும் செல்லப்பாவை அனுப்பி கொஞ்சம் சாம்பார் பொடி, 'திடீர் ரசப்பொடி, மிளகாய்ப் பொடி எல்லாம் வாங்கிக் கொண்டு வரச் செய்தாள். ஒரு பெரிய அலுமினிய குண்டானை ஸ்டவ்வில் ஏற்றி அரிசி களைந்து போட்டு சாதம் வடிக்கிற காரியத்தை செல்லப்பாவே செய்து முடித்தான்.

"இதை மட்டும் தினமும் நானே செய்துடறேங்க. நீங்க கையில கால்ல கஞ்சித் தண்ணியை வடிய வச்சுக்கிட்டா கஷ்டமுங்க..." என்றான்.

அதன் பிறகு இவள் அவன் சொல்லித்தந்த மாதிரி பருப்பை வேகவைத்து, புளி கரைத்துக்கொட்டி, சாம்பார், ரஸத் தூள்களைப் போட்டு சாம்பாரும், ரஸமும் செய்து வைத்தாள்.

செல்லப்பா வாங்கிக் கொண்டு வந்திருந்த வெண்டைக்காயை அரிந்து ஒரு அலுமினியப் பாத்திரத்திலேயே இட்டு வதக்கினாள்.

சமையல் முழுவதையும் முடித்து மணி பார்த்தபோது பிற்பகல் ஒன்றாகியிருந்தது.

மனதிற்குள் சொல்ல முடியாத சந்தோஷம் ஒன்று ஏற்பட்டிருந்தது. பெரிதாக ஒரு காரியத்தைச் சாதித்த திருப்தி இருந்தது.

மனோகர் வந்து இதைச் சாப்பிட வேண்டும் என்று தோன்றியது. அவன் வருவதற்குள் முகம் கழுவிப் பொட்டிட்டு அழுக்குப் படிந்து, கசங்கிப் போயிருந்த புடவையை மாற்றி, ஒரு வெள்ளையில் சின்னதாக சிவப்புப் பூக்கள்



போட்ட வாயில் புடவையை உடுத்திக்கொண்டு காத்திருந்தாள்.

மணி ஒன்றரை, இரண்டு என்று ஆயிற்றே தவிர மனோகரைக் காணவில்லை.

"என்ன செல்லப்பா, உங்க சாரைக் காணோம்...?" என்று இரண்டு மூன்று தரம் வாசல் வராந்தாவரை போய் வந்த பின் தன் செய்கைக்காகத் தானே வெட்கப்பட்டாள்.

"அவரு எப்பவும் இப்படித்தாங்கம்மா. காற்றைத் தின்று ஜீவிக்கிற பிராணி. நம்மாலே அதெல்லாம் முடியாதும்மா. இனிமேல் காத்துக்கிட்டிருக்கிற சக்தியும் இல்லை எனக்கு. சாப்பாடு போட்டு நீங்களும் சாப்பிடுங்கம்மா... வாங்க" என்று வற்புறுத்தினான் அவன்.

அவள் மனசில்லாமல் எழுந்து வந்தாள். அவனுக்கு சாப்பாடு போட்டுக் கொண்டே கேட்டாள்.

"ஏன் செல்லப்பா, சார் டாம்ஸைட் பக்கம்தானே இருப்பார்..."

"அப்படித்தாம்மா நினைக்கிறேன்..."

"இங்கே காரியர் இருக்கு இல்லையா... அதுல சாப்பாடு போட்டுத்தரேன் கொண்டு போய் தரியா...?"

அவன் சற்று யோசித்து அவளை ஒரு வினாடி கனிவாகப் பார்த்தபடி பேசாமல் இருந்தான்.

"என்ன செல்லப்பா பேசாமல் இருக்கே...?"

"ஒண்ணுமில்லே; தாங்கம்மா! கொண்டு போய், தரேன்..."

அவன் சாப்பிட்டு முடித்ததும் காரியரில் மனோகருக்கு சாப்பாடு போட்டுக் கொடுத்தனுப்பி விட்டுத் தானும் சாப்பிட்டு மேஜையடியில் போய் உட்கார்ந்தாள்.

மாவட்ட மலரை எப்படியெல்லாம் தயாரிக்க வேண்டும் என்று யோசித்து குறிப்பு எடுத்துக் கொண்டாள். போகிற இடங்களுக்கு மனோகரை உடன் அழைத்துக் கொண்டு போக முடிவு செய்தாள்.

நாளை அவனிடம் சொல்லிப் புகைப்படக்காரருக்கு ஏற்பாடு செய்யச் சொல்ல வேண்டும் என்று நினைத்து, அந்தக் குறுநாவலை ஆரம்பிக்கலாம் என்று தன் எழுதுகிற பேட், வெள்ளைக் காகிதங்கள் ஆகியவைகளை எடுத்து வைத்துக் கொண்டாள். எதைப்பற்றி எழுதலாம் என்று யோசித்த போது வாசற்கதவு தட்டப்படுகிற சத்தம் கேட்டு பேனாவை மூடி வைத்து விட்டு எழுந்து போய் திறந்தால் செல்லப்பா நின்று கொண்டிருந்தான். கையில் காரியர் இருந்தது.

"என்ன செல்லப்பா, சாப்பிட்டாரா...?" என்று கேட்டாள்.

"ம்ஹூம்..." என்று உதட்டைப் பிதுக்கினான் அவன்.

"ஏன் செல்லப்பா...?"

"எங்கே தேடியும் அவரைக் காணலேம்மா. எங்கே போனார்னே தெரியலை. யாரும் காலையிலிருந்தே அவரைப் பார்க்கலைன்னு சொல்றாங்க. இப்படி சைட் பக்கம் வராமல் ஒரு நாள் கூட அவர் இருந்ததில்லைம்மா. அதனால் எல்லோருக்கும் கவலையாக இருக்கும்மா..."

செல்லப்பா சொன்னதைக் கேட்க அவளுக்கும் கவலை அதிகமாயிற்று.

காலையில் தான் அந்த விஷயத்தைக் கேட்டே இருக்க வேண்டாமென்று தோன்றியது.

அதனால்தான் அவன் போய்விட்டான் என்பது உள்மனதுக்குப் பட, என்ன செய்வதென்று தோன்றாமல் தவிக்கலானாள்.

மீண்டும் மீண்டும் செல்லப்பாவிடம் கேள்விகள் கேட்கலானாள்.

"அவர் டாம்ஸைட்டை விட்டால் வேறு எங்கெல்லாம் போவார் செல்லப்பா...?"

"எங்கேயும் போக மாட்டாரும்மா. வீட்டில் வந்து உட்கார்ந்து எழுத ஆரம்பிச்சுடுவாரு..."



"சினேகிதக்காரங்க யார் வீட்டுக்காவது போயிருப்பாரா...?"

"சினேகிதம்னு சொல்லும்படி அவர் யார் கிட்டேயும் பழகினதில்லையே...?"

"சினிமா, டிராமான்னு எதற்காவது போயிருப்பாரா...?"

"சினிமாவா! அவரா...! அந்தப் பழக்கமெல்லாம் அவருக்குக் கிடையாதம்மா...?"

"பின்னே எங்கேதான் போயிருப்பார் செல்லப்பா...?"

"அதுதான் தெரியலீங்களே..."

"ரயிலேறி ஊருக்குக் கிளம்பிப் போயிருப்பாரோ...?"

"அப்படிக் கூட போயிடுவாரா என்ன...?"

"ஏன் போகமாட்டார்...? இத்தனை செய்கிறவர் இதைச் செய்ய மாட்டாரா என்ன...?" யோசித்தவாறே சொன்னாள் சரயு.

"அப்படின்னா நான் வேணுமின்னா ஸ்டேஷன் பக்கம் போய் விசாரிச்சிட்டு வரட்டுமா...?" துடிப்புடன் கேட்டான் செல்லப்பா.

அவள் உடனே சரி சொல்லத் தயங்கினாள். "இங்கிருந்து ஸ்டேஷன் ரொம்பத் தூரமாச்சே...?" என்று இழுத்தாள்.

"அதனால் என்னம்மா...? அந்தய்யாவுக்காக இது கூட செய்யாமற் போனால் என்ன பிரயோசனம்...?" என்று எழுந்து கொண்டான்.

அவன் கிளம்பின போதே மணி ஆறடிக்கத் தயாராக இருந்தது. அதனால் அவள் அவசரமாக உள்ளே போய் டீ தயாரிக்கத் தண்ணீர் வைத்துவிட்டு வந்து சொன்னாள்.

"இரு செல்லப்பா. டீ தரேன் குடிச்சுட்டுக் கிளம்பலாம்..."

'சரி' என்று தலையசைத்த அவன் அவள் உள்ளே போவதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

நெஞ்சு நெகிழ்ந்து போயிற்று. கண் ஓரங்களில் லேசாக நீர் கட்டின.

அவள் டீ டம்ளருடன் வந்ததும் உணர்ச்சி வசப் பட்டுப் பேசத் துவங்கினான் அவன்.

"அம்மா, எந்த ஜென்மத்திலோ நீங்க எங்களில் ஒருத்தராக இருந்திருக்கீங்க. விட்ட குறை, தொட்ட குறைதான் இப்படி வந்து சிநேகிதமாக அமையும்பாங்க. அது நிஜமாகத்தான் இருக்கணும் இல்லாட்டி போனால் நேற்று சாயந்திரம் வரை நீங்க யாருன்னுகூட எங்களுக்குத் தெரியாது. இன்னி சாயந்திரத்திற்குள் என்ன மாறுதல் பார்த்தீங்களா..? எத்தனை ஒட்டுதல்...? சொன்னால்கூட யாரும் நம்புவாங்களா, நமக்குள் ஒரு நாள் பழக்கம்தான் என்று.. சரயும்மா, உங்க நல்ல மனசுக்கு மனம் போல வாழ்க்கை கிடைச்சு நீங்க நல்லா இருக்கணும். சந்தோஷமாக இருக்கணும்மா..."

அவனுடைய உருக்கமான பேச்சு அவள் மனசையும் தொட்டது.

அவளும் ஒரு வினாடி உணர்ச்சி வசப்பட்டுத்தான் போனாள்.

ஆனாலும் அத்தனைக்கிடையிலும் கடைசியாக அவன் சொன்ன அந்த வார்த்தை 'மனம் போல வாழ்க்கை கிடைச்சு நீங்க நல்ல இருக்கணும்..!' என்று வாழ்த்தின வாழ்த்து...

அவன் தன் மனதைப் புரிந்து கொண்டு விட்டானோ என்கிற சந்தேகம் ஏற்பட்டது. கூடவே அதைப் பற்றி கவலைப்பட வேண்டிய அவசியமில்லை என்றும் தோன்றிற்று. என்றாவது ஒரு நாள் தெரிய வேண்டிய விஷயம் தானே என்று தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டு,

"நீ கிளம்பு செல்லப்பா... வர ரொம்ப நாழியாகுமா..?" என்று கேட்டாள்.



"ஆகும்ங்க. ராத்திரி மணி பத்து பதினொன்னு கூட ஆகலாம். நீங்க தனியாக இருக்க பயப்படாதீங்க. கதவை சாத்தித் தாழ்ப்பாள் போட்டுக்குங்க. இங்கே எந்தவிதமான பயமும் கிடையாது. ஆனாலும் என் குரலோ, சார் குரலோ கேட்டால் தவிர கதவைத் திறக்காதீங்க என்ன..?"

"சரி..."

"லட்சுமணன் சீதைக்குக் கோடு போட்டுப் போன மாதிரி போட்டுட்டுப் போறேன். வாசல் கதவைத் தாண்டாதீங்க என்ன...?"

"சரி..."

அவன் மலையிறங்கிப் போகிறவரை பார்த்துக் கொண்டு நின்ற சரயு கதவின் தாழ்ப்பாளை போட்டுக் கொண்டு கட்டிலில் சரிந்த போது மனது பாரமாகி அழுத்துவதை உணர்ந்தாள். எப்படியாவது மனோகர் வீடு திரும்பி விட்டால் தேவலாம் போலிருந்தது. திரும்பு வானா..? விடை தெரியாத அந்தக் கேள்வி திரும்பத் திரும்ப வர கண்களை மூடிப் படுத்தவள் களைப்பு மிகுதியால் அப்படியே தூங்கிப் போனாள்.

## 10

எவ்வளவு நேரம் தூங்கினாளோ தெரியாது. வாசற் கதவு தட்டப்படுகிற சத்தம் கேட்டு சரேலென்று எழுந்து உட்கார்ந்து கொண்டாள். விலகிப்போன புடவையை சரி பண்ணிக்கொண்டே எழுந்து வந்து கதவருகில் நின்று சற்று உரத்த குரலில்,

"யார் அது..?" என்று கேட்டாள்.

யார் அது என்றே புரிந்து கொள்ள முடியாத ஒரு குரல்

"நான் தான்" என்றது.

"நான் தான்னால் யாரு...?"

"மனோகர்.."

அந்தக் குரல் இப்போது இனம் புரிய கதவைச் சட்டென்று திறந்தாள்.

அவன் தள்ளாடிக்கொண்டே உள்ளே வந்து கட்டிலில் உட்கார்ந்தான். அவன் வந்த தோற்றத்தையும், அப்போது அவனிருந்த கோலத்தையும் பார்த்த அவள் அவனது நிலைமையைப் புரிந்து கொண்டாள்.

எங்கோ போய் குடித்து விட்டு வந்திருக்கிறான்.

நடக்கத் தள்ளாடுகிற நடையையும், பேச்சையும் பார்த்தால் நிறையவே குடித்திருப்பான் என்று தோன்றியது.

காலையிலிருந்து இந்த நேரம் வரை குடித்துக் கொண்டே இருந்திருப்பானோ? விஸ்கி, பிராந்தி கூட இல்லை. நாட்டுச் சரக்காக குடித்திருக்க வேண்டும். அதனால் தான் இந்த நாற்றம் நாறுகிறது.

திடீரென்று அவளுக்கு அவன் மீது சொல்ல முடியாத கோபமும் வெறுப்பும் ஏற்பட்டது. இப்படிப்பட்ட மனிதனுக்காகவா இத்தனை நேரம் உருகினோம் என்று நினைத்த போது தன் மீதும் அதே கோபம் ஏற்பட்டது.

இவ்வளவு கேவலமான ஒரு மனிதனிடமா தன் மனசு போயிற்று..!

அப்படித் தகுதியற்று, தராதரமில்லாமற் போக வேண்டுமானால் அது கூடக் கேவலமானதுதான்.

முதல் முறையாக அவள் அந்த ஊருக்கு வந்ததற்கு வருத்தப் பட்டாள்.

அப்படிப் போகச் சொன்ன அப்பா மீது கோபப் பட்டாள்.

அவர் மட்டும் அன்று அப்படிச் சொல்லி அனுப்பாமற் போயிருந்தால் எங்கோ மூலையில் இருக்கும் இந்த மலைப் பிரதேசத்தைத் தேடி வரப்போவதில்லை.



மனோகரை சந்தித்திருக்கப் போவதில்லை. அவனிடம் அவளது உள் மனசைக் கிளறுகிற கேள்விகளைக் கேட்டிருக்கப் போவதில்லை.

அவனும் இப்படி குடித்துவிட்டு வந்து தன் எதிரில் தள்ளாடி உட்கார்ந்திருக்கப் போவதில்லை.

இது அத்தனைக்கும் காரணம், அப்பாவா, தானா, இல்லை விதியா..? பார்த்திபா அந்த மூன்றாவது விஷயத் தின் மீது பழிசுமத்துவது சுலபமானதாகவும், வசதியாகவும் இருக்கவே அவள் விதியை நொந்தபடி வாசற் கதவை தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு திரும்பின போது அவளின் மிக மிக சமீபத்தில் மனோகர் நின்று கொண்டிருந்தான்.

அத்தனை அண்மையில், மூச்சுக்காற்று மேலே படுகிற அளவில் அவன் நின்றுகொண்டிருந்தது அவளிடம் அதிர்ச் சியையும், பயத்தையும் ஏற்படுத்தியது.

அந்த நேரத்தில் என்ன செய்வதென்று புரியாமல் சடாரென்று அவனை விலக்கி விட்டு ஓட முயன்றதும் அவன் அவளின் தோள்களைத் தன் வலிமையான கை களால் அழுத்திப் பிடித்துக் கொண்டு உளற ஆரம்பித்தான்.

"தீபா.. அன்னிக்கு நீ என்னை ஏமாத்திட்டே இல்லே. கல்யாணம் பண்ணிக் கொடுன்னு கேழ்க வந்தவனை உங்கப்பாவை விட்டு அடிக்கச் சொன்னே இல்லே.. இன்னிக்கு நீ என்னை ஏமாத்த முடியாது நான் உன்னை விடப்போறது இல்லே.."

சொல்லிக் கொண்டே அவன் அவளது முகத்தை நோக்கிக் குனிய அவள் "நான் தீபா இல்லை, தீபா இல்லை மனோகர், சரயு..." என்று அலறத் தொடங்கி அவன் பிடியிலிருந்து விடுதலை பெறுவதற்கான முயற்சிகள் அத்தனையையும் செய்யத் தொடங்கினாள்.

ஆனால் அவனது பலத்திற்கு முன் அவளது வலிமை ஒன்றுமே இல்லாமற் போயிற்று.

ஆனாலும் அவள் தன் முயற்சியை விடவில்லை. நகங்களால் கீறி பற்களால் கடிக்க முயன்று அவனது பிடி

சற்றே தளர்ந்திருந்த சமயம் பார்த்து சரேலென்று அவனை விட்டு ஓட முயல அவன் துரத்திக் கொண்டு பின்னால் வந்த போது அவள் கட்டில் கால் தடுக்கி கட்டிலில் விழுந்ததும் அவனும் அவள் மீது விழுந்தான்.

அதற்கு மேல் அவளைப் பேச விடாமல் செய்வதற்கும், அலற விடாமல் தடுப்பதற்காகவும் அவளது உதடுகளைத் தன் உதட்டால் அழுத்த முயன்றதில் அவள் தனது கையால் தலையில் பலம்கொண்ட வரை ஓங்கிக் குட்டினாள்.

அந்த வலி தாங்காமல் அவன் சற்றே தளர அதுதான் சமயமென்று அவள் அவனைப் பிடித்துக் கீழே தள்ளிவிட்டு எழுந்து நின்றாள்.

இப்போது அவளுக்குள்ளிருந்த பயம், நடுக்கம் எல்லாம் விலகிப் போயிருந்தது.

ஒரு அற்பமான புழுவைப் பார்ப்பதுபோல் அவனைப் பார்த்தாள்.

தூ.. என்று காறித் துப்பினாள். புடவையைச் சரி பண்ணிக் கொண்டு தன் சூட்கேஸையும் எடுத்துக் கொண்டு அறையை விட்டுப் போக முயன்றபோது-

தரையில் கிடந்த அவனிடமிருந்து முனகல் சத்தம் கேட்டது. தீபா, தீபா...! என்ற தீனக்குரல் வந்தது. 'என்னை விட்டுட்டுப் போயிடாதே தீபா...' என்று கெஞ்சிற்று.

ஒரு வினாடி அந்தக் குரலின் வேதனையில் தயங்கி நின்ற சரயு பின் தன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு வெளியில் வந்து மலைச்சரிவில் பத்தடி கீழே இறங்கியிருப்பாள் -

எதிரில் செல்லப்பா ஏறிவந்து கொண்டிருந்தான். அந்த நேரத்தில் அவளை வெளியிலும் கையில் சூட்கேஸுடனும் பார்த்ததும் பதறிப்போனான்.

"என்னம்மா இது, இந்த நேரத்தில் எங்கே தனியாகக் கிளம்பிட்டீங்க...?"



அந்த ஒரு சின்னக்கேள்வி அவளுக்குப் போதுமானதாக இருந்தது. அழுகை கண்களை முட்டிக் கொண்டு நின்றது. வாயைத் திறந்தால் கதறி விடுவோம் என்று தோன்ற அவள் கீழ் உதட்டை இறுகக் கடித்துக் கொண்டு நின்றாள்.

"என்னம்மா இது, இந்த ராத்திரி நேரத்துல துணை கூட இல்லாமல் எங்கே பெட்டியைத் தூக்கிகிட்டு கிளம்பிட்டீங்கன்னு கேட்டால் பேசாமல் நிக்கறீங்களே. என்ன ஆச்சும்மா...?"

அதற்குள் தன்னை சுதாரித்துக் கொண்டுவிட்ட அவள் நிதானமாகச் சொன்னாள்.

"இனிமேல் இங்கு ஒரு நிமிடம்கூடத் தங்க முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கு செல்லப்பா..."

"திடீர்னு அப்படி ஒரு நிலைமை எப்படி ஏற்பட்டதும்மா...?"

"நீயே வீட்டுக்குள் போய்ப் பாரு தெரியும்..."

அவன் படபடவென்று நாலே எட்டில் மேலே போக அவள் அங்கேயே நின்றாள். சட்டென்று திரும்பிப் பார்த்து விட்டுச் சொன்னான் அவன்,

"எதுவானாலும் நீங்க இப்படி இருட்டுல போகக் கூடாதும்மா. பேசாமல் மேல வாங்க. நான் துணைக்கு இருக்கிறப்போ யாரும் உங்களை ஒண்ணும் செய்ய முடியாதுன்னு நினைச்சுக்குங்க. மேல வாங்க..."

சரயு மேலே ஏறி வரத் தொடங்கின பின்புதான் அவன் வீட்டினுள் நுழைந்தான். நுழைந்த உடனே கீழே அலங்கோலமாகக் கிடந்த மனோகரைப் பார்த்துப் பதறிக் கொண்டு ஓடி வந்தான்.

"சார், மனோகர் சார்..." என்று அவனருகில் போய் குனிந்த போது சாராய நெடி அவன் நாசியை எட்டியது.

உடனே கைகளால் மூக்கை மூடிக்கொண்டான். அதற்குள் சரயுவும் வீட்டினுள் நுழையவே-

"அம்மா, இது என்னங்கம்மா அநியாயம். பச்சைப் புள்ளை மாதிரி இருந்தவருக்கு யாரும்மா இப்படி சாராயத்தை ஊற்றிக் கொடுத்திருப்பாங்க. பாவிங்க. அவங்க உருப்படுவாங்களா..?"

நிஜமான பணிவிலும், பதட்டத்திலும் அவன் சொன்னது சரயுவைத் தொட்டது.

"இந்தப் பழக்கம் இவருக்கு உண்டுன்னு நீ சொல்லவே இல்லையே செல்லப்பா..."

"இல்லீங்க. சத்தியமாக இது மாதிரிப் பழக்க மெல்லாம் இவருக்குக் கிடையாதுங்க..."

"அப்படின்னா இப்ப மட்டும் ஏன் குடிச்சிருக்காரு..."

"இது இவருக்குப் புதிதான பழக்கம்தானுங்க. மனசில் இருக்கிற கவலைகளுக்கு ஒரு வெளிப்பாடாக இதை நினைச்சிருப்பாரே தவிர இப்படியெல்லாம் ஆகும்னு தெரிஞ்சால் குடிச்சிருக்க மாட்டாருங்க..."

சொல்லிவிட்டு கீழே தரையில் கிடந்த அவனைத் தூக்கிக் கட்டிலில் போட முயன்ற அவன் இயலாமல் சலித்துப் போய்,

"அம்மா நீங்களும் வந்து ஒரு கை பிடியுங்க..." என்றான். ஆனால் அவள் நின்ற இடத்தைவிட்டு அசையக்கூட இல்லை. அதைக் கவனித்த அவன் சற்று ஆழமாக அவளின் முகத்தையே உற்றுப் பார்த்தான். பின் அவளருகில் வந்து நின்று நிதானமாகக் கேட்டான்,

"ஏம்மா, குடி வெறியில் இவரு உங்ககிட்டே தப்பாக எதுவும் நடந்துக்கிட்டாரா?"

அவள் அதற்குப் பதில் சொல்லவில்லை.

"சொல்லுங்கம்மா, அப்படி இவரு ஏதும் தப்பு செய்ய முயற்சி பண்ணியிருந்தால் நான் அதற்காக உங்க காலைப் பிடிச்சு மன்னிப்புக் கேட்கறேன்..."

சடாரென்று நிமிர்ந்த அவள் அவனை நம்பச் செய்யவேண்டுமென்பதற்காக லேசாகச் சிரிக்க முயன்றபடி பேசினாள்.



"ஓ! அப்படி ஏதும் நடக்கலை செல்லப்பா. அந்த அளவிற்கு அவரைக் குறைத்து மதிப்பிட்டு விடாதே. நான் வெளியில் போனதற்குக் காரணம், இனிமேல் இங்கு தங்கி யிருப்பது சரியில்லை என்பதால்தான்."

"அப்படி நீங்க அபிப்பிராயப்பட்டால் நாளைக் காலையில் போகலாம்மா. நானே ஸ்டேஷன் வரை துணைக்கு வரேன். இன்னி ஒரு நாள் ராத்திரி கொஞ்சம் அட்ஜெஸ்ட் பண்ணிக்குங்க. இப்போ இவரைத் தூக்கிக் கட்டிலில் படுக்க வைக்க ஒரு கை கொடுங்கள்..."

மனோகரைத் தூக்கிக் கட்டிலில் போட்டதும் சரயு தரையில் கிடந்த தன் ஹோல்டாலிலேயே முடங்கிக் கொண்டாள். செல்லப்பாவும் அறைக்குள்ளேயே வந்து படுத்துக் கொண்டான்.

அன்றிரவு முழுவதும் தூங்க முடியாமல் தவித்த சரயு விடியற்காலையில் மீண்டும் எழுந்து செல்லப்பாவைப் பார்த்தாள். அவன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருப்பது தெரிய மெதுவாகத் தன் கைப்பையையும், சூட்கேஸையும் எடுத்துக் கொண்டு சத்தப்படுத்தாமல் வாசல் கதவைத் திறந்து, பரபரவென்று கீழே இறங்கி ஸ்டேஷனை நோக்கி மிக வேகமாக நடக்கலானாள்.

## 11

மயக்கம் கலைந்து சுய நினைவு வர மனோகருக்குக் கிட்டத்தட்ட காலை பதினோரு மணியாகி விட்டது. தலை இரும்பாகக் கனத்தது. கண்ரப்பைகளின் மீது இரு பெரிய அசுரர்கள் ஏறி உட்கார்ந்திருப்பதாக உணர்ந்தான். மெல்ல நேற்று மாலை என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொள்ள செல்லப்பாவைக் கிட்டத்தில் கூப்பிட்டான்.

"எனக்கு என்னவாச்சு செல்லப்பா..?"

செல்லப்பா உடனே பதில் சொல்லவில்லை.

தலை குனிந்து மௌனமாக நின்றான்.

அது வேறு அவனின் கோபத்தை அதிகப்படுத்தியது.

"நான் நேற்று ராத்திரி என்ன செய்தேன்னு சொல்லப் போறியா, இல்லையா இப்போ...?" என்று அதட்டினான்.

அதன் பின்னரே செல்லப்பா வாய் திறந்தான்.

"நீங்க குடிச்சிட்டு வந்து கலாட்டா பண்ணிட்டீங்க சார்..."

அதை மனோகரால் நம்ப முடியவில்லை. 'தானா... குடிப்பதா...' இல்லை. நிச்சயமாக இல்லை. தீபா தன்னை ஏமாற்றின அன்று கூட தான் குடிக்கவில்லை. வீட்டிற்கு அழைத்துப் போய் அப்பாவின் எதிரிலும், அண்ணனுக்கு எதிரிலும் தன்னை அவமானப்படுத்தினாளே அப்போது குடித்தானா இப்போது குடிப்பதற்கு-

என்னவெல்லாம் பேசினாள். எப்படிச் சிரித்தாள் அவள்...!

"அப்பா, இவருக்கு என்னைக் கல்யாணம் பண்ணிக்கணுமாம். உங்க கிட்டே அனுமதி கேட்க வந்திருக்கார்..."

அவர் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தைத் தழைத்து அவனைக் கூர்மையாகப் பார்த்துக் கேட்டார்.

"யாரும்மா இவர்..."

"பெயர் மனோகர். பி.இ. முடிச்சிட்டு வேலை தேடி இப்பத்தான் கிடைச்சிருக்கு. ஏதோ ஒரு மலைக்காட்டுப் பிரதேசத்தின் காட்டாற்றுக்கு அணைகட்டப் போறாராம். யாருமில்லை, தனி மனுஷன். அதனால் என்னைத் துணைக்குக் கூப்பிடறார்..." அவள் சொல்லி நிறுத்தினாள். உடனே அவர் நேரிடையாக அவனிடமே கேட்டார்,

"என்னப்பா சம்பாதிக்கிறே...?"

"1200..."



"ப்பூ!" என்று பெரியதாகச் சிரித்தார் அவர்.

"அந்த சம்பளத்தை வச்சுண்டா இவளைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறே...? அது இவளின் லிப்ஸ்டிக் செலவிற்குக் கூட போதாதேப்பா..."

"லிப்ஸ்டிக் எல்லாம் எவ்வளவு வேணுமோ, அவ்வளவு நான் வாங்கித்தரேன்."

"அது சரி, லிப்ஸ்டிக்கிற்குப் பணம் இருக்கு வாங்கித் தரேன்னு சொல்லிட்டே. அதற்கப்புறம் பவுடர், ஸ்னோன்னு ஆயிரம் மேக்கப் சாமான்கள் இருக்கே... அதற்கெல்லாம் எங்கே போவே...?"

"திருடியாவது வாங்கிட்டு வந்துடுவேன்..."

"மன்னிச்சுக்கோப்பா. ஒரு திருடனுக்கு நான் என் பெண்ணைத் தர இஷ்டப்படலை..."சொல்லி விட்டு அவர் எழுந்திருக்க அவன் பரபரப்பாக அவரை நெருங்கினான்.

"இல்லை சார், ஒரு பேச்சுக்கு சொன்னேன் சார். உடனே அதை நீங்கள் இவ்வளவு சீரியஸாக நினைச்சுக்க வேண்டாம்."

"சீரியஸாக நினைக்கிறதை விட்டுட்டுச் சொல்லணும்னா என்னிக்கும் என்னால் சொல்ல முடியாமல் போகும். அதனால் இப்படி நடந்து போய்க் கொண்டிருக்கிற போது பேசி விடலாம். இதப் பாருப்பா, தீபாவிற்கு நாங்கள் இப்போ கல்யாணம் பண்ணப் போறதில்லை. முடிந்தால் கல்யாணமே இல்லாமல் கூட இருப்பாள். அவளை நாங்கள் கலைக்கு அர்ப்பணம் செய்கிறோம். அதனால் அவளை சினிமாவில் நடிக்கச் செய்யப் போகிறோம். அதனால் நீ அவளை மறந்து விட்டு உனக்கேற்ற குடும்பப் பெண்ணாக யாரையாவது பார்த்துக் கல்யாணம் பண்ணிக் கொள். போ..."

அதைக் கேட்டு அவன் நெருப்பாக எரிந்தான்.

"சினிமாவில் நடிக்க ஆசைப்படுகிறவன் என்னுடன் ஏன் இந்த மாதிரி பழகினான்...?"

"உன்னுடன் மட்டும்தானா...? அவன் எல்லாருடனும் தான் இப்படிப் பழகுகிறான். அதற்காக ஒவ்வொருவரையாகத் திருமணம் பண்ணிக் கொள்ள முடியுமா? என்ன?"

"நோ! நான் விடமாட்டேன் தீபா என் மனைவி. என் மனைவி மட்டும்தான். எங்களுக்குக் குறுக்கில் வருகிறவர்களை ஒழித்துக்கட்டி விடுவேன். அதனால் என்கிட்டே வராதீர்கள். வா தீபா, என்னுடன் வா. இவர்களைப் பற்றிக் கவலைப் படாதே... நாம் எங்கேயாவது ஓடிப் போய் விடலாம் வா..."

அவள் அவன் பேச்சைக் கவனிக்காமலும், அலட்சியப் படுத்திக் கொண்டும் நின்றாள். அவன் பரபரவென்று அவளருகில் போய் அவளது கையைப் பற்றி இழுத்துக் கொண்டு ஓட முயன்றான்.

எதிரில் வந்து தடுத்த அவளது அண்ணன் மார்களையும் அப்பாவையும் தாக்கிவிட்டு வெளியில் போக முயன்ற போதுதான் வீட்டினுள்ளிருந்து போலீசுக்குப் பறந்த செய்தியினால் ஒரு வண்டியில் வந்த போலீஸ்காரர்கள் அவனைப் பிடித்துக் கைது செய்தனர்.

வீட்டில் புகுந்து கலாட்டா பண்ணின குற்றத்திற்காக அபராதமும், தண்டனையும் விதித்தனர்.

தண்டனை முடிந்து வெளியில் வந்த அன்று மாலை மீண்டும் அவளைத் தேடிக்கொண்டு போனபோது -

பேச்சு தடித்து கைகலப்பில் முடிய மறுபடியும் அவன் போலீஸின் விருந்தாளியானான்.

அப்போதெல்லாம் அவன் குடிக்கவில்லை. ஏதோ ஒரு தமிழ்ப் பத்திரிகையின் நடுப்பக்கத்தில் மிகக் குறைந்த



உடையில் தீபா உட்கார்ந்து சிரிப்பதைப் பார்த்த பின்புகூட அவன் குடிக்க நினைக்கவில்லை.

அப்படிப்பட்டவனுக்கு இன்று என்ன ஆயிற்று...? அதுவும் சரயு எதிரிலா...?

சட் சட்டென்று அவனுக்கு ஒவ்வொன்றாக கனவில் கண்ட காட்சிகளாக நினைவிற்கு வர ஆரம்பித்தன. அன்று காலை மன வருத்தம் தாங்காமல் அவன் கிளம்பிப் போனது - டாம்ஸைட் பக்கம் போய்க் கொண்டிருந்தபோது கோபாலனைப் பார்த்தது, அவனிடம் தன் மன உளைச்சலைச் சொன்னது...

"அவ்வளவுதானே பாஸ். ஒரே நிமிஷமா உங்க மனகஷ்டமெல்லாம் விலகிப் போகுதா இல்லையா பாருங்கள்... ம் ... தயங்காதீங்க வாங்க..."

இரண்டு பேருமாய் பத்து கிலோ மீட்டர் தூரம் நடந்து போய் -

அப்படியே வீட்டிற்கு வந்து என்ன செய்தேன்...? சரயுவைப் பற்றி அணைக்க முயன்று... கடவுளே, அப்போது அவள் முகம் ஏன் தீபா மாதிரித் தெரிந்தது? எதற்காக இந்தசோதனை? எங்கே இப்போது அவள்? தன்னைப்பற்றி என்ன நினைக்கிறாள்?

அவன் தலை நிமிரக் கூசியவனாக குனிந்தபடி மெதுவாக செல்லப்பாவைக் கேட்டான்.

"செல்லப்பா, அந்தம்மா எங்கே...?"

"ஏன் சார் அவங்க மனசு கஷ்டப்படும்படி ஏதாவது செய்திட்டீங்களா...?"

"அதெல்லாம் கிடக்கட்டும். இப்போது முதல்ல அவங்க எங்கேன்னு மட்டும் சொல்லு..."

"ராத்திரி சமாதானப்படுத்திப் படுக்க வச்சேன்.

காலையில் எழுந்து சொல்லிக்காமல் கூடப் போயிட்டாங்க போல இருக்கு."

செல்லப்பா வார்த்தைகளை முடிக்கு முன் மனோகர் துள்ளிக் குதித்துக் கொண்டு எழுந்தான். நேராக மலைப் பாதையில் தன்னால் முடிந்தமட்டும் மூச்சிரைக்க ஓடி அவளைப் பிடித்து விட்டான்.

"சரயு கொஞ்சம் நில்லுங்கள். தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்களேன் ப்ளீஸ்..."

அவள் அவனைத் திரும்பிப் பார்க்காமல் விறுவிறு வென்று மேலே நடந்தாள். அவனும் விடவில்லை. பக்கத்திலேயே நடந்தான்.

"ப்ளீஸ் சரயு, நேற்று நிஜமாகவே என் புத்தி தடுமாறிப் போச்சு. அதனால்தான் குடிச்சிருக்கேன். குடிச்சதோடு மட்டுமில்லாமல் உங்களை தீபாவாக நினைச்சு... ஸாரி... ஸோ... வெரி ஸாரி. தயவு செய்து என்னை மன்னிக்க மாட்டீங்களா ப்ளீஸ்" - சட்டென்று அவள் கையைப் பற்ற சடாரென்று உதறிவிட்டாள் அவள்.

மௌனமாக மேலே நடக்க ஆரம்பித்தாள்.

இந்த முறை அவன் கூட நடக்கவில்லை. அப்படியே நின்றான். பின் அழுத்தமான குரலில் சொன்னான்.

"ஓ.கே. இவ்வளவு பிடிவாதமாக நீங்க போனால் என்னாலும் பிடிவாதமாக இருக்கத் தெரியும். இருந்து காட்டுகிறேன் பாருங்கள்..."

அவள் அதற்கும் பேசாமல் இருக்க அவன் ஓடிவந்து அவள் எதிரில் நின்றான்.

"கடைசி தரமாகக் கேட்கிறேன். பேசுவீர்களா மாட்டீர்களா சரயு. என்னை மன்னிப்பீர்களா இல்லையா எனக்குப் பதில் சொல்லுங்கள்..."



அவள் பார்வை அவன் முகத்தை வெட்டுவது போல் பதிந்தது.

"சொல்லா விட்டால் என்ன செய்வீர்கள்...?"

"அதோ அந்த மலையின் உச்சியிலிருந்து குதித்து பிராணத் தியாகம் செய்து விடுவேன்..."

"அவசியமில்லை, நான் சொல்வதைச் செய்தால் போதும்."

"சொல்லுங்கள்..."

"செய்வீர்களா...?"

"காத்துக் கொண்டிருக்கிறேன்..."

"முதலில் நீங்கள் அந்த தீபாவை மறக்கவேண்டும். இரண்டு, உங்கள் சூட்கேஸில் இருக்கிற அவளோடு சேர்ந்து நின்று எடுத்துக் கொண்ட புகைப்படத்தைக் கிழித்துப் போட வேண்டும். மூன்றாவதாக -"

இந்த இடத்தில் அவள் தயங்க அவன் கேட்டான் "ம்... சொல்லுங்கள் நான் என்ன செய்ய வேண்டும்...?"

"நேற்று மாலை நடந்து கொண்ட விதத்திற்குப் பரிகாரமாக நிரந்தரமாக என் கையைப் பற்றியாக வேண்டும்..."

அதைக் கேட்டு அவன் முகம் மலர்ந்தது. சட்டென்று அவள் கையைப் பற்றி அவள் கொஞ்சமும் எதிர் பார்க்காத வகையில் தன் கண்களில் ஒற்றிக் கொண்ட போது அவளுக்கு உடம்பு சிலிர்த்துப் போயிற்று. ஒரு வினாடி கண்களை மூடி அப்படியே நின்றாள் அவள்.

அவளைக் கலைக்க விரும்பாத மனோகர், சில வினாடிகள் பேசாமலிருந்து பின் மிக மெதுவான குரலில் கேட்டான்.

"வீட்டுக்குத் திரும்பிப் போகலாம் இல்லையா..?"

"ம்..."

"அந்த சூட்கேஸை என்னிடம் கொடுக்கலாம் இல்லையா..?"

"ம்.."

அவளிடமிருந்து சூட்கேஸை வாங்கிக் கொண்டு கூட நடந்தவன் சிறிது நேரம் சென்றபின் கேட்டான்.

"அப்பாவிற்கு எப்போது சொல்வதாக உத்தேசம்..?"

"மாவட்ட மலர் வேலைகளையெல்லாம் முடித்த பின்பு.."

"நாளையிலிருந்து ஒழுங்காக எழுத ஆரம்பிக்கலாம் இல்லையா.."

"ம்.."

அவன் கை விரல்கள் மெல்ல அவளின் கையைப் பற்றி இறுக்கிக் கொண்டதும் அவள் மெதுவாக அவனது தோளில் தன் தலையைச் சரித்து நடக்க ஆரம்பித்தாள்.

●

சென்னை ... நூலகம்
4021
3630603
கொளத்தூர், சென்னை-99.